ஸ்ரீ:

ஸ்ரீக்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

•०◊०•

பரமபக்தி நிஷ்டரான

ஸ்ரீலீலாசுகர்

அருளிச்செய்த

ஸ்ரீக்ருஷ்ண

கர்ணாம்ருதம்.

இது

சிங்கப்பெருமாள் கோயில் தர்க்க தீர்த்தரும்

உபய வேதாந்தப்ரவர்த்தகரு மாகிய

வித்வான் மாடபூசி

ராமாநுஜாசார்ய ஸ்வாமியால்

ப்ரதிபத தாத்பர்ய ஸஹிதம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

திருவிண்காரணை ப்ரஸங்க

விஜயராகவாசார்யரால்

சென்னை

ஸ்ரீநிகேதந முத்ராக்ஷர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

Rs. 1-4-0

ஸ்ரீ ஹயகம:

இவ்விடத்தில் விலைக்குக் கிடைக்கும் புஸ்தகங்கள்.



1. ஸ்ரீக்ருஷ்ண கர்ணாம்ருதம். க்ரந்தாக்ஷரத்தில் சலோகஙகளும் தமிழில் ப்ரதிபத தாத்பர்யததுடன் விலை ரூ. 1 4 0

2. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம். க்ரந்தமல்லது தெலுஙகு மூலத்துடன் பராசரபட்டா அருளிசசெய்த பாஷ்யததிற்குச சேர தமிழ் ப்ரதிபத தாத்பர்யததுடனும், ஆஙகாஙகு பேதப்படுமிடஙகளில் சஙகர பாஷ்யததின் தாத்பாயமும். விலை. ரூ. 1 4 0

3. ஸ்ரீ வால்மீகி ராமாயண ஸுந்தரகாண்டம். காந்த சலோகஙகளை ஒரு புறமும் அதற்கு எதிாப்புறம தமிழில் ஸரியான அர்த்ததுடனுமாய் சேர்த்தது. விலை. ரூ. 1 8 0

போஸடேஜ் மணியாா்டர் சார்ஜ் பரதயேகம்.

தி. பி. விஜயராகவாசாரியார்,
சிங்கப்பெருமாள் கோயில்.
செங்கல்பட்டு தாலூகா

பி. அநந்தாசாரியார்,
நே 101, சைனாபார் ரோட்டு,
(ஸாவுகார்பேட்) மதராஸ்

ஸ்ரீ:

ஸ்ரீ ெ ேய நம:

ஸ்ரீக்ருஷ்ண கர்ணாம்ருத அவதாரிகை.

ஸ்ரீயஃபதியாய், அவாப்த ஸமஸ்தகாமனாய், அகிலஜகதுதய விபவலய லீலனாய், ஸகல சேதநோஜ்ஜீவநார்த்தமாக இவ்வுலகினில் க்ருஷ்ணனாக அவதரித்த தன்னுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யபரிமித திவ்ய விக்ரஹ குணங்களாலே ஆகோபாலமான ஸகல ப்ராணிகளையும் மயக்கியாட்கொண்ட பரமகாருணிகனான ஸர்வேஶ்வரன், அநாதி கர்ம வாஸனையாலே, தேவ திர்யங் மநுஷ்ய ஸ்தாவராத்மகமாயுள்ள பல யோநிகளிலும் மாறி மாறிப் பிறந்து அவ்வவ ஜாதிக்குரிய அந்நபாநாதிகளி லாஸக்தியைப்பண்ணி அதுவே யாத்ரையாகத் திரிகிற அடைவிலே, ஜந்மாந்தரீய ப்ரபலதர ஸுக்ருத விசேஷத்தினால், பகவத்யாக ஆராதநாதிகளுக்கு உரித்தாய் அதிதுர்லபமான இம்மானிடப் பிறவியில்பிறந்தும், இதினுடையபெருமையையும அஸ்த்திரதையையுமறியாதே உண்டியே யுடையே யுகந்தோடு மிம்மண்டலத்துடன்கூடி, தர்ம மோக்ஷங்களை அநாதரித்துக் கேவல ஆர்த்த காம பரவசராய், காமக்ரோத மோஹ லோப மத மாத்ஸர்யங்களாகிற ஆத்மவைரிகளைத் தன்னிலேயமைத்து, தன்னுடைய ஸ்வரூபஸ்வபாவங்களையுமறிய அவகாசமறும்படி கர்ப்ப ஜந்ம பால்ய யௌவநாதி அவஸ்தா ஸப்தகபரவசராய், காட்டுத்தீ கதுவினாற்போல் அதி துஸ்ஸஹமான ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிகங்களாகிற தாபத்ரயங்களிலே யகப்பட்டுத் துள்ளித் துடிக்கச் செய்தேயும், வேம்பின்புழு வேம்பன்றி யுண்ணாதாற்போலே அவற்றையே தமக்குப் பேரின்பமாகவெண்ணி, பிறவிக்குருடனைப் புண்டரீகாக்ஷனாகப் புகழ்ந்துகவிபாடிப் பொருள்படைத்து, அதைச் சிந்தாமணியென்னுமோர் தாஸிக்குக் கொடுத்து அவள்தரும் சிற்றின்பத்தை யநுபவித்து வீணாகக் காலம்கழிக்கிற இந்த லீலாசுகரென்பவர், மேன்மேலும் துர்க்கதியிலே கைவிஞ்சிக் கெட்டுப் போகிறபடியைக்கண்டு, இவரை நல்வழிப் படுத்தி நமக்காட்கொள்வோமென்று ஸங்கல்பித்து, இவ்வளவு தீம்பிலே கைவளர்ந்த இவரை முதலிலே ஓராசார்யனைக் கொண்டு திருத்தப் போகாதென்று நினைத்து, இவருக்கு அத்யந்தஅபிமதவிஷயமான சிந்தாமணியென்கிற தாஸியின் நெஞ்சிலேபுகுந்து அவள் மூலமாகவே இவரைத்திருத்த அவஸரம்பார்த்து நின்றான்; அவ்வளவிலே இந்த லீலாசுகர், ஒருநாள் பொழுதில் தன்தந்தையினது ஶ்ராத்தம் ப்ராப்தமாக, அன்றையதினம் லோகாபவாதத்துக்குச் சிறிது அஞ்சி, அன்று உதயம் தொடங்கி அவள்முகத்தே விழியாமல் பொறுத்திருந்து, ஶ்ராத்தக்ரியையைச் சடக்கென முடித்து, சிறிது உண்டதும் உண்ணாததுமாய் விரைந்தோடி அவள் வீட்டில் வாசலி லடைத்தக்கதவைத் தட்டி, பின்னை திறவாமையாலே உடையும்படி உரத்து இடித்தார்; அப்பொழுது அந்த தாஸியின் மனத்திலிருந்து ஸர்வேஶ்வரன் மெள்ளமெள்ளத் தூண்டிவிட, அவளும் "இவன் ஶ்ராத்தம் செய்துவந்தான், இவனை இன்று உள்ளேபுகுரவிடில் அதை

க்கண்டார், இவனையே யன்றிக்கே நம்மையும் கல்லிட்டு வீசுவர்கள், ஆகையால் கதவுதிறக்கவொண்ணாது" என்றுபேசாமலிருக்க, இவர்மிக்க காமவிகாரம் கொண்டு அவள் முகததைக்கண்டல்லது ப்ராணதாரணம்பண்ண அக்ஷமராய், இறப்பேறி உள்ளேகுதித்து அவளைத் தழுவிக்கொண்டார்; அவளப்பொழுது இவர் விஷயமாக மனமுருகி இவரைப்பார்த்து, "ஐயோ! மலமாம்ஸபூரிதமாய் நரகதவாரமான என்சரீரத்தில்பண்ணின ப்ரேமததை, அகிலஹேய ப்ரத்யநீகனாய் ஸமஸ்தகல்யாண குணாத்மகனான பரமபுருஷனிடம் வைததால் நீருஜ்ஜீவித்துப்போகலாமே என்று சொல்ல, இவர் அதை கேட்டுத், தன்தலையைக் கொடுத்தாகிலு மவள்பேசசை நடத்தவல்லவராகையாலே, "இவள்சொன்னபடி பரமபுருஷனைப்பறற நான் வகையொன்று மறிகிறிலேனே" என்று மேல்செய்வது தோற்றாமல் திகைசதுநிற்க, அவ்வளவிலே அவள், இவ்வூரில் ஸோமகிரியென்பாரொரு மஹாநுபாவருண்டு, அவரைசசென்று நீரடுத்தீராகில் உமக்கவர் நன்மையை யுரைப்பார்" என்று சொல்ல, இவரதைக்கேட்டு ததக்ஷணமே எழுந்திருந்து அந்தஸோமகிரியிடம் சென்று பணிந்து தம்முடைய முந்தியசெயலையெலலா மறிவிக்க, அவர் இவரைககண்டு "ஐயோ" என்று கருணித்து சில நாள் தம்முடனே சேர்ததுவைத்திருந்தவாறே, இவருக்கு அந்த ஸதஸஙகததினால் காமக்ரோதாதிகள்யாவும் நசித்து ஸம்ஸாரததில்நசையற்று சமதமாதியான ஆத்மகுணஙகள க்ஷணந்தோறும் மேலிட்டுவர, அவ்வளவிலே ஸோமகிரியானவர் இவருடைய ஹ்ருதய பரிபாகததைககண்டு "இவர்க்கு சிஷ்யலக்ஷணம் நிறைந்திருந்தது" என்று நிஸ்சயித்து, இவர்க்கு மந்த்ரோபதேசத்தைப் பண்ணி ப்ரக்ருதி புருஷ விவேகததையும ஜீவேஸ்வர விவேகத்தையும் பிறப்பிக்க, இவரும் பின்பு அமமந்த்ரததை ஜபிதது அவருபதேசிதத அாத்தங்களையெல்லாம் மநநம் பண்ணிவர, ஸர்வேஸ்வரன் இதுவேநமககு' அவகாசம்" என்று இவர் நெஞ்சில் புகுந்து தன்னை அநவரதபாவனை செய்யப்பண்ணி அவா ஸ்வப்நததிலே தன்வடிவழகை யெல்லாம் காட்ட, இவரும் அதுவே அடியாக அவ்வழகைமுறறு மநுபவித்து, பின்பு தாமொருவராயநுபவித்தது போராமே, தமமோடொகக அக்காலத்திலுள்ள மற்றுமயாவரையும் திருததிச்சேர்ததுககொண் டநுபவிதது, இவ்வளவோடு நிற்கவொண்ணாது, பின்புள்ளாரும் அறிந்தநுபவிதது உஜ்ஜீவிப்பாரகளாகவென்று தாமநுபவித்த ப்ரகாரத்தை ஒரு ப்ரபந்த முகத்தாலே வெளியிட்டார், அதுவாயிற்று "ஸ்ரீக்ருஷ்ண கர்ணாம்ருத"மென்கிற இப்ரபந்தம. பின்பு அப்போதுள்ளபெரியோர்கள், "ஸர்வேஸ்வரனையும் அவனதுகுணசேஷ்டிதஙகளையுமல்லது வேறறியாத சுகமஹர்ஷியைப்போலே இவரும் க்ருஷ்ணனையும் அவனுடைய பாலலீலைகளையுமல்லது மேலொன்று மறியாதவராயிருந்தாராகையால் இவா இதுமுதல் லீலாசுகரென்று உலகில் வழஙகுவார" என்று புகழ்ந்து ஆசீர்வதித்தார்கள், ஆகையாலிவாக்கு அது முதல லீலாசுகரென்று பெயராயிறறு. இனி மற்றுள்ள விசேஷஙகளெல்லாம் அவ்வவ ஸ்லோகாவதாரிகைகளிலும் தாத்பர்யங்களிலும் கண்டுகொள்வது.



ஶ்ரீ ருக்மிணீகாந்தாய நம:.

ஶ்ரீக்ருஷ்ணகர்ணாம்ருதம்

ப்ரதமாஶ்வாஸ:

ஶ்லோ॥ சிந்தாமணிர் ஜயதி ஸோமகிரிர் குருர் மே
ஶிக்ஷாகுருஶ்ச பகவாந் ஶிகிபிஞ்சமௌலி: ।
யத்பாதகல்பதருபல்லவஶேகரேஷு
லீலாஸ்வயம்வரரஸம் லபதே ஜயஶ்ரீ:॥ (1)

(ப-உ.) சிந்தாமணி: - சிந்தாமணியென்னும் ரத்னம்போல் ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கவல்லராய், ஸோமகிரி: - ஸோமகிரியென்னும் பெயர்பூண்டவரான, மே - என்னுடைய, குரு: - ஆசார்யனானவர், ஜயதி - விளங்குகிறார்; ஶிகிபிஞ்சமௌலி: - மயில் தோகையைத் தலைக்கணியாக வணிந்தவனும், பகவாந் - ஸமஸ்தகல்யாணகுணபரிபூர்ணனும் ஹேயகுணரஹிதனுமாய், ஶிக்ஷாகுருஶ்ச (எனக்கு அந்தராத்மாவாயிருந்து என்னைச் சீர்திருத்தி நல்வழிப்படுத்தின ஆசார்யனுமான புருஷோத்தமனானவன், ஜயதி - விளங்குகிறான்; (யத்பாதகல்பதருபல்லவஶேகரேஷு) யஸ்ய-எந்தப்புருஷோத்தமனுடைய, பாதகல்பதருபல்லவ - கற்பகமரத்தினது தளிர் போன்ற திருவடிகளை, ஶேகரேஷு - (தமது) முடிகளிற்சூடின மஹநீயர்களிடத்தில், ஜயஶ்ரீ: - (ஸம்ஸார) ஜயத்தினாலுண்டான ஶ்ரீ (சோபை) யானது, (லீலாஸ்வயம்வரரஸம்) - லீலா - ஶ்ருங்கார விலாஸத்துடன், ஸ்வயம்வரரஸம் - தானே வரிப்பதி (மாலையிடுவதி) னாலுண்டான ஆநந்தத்தை, லபதே - அடைகிறதோ. (1)

(தா - ம்.) இதில், இக் க்ரந்தகர்த்தா, தா மாரம்பித்த இப் ப்ரபந்தம் முடியத்தலைக் கட்டுகைக்காகவும், இதைசசிட்டர்கள் அன்புடனாதரித்துப் போருகைக்காகவும், மஙகளாசரணம் செய்கிறார்.

ஸோமகிரியென்கிற யோகீந்த்ரரானவர், நான் அநாதியாக ஸம்ஸார மாகிற அநர்த்தஸாகரத்தி லழுந்திக் கரைமரம்பெறாதிருக்குமளவில், என்னைக் கருணித்துத் தம்மடிமையிலிசைவித்து, அறியாதனவர்த்தஙகளை யறிவித்து, விஷயா ஸக்தியாகிற மஹாமோஹத்தைக கழித்து, எம்பிரானுககே பணிசெய்து வாழ்கையாகிற மஹாநிதியை யளித்தாராகையால், அவர் ஸர்வோத்க்ருஷ்டராக விளஙகுகிறார். இவ்வாசார்ய ஸமாஶ்ரயண ததுக்கடி, ஸர்வஸ்மாத்பரனாய் அனைவரும் கண்டுகளிக்கும்படியான க்ருஷ்ணனாகி, அவ்வைபவத்துடன் ஸாவ ஸுலபனான ஸர்வேஶ்வரன், என்னுள்புக்கு என் மனாகத்தை விளக்கித் தன்னிடததிலன்பை விளைவித்து ஸதுபதேசத்துக்கு இசைவித்தான். ஆகையால் அவனும் ஸர்வோத்க்ருஷ்டனாக விளஙகக் கடவான்; இந்த ஸர்வேஶ்வரனுடைய தளிரடியைத் தலைக்கணியாகக்கொண்ட பாகவதர்களுக்குத் தம்முடைய முயற்சியு மின்றிக்கே, ஈஶ்வர யத்நமு மொழியவே ஸம்ஸாரபந்தம் தன்னடையே நீஙகியொழியும், மோக்ஷ லக்ஷ்மியும் தானே வந்து சேரும். ஆயிருக்க, இனி எனக்கு, ப(ஹ)ல ப்ராப்தியில் கண்ணழிவொன்று மில்லை.

இதில் முதலடியினால் குருஸ்மரணமும், இரண்டாமடியினால் பகவத்ஸ்மரணமும், மூன்றாமடியினால், பாகவதாநு ஸந்தாநமும், நாலாமடியினால் பரமபுருஷார்த்த கீர்த்தநமும செய்தார். அதில் ஆதியில் "சிந்தாமணிர்" என்னும் பதததினால், தாம் முன் விஷயாஸக்தராயிருந்த காலததில் தம்மிடத்தி லன்புகூர்ந்தவளாய், பின்பு தம் தூர்க்கதியைக் கண்டு பொறாமல் ஸோமகிரியென்பவரிடத்தில் தான் புருஷகாரம் பண்ணி யாஶ்ரயிப்பித்த உபகாரகையான சிந்தாமணியென்னும் வேஶ்யையை ஸ்மரித்தமை ஸூசிதமாயிற்று.

இதனால், ஆசார்ய ஸமாஶ்ரயண மொழியக்கார்யஸித்தியில்லை யாகையால் அது அவஶ்ய கர்த்தவ்யமென்றும், அதுக்குக்காரணம் நிர்ஹேதுக பகவத் க்ருபையென்றும், அநந்தரமான பகவதஸமாஶ்ரயணத்துக்கு ப(ஹ)லம் தப்பாதென்றும், அந்த ப(ஹ)லம்-ப்ரதிபந்தக நிவ்ருத்தி பூரவக ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவஜநித அபரிச்சிந்நாநந்தயுக்த அநவரத பகவதகைஙகர்ய மென்றும், ஆகிய இவ்வர்த்தங்கள் ஸூசிப்பிக்கப்பட்டன.

"ஶிக்ஷாகுரு:" என்பதினால், ஆசார்யோபதேசத்தால் பெற்ற ஜ்ஞாநமே கார்யகரமென்றும், "பதபல்லவ" சப்தத்தினால், ஸர்வேஶ்வரனுடைய பாதங்கள் ஆஶ்ரயிக்கும்போதே போக்யமாயிருக்குமென்றும், "சேகராயித" பதத்தால், அதுவே ஸகலார்த்தப்ரதமென்றும் காட்டுகிறது. உத்தரார்த்தத்தினால், அத்திருவடிகளே மோக்ஷோபாயம் என்றது. "ஸ" "ம" "வ" என்று, ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார அந்த: ப்ரவேச நியமநபோஷணதா(யா

ரண ஸர்வவ்யாபகத்வ உபாயத்வ உபேயதவரூபகல்யாண குணங்களையும், அவற்றுக்கடியான வாத்ஸல்ய ஸௌஶீல்யாதி அநந்த கல்யாணகுணஙகளையும், "ஈஶ" என்று ஹேயக(ஹ)ந்த ராஹித்யத்தையும் சொல்லுகிற "ஸமவஸ" சப்தத்தினால், ஈஶ்வரனுடைய அகிலஹேய ப்ரத்யநீகத்வஸமஸ்த கல்யாணகுணாகரதவங்க ளாகிற உபயலிங்கத்வமும், ஸர்வகாரணத்வரூப பரத்வமும் சொல்லப்பட்டது. "ஸ்ரீவிஷ்ணோர்" என்பதினால் ஸௌலப்யம் சொல்லப்பட்டது, இவ்விரண்டு பதஙகளுடைய சேர்த்தியினால், க்ருஷ்ணனே ஸர்வேஶ்வரனென்றும், பரதவ ஸௌலப்யஙகளிரண்டும் விபவாவதாரத்திலும் குறைவற்றுக் குடிகொண்டிருக்குமென்றும் சொல்லிற்று.

"விஜ்ஞாபனம்" என்பதினால், ஆசார்ய ஸமாஶ்ரயணமே ப(ட)லத்துக்குப் போருமென்றும், "ஶ்ருணு" பததகினால், அவ் வாசார்யன் ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பந்நனுகவேணுமென்றும், இரண்டாமடியினால், அவ் வாசார்யன் காட்டின பரமபுருஷனை அவன்முகோல்லாஸத்துக்காகத தொழவேணுமென்றும், அதில் "ஸமவாநு" என்று தேவதாவிசேஷத்தைக் குறிததகினால் மற்றதேவதைகள் ஆஶ்ரயணீயரல்லரென்றும், அதிலும் அவதார விசேஷத்தை யெடுக்கையால், தம்மநஸ்ஸு அவதாராந்தரஙகளை விரும்பாதென்றும் சொல்லிற்று. இன்னும் இத்யாதியான அர்த்தங்கள் இஙகு கண்டுகொள்வது. (1)

ஶ்லோ॥ ஸ்வஸ்தி ஸ்வர்க்காங்கநாநாம் விகஸித கல்பக கோஶ நாநா லலிதம்
வக்த்ர வக்த்ர வேணுநாதம் ப்ரஸ்ர நிஶ்சல நிஶ்சலாக்ஷம் ।
ஸ்ரஸ்த ஸ்ரஸ்த கர நீவி விமல ஶோபா விலாஸம்
ஸம்ஸ்ரத்த ஸநாதநம் பரமம் தேவி வேதாந்தம் கிரோநாமக்ருதி॥ (2)

(ப - உ.) (ஸ்வர்க்காங்கநாநாம் விகஸித கல்பக வக்த்ர லலிதம்) - ஸ்வர்க்காங்கநாநாம் - ஸ்வர்க்கவாஸிகளான தேவஸ்த்ரீகளுடைய, கரகமலம் - நுனிக்கைகளில் நின்றும், விகஸித - நழுவின, கல்பக கோஶ - கற்பகமரத்தின் பூக்களினுலே, லலிதம்-வ்யாப்தமானதும் (அர்ச்சிக்கப்பட்டும்), (வக்த்ர வேணுநாத ப்ரஸ்ர நிஶ்சல நிஶ்சலாக்ஷம்) - வக்த்ர - ஆரம்பிக்கப்பட்ட, வேணுநாத - வேணுகாநத்திலுண்டான சப்தத்தினுடைய, ப்ரஸ்ர - ப்ரவாஹத்திலுண்டான; நிஶ்சல - ஸங்கததினால், நிஶ்சலாக்ஷம் - நிஶ்சலமாயிருப்பதும்,(ஸ்ரஸ்த ஸ்ரஸ்த கர நீவி விமல ஶோபா விலாஸம்) ஸ்ரஸ்த ஸ்ரஸ்த - நழுவிநழுவிப்போவதும், கர — (கைகளினால்பிடித்து) தகையப்பட்டதுமான, நீவி - நீவிமுடியையுடைய

ரான, ஜொவீஸஹஸ்ரு - ஆயிரம்கோபிமார்களினால், ஸூவ்ருதம் - சூழப்பட்டதும், (ஹஸ்தஸந்யஸ்த நதாபவர்கம்) - ஹஸ்த. கையில், ந்யஸ்த- வைக்கப்பட்ட, நத - சரணாகதஜனங்களுடைய, அபவர்கம் - மோக்ஷத்தையுடையதும், அகிலோதாரம் - ஸகல ஜனங்களுக்கும் (கோரின) ஸகலார்த்தங்களைக் கொடுக்கவல்லதுமான, கிசோராக்ருதி - சிறுபிள்ளையின் வடிவுகொண்ட, வஸ்து - தத்வமானது, அஸ்தி - ப்ரமாணஸித்தமாயிருக்கிறது. (2)

(தா-ம்.) கீழ்ஸ்லோகத்தில், இந்தப்ரபந்தத்தில் ப்ரதிபாதிக்கப்படுமவனான ஸ்ரீக்ருஷ்ணன் பகவானாகிய ஸர்வேஸ்வரனுடைய அவதாரமென்றீர்; பகவானென்றால் அவாப்தஸமஸ்தகாமனன்றோ, அவனுக்கு இப்படி அவதரித்துப்பெறவேண்டுமே ப்ரயோஜநமொன்றுமில்லையே, ஒருப்ரயோஜநத்தைக் கணிசித்தல்லதுபித்தனுங்கூட ஒருகார்யத்தைச்செய்யமுயலான், ஆகையால் அதுசேரும்படி யென்னென்னில்; ப்ரயோஜநமென்பது ஸ்வார்த்தமென்றும் பரார்த்தமென்றும் இரண்டுவிதமாம், அவ்விரண்டில் பரிபூர்ணனாகையாலே ஸர்வேஸ்வரனுக்கு ஸ்வார்த்தமில்லாவிடினும், சேதநோஜ்ஜீவநமாகிற பரார்த்தமுண்டு; அதாவது — மோக்ஷப்ரதாநம்; ஆகையால் ஸர்வேஸ்வரன் செய்த க்ருஷ்ணாவதாரம் ஸப்ரயோஜநமென்கிறாரிதில்.

ஸர்வேஸ்வரன் பரனாய்கொண்டு ஸ்ரீவைகுண்டத்தில் வீற்றிருக்குமாகில் சேதநரவனைக்கண்ணாற்கண்டு அவன் குணங்களி லீடுபட்டுப் பற்றவிரஇல்லை, வ்யாஸ பராசராதி சிலமஹர்ஷிகள் யோகாப்யாஸம்செய்து அவனை உட்கண்ணால்காண வல்லராயிருந்தாரே யாகிலும், மற்றவ ரவனை யிழந்துவிடு மத்தனையேயாமாகையால் அவர்களுமிழவாமைக்காக ஸர்வேஸ்வரன் இவர்களை எவ்விதத்திலாகிலும் வசீகரித்துக் கைப்பற்றவேணுமென்று க்ருஷ்ணனாக அவதரித்தானென்கிறான்.

ஸ்வர்க்கலோகத்திலுள்ள தெளிவுற்ற தேவதா ஸ்த்ரீக ளனைவரும் க்ருஷ்ணனுடைய சீல ரூப சரிதங்களைக்கண்டு நெஞ்சிளகி இவனைப் பரமபுருஷனென்றறுதியிட்டுத் தாங்கள் படைத்த கைகளுக்கு ப்ரயோஜநம் பெறவேணுமென்று தங்கள கைக்கெட்டிற்றொரு அங்குள்ள கற்பகப்பூக்கொண்டுவந்து அவன் திருவடிகளில் பரிமாறி க்ருதார்த்தரானார்கள். அவர்கள் ஸத்வப்ரதாநராகையாலே இவனுடைய சீலாதிகளிலீடுபட்டு உஜ்ஜீவித்தார்கள், மற்றவர்கள் இழக்குமத்தனையோவெனனில், அகண்டாநந்தபரிபூர்ணனான தானும் பரவசனாய் அசேதநம்போல் அசைவற்றுக் கிடக்கும்படி குழலூதி, அக்குழலிசையாகிற அம்ருதவெள்ளத்தை ப்ராணிகள் செவியில் பாய்ச்ச அஜ்ஞரோடு ஸர்வஜ்ஞரோடுவாசியற மயங்கி இவனுக்கு வசப்பட்டு உஜ்ஜீவித்தார்கள். இப்படியுஜ்ஜீவித்தவர்களில் சிலரைச்சொல்லவொண்ணாதோவென்னில்; அறிவில் தண்ணியரான மானிடசாதியாய், அதிலும் இடங்கைவலங்கையறியாத இடைக்குலத்தோராய், மிகப்பேதையரான இடை

ப்பெண்கள், இக்குழலோசையைக்கேட்டு மனமுருகி மெய்தளர்ந்து தங்க ளரையிலுடுத்த ஆடைநழுவப்புக, நாண்மையே வடிவான தாங்கள் அதைக் கையினல் பிடித்துத்தகைய, அமுதிலும்னிதான இவனது குழலோசையா னது செவியில் மேன்மேலும் பெருவெள்ளங்கோக்க, அதில் தங்கள் கைப் பிடியும் விடப்பட்டு அணியாடை அரையில்நின்று மவிழப்புக, இப்படி பிடிப் பதும் அவிழ்வதுமாய, மாறிமாறிவருகிற தசையினல் மிக விளங்காநின்று கொண்டு குழாங்குழாங்களாய்க் கூடி இவனைச் சுற்றிக்கொண்டு மற்றொன் றையு மறியாதுநின்றார்கள். இப்படி இவன வசீகரித்தால ப்ரயோஜந மென்னென்னில்; இப்படி தன் ரூபத்தினல் சிலரையும் குணத்தினல் சில ரையும் சேஷ்டிதங்களினல சிலரையும மயக்கித்தன் பாதங்களில் பணிவித் துக்கொண்டு அவர்களுக்குத் தன்னுடைய ஸாவஸ்வமான மோக்ஷாநந்தத் தைக் கையிலங்கு நெல்லிக்கனியாக்குவானெருவனும் இந்த ஸ்ரீக்ருஷ்ணன், இவையொன்றிலு மிசையாதவர்களை, அவ்வவ காலங்களில் அவர்கள் கோ ரின புத்ர பசு தந தாந்யாதி ஸகலாபீஷ்டங்களையும கொடுத்து நாள் வரை யில அநந்யப்ரயோஜநராக்கி உஜ்ஜீவிப்பிக்க வல்லவனுமிருக்கும்; பிறந்த வி டத்திலும் தசரத தநயன்போல் அஞ்சிக்கிட்டவொண்ணுதபடி பரத்வம் தோ ற்றவிருக்கையன்றிக்கே, எடுக்கவும பிடிக்கவும கட்டவும் அடிக்கவு மெளிய னை சிறுபிள்ளையாயிருப்பான். இப்படி யொருவனுளனென்பதில பரமா ணமென் னென்னில; கோபாலதாபிநீ முதலிய உபநிஷத்துக்களிலும், பாக வதம் முதலிய புராணதிகளிலும் இவனையும் இவன் வைபவத்தையும் கண் டறியலாமென்கிருர்.—

இதில் ‚‚ஈஷ்வி'' என்கையால், ஈஸ்வரனெருவனில்லை, அவ னுக்கு அவதாரமென்ப தொனறில்லை, என்பாரை வாயடைந்தார்; கர் மாநுஷ்டாநத்துக் கடைவிலலாத ஸ்வர்க்கத்தையும், பெண்களையும் சொல்லுகிற ‚‚ ஸஷுஈ ணீ'' எனபதினல், காம பூமியான பூலோகத் தில், சாஸ்தரவஸ்யமான மானிடஜாதியில அதிலும உத்தம குலமான ப்ராஹ்மணனுய்ப் பிறந்தாலொழிய அவனையாராதிக்க விரகில்லையென் கிற நிர்ப்பந்தமில்லை, ஏதேனும் தேசமாகிலுமாம், ஏதேனும் சாதியா கிலுமாம், ஆணுகிலுமாம் பெண்ணுகிலுமாம் அவனை யாராதிக்கைக்கு என்று தோற்றுவித்தார்; ‚‚ விமஷஈ '' என்கையால், வேறொருகார் யத்தை நினைத்துக் கொண்டுபோகும் புஷ்பங்களில் நடுவில் தானே சில நழுவி அவனருகில் விழுந்ததாகில் அதையுமவன் தனக்கு ஆராதநம் செய்ததாகக்கொள்ளுங்குணவானென்றுஸூசிப்பித்தார்‚‚ஸஷ வஜ ஸ ஒ ந'' என்கையால், தாங்கள் செடி நட்டு நீர்வார்த்து வளர்த்து அச்செடியில்பூத்த பூவே வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை, தங்கள் கைக்கெட்டின பூவே ஆரா தனைக் கமையுமென்றார்; ‚‚ஷஸ '' என்கையால், ஸர்வேஸ்வரனுக்கு ஜந்ம ஜராமரணதிகளொன்றும் கிடையாது, எப்போது மேகரூபமாயேயுள னென்றார்; ‚‚ஷஜஸூத'' இத்யாதியினல், அஜ்ஞராகிலுமாம் ஸர்வஜ்ஞ

ராகிலுமாம், நாஸ்திகராகிலுமாம், ஆஸ்திகராகிலுமாம், ஏதேனு மொரு வ்யாஜத்தால் தன்னருகி லடியிட்டாரை வெளிப்புறப்பட வொட்டான், தன்னிடத்தேயமைத்துக்கொள்ளுமென்றார்; ஆனால், அவனருகில் அடியிட்டதேயமையுமோ, முமுக்ஷுவுக்கு சில த்யாஜ்யமாகவும் சில உபாதேயமாகவும் சொன்ன மோக்ஷசாஸ்த்ரத்தை யநுஸரிக்கவேண்டாவோ வென்னில், “𑌸𑍍𑌵𑌸𑍍𑌵” இத்யாதியால், அவன் விஷயத்திலோரடியிடவே இவன் அஹங்கார மமகாரங்களை விடேனென்று பிடித்து நின்றாலும் அவைதன்னடையே விட்டு நீங்குமென்றும், க்ருஷ்ணனையல்லதறியாத இடைக்குலத்தையும் பாரதந்த்ர்யமே வடிவான பெண் பிறந்தாரையும் சொல்லுகிற “𑌗𑍋𑌪𑍀” பதத்தினால், இவனாச்ரயிக்கவே இவனுடைய குலமெல்லாம் அவ்வாச்ரயண மாஹாத்ம்யத்தினால் ஸ்ரீவைஷ்ணவமாய்விடுமென்றும், சேஷத்வபாரதந்த்ர்யாதிஸமஸ்தமான ஆத்மகுணங்களும் தானே அமையுமென்றும் சொன்னார்; “𑌹𑌸𑍍𑌤” இத்யாதியினால், சேதநர்க்கு மோக்ஷமளிக்கையே ஈச்வரனுக்கு ப்ரதாநோத்தேச்யம், மற்ற புருஷார்த்தங்களையளிக்கை, அடியில் திருந்தாதாரை அவர்கள் போம்வழிபோய்த் திருப்புகைக்காக வாயிருக்குமென்றார், “𑌕𑌿𑌶𑍋𑌰𑌾𑌕𑍃𑌤𑌿” என்கையால், பரத்வத்திற்காட்டில் ஸௌலப்ய குணமே முக்யோபாஸ்யமென்று தோற்றுவித்தார். “𑌦𑍇𑌵” என்று மேலுலகத்தைச் சொல்லுகையால், ஸத்வகுண நிஷ்டராகவேணுமென்றது; இத்யாதிகளைக் கண்டுகொள்வது. (2)

𑌶𑍍𑌲𑍋॥ 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌯𑍈𑌕𑌨𑌿𑌧𑌾𑌨𑌸𑍀𑌮𑌚𑌪𑌲𑌾𑌪𑌾𑌙𑍍𑌗𑌚𑍍𑌛𑌟𑌾𑌮𑌨𑍍𑌥𑌰𑌂
𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌵𑍀𑌚𑌿𑌲𑌾𑌲𑌿𑌤𑌦𑍃𑌶𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍃𑌤𑌮𑍍 ।
𑌕𑌾𑌲𑌿𑌨𑍍𑌦𑍀𑌪𑍁𑌲𑌿𑌨𑌾𑌙𑍍𑌗𑌣𑌪𑍍𑌰𑌣𑌯𑌿𑌨𑌂 𑌕𑌾𑌮𑌾𑌵𑌤𑌾𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌰𑌂
𑌬𑌾𑌲𑌂 𑌨𑍀𑌲𑌮𑌮𑍀 𑌵𑌯𑌂 𑌮𑌧𑍁𑌰𑌿𑌮𑌸𑍍𑌵𑌾𑌰𑌾𑌜𑍍𑌯𑌮𑌾𑌰𑌾𑌧𑍍𑌨𑍁𑌮𑌃॥ (3)

(ப - உ.) (𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌯𑍈𑌕𑌨𑌿𑌧𑌾𑌨𑌸𑍀𑌮𑌚𑌪𑌲𑌾𑌪𑌾𑌙𑍍𑌗𑌚𑍍𑌛𑌟𑌾𑌮𑌨𑍍𑌥𑌰𑌮𑍍) 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌯 - சமத்காரத்துக்கு, 𑌏𑌕𑌨𑌿𑌧𑌾𑌨 - முக்யஸ்த்தாநமும், 𑌸𑍀𑌮-(அதுக்கு) எல்லைநிலமுமானதும், 𑌚𑌪𑌲 - சஞ்சலமுமான, 𑌅𑌪𑌾𑌙𑍍𑌗 - கடைக்கண்பார்வைகளுடைய, 𑌛𑌟𑌾 - பரம்பரைகளினால், 𑌮𑌨𑍍𑌥𑌰𑌮𑍍 - பூர்ணமானதும, (𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌵𑍀𑌚𑌿𑌲𑌾𑌲𑌿𑌤𑌦𑍃𑌶𑌮𑍍) 𑌲𑌾𑌵𑌣𑍍𑌯 - ஸௌந்தர்யமாகிற, 𑌅𑌮𑍃𑌤𑌵𑍀𑌚𑌿 - அம்ருதமயமான அலைகளினால், 𑌲𑌾𑌲𑌿𑌤 - கொண்டாடப்பட்ட, 𑌦𑍃𑌶𑌮𑍍 - கண்களையுடையவனும், (𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍃𑌤𑌮𑍍,) 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀-ஸ்ரீதேவியினுடைய, 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷-கடைக்கண்பார்வையினால், 𑌆𑌦𑍃𑌤𑌮𑍍-ஆதரிக்கப்பட்டவனும், (𑌕𑌾𑌲𑌿𑌨𑍍𑌦𑍀𑌪𑍁𑌲𑌿𑌨𑌾𑌙𑍍𑌗𑌣𑌪𑍍𑌰𑌣𑌯𑌿𑌨𑌮𑍍) 𑌕𑌾𑌲𑌿𑌨𑍍𑌦𑍀 - யமுநாநதியினுடைய, 𑌪𑍁𑌲𑌿𑌨𑌾𑌙𑍍𑌗𑌣 - மணற்குன்றின் ப்ரதேசங்களில், 𑌪𑍍𑌰𑌣𑌯𑌿𑌨𑌮𑍍 -

ப்ரீதியையுடையவனும், (காமாவதாராங்குரம்) - காம-மந்மதாம்சமான ப்ரத்யும்நனுடைய, அவதார - உத்பத்திக்கு, அங்குரம் - காரணமானவனும், (மதுரிமஸ்வாராஜ்யம்) மதுரிம - போக்யதைக்கு ஸ்வாராஜ்யம் - இருப்பிடமானவனுமான, நீலம் - நீலவர்ணம்பூண்ட பாலம் - பாலனான ஸ்ரீக்ருஷ்ணனை, அமீ - இப்படி தணணியரான, வயம் - நாங்கள், ஆராத்நும: - பூஜிக்கிறோம். (3)

(தா-ம்.) கீழ், கண்ணனே மோக்ஷப்ரதனென்றீர், அது லக்ஷ்மீபுருஷகாரமானாலொழியக் கூடுமோவென்னில், அதுவுமுண்டென்கிறாரிதில்.

லோகத்திலுள்ள ப்ரஜைகளில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றில் ருசி விஞ்சியிருக்கும்; ஆகையால், மரங்களுமிரங்கும்படியான குழலோசையிலுமிசையாதாரசிலருண்டாகில் அவர்கள் போமவழி யேதென்ன; ஒருநாளும் தலைசாயேனென்று பிடிவாதம்கொண்டு ரஸமறியாத முரட்டுத்தன்மையரையும் பணிசெய்வித்துக் கொள்ளவல்ல ஸாமர்த்யம் இனி யெங்குமில்லையென்னும்படி குடிகொண்டிருக்கிற பார்வையை யுடையனாகையாலே, அப்பார்வையின் நடமாட்டத்தைக் காட்டிச் சிலரை வசமாக்குவான்; ஸம்ஸாரமாகிற பெருந்தீயில் ஸஞ்சரித்துக் குதறிக்கிடக்கிற சிலர் கண்களில், தன் கண்ணிலழகாகிய அமுதைக் குளிரப்பொழிந்து வசமாக்குவான்; இப்படியாகிலும் வணங்காதாரை வணங்குவித்துக்கொள்ள வேணுமென்கிற இவனுடைய நிர்ப்பந்தத்துக்கடி யென்னென்னில்; தயையேவடிவான ஸ்ரீதேவி, சேதநர்படுமிழவைக் காணமாட்டாதவளாய், தன்கடாக்ஷத்தினாலிவனை மயக்கித்தன் சொல்லைச் செயதல்லது நிற்கவொண்ணாதபடி வளைக்கையாலே, எவ்விதத்திலாகிலும் சேதநரை உஜ்ஜீவிப்பிக்கையில் நிலைமை யுடையனானானிவன். இவன் மாளிகைகளுள்ளிருக்கில் புறத்தியார் காணமாட்டார்களென்று இடைவெளியுள்ள யமுனையில் சிறியாரும் காணும்படி உயர்ந்த மணல் மேட்டிலேறி, மந்மதனுக்கும் மந்மதனாய், மாதுர்யம் குடிகொண்ட நீலமேனியனான பாலனாய்க்கொண்டு ஸஞ்சரியாநின்றான்; அறப்பெரியனான இவன் இப்படி வணங்கிக்கொடுக்க இனிநாம் வெறுமனே யிருக்கலாகாது, நெடுநாளாக இவன் கண்ணுக்குத் தப்பிப் பல்யோநிகளிலும் திரிந்ததுபோலன்றிக்கே இப்பொழுது நாம் அவன் கண்ணுக் கிலக்காய் அவனுடைய ஆராதநத்துக்குரிய மானிடப்பிறவியைப் பெற்றுநின்றோம். ஆகையாலிப்பொழுதே அவனை யாராதிப்போம் வாருங்கோ ளென்கிறார். (3)

பர்ஹோத்தம்ஸ விலாஸிகுந்தலபரம் மாதுர்யமக்நா
நநம் ப்ரோந்மீலந்நவயௌவநம் ப்ரவிலஸத்வேணுப்ரணாதாம்ருதம்|
ஆபீநஸ்தநகுட்மலாபிரபிதோ கோபீபிராராதிதம் ஜ்யோ
திஶ்சேதஸி நஶ்சகாஸ்தி ஜகதாமேகாபிராமாத்புதம் || (4)

(ப-உ.) (பர்ஹோத்தம்ஸவிலாஸிகுந்தலபரம்)-பர்ஹ-மயில் தோகையாகிற, உத்தம்ஸ - சிரோபூஷணத்தினால், விலாஸி - அழகுபொருந்திய, குந்தலபரம் - மயிர்முடியையுடையதும், (மாதுர்யமக்நாநநம்) - மாதுர்ய - போக்யதையில், மக்ந- மூழ்கியிருக்கிற, ஆநநம்-முகத்தையுடையதும், (ப்ரோந்நீலிதநவயௌவநம்)- ப்ரோந்நீலித - மிகவும் வ்ருத்தியடையாநின்ற, நவ - புதிதான, யௌவநம் - யௌவநாவஸ்த்தையையுடையதும், (ப்ரவிலஸத்வேணுப்ரணாதாம்ருதம்) - ப்ரவிலஸத் - மிகவும் விளங்காநின்ற, வேணுப்ரணாத அம்ருதம் - அம்ருதம்போன்ற வேணுகாநத்தை யுடையதும், (ஆபீநஸ்தநகுட்மலாபி:) ஆபீந - திரண்டும், ஸ்தநகுட்மலாபி: - மொக்குகள்போன்றதுமான ஸ்தநங்களையுடைய, கோபீபி:- கோபஸ்த்ரீகளினால், அபித: - சுற்றும்சூழ்ந்துநின்று, ஆராதிதம்-கொண்டாடப் பட்டதும், ஜகதாம் - லோகங்களுக்குள், (ஏகாபிராமாத்புதம்) - ஏக - ப்ரதாநமாயும், அபிராமம் - அதிஸுந்தரமாயும், அத்புதம் - ஆச்சர்யகரமுமான, ஜ்யோதி: - தேஜோமயமான ஸ்ரீக்ருஷ்ணபரப்ருஹ்மமானது, ந: - எங்களுடைய, சேதஸி - ஹ்ருதயத்தில், சகாஸ்தி - ப்ரகாசிக்கிறது. (4)

(தா-ம்.) கீழ் க்ருஷ்ணகுணங்களை யநுபவித்தபோது அந்தபா(ஸா)வநாதிசயத்தாலே அக் க்ருஷ்ணாவதாரம் ப்ரத்யக்ஷம்போல் தோற்றி அருகிலுள்ளவர்களைப் பார்த்து "அவனை யாராதிக்க வாருங்கோள்" என்றழைத்தார், அதைக்கேட்ட அருகிலுள்ளார், "க்ருஷ்ணாவதாரம் முற்காலத்திலும் நாம் இப்பொழுதுமா யிருந்தோம், அவனை நாம் ஆராதிக்கும் விதமென்" என்று வினவ, அதை ஆராய்ந்து பார்த்து "ஆம், நமக்கிது ப்ரத்யக்ஷமன்று, மாநஸாநுபவமாயிருந்தது" என்று நிர்ணயித்து, தம்மனதில் தோற்றின விதத்தைப் பேசுகிறார்.

ஆபரணத்துக் கோராபரணமிட்டாற்போலே, ஸ்வாபாவிகமாகவே விளங்காநின்ற முன்னெற்றியில் மயிர்முடியானது மயிலிறகோடு சேர்ந்து முடிக்கப்பட்டதாய் மிகவும் விளங்காநின்றது; அதுக்குக் கீழ், ஆகாரமொன்றும் தோன்றாமே மாதுர்யமொன்றே திரண்டுதோற்ற, இது எதாயிருக்கலாமென்று அதனுள்ளே இழிந்து ஆராய்ந்துபார்க்க, அங்கு, சிறிது இளம்பருவமும் மேல்மேல் வளராநின்ற யௌவநமும் கலந்து விளங்காநின்ற முகமொன்று தோற்றுநின்றது; அதையநுபவிக்கும்போது செவியில்பாய்ந்த குழலோசையானது வேணுவைக்காட்டாநிற்க, அது அதரமணியுடன் சேர்ந்து ப்ரகாசியாநின்றது; அப்பொழுது இவனைக்கண்ட கோபிமார்கள் என்னைப்போல் சபலசித்தமுடையராய் இவன் வடிவழகில் கால் தாழ்ந்து

களிப்புடனே முலைகள் விம்மி சுற்றும் சூழ நின்று புகழாநின்றார்கள்; அவர்கள் நடுவே க்ருஷ்ணமூர்த்தி தேஜோரூபமாய், ஜகத்தில் இதனோடொத்த இனியவஸ்து வேறொன்றில்லை யென்னும்படி அத்யாஶ்சர்யகரமாய்த் தோற்றாநின்றான்; இவ்வளவும், நெடுநாள் பெருந் தவம் செய்து இவ்வெழிலைக் காணும்படியான பாக்யசாலியாய் எல்லோரும் கொண்டாடும்படியான என்னுடைய மாநஸாநுபவமாயிருந்த தென்கிறார். (4)

𑌮𑌧𑍁𑌰𑌤𑌰𑌂 𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌮𑍃𑌤𑌵𑌿𑌮𑍁𑌗𑍍𑌧𑌮𑍁𑌖𑌾𑌮𑍍𑌬𑍁𑌰𑍁𑌹𑌂 𑌮𑌦𑌶𑌿𑌖𑌿𑌪𑌿
𑌚𑍍𑌛𑌲𑌾𑌞𑍍𑌛𑌿𑌤𑌮𑌨𑍋𑌜𑍍𑌞𑌕𑌚𑌪𑍍𑌰𑌚𑌯𑌮𑍍 । 𑌵𑌿𑌷𑌯𑌵𑌿𑌷𑌾𑌮𑌿𑌷𑌗𑍍𑌰𑌸𑌨𑌗𑍃𑌧𑍍𑌨𑍁
𑌨𑌿 𑌚𑍇𑌤𑌸𑌿 𑌮𑍇 𑌵𑌿𑌪𑍁𑌲𑌵𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌕𑌿𑌮𑌪𑌿 𑌧𑌾𑌮 𑌚𑌕𑌾𑌸𑍍𑌤𑍁 𑌚𑌿𑌰𑌮𑍍 (5)

(ப-உ.) (𑌮𑌧𑍁𑌰𑌤𑌰𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌮𑍃𑌤𑌵𑌿𑌮𑍁𑌗𑍍𑌧 𑌮𑍁𑌖𑌾𑌮𑍍𑌬𑍁𑌰𑍁𑌹𑌂) 𑌮𑌧𑍁𑌰𑌤𑌰 - அத்யந்தம் மநோஹரமாய், 𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌮𑍃𑌤 - நவநீதம் போல் இனியதுமான புன்சிரிப்பினால், 𑌵𑌿𑌮𑍁𑌗𑍍𑌧- அழகியதாய், 𑌮𑍁𑌖𑌾𑌮𑍍𑌬𑍁𑌰𑍁𑌹𑌂 - தாமரைப்பூப்போல் மேன்மை குளிர்த்தி நாற்றங்கள் பொருந்திய திருமுகத்தை யுடையதும், (𑌮𑌦𑌶𑌿𑌖𑌿𑌪𑌿𑌚𑍍𑌛𑌲𑌾𑌞𑍍𑌛𑌿𑌤𑌮𑌨𑍋𑌜𑍍𑌞𑌕𑌚𑌪𑍍𑌰𑌚𑌯𑌂)- 𑌮𑌦 - மதித்துப்புஷ்டமான, 𑌶𑌿𑌖𑌿 - மயிலினுடைய, 𑌪𑌿𑌚𑍍𑌛 - இறகுகளினால், 𑌲𑌾𑌞𑍍𑌛𑌿𑌤 - அலங்கரிக்கப்பட்டும் 𑌮𑌨𑍋𑌜𑍍𑌞 - (ஸ்வாபாவிகமாகவே) ஸுந்தரமுமாய், 𑌕𑌚𑌪𑍍𑌰𑌚𑌯𑌂 - ஶ்லாக்யமுமான குழற்கற்றையை யுடையதும், (𑌵𑌿𑌪𑍁𑌲𑌵𑌿𑌲𑍋𑌚𑌨𑌂) 𑌵𑌿𑌪𑍁𑌲-பரந்த, 𑌵𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 - திருக்கண்களையுடையதும், 𑌕𑌿𑌮𑌪𑌿-இவ்வளவென்று சொலலிமுடியாதமஹிமையையுடையதுமான, 𑌧𑌾𑌮 - தேஜோரூபமான ஸ்ரீக்ருஷ்ணரூப பரதத்வமானது, (𑌵𑌿𑌷𑌯𑌵𑌿𑌷𑌾𑌮𑌿𑌷𑌗𑍍𑌰𑌸𑌨𑌗𑍃𑌧𑍍𑌨𑍁𑌨𑌿)𑌵𑌿𑌷𑌯 - ஸ்த்ரீமுதலிய ஸாம்ஸாரிக விஷயங்களாகிற,𑌵𑌿𑌷𑌾𑌮𑌿𑌷-விஷம்கலந்த மாம்ஸத்தினுடைய (மாம்ஸத்தை), 𑌗𑍍𑌰𑌸𑌨 - விழுங்குவதில (அநுபவிப்பதில்), 𑌗𑍃𑌧𑍍𑌨𑍁𑌨𑌿 - பேராசைகொண்ட, 𑌮𑍇 - என்னுடைய, 𑌚𑍇𑌤𑌸𑌿- மனதில், 𑌚𑌿𑌰𑌂- நீடித்திருந்து, 𑌚𑌕𑌾𑌸𑍍𑌤𑍁 - தோற்றுகிறது. (5)

(தா - ம்.) அநாதிகாலம் தொடங்கி விஷயாந்தர ப்ரவணராய்ப்போந்த உமக்கு க்ருஷ்ணன் விஷயத்தில் இப்படி ப்ரீதிபிறக்கைக் கடியென்னென்ன, அதைச் சொல்லுகிறாரிதில்.

புஜித்தாரை முடிக்கவற்றான விஷங்கலந்த அந்நம்போல் நரகத்தையடைவிப்பிக்குமதாய், அல்பஸாரமான ஸம்ஸாரத்தைவிளைக்கவற்றான விஷயாந்தரத்தில்பேராசைகொண்டு மருளுற்றஎன் மாநஸ்ஸில், தேஜோமயமான க்ருஷ்ணன் புகுந்து தன் ஒளியினால் அம் மருளைப்போக்கி வெளிச்செறிவைப்

பிறப்பித்து விஷயாந்தரங்களி லுண்டான தோஷத்தைக்காட்டி அதிலுண்டான ஆவலைத்தவிர்த்து, அதற்குமேலும் அவ்வாவல் பின்னுட்டாதபடியாக, அமுதிலுமினியதான முறுவலினால் கண்டாரைத் தன்னிடத்திலேயே மயங்கப் பண்ணுமதாய, நாற்றம், மென்மை, செவ்வி, குளிர்த்தி, ஆகிய இக்குணங்களையுடையதான முகத்தையும், யௌவநப் பருவமான மயிலினிறகுடன்பிணைத்துக் கட்டப்பட்டு, வைத்த கண்வாங்கவொண்ணாதபடி இனிதான *குழற்கற்றையையும், நிருபமாநமான பரந்தகண்களையும் காட்டி என்னையும் வசீகரித்து என் மனதிலேயே எப்போதும் ப்ரகாசியாநின்ருன், ஆகையால் நான் இப்பேறு பெறப்பெற்றேனென்கிருர். (5)

முகுளாயமாந நயநாம்புஜம் விபோ: முரளீநிநாத
மகரந்த நிர்ப்பரம் | முகுராயமாண ம்ருது கண்டமண்டலம் முகபங்
கஜம் மநஸி மே விஜ்ரும்பதாம் || (6)

(ப-உ.) (முகுளாயமாந நயநாம்புஜம்) முகுளாயமாந - மொக்குப்போல் நடுப்பெருத்து இரண்டருகும சிறுத்திருப்பதும், நயநாம்புஜம் - தன்னிலத்திலுள்ள தாமரைபோல் செவ்வியழியாததுமான நேத்ரங்களையுடைத்தாய், (முரளீநிநாதமகரந்தநிர்ப்பரம்) முரளீநிநாத - வேணுகானமாகிற, மகரந்த - தேனினுல், நிர்ப்பரம் - நிறைந்ததாய், (முகுராயமாண ம்ருது கண்டமண்டலம்) முகுராயமாண - கண்ணுடிபோல் பளபளத்தும், ம்ருது - மெல்லியதுமான, கண்டமண்டலம் கபோலப்ரதேசத்தையுடையதான, விபோ: - (நமது) ஸ்வாமியான ஸ்ரீ கண்ணபிரானுடைய, முகபங்கஜம் - முகாரவிந்தமானது, மே - என்னுடைய, மநஸி - நெஞ்சில், விஜ்ரும்பதாம் - பெருக விளங்கக் கடவது. (6)

(தா - ம்.) கீழ். தம்மை அவன் வசீகரித்தபடி சொன்னர்; இதில், விஷயாந்தரத்தில் நின்றும் தம்மை மீட்ட உபகாரஸ்ம்ருதியாலே அவனை யெப்போதும் த்யாநிக்கக்கடவே னென்கிருர்.

தாமரையின் மொட்டுப்போல் இரண்டருகும் குவிந்து நடுப்பெருத்துள்ள கண்ணனுடைய கண்ணழகன்றே என்னை வசீகரித்ததென்று முதலிலே கண்ணழகைக் கொண்டாடினர்; 'நீர் அவன் கண்ணைப்பார்த்த பின்பன்றே அக்கண்ணழகு உமக்குத்தோற்றிற்று, அதைப்பார்க்கப்பண்ணினாரார்' என்ன" அவனுடைய வேணுகாநம் என்செவியில் அமுதத்தைப் பொழிந்தது, இதுக்கு மூலமென்னென்று திரும்பிப்பார்த்தேன், அப்பொழுது, கண்ணாடிபோல் பளபளத்ததாய் மெல்லியதான கபோலங்களும், அவற்றி

* தலையில் மயிர்களையும்

ளிடையில், சேற்றில் முளைத்த தாமரைபோல் செவ்வியழியாத முகமும், அதினுள்ளே மதுவெள்ளமிடாநின்ற கமலம்போன்ற இரண்டு கண்களுமதோற்றுகின்றது; இப்படியாக என்னை யாட்கொண்ட இவை யெல்லாம், இவற்றை யடிக்கடி காணவேணுமென்று ஆவலுடையனான என் மனதில எப்பொழுதும் கிளர்ந்தெழக் கடவதாக. (6)

கமநீயகிஶோரமுக்³த⁴மூர்த்தே꞉ கலவேணுக்வணிதாத்³ருதாநநேந்தோ³꞉ । மம வாசி விஜ்ரும்ப⁴தாம் முராரேர்மது⁴ரிம்ண꞉ கணிகாபி காபி காபி ॥ (7)

(ப-உ.) (கமநீயகிஶோரமுக்³த⁴மூர்த்தே꞉) - கமநீய - ஆசைப்படத் தகுந்ததான, கிஶோர - இளம்பருவத்தினால், முக்³த⁴ - அழகமர்ந்த, மூர்த்தே꞉ - திருமேனியையுடையவனும், (கலவேணுக்வணிதாத்³ருதாநநேந்தோ³꞉) கல - இனிமையான-வேணுக்வணித - வேணுநாதத்தினால, ஆத்³ருத -அமைந்திருக்கிற, ஆநநேந்தோ³꞉ - சந்த்ரனைப்போல் குளிர்ந்தும் அழகியதுமான முகத்தையுடையவனுமான, முராரே꞉-ஸ்ரீக்ருஷ்ணனுடைய,மது⁴ரிம்ண꞉-போக்யதையினுடைய, காபிகாபி - மிகவும் அல்பமான, கணிகாபி - அணுவாயினும், மம - என்னுடைய, வாசி - வாக்கில், விஜ்ரும்ப⁴தாம் - வ்ருத்தியடையக்கடவது. (7)

(தா-ம்.) இதில், அவனை மனதால் நினைப்பதே போராது, வாக்கினாலும் துதிக்கக் கடவே னென்கிறார்.

அவனுடைய எவ்வாகாரத்தைத் துதிக்கநினைத்தீரென்ன; ஜநங்களுக்கு மற்றுமுள்ள பருவங்களைக் காட்டிலும் இளம்பருவமானது, தளர் நடையும் இளமுறுவலும் மழலைச் சொல்லும் பேதைத் தொழில்களுமாய் இனிதாயிருக்கும், அதிலும் லோகவிலக்ஷணமான க்ருஷ்ணனுடைய இளமையானது, தன்னைக்கண்டாரை நஞ்சுண்டாரைப்போலே மயங்கப்பண்ணுநிற்கும்; அதுக்குமேலே, பாலும் கன்னலும் கலந்தாற்போல், செவிக்கினிய குழலிசையும், சந்த்ரன்போல் வட்டமாய் எழில்நிறைந்து கண்டாருடைய ஸம்ஸாரதாபமெல்லா மாறும்படி அவர்கள் முகத்தில் அமுதத்தை யூற்றுநின்ற முகமுமாய் இசைந்திருந்தது; நானோ, அவனுடைய போக்யதையை முழுதும் சொல்லவல்ல அறிவைப்பெற்றிலேன்; ஆகிலும் அதினுடைய சிறுதுளியையாகிலும் வாயினால் துதித்துப் பேறு பெறக்கடவேனாகவேணு மென்கிறார். (7)

மத³ஶிக²ண்டி³ஶிக²ண்ட³விபூ⁴ஷணம் மத³நமந்த²ரமுக்³த⁴முகா²ம்பு³ஜம் । வ்ரஜவதூ⁴நயநாஞ்சலவாஞ்சி²தம் விஜயதாம் மம வாங்மயஜீவிதம் ॥ (8)

(ப உ.) (𑌮𑌦𑌶𑌿𑌖𑌣𑍍𑌡𑌿𑌶𑌿𑌖𑌣𑍍𑌡 𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌮𑍍) - 𑌮𑌦 - மதமேறின, 𑌶𑌿𑌖𑌣𑍍𑌡𑌿 - மயிலினுடைய, 𑌶𑌿𑌖𑌣𑍍𑌡 - தோகையை, 𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 - சிறந்த ஆபரணமாகவுடையதும், (𑌮𑌦𑌨𑌮𑌨𑍍𑌥𑌰𑌮𑍁𑌗𑍍𑌧𑌮𑍁𑌖𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌮𑍍) - 𑌮𑌦𑌨 - ஸௌந்தர்யத்தினால், 𑌮𑌨𑍍𑌥𑌰 - நிறைந்ததாய், 𑌮𑍁𑌗𑍍𑌧 - (ஜநங்களை) வசீகரிக்கத் தக்கதான, 𑌮𑍁𑌖𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌮𑍍 - தாமரைமலர்போன்ற முகத்தையுடையதும், (𑌵𑍍𑌰𑌜𑌵𑌧𑍂𑌨𑌯𑌨𑌾𑌞𑍍𑌚𑌲 𑌵𑌞𑍍𑌚𑌿𑌤𑌮𑍍) 𑌵𑍍𑌰𑌜 - திருவாய்ப்பாடியிலுள்ள, 𑌵𑌧𑍂 - பெண்களுடைய, 𑌨𑌯𑌨𑌾𑌞𑍍𑌚𑌲 - கடைக்கண் பார்வையினால், 𑌵𑌞𑍍𑌚𑌿𑌤𑌮𑍍 - வஞ்சிக்கப்பட்டதும் (ஸ்வாதீனம்செய்யப் பட்டதும்), 𑌮𑌮 - என்னுடைய, (𑌵𑌾𑌙𑍍𑌮𑌯𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑍍) 𑌵𑌾𑌙𑍍𑌮𑌯 - க்ரந்தத்துக்கு, 𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑍍 - விஷயமுமான வஸ்து, 𑌵𑌿𑌜𑌯𑌤𑌾𑌮𑍍 - ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்கக் கடவதாக. (8)

(தா-ம்.) இதில், அவனுடைய ஆஸ்ரித பாரதந்த்ர்யத்துக்கு மங்களா சாஸநம் பண்ணுகிறார்.

உலகத்திலுள்ள தாமரைப்பூ இவன் முகத்துக்கு உவமையாகமாட்டாது, இதைக்காட்டிலும் நூறாயிரம் மடங்கு செவ்வி அதிகரித்த தாமரைப்பூ ஒன்றுண்டாகில், அதனை இவன்முகத்துக்கு ஒருகால் உபமாநமாகச் சொல்லில் சொல்லலாம்படி இவன் முகம் அழகுக்கு ஆகரமாயிருந்தது; தலைக்கணியாகக் கொண்டையில் சேர்த்துக்கட்டப்பட்ட மயிலிறகானது, அம்முகத்தழகுக்கு நாநாவர்ணமாய் அழகியதாய் அபூர்வமானதோர் கொடிகட்டினாற்போலிருந்தது; இவனோ, நாராயணனல்லது மற்றொரு தெய்வமறியாத இடைக்குலத்தில் பெண்களின் கடைக்கண்கள் எங்கெந்த பக்கத்தில் புரளுமோ, அந்தந்தத் திசையிலுள்ள கார்யங்களையெல்லாம் அவர்கள் முகமலர்த்திக்காகச் செய்து அவர்களிட்ட வழக்காயிருந்தான்; அதுக்குமேலே இவ்வழகை நான் கவிபாடும்படி எனக்குக் காட்டி என் கவிக்கு மூலாதாரமாய் நின்றான், இவ்விதமான இவனுடைய அழகும் ஆஸ்ரிதபாரதந்த்ர்யமும் ஒருகுறைவுமற்று விளங்கக்கடவதாக. (8)

𑌪𑌲𑍍𑌲𑌵𑌾𑌰𑍁𑌣𑌪𑌾𑌣𑌿 𑌪𑌙𑍍𑌕𑌜𑌸𑌙𑍍𑌗𑌿𑌵𑍇𑌣𑍁𑌰𑌵𑌾𑌕𑍁𑌲𑌂
𑌫𑍁𑌲𑍍𑌲𑌪𑌾𑌟𑌲𑌪𑌾𑌟𑌲𑍀 𑌪𑌰𑌿𑌵𑌾𑌦𑌿𑌪𑌾𑌦 𑌸𑌰𑍋𑌰𑍁𑌹𑌮𑍍 ।
𑌉𑌲𑍍𑌲𑌸𑌨𑍍𑌮𑌧𑍁𑌰𑌾𑌧𑌰𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌮𑌞𑍍𑌜𑌰𑍀 𑌸𑌰𑌸𑌾𑌨𑌨𑌂
𑌵𑌲𑍍𑌲𑌵𑍀𑌕𑍁𑌚 𑌕𑍁𑌮𑍍𑌭𑌕𑍁𑌙𑍍𑌕𑍁𑌮𑌪𑌙𑍍𑌕𑌿𑌲𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥ (9)

(ப-உ.) (𑌪𑌲𑍍𑌲𑌵𑌾𑌰𑍁𑌣 𑌪𑌾𑌣𑌿𑌪𑌙𑍍𑌕𑌜𑌸𑌙𑍍𑌗𑌿 𑌵𑍇𑌣𑍁𑌰𑌵𑌾𑌕𑍁𑌲𑌮𑍍) 𑌪𑌲𑍍𑌲𑌵 - தளிர்போல், 𑌅𑌰𑍁𑌣 - சிவந்தும், 𑌪𑌾𑌣𑌿𑌪𑌙𑍍𑌕𑌜 - தாமரைப்பூப்போல் அழகியதுமான திருக்கையில், 𑌸𑌙𑍍𑌗𑌿 - சேர்ந்திரு

க்கிற, வெண - வேணுவினுடைய, ரவ - சப்தத்தினல் (உணடான) ஆகூணித-வ்யாப்தமானவனும்(ஸந்தோஷத்தையுடையவனும்)(ஷூ வாடூவாடூஶ்ரீ வரிவாதிவாத ஸெராரஹு) ஷூ - மலர்ந் தும், வாடூ-சிவந்துமிருக்கிற, வாடூஶ்ரீ-பாதிரிப்பூவை, வரிவாதி- அவமாநம்செய்கிற (அதிலும்அதிம்ருதுவான) வாதஸெராரஹு- பெரிய குளங்களில் முளைத்த தாமரைபோன்ற திருவடிகளையுடையவ னும், (உஜ்ஜ்வலநயராயரதஞ்சித்ஶ்ரீஸரஸாநநஹ)- உஜ்ஜ்வல- மிக்க அழகையுடையதும், ஹரா - போக்யதையை யுடையதுமான, அயர - கீழுதட்டினுடைய, ரஞ்சித்ஶ்ரீ - பூங்கொத்துப்போன்ற காந்தியினுல் (உண்டான), ஸரஸ - விலக்ஷணமான அழகுடன் கூடிய, ஆநந - திருமுகத்தையுடையவனும், (வஜூவீசாவகாஹ காஹாவேஷ்ஜிஹ) - வஜூவீ - இடைப்பெணகளுடைய, காவகாஹ - கலசங்கள்போன்ற ஸ்தநங்களிலுணடான, காஹா- அலங்காரார்த்த மான குங்குமத்தினுல, வேஷ்ஜிஹ - சேறுசெய்யப்பட்ட (பூசப்பட்ட) (திருமார்வையுடைய)வனுமான, வநஹ - ஜகத்பதியான ஸ்ரீக்ரு ஷ்ணனை, ஆஹயெ - தொழுகிறேன். (9)

(தா-ம்.) இதில க்ருஷ்ணனுடைய போக்யதையைப்பேசுகிரு£.

முதலிலேவேணுநாதம்என்செவிவழியாகஎன்நெஞ்சில்சென்று அந்நெஞ்சை தன்வழியேகூட்டிக்கொண்டுபோய் தனக்காதாரமானகுழல் குடியேறியிருக் கிற க்ருஷ்ணனுடைய திருக்கைமேலேகொண்டுசேர்த்தது.பின்பு,தளிர்போ ல்மெல்லியதாய் சிவந்தும் தாமரைபோல் ஸுந்தரமுமான அவன் கையினழு கையநுபவித்துப் பரவசனுய்த திருவடிகளிலேவிழுந்துபணிந்தேன்.அததிரு வடிகள்;முகிழ்விரிந்த பாடலீபுஷ்பம்போல்,கண்ணெடுத்துப்பார்க்கிலும் வா டும்படியானமென்மையையும் செகப்பையு முடையதும் பெரியதொரு தடா கத்தில் முளைதெழுந்த தாமரைபோல் அழகியதுமாயிருக்க அதையே அநு பவித்துக்கொண்டு கழிந்த காலததையறியாதே வெகுநேரம், அஙகே நான் விழுந்திருக்கப் பின்பவன் இனிய பேசசாலே "எழுந்திராய்" என்முன், அப்பொழுது அஙகு நின்றும் திரும்பி மேல்நோக்கிப் பார்த்தேன், கீழநுப வித்த இரண்டவயவஙகளைக் காட்டிலும் மிகவு மினியதான அதரததையும், அதில் நின்றும் புறப்பட்ட சிவந்தகாநதியானது கொததுக்கொத்தாய எங கும் பரவி விளஙகாநின்ற முகததையும், இடைசசிகளுடைய ஆலிங்கநகா லத்தில் அவர்கள் ஸ்தநங்கள் மேல் பூசியிருந்த குஙகுமககுழம்பினு லப்பப் பட்டுச சேருய்க்கிடக்கிற திருமாாபையும்பார்த்து அவனுக்கேஅடிமையாய் விட்டேனென்கிருர்.

𑌅𑌪𑌾𑌙𑍍𑌗𑌰𑍇𑌖𑌾𑌭𑌿𑌰𑌭𑌙𑍍𑌗𑍁𑌰𑌾𑌭𑌿𑌰𑌨𑌙𑍍𑌗𑌲𑍀𑌲𑌾𑌰𑌸 𑌰𑌞𑍍𑌜𑌿𑌤𑌾𑌭𑌿𑌃।
𑌅𑌨𑍁𑌕𑍍𑌷𑌣𑌂 𑌬𑌲𑍍𑌲𑌵 𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍀𑌭𑌿𑌰𑌭𑍍𑌯𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌵𑌿𑌭𑍁𑌮𑌾𑌶𑍍𑌰
𑌯𑌾𑌮𑌃॥ (10)

(ப-உ.) 𑌬𑌲𑍍𑌲𑌵𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍀𑌭𑌿𑌃 - கோபஸ்த்ரீகளினால், (𑌅𑌨𑌙𑍍𑌗𑌲𑍀𑌲𑌾𑌰𑌸𑌰𑌞𑍍𑌜𑌿𑌤𑌾𑌭𑌿𑌃) - 𑌅𑌨𑌙𑍍𑌗 - மந்மதனுடைய, 𑌲𑍀𑌲𑌾 - விலாஸத்திலுண்டான, 𑌰𑌸 - ஶ்ருங்கார ரஸத்தினால், 𑌰𑌞𑍍𑌜𑌿𑌤𑌾𑌭𑌿𑌃 - விளங்காநின்றதும், 𑌅𑌭𑌙𑍍𑌗𑍁𑌰𑌾𑌭𑌿𑌃 - அவிச்சின்னங்களுமான, (𑌅𑌪𑌾𑌙𑍍𑌗𑌰𑍇𑌖𑌾𑌭𑌿𑌃)-𑌅𑌪𑌾𑌙𑍍𑌗 - கடைக்கண் பார்வைகளினுடைய, 𑌰𑍇𑌖𑌾𑌭𑌿𑌃 - பங்திகளினால், 𑌅𑌨𑍁𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 - க்ஷணந்தோறும் (இடைவிடாமல்), 𑌅𑌭𑍍𑌯𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌮𑍍 - ஸம்மாநித்துப்பார்க்கப்பட்ட, 𑌵𑌿𑌭𑍁𑌮𑍍 - ஸர்வவ்யாபகனான ஸ்ரீக்ருஷ்ணனை, 𑌆𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃-சரணமடைகிறோம். (10)

(தா - ம்.) நீரொருவரேயோ அவன் வடிவழகில் நெஞ்சு நெகிழ்ந்தீரென்ன, நானொருவனே யன்று, எனக்கு முன்னே குழாம்குழாமாகக்கூடி அவனை யநுபவித்தவர்கள் அநேகருண்டென்கிறார்.

கோகுலத்திலுள்ள ஆயர் மடைந்தையர்கள், அவனுடைய அபரிச்சிந்நமான போக்யதையை யநுபவித்து, அவ்வநுபவ ஜநிதமான ப்ரீதி உள்ளடங்காதே கண்வழியேவழிந்துவருவதுபோல் தோற்றுமதாய், க்ருஷ்ணனுங் கூட மயங்கும்படியான ஶ்ருங்காரவிலாஸங்களையுடையதாய், காலமுள்ளதனையு மநுபவித்தாலும் புதிது புதிதாகத் தோற்றுமதான, கடைக்கண் பார்வையினால் ஶ்ரீ க்ருஷ்ண னுடைய எழிலை ஒருநொடிப்பொழுதாகிலும் ஒழிவின்றிக்கே அடுத்தடுத்துப்பார்த்துக் கொண்டாடினார்கள்; இப்படி தன் போக்யதையைக் காட்டி அனைவரையும் வசீகரிக்கவல்ல ஸமர்த்தனை ஸ்ரீ க்ருஷ்ணனை, அவனுடைய இனிமையின் ரஸமறிந்த நாம் ஆஶ்ரயியாநின்றோம். (10)

𑌹𑍃𑌦𑌯𑍇 𑌮𑌮 𑌹𑍃𑌦𑍍𑌯𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌂 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌹𑌰𑍍𑌷𑌵𑌿𑌶𑌾𑌲
𑌲𑍋𑌲𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍍। 𑌤𑌰𑍁𑌣𑌂 𑌵𑍍𑌰𑌜𑌬𑌾𑌲𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍀𑌣𑌾𑌂 𑌤𑌰𑌲𑌂 𑌕𑌿𑌞𑍍
𑌚𑌨 𑌧𑌾𑌮𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑌾𑌮𑍍॥ (11)

(ப-உ.) 𑌤𑌰𑍁𑌣𑌮𑍍 - பௌவநாவஸ்த்தையையுடையதும், 𑌤𑌰𑌲𑌮𑍍 - பளபளத்த காந்தியையுடையதும், (𑌹𑍃𑌦𑍍𑌯𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌮𑍍) - 𑌹𑍃𑌦𑍍𑌯 -இனிதான, 𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌮𑍍-- ஶ்ருங்காரவிலாஸங்களையுடைய, (𑌵𑍍𑌰𑌜𑌬𑌾𑌲𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍀𑌣𑌾𑌮𑍍) 𑌵𑍍𑌰𑌜 - திருவாய்ப்பாடியிலுள்ள, 𑌬𑌾𑌲𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍀𑌣𑌾𑌮𑍍-இளம்பருவமுடையவர்களானபெண்களுக்கு, 𑌹𑍃𑌦𑌯 -ப்ராணன்போன்றதும், (𑌹𑌰𑍍𑌷𑌵𑌿𑌶𑌾𑌲𑌲𑍋𑌲𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍍)

ஹர்ஷாத் - ஸந்தோஷத்தினால், விஶால - அகன்றும், லோல - சஞ்சலமுமான, நேத்ரம் - கண்களையுடையதும், கிஞ்சந - அநிர்வாச்யமுமான, மஹ: - ஸ்ரீக்ருஷ்ணனென்கிற தேஜஸ்ஸானது, மே - என்னுடைய, ஹ்ருதயே - உள்ளத்தில் ஸந்நிதத்தாம் - நித்யவாஸம் செய்யட்டும். (11)

(தா-ம்.) கோபிமார்கள் க்ருஷ்ணனுடைய எந்த அவயவத்தில் மோஹித்தார்களென்னில், அவனுடைய கண்ணழகிலும் பருவத்திலும் சேஷ்டிதத்திலும் ஈடுபட்டார்களென்கிறார்.

இடைச்சாதிப் பெண்களாயினும், பரம ரஸிகனான தானுங்கூட மனமுருகக்கும்படியான அவர்கள் பெண்மையையும், இளமைபருவத்தையும் அநுஸந்தித்து அதிஸுந்தரமான அவ்விடைச்சிகளுடைய ஶ்ருங்காரவிலாஸங்களைக் கண்டு, ஸந்தோஷத்தினால தன்னுடைய இரண்டு கண்களையும் திறந்து, க்ருஷ்ணன் இவர்களைப்பார்க்க, அப்பொழுது அவன் கண்களின் பரப்பையும் சாஞ்சல்யத்தையும் பார்த்து அதிலே மூழ்கிக்கிடந்தார்கள்; பின்பு சிரகாலம் கழித்தவாறே தாங்களேதேர்ந்து முன்னநுபவித்த அக்கண்களைப் பார்க்க வாசைப்பட்டுத் தங்கள் கண்களை விழித்துப் பார்க்கும்போது இடையிலே அவனுடைய இளகிப்படியாநின்ற பருவமும் அப்பருவத்துக்குரிய வ்யாபாரங்களுமினிதாகத் தோற்றக்கண்டு அவற்றிலேயாழ்ந்து கிடந்தார்கள்; இப்படி அவர்களை மோஹிப்பிக்கவல்ல க்ருஷ்ணனானவன் வன்னெஞ்சனான என்னுடைய ஹ்ருதயத்தில் நித்யவாஸம் பண்ணுவானாக. (11)

நிகிலபுவநலக்ஷ்மீநித்யலீலாஸ்பதாப்யாம் கமலவிபிநவீதீகர்வஸர்வங்கஷாப்யாம்।
ப்ரணமதபயதாநப்ரௌடிகாடோத்ததாப்யாம் கிமபி வஹது சேத: க்ருஷ்ணபாதாம்புஜாப்யாம்॥ (12)

(ப-உ.) (நிகிலபுவநலக்ஷ்மீநித்யலீலாஸ்பதாப்யாம்) நிகில - ஸமஸ்தமான, புவந - லோகங்களிலுள்ள, லக்ஷ்மீ - ஸௌந்தர்ய லக்ஷ்மிக்கு, நித்ய - எப்போதும், - லீலாஸ்பதாப்யாம் - விஹாரஸ்த்தானமுமாய், (கமலவிபிநவீதீகர்வஸர்வங்கஷாப்யாம்) கமலவிபிந - தாமரைக் காடுகளினது, வீதீ - வரிசைகளுக்கு (அழகினாலு)ண்டான, கர்வ - கொழுப்பை, ஸர்வங்கஷாப்யாம் - வேருடனெடுத்துக் களைவதுமாய், (ப்ரணமதபயதாநப்ரௌடிகாடோத்ததாப்யாம்) ப்ரணமத - (தன்னைச்) சரண மடைந்தவர்கள் விஷயமாக, அபயதாந - அபயப்ரதாநம் பண்ணுவதினாலுண்டான, ப்ரௌடி - காம்பீர்யத்தினால், காட - மிகவும், உத்ததாப்யாம் -

உயர்ந்ததுமாயிருக்கிற, க்ருஷ்ணபாதாம்புஜாப்யாம் - கண்ணனுடைய திருவடிகளினால், சேத: - (என்னுடைய) ஹ்ருதயமானது, கிம் அபி - அளவிடக்கூடாத(ஸுகத்தை), லஸது - லஸிக்க(அடைய)க்கடவது. (12)

(தா-ம்) "ஸ்ரீ கருஷ்ணனே ப்ரஹ்மாதிகளாலுமளவிடக்கூடாத வைபவமுடையவன், நானோமிகவும் சிறிய ஞானத்தன், அவன் ஒரேகாலத்தில் தன் மகிமைமுழுதும்காட்டிடில் என்னால் அநுபவிக்கப்போகாது, ஆகையால் அவனுடைய ஒவ்வோரவயவங்களைத் தனித்தனியே யநுபவிக்கவேணும்" என்று கருதி முதலில் தனக்கு ப்ராப்யமாயும் ப்ராபகமாயுமுள்ள திருவடிகளைத் தம் நெஞ்சிலிருத்த ப்ரார்த்திக்கிறார்.

ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்திற்கு முன்னே ஒவ்வொரு தாமரைப் பூவும் நமக்குமேல் அழகியதொன்றுமில்லை யென்று கர்வ மடைந்திருந்தது, இப்பொழுது ஸமஸ்த லோகங்களிலுள்ள அழகெல்லாம் குடியேறியிருக்குமதான இத் திருவடிகளைக் கண்டு, இதை நம்மில் ஒவ் வொருவரால் ஜயிக்கப் போகாதென்று அத்தாமரைப்பூக்கள் குழாங் குழாமாகத் திரண்டு வரிசை வரிசையாய்நின்று இத்திருவடியினழகை மேலிடக்கருதினவாறே, இத்திருவடிகளினழகு அத்தனைக்கும் விஞ்சியிருக்கையாலே அவற்றைத்தோற்பித்து அவற்றினுடைய கர்வ மனத்தையும் சிறிதும் சேஷியாமல் அபஹரித்துவிட்டது, ஆகையால இவ்வழகிய திருவடிகளுக்குமேல் நமக்கொருப்ராப்யமில்லை; ஆனால் இந்தப்ராப்யத்தைப்பெறுகைக்கு உபாயமென்னென்னில் தன்னைச் சரணாயத்தாலும் வணங்கினோர்க்குத் தன்னை யடைகைக்கு விரோதியாயுள்ள பாபங்களைப்போக்கி அவர்களைத் தன்கீழே அமைத்துக்கொள்ள வல்ல ப்ராபகமும் தானேயாயிருந்தது, இப்படி உபாயமும் உபேயமுமாயுள்ள அத்திருவடிகளையே யடைந்து என்னுடைய மநஸ்ஸு மிகவும் ஆநந்தபரிதமாகக் கடவதாக. (12)

ப்ரணயபரிணதாப்யாம் ப்ராபவாலம்பநாப்யாம் ப்ரதிபதலலிதாப்யாம் ப்ரத்யஹம் நூதநாப்யாம் | ப்ரதிமுஹுரதிகாப்யாம் ப்ரஸ்நுவல்லோசநாப்யாம் ப்ரபவது ஹ்ருதயே ந: ப்ராணநாத: கிஶோர: || (13)

(ப-உ.) (ப்ரணய பரிணதாப்யாம்) ப்ரணய - (ஆஶ்ரித விஷயத்திலுண்டான) ப்ரீதியினால், பரிணதாப்யாம் - பரிபக்வ (பூர்ண)மானதும், (ப்ராபவாலம்பநாப்யாம்) ப்ராபவ - ஐஶ்வர்யத்துக்கு, ஆலம்பநாப்யாம் - சாரண பூதமானதும், (ப்ரதிபத லலிதாப்யாம்) ப்ரதிபத - அடிக்கடி (யுண்டான), லலிதாப்யாம் -

ஸௌந்தர்யாதிஶயத்தையுடையதும், ப்ரதிக்ஷணம் - க்ஷணந்தோறும், நவநவாயமாநம் - புதிதுபுதிதாகத்தோற்றுவதும், ப்ரதிக்ஷணம் - க்ஷணந்தோறும், அதிகாயமாநம் - பரந்துதோற்றுவதும், (ப்ரஸ்ரவத்ஸ்நேஹ நாராயமாநம்) ப்ரஸ்ரவத் - (ஆஶ்ரிதர்க்கு) ஸர்வாபீஷ்டங்களையும் சொரிவதுமான, லோசநாப்யாம் - திருக்கணகளுடன், ப்ராணநாயக: — (என்னுடைய) ஸகலேந்த்ரியங்களுக்கும் ஸ்வாமியாய், கிஶோர: - பாலனான ஸ்ரீக்ருஷ்ணனானவன், ந: - நம்முடைய, ஹ்ருதயே-நெஞ்சில், ப்ரபவது - தோற்றக்கடவானாக.(13)

(தா-ம்.) ஆனல் அததிருவடிகளைக் கரணத்ரயத்தாலும் பற்றும் வகையென்னென்னில், அதற்கு நாமருமைப்படவேண்டா, அவனுடைய திருக்கண்களே ஆஶ்ரயிககப்பண்ணுமென்றுசொல்லி அவற்றையநுபவிக்கிறார்.

சேதநரிடததிலுண்டான ப்ரீதியெல்லாம் ஒருவடிவுகொண்டு தோற்றுகின்றதோ வென்னும்படியாகக் காணும் க்ருஷ்ணனுடைய கண்களில், ப்ரீதி மிகவும் விஞ்சியிருந்தது; ப்ரீதியிருந்தா லுபயோகமென்,? அவரவர்களுடைய காமஙகள் அவரவாகளால் அநுபவித்தே கழியக்கடவதன்றோவென்னில்; இந்த நியமத்தைக்கடந்து தாழ்ந்தாரைத்தான்உயர்த்திஞல் "இப்படிசெய்யலாமோ" என்று தன்னை நியமிக்கவல்லா ரொருவரிலலாதபடி ஸ்வதந்த்ரமுமாயிருக்கும்;அதறகுமேலே,மேன்மேல்வளராநின்ற காந்தியையுடையதாய்க்கொண்டு காண்பார்கு அடிக்கடி புதிதுபுதிதாய்த்தோற்றிச சேதநரை வசீகரித்து, இனிமேலும் இவர்களுக்கு என்ன நன்மை செய்யப்போகிறோமென்று பெருகாநின்ற மநோரததததை யுடைத்தாய்க்கொண்டு, இவர்களுடைய கோரிக்கையை ஒன்றுபததாகக் கொடுக்கும்; இப்படிப்பட்ட கண்களுடன் கூடினவனுய்க்கொண்டு என் னுயிர்ததுணையான க்ருஷ்ணன், இககண்ணழகைவிட்டு மற்றொன்றையறியாத என் மனதில் விசதமாகத் தோற்றக் கடவதாகவேணு மென்கிறார். (13)

போக்யவாரிதிஸுதாமதம்ஸ்ப்ருஹா ஸங்குலம் ஶீத கிஶோரவேஷம் । ஶுத்தஸார ஸுபிக்ஷ நந வத்ஸ்யாமி ... ஸம்ஸேவேநம் ... (14)

(ப-உ) (போக்யவாரிதிஸுதாமதம்ஸ்ப்ருஹா ஸங்குலம் ஶீத கிஶோரவேஷம்) போக்ய - போக்யதையாகிற, வாரிதி-ஸமுத்ரத்தில்நின்றுமுண்டானதாய், ஸுதா - கர்வத்திஞல், மத - மூடமுமாயிருக்கிற, தாம - அலைகளுடைய, ஸ்ப்ருஹா - ரீதியையுடைத்தான, ஶ்ருங்கார - ஶ்ருங்காரசேஷ்டைகளுடன், ஸங்குல - கூடியும், ஶீத (ஸேவிப்பவர் கணகளுக்கு) குளிர்நதுமிருக்கிற, கிஶோர - சிறு

பிள்ளையினுடைய, வேஷம் - வேஷம்பூண்டவனும், (ஸ்மேர ஹாஸ முதிதாநந சந்த்ரபிம்பம்) ஸ்மேர ஹாஸ-கொஞ்சம்புன்நகையினால், முதித - எழில பூண்ட, ஆநந சந்த்ரபிம்பம் - சந்த்ரமண்டலம் போன்ற முகத்தையுடையவனும், (ஆநந்த ஸம்ப்லவம்) ஆநந்த - ஸுகத்துக்கு, ஸம்ப்லவம்- ஸமுத்ரம்போல் முக்யஸ்தாநமுமாயிருக்கிற க்ருஷ்ணனை, மே-என்னுடைய, மந:-மநஸ்ஸானது, அநுப்லவதாம்- பின்செல்லக் கடவதாக. (14)

(தா-ம்.) இதில் முகத்தினழகை யநுபவிக்கிறார்.

ஸ்ரீ க்ருஷ்ணனுடைய வடிவில் போக்யதையானது ஸமுத்ரம்போல் அளவிட்டறியப்போகாது; அதற்குமேலே, அந்த ஸமுத்ரத்தில் நின்றும் கிளம்பி ஒருவராலும் தகையவொண்ணாதபடி யெறிகிற அலைகள்போலிரா நின்றது ஸ்ருங்கார விலாஸங்கள்; வடிவில் நடமாடாநின்ற இளம்பருவமும் கண்டவர்களுடைய கண்களைக் களிக்கப் பண்ணவற்றாயிருந்தது; இவற்றோடு கூடிய முகமானது, நிலவுபோன்ற புன் நகையினால் எங்கும் வ்யாப்தமாய்க்கொண்டு சந்த்ர பிம்பம்போல் மிகவு மழகியதாய் பக்த ஜநங்களுடைய மனதில் ஆநந்த ஸாகரத்தை நத்தேகாநின்றது; இப்படிப்பட்ட அவனுடைய முகத்தை, அவனைக்கண்டல்லது தரியாத ஸ்வபாவத்தை யுடையவனான என்னுடைய மநஸ்ஸானது, எப்போதும் தயாநிக்கக் கடவதாக. (14)

அவ்யாஜமஞ்ஜுல முகாம்புஜ முக்தபாவைராஸ்வாத்யமாந
நிஜவேணு விநோத நாதம் । ஆக்ரீடதாமருணபாதஸரோ
ருஹாப்யாமார்த்ரே மதீய ஹ்ருதயே புவநார்த்ரமோஜ:॥(15)

(ப-உ.) (அவ்யாஜமஞ்ஜுல முகாம்புஜ முக்தபாவை:) அவ்யாஜ - ஒரு வ்யாஜத்தினலன்றிக்கே (ஸ்வாபாவிகமாகவே), மஞ்ஜுல - அழகுபொழிகிற, முகாம்புஜ - முகாரவிந்தத்திலுண்டான, முக்த - மநோஹரமான, பாவை:- சேஷ்டைகளினால், (ஆஸ்வாத்யமாந நிஜவேணு விநோத நாதம்) ஆஸ்வாத்யமாந - பாநம்பண்ணப்படுகிற (அநுமோதித்து அநுபவிக்கப்படுகிற,) நிஜ - தன்னுடையதான, வேணு - வேணுவில்நின்றுமுண்டான, விநோத - அதிசமத்காரமான, நாதம் - சப்தத்தை யுடையதும், (புவநார்த்ரம்) புவந - ஜநங்கள்விஷயத்தில், ஆர்த்ரம் - தயையையுடையதுமான, ஓஜ: - தேஜஸ்ஸானது, ஆர்த்ரே - பக்திரஸத்தினால் நனைப்புண்ட,

மதீயஹ்ருதயே - என்னுடையதான நெஞ்சில், (கரஸ்ஸாரஸஸௌரஸ ஹாஸஹ்ராப்யாம்) - கரஸ்ஸா - சிவந்திருக்கிற, ஸாரஸஸௌரஸஹா ஹ்ராப்யாம் - தாமரைப்பூப்போல் 'ம்ருதுவான திருவடிகளினால், க்ரீடதாம் - க்ரீடாரஸத்தை யநுபவிக்கக்கடவது. (15)

(தா-ம்) இதில் அவன் முகத்தில் குழலூதும்போதுண்டான அழகி லீடுபடுகிறார்.

ஸ்ரீக்ருஷ்ணனுடைய முகமோ ஓரலங்காரமு மின்றிக்கே ஸ்வாபாவிகமான ஸௌந்தர்யத்தை யுடைத்தாயிருந்தது; அம்முகத்திலே அவன் குழலை வைத்தூதினான்; அப்பொழுது அவன் முகமானது, சிறிது துடிப்புடனே சிமிழ்த்திருக்கிற அதரமும், கொஞ்சம் வளைந்து நெளித்திருக்கிற புருவங்களும், அப்புருவங்களுக்கு மேற்புறத்தில் நெற்றி அற்பம் குறுகிச் சிறிது மடிந்து தோற்றுகிற ரேகைகளும், குழலோசையின் பாவங்களையெல்லாம் காட்டுவதாய்க்கொண்டு சஞ்சலமாயிருக்கிற கண்களுமாய், கண்டவர்கள் மனதைக் கரையப்பண்ணாநின்றது; இப்படி ஸகலரையும் தளரப்பண்ணாநின்ற அதிஸுந்தரனான ஸ்ரீ க்ருஷ்ணன், அவனுடைய ஸஞ்சாரத்துக்கு யோக்யமாம்படி பக்திரஸத்தைத்தெளித்து நெகிழப்பண்ணியிருக்கிற என் மனதில் தன்னுடைய அடித்தாமரையைவைத்து நர்த்தனம் செய்யக்கடவானாகவேணும். (15)

மணிநூபுரவாசாலம் வந்தே தச்சரணம் விபோ:। லலிதானி யதீயானி லக்ஷ்மாணி வ்ரஜவீதிஷு॥ (16)

(ப-உ.) யதீயானி - எந்தத்திருவடிகளுடைய ஸம்பந்திகளான, லக்ஷ்மாணி - வஜ்ரத்வஜ அங்குசஸரோருஹாதிகளான அடையாளங்கள், வ்ரஜவீதிஷு - திருவாய்ப்பாடியின் திருவீதிகளில், லலிதானி - மநோஹாரிகளாகக் (காணப்படுகின்றனவோ) (மணிநூபுரவாசாலம்) மணி - ரத்னங்களிழைத்த, நூபுர - தண்டைச்சிலம்பினால், வாசாலம் - சப்தித்துக்கொண்டிருக்கிற, தத் - அந்த, சரணம் - திருவடித்தாமரைகளை, வந்தே ஸேவிக்கிறேன். (16)

(தா-ம்.) இதில், அவனுடைய அடிவைப்பிலுள்ள சிந்நங்களி லகப்பட்டநுபவிக்கிறார்.

நவரத்னங்களினால் செய்யப்பட்ட சதங்கைகள் கோத்து அசையும்போது ஆரவாரம் செய்யாநின்ற தண்டைகளைத் தன்கழல்களில் பூண்டு க்ருஷ்ணனானவன் திருவாய்ப்பாடியில் வீதிகள்தோறும் தளர்நடையுடன் நடமாடும்போது அத் திருவடிகளிலுள்ள சங்கம், சக்ரம், கற்பகக் கொடி, அங்குசம், தாமரைமலர், மத்ஸ்யம், அம்ருதகலசம், வஜ்ரம்,

த்வஜம், என்று இப்படி ரேகாகாரமாய் பரத்வத்யோதகங்களான இவை யெல்லாம் அடிவைப்பிலேபடிந்து வீதிகளை யலங்கரியாநின்றன. அதை நான் இப்பொழுது இருந்து வணங்காநின்றேனென்கிறார். (16)

மம சேதஸி ஸ்புரது வல்லவீவிபோர் மணிநூபுர ப்ரணயி மஞ்ஜு ஸிஞ்ஜிதம் | கமலாவநேசர கலிந்தகந்யகா கலஹம்ஸகண்ட கலகூஜிதாத்ருதம் || (17)

(ப-உ.) (கமலாவநேசரகலிந்தகந்யகா கலஹம்ஸகண்ட கலகூஜிதாத்ருதம்) கமலா - பெரியபிராட்டியார்க்கு இருப்பிடமான, வநே - பத்மவநத்தில், சர - ஸஞ்சரிக்கிற, கலிந்தகந்யகா - யமுநாநதியிலுண்டான, கல - ஸுந்தரங்களான, ஹம்ஸ - அன்னப்பறவைகளினுடைய, கண்ட மிடற்றிலுண்டான, கல - இனிமையான, கூஜித - சப்தத்தினல், ஆத்ருதம் - கொண்டாடப்பட்டதாய், வல்லவீவிபோ: - இடைப்பெண்களுக்கு வல்லபனான க்ருஷ்ணனுடைய, (மணிநூபுரப்ரணயிமஞ்ஜுஸிஞ்ஜிதம்) - மணிநூபுர - மாணிக்கங்களிழைத்த தண்டைச்சிலம்போடு, ப்ரணயி - ஸ்நேஹித்திருக்கிற, மஞ்ஜு - கோமளமான, ஸிஞ்ஜிதம் - த்வநியானது, மம -என்னுடைய, சேதஸி- மனதில், ஸ்புரது - தோற்றக்கடவதாக.(17)

(தா-ம்.) கீழ் தண்டையைச சொல்லவே அதினுடைய ஒலி நெஞ்சில் பட்டு, அதை யெப்பொழுதும் த்யாநிக்க விரும்புகிறார்.

க்ருஷ்ணன் ஆயர்மாதரைத் தன்னழகால்வென்று காலில் வீரத்தண்டை பூண்டு திருவீதிகளிலுலாவாநின்றான், அப்பொழுது கரிய கோலத்தையுடைய அவன் காலிலணியப்பட்டதாய் வைரமணிக ளிழைத்து வெளுத்து விளங்காநின்றஅத்தண்டையில் கோத்துக்கட்டியிருக்கிற மணிமயமான சதங்கைகள் செவிக்கினிதாகச் சிற்றொலி செய்யாநின்றது; அப்பொழுது அதிஸுந்தரமான க்ருஷ்ணனுடைய பாதரேகைகள்படிந்த பரப்புடைத்தான வீதிகளையும, அங்குலாவாநின்ற க்ருஷ்ணனுடைய திருமேனியையும் அதில் பூண்ட வெண்மையான தண்டையையும், அதில் நின்றும் புறப்பட்ட சிற்றொலியையும் கண்டவர்கள், தாமரைக்காட்டில் நீலவர்ணத்தை யுடைத்தான யமுநாநதி ப்ரவஹிக்கிறதாகவும், அந்நதியில் நீந்து விளையாடாநின்ற வெண்மையான ஹம்ஸங்கள் இனிமையாக மிடற்றோசையை மிழற்றுகிறதாகவும் நினைத்துக் கொண்டாடாநின்றார்கள். அன்றிக்கே "கமலாவநேசர" என்றபதம் "கலிந்தகந்யகா" என்ற பதத்திற்கு விசேஷணமல்லாமல் "கலஹம்ஸ" என்ற பதத்திற்கு விசேஷணமாகச்சொல்லும்போது, கரிய திருமேனியில் தாமரை மலர்போன்ற திருவடிகளில் பூண்ட

தண்டைசிலம்பி னொலியைக்கண்டு, யமுநா நதியில் ஓர் தாமரையாய், அதில் படுத்ததொரு ஹம்ஸமாய், அது ஒலிக்கு மொலியாக நினைத்து ஆதரியாநின்றார்கள்; அந்த சப்தமானது அக்காலத்தில் பிறவாத என்னுடைய மநஸ்ஸில் அக்காலத்தியதுபோல் தோற்றவேணுமென்கிறார். (17)

தாம்ராருணகருணார்த்ர விஶாலாயத நயநம் கமலாகு-
சகலஶீபரபுலகீக்ருத ஹ்ருதயம் । வேணுரவதரளீக்ருதமு-
நிமாநஸநளிநம் மம விலஸதி முதிதமநஸி மதுராதரம் தத்வம்(18)

(ப-உ,) (தாம்ராருண கருணார்த்ர விஶாலாயதநய நம்) தாம்ர - செவ்விபெற்றதும், அருண - (கடை) சிவந்ததும், கருணார்த்ர - இரக்கமுற்றதும், விஶால - அகன்றதும், ஆயத - நீண்டதுமாயிருக்கிற, நயநம் - திருக்கண்களையுடையதும், (கமலாகுசகலஶீபர புலகீக்ருத ஹ்ருதயம்) கமலா - பெரியபிராட்டியாருடைய, குசகலஶீபர - பூர்ணகும்பங்கள்போன்ற ஸ்தநங்களினாலே, புலகீக்ருத - மயிர்க்குச்செறியப் பண்ணப்பட்ட, ஹ்ருதயம் - திருமார்பையுடையதும், (வேணுரவதரளீக்ருத முநிமாநஸ நளிநம்) வேணுரவ - வேணுகாநத்தினால், தரளீக்ருத - சலிப்பிக்கப்பட்ட, முநி - மஹர்ஷிகளுடைய, மாநஸநளிநம் - ஹ்ருதயகமலத்தையுடையதும்; (மதுராதரம்) மதுர - மனோஜ்ஞமான, அதரம் - வாயையுடையதும், தத்வம் - மோக்ஷப்ரதமுமான பரதத்வமானது, மம - என்னுடைய, முதிதமநஸி - களிப்புற்ற வுள்ளத்தில, விலஸதி - விளையாடாநின்றது. (18)

(தா·ம்.) இதில் சில அவயவஙகளைச் சேர்த் தநுபவிக்கிறார்.

ஶ்ரீ க்ருஷ்ணனுடைய நேத்ரங்களோ, பரந்து நீட்சியையுடையதும், அப்பரப்படைய கருணாரஸ பரிபூரிதமுமாய், கொஞ்சம் சிவந்து செவ்வி யழியாததுமா யிருந்தது; திருமார்போ, ஆலிங்கந காலததில் ருக்மணீ தேவியினுடைய கொங்கைத்தலஙகள் நெருக்க, அவ்வாநந்தத்தினால் மயிரெழுச்சியை யுடைத்தாயிருந்தது; இவனுடைய குழலோசையானது, பகவத்யாந பரரான ருஷிகளுடைய ஹ்ருதயகமலத்தை அலரப்பண்ணாநின்றது; அதரமணியோ, அமுதம்போல் மிகவு மினிதா யிருந்தது; இவ் வவயவஙகளோடு கூடிய ஶ்ரீக்ருஷ்ணன், இவற்றை நினைத்துக் களியாநின்ற என்னுடை நெஞ்சில் யதேஷ்டமாக நர்த்தனம் செய்யக்கடவானாக வென்கிறார். (18)

ஆமுக்தமர்த்தநயநாம்புஜசும்ப்யமாந ஹர்ஷாகுலவ்ரஜவதூமதுராநநேந்தோ: | ஆரப்தவேணுரவமாதிகிஶோரமூர்தேராவிர்பவந்தி மம சேதஸி கே(அ)பி பாவா:॥ (19)

(ப-உ) (அர்த்தநயநாம்புஜ சும்ப்யமாந ஹர்ஷாகுலவ்ரஜவதூமதுராநநேந்தோ:) அர்த்தநயநாம்புஜ - பாதிமூடிப் பாதி திறந்ததும் கமலமலர்போன்ற செவ்வியையுடையதுமான கண்களினால், சும்ப்யமாந- அத்யாதரத்துடன் பார்க்கப்பட்டதாய், ஹர்ஷ- அந்தஸந்தோஷத்தினால், ஆகுல-மதிமயங்கிக்கிடக்கிற, வ்ரஜவது- இடைப்பெண்களுடைய, மாதுர - போக்யதைவிஞ்சியும், ஆநநேந்தோ: - சந்த்ரன்போல் ஆஹ்லாதகரமுமான முகத்தையுடையவனும், (ஆதிகிஶோரமூர்தே:) ஆதி - ஜகத்காரணபூதனும், கிஶோரமூர்தே: - பிள்ளைவடிவுகொண்டவனுமாகிய க்ருஷ்ணனுடைய, கே(அ)பி - இவ்விதமென்று சொல்லமுடியாததான, பாவா: - லீலாவ்யாபாரங்கள், ஆமுக்தம் - நன்றாக நெஞ்சுக்கினிதாமபடியாகவும், (ஆரப்தவேணுரவம்) ஆரப்த - ஆரம்பிக்கப்பட்ட, வேணுரவம் வேணுநாதத்தை யுடைத்தாம்படியாகவும், மம - என்னுடைய, சேதஸி - மனதில், ஆவிர்பவந்தி - ப்ரகாசிக்கின்றன. (19)

(தா-ம்.) இதில், ஆஶ்ரிதர்பக்கல் வ்யாமுக்த்தமான அவனுடைய முகத்தில் ஶ்ருங்கார விலாஸங்களை யநுபவிக்கிறார்.

ஶ்ரீ க்ருஷ்ணன் தன்னுடைய ஶ்ருங்கார விலாஸங்களும் மநோபாவங்களுமெல்லாம் தோற்றும்படி பாதிமூடிப் பாதிதிறந்து மிகவும அழகிய தான கண்களினால் சந்த்ரனோடொத்து இனிதாக விளங்குகிற இடைப்பெண்களுடையமுகத்தைத தன்னுடைய ஆவலெல்லா முள்ளடங்காமல் அடுத்தடுத்துப் பார்க்கும் பார்வைகளினாலும், செவிக்கினிய குழலோசையாலும், தான் ஜகதகாரணனாயினும் ப்ராக்ருதரைப்போல் பூண்ட அதிரமணீயமான பிள்ளைத்தனத்தினாலும் இடைச்சிகளை நின்றவிடத்தில் நிற்கவொட்டாமல் அலையும்படியாக மஹாநந்தத்தை விளைவித்தான்; அப்பொழுது அவர்களுக்கு ப்ரத்யக்ஷமாகததோற்றி யாநந்திப்பித்த அந்த க்ருஷ்ணனுடைய விலாஸஙகளெல்லாம் இப்பொழுது என்மனதுக்குத் தோற்றக்கடவதாக(19)

கலக்வணிதகங்கணம் கரநிருத்தபீதாம்பரம் க்ரமப்ரஸ்ருதகுந்தலம் கலிதபர்ஹபூஷம் விபோ: | புந:ப்ரக்ருதிசாபலம் ப்ரணயிநீபுஜாயந்த்ரிதம் மம ஸ்புரது மாநஸே க்ருதபதப்ரஶஸ்திகம்॥ (20)

(ப-உ.) (கலக்வணித கங்கணம்) கல-இனிமையாக, க்வணித-சப்தித்துக் கொண்டிருக்கிற, கங்கணம் - கங்கணமென்கிற கையிலாபரணத்தையுடையதும், (கர நிருத்த பீதாம்பரம்) கர-கையினால், நிருத்த - அவிழ்ந்துபோகாமல் பிடித்துக்கொள்ளப்பட்ட, பீதாம்பரம்- பட்டுத்திருப்பரியட்டத்தையுடையதும், (க்ரம ப்ரஸ்ருத குந்தலம்) க்ரம - மெள்ளமெள்ள, ப்ரஸ்ருத - அவிழ்ந்துசரிகிற, குந்தலம் - குழற்கற்றையுடையதும், (கலித பர்ஹபூஷம்) கலித - நழுவிப்போன, பர்ஹபூஷம் - மயில்கண்ணாகிற ஆபரணத்தையுடையதும், (புந: ப்ரக்ருதி சாபலம்) புந:-அடிக்கடி, ப்ரக்ருதி - வெளிஸஞ்சாரத்தில், சாபலம் ஆசையுடையதும், (ப்ரணயிநீ புஜா யந்த்ரிதம்) ப்ரணயிநீ - நாயிகையினுடைய, புஜா - கைகளினால, யந்த்ரிதம் - தகைந்து ஆலிங்கநம்செய்து கொள்ளப்பட்டுமிருக்கிற, விபோ: - ஸ்வாமியான ஸ்ரீக்ருஷ்ணனுடைய, (மதந கேளி ஶய்யோத்திதம்) மதந கேளி - மந்மதவிஹாரயோக்யமான, ஶய்யா - திருவணையில் நின்றும், உத்திதம் - எழுந்திருந்த திவ்யவிக்ரஹமானது, மம - என்னுடைய, மாநஸே - மநஸ்ஸில், ஸ்புரது - ப்ரகாசிக்கக் கடவதாக. (20)

(தா-ம்) கீழ் ஶ்லோகத்தில் கோபிமார்களைச் சொன்னவாறே அவர்களோடு ஶ்ரீக்ருஷ்ணனுக்கு ரதிகாலத்திலுண்டான வேஷங்கள் ஸ்ம்ருதிக்குவந்து, அவ்வேஷத்தை வர்ணிக்கிறாரிதில்.

இராத்ரி நெடும்பொழுது தன் ப்ராணநாயகியான கோபிகையுடன் மந்மதவிலாஸத்தைச்செய்து பின்பு, அவ்விளைப்புதீர அங்கு படுக்கையில் சற்றுக்கண்வளர்ந்து விடியற்காலமானவாறே அங்குநின்றும் புறப்பட்டுப் போகத்தொடங்கினான் க்ருஷ்ணன் ; அப்பொழுது கையில் கங்கணங்கள் ஜணஜணவென்று ஒலியாநின்றது; அக்கையினால் அரையினின்றும் நழுவாநின்ற பீதாம்பரத்தைப் பிடித்துக்கொண்டான்; முன்னெற்றிமயிர்கள் முடியவிழ்ந்துசிறிது சுருண்டு கீழும்மேலுமாகச் சுற்றும் தொங்காநின்றது;மயிர்முடியவிழ்ந்தவாறே அத்துடன் கட்டப்பட்ட மயிலிறகானது கீழே நழுவிவிழாநின்றது; இவ்வேஷத்துடனே க்ருஷ்ணன் வெளிப்புறப்பட அசைந்தான்; அப்பொழுது இவனைப் போகவொட்டாமல் அந்த கோபிகையானவள் தன்கையினால் வளைத்துக்கட்டி அங்கேயிருத்திவிட்டாள்; அக்காலத்திலுள்ள வேஷத்தைக் காணப்பெற்ற எனது நெஞ்சில் அவ்வேஷம் தாளிவீச தாற்றக்கடவதாக.

ஹ்ராஸம் ஹ்ராஸம் நிருத்3த4 ஸரஸ ப்ரஸ்ருத ஸ்மிதம்
ப்ரேமோத்3பே4த3 நிரர்க3ல ப்ரஸ்ருமர வ்யக்த ரோமோத்3க3மம் |
ஶ்ரோத்ரு ஶ்ரோத்ர மனோஹரம் வ்ரஜவதூ4 லீலா மிதோ2 ஜல்பிதம்
மித்2யா ஸ்வாபமுபாஸ்மஹே ப4க3வத: க்ரீடா3நிமீலத்3த்3ருஶ: ‖ (21)

(ப-உ.) (ஹ்ராஸம்ஹ்ராஸம் நிருத்3த4 ஸரஸப்ரஸ்ருதஸ்மிதம்) ஹ்ராஸம்ஹ்ராஸம் - கொஞ்சம் கொஞ்சமாக, நிருத்3த4 - நிவாரணம் செய்யப்பட்ட, ஸரஸம் - ஸரஸமாக, ப்ரஸ்ருத - பரவாநின்ற, ஸ்மிதம் - புன்சிரிப்பையுடையதும், (ப்ரேமோத்3பே4த3 நிரர்க3லப்ரஸ்ருமரவ்யக்தரோமோத்3க3மம்) ப்ரேம - ப்ரீதியினுடைய, உத்3பே4த3 - ஆவிர்ப்பாவத்தினால், நிரர்க3லம் - தடையில்லாதபடி, ப்ரஸ்ருமர - பரவாநின்றும், வ்யக்த - கண்ணுக்கு மிகவும் காண உரியதுமான, ரோமோத்3க3மம் - மயிரெழுச்சிகளை யுடையதும், (ஶ்ரோத்ருஶ்ரோத்ர மனோஹரவ்ரஜவதூ4லீலாமிதோ2ஜல்பிதம்) ஶ்ரோத்ரு - கேட்பவர்களுடைய, ஶ்ரோத்ர - காதுக்கு, மனோஹர - ஸுக கரமா யிருக்கிற, வ்ரஜவதூ4 - கோபிமார்களோடுண்டான, லீலா - திருவிளையாடலில், மித2: - ஒருவர்க்கொருவர்செய்த, ஜல்பிதம் - ஸம்பாஷணத்தையுடையதுமாயிருக்கிற, (க்ரீடா3நிமீலத்3த்3ருஶ:) க்ரீடா3 - லீலார்த்தமாக, நிமீலத் - மூடிக்கொண்டிருக்கிற, த்3ருஶ: - திருக்கண்களையுடைய, ப4க3வத: - ஸ்ரீக்ருஷ்ணனுடைய, மித்2யாஸ்வாபம் - பொய்யுறக்கத்தை, உபாஸ்மஹே - த்யானம்செய்கிறோம். (21)

(தா-ம்.) இதில், ரதிகாலாநந்தரம் க்ருஷ்ணனுடைய பொய்யுறக்கத்தை நினைக்கிறார்.

இந்த க்ருஷ்ணமூர்த்தியானவன், என் முன்னிலையிலும் சுற்றிலும் நின்று அதிவிநோதமாக விளையாடாநின்றான்; அவ்வளவேயன்று, லோகமெல்லாம் எனக்குக்ருஷ்ண ஸ்வரூபமாகவே தெரிகிறது; இதைப்பொய்யென்னப்போகாதபடி என்கண்களால் நேரே கண்டுகொண்டிருக்கிறேன்; இப்படியிருக்க நான் கைநீட்டினால் அகப்படாமலிருக்கையென்பது பெரியவாஶ்சர்யத்தை விளையாநின்றது; இதுக்கென்ன காரணமோ அறிகிறிலேன் ஆ! ஆ! என்ன ஆஶ்சர்யம்! என்ன கஷ்டம! இது எனக்கு ஆஶ்சர்யத்தையும் துன்பத்தையும் விளையாநின்றது என்கிறார். (60)

சிகுரம் பஹுலம் விரளம் ப்ரமரம் ம்ருதுலம் வசநம் விபுலம் ந
யநம் | அதரம் மதுரம் வதநம் லலிதம் சபலம் சரிதம் ச கதா நு விபோ: ||

(ப-உ) பஹுலம் - நெருங்கியிருக்கிற, சிகுரம் - குழற்கற்றையையும், விரளம் - பரந்திருக்கிற, ப்ரமரம் - நெற்றியையும், ம்ருதுலம் - கோமலமான, வசநம் - ஸூக்தியையும், விபுலம் - அகன்ற-நயநம் - கண்ணையும், மதுரம் - தித்தித்த, அதரம் -

கீழுதட்டையும், ஸுந்தரம் - ஸுந்தரமான, வதநம் - முகத்தையும், சஞ்சலம் - சஞ்சலமான, சேஷ்டிதம் - சேஷ்டையையும், கதா - எப்பொழுது, ஸந்ஸேவெ - அநுபவிக்கப்போகிறேன். (61)

(தா-ம்.) இதில், நம் கண்ணுக்குப் புலப்படுகிற க்ருஷ்ணன் கைக்கப்படாமைக்குக் காரணமென்னென்று ஆராயுமளவில, இது நமக்கு மாநஸ ஜ்ஞாநமொழிய ப்ரத்யக்ஷமன்று, அவன் கண்ணுக்குப் புலப்படவேயில்லை என்றறிந்து உத்ஸாஹம் குலைந்து, அதனால முன்புள்ள மனத்தோற்றத்தையுமிழந்து வ்யாகுலப்படாநின்ற இவர் அந்த மனத்தோற்றத்தையாகிலும் பெறும்விதமெனனென்று பேசுகிறார்.

அந்த ஶ்ரீக்ருஷ்ணனுடைய, நெருங்கின கேசங்களையும், அதற்குக்கீழே காண்கிற பறந்த நெற்றிக்கட்டையும், அதற்குச்சிறிது கீழேதோற்றுகிற மழலைச்சொல்லையும், பரந்தகண்களையும், இனிமையான அதரத்தையும், ஸுந்தரமான முகத்தையும், அதிசஞ்சலவ்யாபாரத்தையும் நானநுபவிப்பதெப்போதோவென்கிறார். (61)

பரிபாலய நஃ க்ருபாலயெத்யஸக்ருஜ்ஜல்பிதமார்த்தபாந்தவ: | முரளீம்ருதுலஸ்வநாந்தரே விபுராகர்ணயிதா கதா நு ந: || (62)

(ப-உ.) க்ருபாலய - க்ருபாநிதியே! ந: - எங்களை, பரிபாலய - காப்பாற்று, இதி - என்று, ந: - எங்களுடைய, அஸக்ருத் - அடிக்கடி சொல்லப்பட்ட, ஜல்பிதம் - சொல்லை, (ஆர்த்தபாந்தவ:) - ஆர்த்த - எனக்கு, பாந்தவ: - பந்துவான, விபு: - ஶ்ரீக்ருஷ்ணன், (முரளீம்ருதுலஸ்வநாந்தரே) முரளீ - வேணுவினுடைய ம்ருதுல - ஸரஸமான, ஸ்வந - சப்தத்தினுடைய, அந்தரே - இடையில, கதா நு - எப்பொழுது, ஆகர்ணயிதா - கேட்கப்போகிறானோ. (62)

(தா-ம்) நீர் அவனிடத்தில் முறையிட்டீராகில் அவன் இரங்கி உமக்குத் தன்வடிவைக் காட்டுமென்று அருகிலுள்ளார் சொல்ல, அவர்களுக்குப் பதிலுரைக்கிறார்.

நமக்கு நிருபாதிக பந்துவான ஶ்ரீக்ருஷ்ணன், "ஓ கருணாகரமே! அநாதரானவெங்களை நீ காப்பாற்றக்கடவாய்" என்று அடிக்கடி நான் சொன்னபோதிலும்கூட, அவன் ப்ரபுவாகையாலே, தன்னுடைய வேணுகாநத்தை நிறுத்தி எந்தஸமயத்தில் என்சொல்லைக் கேட்கப்போகிறானோ? வென்கிறார். (62)

கதா நு கஸ்யாம் நு விபத்தஶாயாம் கைஶோரகந்தி: கருணாம்புதிர்ந: |
விலோசநாப்யாம் விபுலாயதாப்யாம் வ்யாலோகயிஷ்யந் விஷயீகரோதி || (63)

(ப-உ) ஶைஶவமாதுர்யாத் - பால்பாவத்தையினால் இனியனாய், காருண்யஸிந்து: - க்ருபாஸமுத்ரனான ஶ்ரீக்ருஷ்ணன், கதா - எந்த, திவஸே - ஆக்ஞில, ந: - எங்களை, (விஶாலதரலாக்ஷ்யாம்) விஶாலம் - பரந்தும், தரலாக்ஷ்யாம் - நீண்டுமிருக்கிற, விலோசநாப்யாம் - திருக்கண்களினால, கடாக்ஷிதான் - கடாக்ஷிப்பவனாய்க்கொண்டு, கதா நு - எப்பொழுது, விஷயீகரோதி - அங்கீகரிப்பனோ. (63)

(தா-ம்) இதில், என் சொல்லை அவன் கேட்டதே போராது, கடாக்ஷிக்கவும வேணுமென்கிறார்.

பரமகாருணிகனாய், எல்லாரும் அசாமற வந்து தொழத்தக்க சிறபிள்ளையான க்ருஷ்ணன், ஊனிவ்யாபத்திலிருக்கச்செய்தே, என்போல்வாரைக் கடாக்ஷிக்கைக்காகவே பரந்து நீண்டிருக்கிற கண்களாலே குளிரக்கடாக்ஷித்து எங்களை எப்போதங்கீகரிக்கப்போகிறானோ வென்கிறார். (63)

மதுரமதரபிம்பே மஞ்ஜுளம் மந்தஹாஸே ஶிஶிரமம்ருதவாக்யே
ஶீதலம் த்ருஷ்டிபாதே | விபுலமருணநேத்ரே விஶ்ருதம்
வேணுநாதே மரகதமணிநீலம் பாலமாலோகயே நு (64)

(ப-உ) அதரபிம்பே - கோவைப்பழம்போன்ற உதட்டில், மதுரம் - தித்தித்ததும, மந்தஹாஸே - புன்சிரிப்பில, மஞ்ஜுளம் - மனோஹரமானதும், அம்ருதவாக்யே - அமுதம்போன்ற பேச்சில், ஶிஶிரம்=குளிர்ந்ததும், த்ருஷ்டிபாதே - பார்வையில், ஶீதலம் - வல்லவிடப்பணணுவதும், (அருணநேத்ரே) அருண - செவந்தவர்ணமுடைய, நேத்ரே - கண்ணில், விபுலம் - பரந்ததும், வேணுநாதே - வேணுகானத்தில, விஶ்ருதம்-ப்ரஸித்தமானதும், (மரகதமணிநீலம்) மரகதமணி - (வடிவில) மரகதப்பச்சைபோல், நீலம் - நீலவர்ணமுமாய், பாலம் - பாலனை ஶ்ரீக்ருஷ்ணனை, ஆலோகயே நு - எப்பொழுது பார்க்கப்போகிறேன். (64)

(தா-ம்.) இதில் அவன் கடாக்ஷத்தினால் என் தாபமெல்லாமாறி அவனை நான் காண்பதெப்போதோ வெனகிறார்.

இத்தனைகாலம், அதிதீவ்ரமாய், கீழேகால் பாவவொண்ணாதபடி விஷயங்களாகிற கல்லும் முள்ளும் நிறைந்து தாபத்ரயமாகிற தாவாநலம் வீசாநின்ற ஸம்ஸாரத்தில் திரிந்து ஸகலேந்த்ரியங்களும் பசையற்றுக்கிடக்கிற நான் இப்போது, க்ருஷ்ணனுடைய, கண்மறையநின்று காதுகுளிரும்படி பாடாநின்ற வேணுகானத்தையும், கண்ணெதிரே நின்றானாகில் கண்டபோ

தே ஸகலதாபஙகளுமாறும்படி மரகதமணிபோல் குளிர்ந்து நிழலோடி நீல யேறி நிர்மலமாயிருக்கிற திருமேனியையும், ஆஶ்ரிதர் தஙகள் பாபஙகளைக் கண்டஞ்சி தூரநிற்கவேண்டாமென்று அவர்கள்பாபத்தையே பசசையாகக் கொள்கையாகிற வாத்ஸல்யமென்னும் குணத்தினால் தேறிசசிவந்து பார்த்திருக்கிற கண்களையும், எட்ட நிற்குமபோதே ஆஶ்ரிதருடைய ஸம்ஸாரதாபஙகளையெல்லாமாற்றி அவர்களை வவ்வலிடுமபடி குளிரப்பண்ணாநின்றுள்ள கடாக்ஷஙகளையும், கிட்டினால் "நன்ருயிருக்கிருயோ" என்று குசலப்ரஶ்நமபண்ணிகாதிலமுதைப் பொழியாநின்ற இனிய சொற்களையும், இததனை நாள்பட்ட நெஞ்சாறல்தீர்த்து அந்த꞉கரணத்தைக குளிரப்பண்ணுமதான ஸுந்தர மந்தஹாஸத்தையும், க்ஷுத்ர விஷயஙகளை யநுபவித்துக் கைப்பேறிக்கிடக்கிற நாவானது தித்திக்கும்படியாயிருக்கிற மதுரமான அதரமுமாகிய நின்ற க்ருஷ்ணனுடைய இவ்வவயவஙகளை நான் இந்த ஜந்மத்தில் பார்க்கமாட்டேனோவென்கிருர். (64)

[Grantha verse, 2 lines, illegible] ॥ (65)

(ப-உ) [Grantha] - தித்திப்புடைய சர்க்கராதிகளைக் காட்டிலும், [Grantha] - இனிமையானதும், [Grantha] - சஞ்சலமான மின்னல் முதலானவற்றைக்காட்டிலும், [Grantha] - சஞ்சலமாயுமிருக்கிற, [Grantha] - மன்மதாம்சமான ப்ரத்யும்நனுக்குத் தந்தையான ஶ்ரீக்ருஷ்ணனுடைய, [Grantha] - வர்ணிக்கமுடியாத, [Grantha] - இளந்தன்மையானது, [Grantha] - என்னுடைய, [Grantha] - நெஞ்சை, [Grantha] - அபஹரிக்கிறது; [Grantha] - என்ன செய்வோம்; [Grantha] கஷ்டம். (65)

(தா-ம்.) நீரிப்படி அவனைககாணப் பதறுவானேன், அவன் தான் வருமளவும் பொறுததிருககலாகாதோ வென்றவர்களைப்பார்த்துசசொல்லுகிருர்.

அதிஸுந்தரனான காமதேவனுக்கும் பிறப்பிடமான க்ருஷ்ணனுடைய இளமபருவமானது, இதையொருகாலநுபவிததபின் தேவாம்ருதமும் ஸாரமற்ற பிப்பியென்னும்படி அதிமதுரமாய் வாசாமகோசரமாயிருந்தது: அக்காலத்திலுள்ள சேஷ்டிதஙகளும் அதிசபலமாயிருந்தது; அவையிரண்டும், என்மனதை என்னிடமிருக்கவொட்டாமல் பலாதகாரமாகப் பிடித்திழுத்துக்கொண்டுபோய் அவனிடத்திலழுததிவிட்டது. அதுக்குநானென்னசெய்வேன்? என்னால் பொறுததிருக்கவொண்ணுதென்கிருர். (65)

[Grantha verse, 3 lines, illegible] ॥ (66)

(ப-உ) வக்ஷஸி - திருமார்பிலும், நயநயுகளே - செங்கழுநீர்ப்பூவோடொத்த கண்களிலும், விசாலம் - அகன்றதும், ஸ்மிதே - புன்சிரிப்பிலும், லீலாஜல்பிதே - பாரவஸ்யத்தோடுகூடின பேச்சிலும், ம்ருதுலம் - கோமலமானதும், பிம்பாதரே - கோவைப்பழம்போன்ற வாயிலும், வேணுநாதே - வேணுகானத்திலும், மதுரம் - தித்தித்ததும், விலாஸ - ஸ்ருங்காரசேஷ்டைகளுக்கு, நிலயம் - இருப்பிடமுமான, பாலம் - ஸ்ரீக்ருஷ்ணனை, கதா - எப்பொழுது, அக்ஷ்ணோ:-நேத்ர விஷயமாக்கப்போகிறேன்.

(தா-ம்.) அவன் இப்படி அதிஸௌந்தர்யனுகில் நாங்களுமறியும்படி அவ்வடிவழகை எங்களுக்குச் சிறிது சொல்லுமென்று ஊரார்கேட்கச் சொல்லுகிருர்.

ஆஸ்ரிதர்கள் திரள்திரளாகத்திரண்டு எத்தனை திரள்வரிலும் அவர்களையெல்லாம் ஒரேதரத்தில் கடாக்ஷிக்கும்படி கண்கள் பரந்திருக்கும்; பின்பு, அவர்கள், தன் திருவடிகளில் பணிந்தார்களாகில், அவ்வளவுபேரையும் ஒரு காலே எடுத்தணைக்கும்படி மார்பும் பரந்திருக்கும்; கற்பாறைபோல அதிகடினமான ஸம்ஸாரவிஷயங்களில் ஓடித்திரிந்திளைத்த அவர்கள் மனம் கால் பாவித்தங்கும்படி, அவனுடைய சிறுமுறுவலும் மழலைச்சொல்லும் அதிகோமளமாயிருந்தது; அதரமானது கோவைப்பழம்போல் சிவந்து கண்ணுக்கு மிகவு மினிதாயிருந்தது; அவன் ஊதுகிற குழலினிசையானது செவிக்கு உருக்கமாயிருந்தது; அவனே ஸ்ருங்கார விலாஸங்களுக்கெல்லா மிருப்பிடமாயிருந்தான்; இப்படிப்பட்ட அவனை நான் காண்பதெப்போதோவென்று ஆசைப்படாநின்றேனென்கிருர். (66)

மாரஸ்ஸ்வயம் நு மதுரத்யுதிமண்டலம் நு மாதுர்யமேவ
நு மநோநயநாம்ருதம் நு | வேணீம்ருஜோ நு மமஜீவித
வல்லபோ நு பாலோயமப்யுதயதே மம லோசநாய || (67)

(ப-உ.) பால: - இளம்பருவமான இப்பிள்ளை, மம - என்னுடைய, லோசநாய - கண்ணுக்கு, அப்யுதயதே - தோற்றுகிருன்; அயம் - இந்தப் பாலகன், ஸ்வயம் மார: நு - ஸாக்ஷாத் மந்மதனோ, மதுரத்யுதிமண்டலம் நு - சந்த்ரமண்டலமோ, மாதுர்யம் ஏவ நு - தானேவடிவுகொண்ட மாதுர்யமென்கிற ரஸந்தானே, (மநோநயநாம்ருதம் நு) மந: - மநஸ்ஸுக்கும், நயந - கண்களுக்கும் இனிதான, அம்ருதம் நு - அம்ருதமோ, வேணீம்ருஜ: நு - வாக்பரிசுத்யமோ, மம - என்னுடைய, ஜீவிதவல்லப: நு - ப்ராணநாதனை க்ருஷ்ணனே (அறிகிறிலேன்) (67)

(தா-ம.) இவ்வளவிலே கண்ணன் இவருடைய ஆற்றாமையைக்கண்டு அதை சமிப்பிக்கைக்காக இவர் முன்னேவந்துதோற்ற, இவரவனை இன்னானென்றறியமாட்டாதே விதர்க்கிக்கிறார்.

என்கண்முன்னே தோற்றாநின்ற இப்பாலகன், ஸாக்ஷாத் மந்மதனோ? அல்லது சந்த்ரமண்டலமோ? மாதுர்யமெல்லாம் திரண்டெழுந்ததோர் வடிவோ? அதுவுமன்றிகே கண்ணும் நெஞ்சும் களிக்கும்படியான அமுதமோ? வாக்கிலுள்ள தோஷத்தைப் போக்கவல்ல பரதேவதையோ? அல்லது என் ப்ராணநாதனான க்ருஷ்ணனோ அறிகிலேனென்கிறார். (67)

ஶிஶிராவலோகித தயாபரிபூர்ண நேத்ரம் ஆவிஷ்க்ருதஸ்மிதஸுதா-
மதுராதரோஷ்டம் | ஆத்யம் புமாம்ஸமவதம்ஸித பர்ஹி-
பர்ஹமாலோகயந்தி க்ருதிந: க்ருதபுண்யபுஞ்ஜா: ॥ (68)

(ப-உ.) (க்ருதபுண்யபுஞ்ஜா:) க்ருத - பலா(ஹஙா) பிஸந்திரஹிதமாகச்செய்யப்பட்ட, புண்ய - ஸுக்ருத விசேஷங்களுடைய, புஞ்ஜா: - ஸமூஹங்களையுடைய, க்ருதிந: - பாக்யசாலிகளான புருஷர்கள், (ஶிஶிராவலோகித தயாபரிபூர்ணநேத்ரம்) - ஶிஶிர: - சீதளமான, அவலோகித - பார்வையையுடையதும், தயா - தயையினால், பரிபூர்ண - கட்டப்பட்டது (பூர்ணமானது)மான, நேத்ரம் - திருக்கண்களையுடையவனும், (ஆவிஷ்க்ருதஸ்மித ஸுதாமதுராதரோஷ்டம்) - ஆவிஷ்க்ருத - வெளிகாணப்புறப்பட்ட, ஸ்மித - புன்னகையாகிற, ஸுதா - அம்ருதத்தினால், மதுர - இனிமையான, அதரோஷ்டம் - கீழுதட்டையுடையவனும் (அவதம்ஸித பர்ஹிபர்ஹம்) அவதம்ஸித - குழற்கணியாகவணிந்த, பர்ஹி - மயிலினுடைய,) பர்ஹம் - இறகையுடையவனும், ஆத்யம் - ஜகத்காரணபூதனுமான புமாம்ஸம் - புருஷோத்தமனான க்ருஷ்ணனை, ஆலோகயந்தி - பார்க்கிறார்கள். (68)

(தா-ம.) இப்படி இவர் ஸந்தேஹித்தவாறே அவன் தன்னுடைய அடையாளங்களையெல்லாம் இவரறியும்படி அருகேநெருங்கிவர, அவ்வடையாளங்களைக்கண்டு அவன் க்ருஷ்ணனே யென்று நிர்த்தரித்தாராய், தம்மைப்போல் இவனைக்கண்டவர்களனைவரையும் கொண்டாடுகிறார்.

குளிர்ந்தபார்வையும், பிறர்வருத்தம்கண்டு பொறுக்கமாட்டாத நேத்ரமும், உள்ளிநின்றும் புறப்பட்டு முகமெங்கும் பரவாநின்ற முறுவலும், போக்யதையிலம்ருதத்தோடொத்த அதரமும் முன்னெற்றியில் கட்டியாகக் கட்டப்பட்ட மயில் கண்ணும் ஆகிய இவ்வடையாளங்களையுடைய புராண

புருஷனுன ஸ்ரீக்ருஷ்ணனை, அநேக ஜந்மங்களில் தவம்செய்து திரட்டின புண்யவிசேஷத்தையுடைய பாக்யாதிகரான பக்தஜநங்களேகாணப்பெறுவார்கள், மற்றவர்க்குக்காணப்போகாதென்கிறார். (68)

பாலோயமாலோலவிலோசநேந வக்த்ரேண சித்ரீ-
க்ருததிங்முகேந । வேஷேண கோஷோசிதபூஷணேந
முக்தேந துக்தே நயநோத்ஸவம் ந: ॥ (69)

(ப-உ.) அயம் - இந்த, பால: - குழவியான ஸ்ரீக்ருஷ்ணன், (ஆலோலவிலோசநேந) ஆலோல-சுழலமிடுகிற, விலோசநேந-நேத்ரத்தினலும்; (சித்ரீக்ருததிங்முகேந) சித்ரீக்ருத - நாநாவர்ணமாகப்பணணப்பட்ட, திங்முகேந - திக்குக்களின் ப்ரதேசங்களையுடைய, வக்த்ரேண - முகத்தினலும், முக்தேந - மோஹகரமாய், (கோஷோசிதபூஷணேந) கோஷ - திருவாய்ப்பாடிக்கு, உசித - தகுதியான, பூஷணேந - அலங்காரங்களையுடைய, வேஷேண - வேஷத்தினலும், ந:-எங்களுடைய, (நயநோத்ஸவம்) நயந - நேத்ரங்களுக்கு, உத்ஸவம் - ஸந்தோஷத்தை, துக்தே - சுரக்கிறான். (69)

(த-ம்.) இதில், அவன் தம்மை ஆநந்திப்பித்தபடியைச் சொல்லுகிறார்.

இந்தச் சிறுவன், வரும்போதே, தன்கண்களின் சாபல்யத்தையும், தான் திரும்பின திசையெங்கும் தன்னொளியினல் சித்ரமெழுதினற்போல் விளங்கப் பண்ணுகின்ற குண்டலாத்யாபரணங்க ளணிந்த முகத்தையும், அதிஸுந்தரமான திருமேனிக்குப் பரபாகமாய் இடைச்சாதிக்குத்தக்கதான, மயில்கண், மரதளிர், காட்டுப்பூ, குந்தமணிமாலை, முதலியவேஷத்தையும் காட்டி என்கண்களைக் களிக்கப்பண்ணுகின்றனென்கிறார். (69)

ஆந்தோலிதாக்ரபுஜமாகுலநேத்ரலீலமார்த்ரஸ்மிதார்த்ர-
வதநாம்புஜசந்த்ரபிம்பம் । ஶிஞ்ஜாநபூஷணஶதம் ஶிகி-
பிஞ்சமௌலி ஶீதம் விலோசநரஸாயநமப்யுபைதி ॥ (70)

(ப-உ.) (ஆந்தோலிதாக்ரபுஜம்) ஆந்தோலித - வீசப்பட்ட, அக்ரபுஜம் - முன்கையையுடையதும், (ஆகுலநேத்ரலீலம்) ஆகுல - நிலையற்ற, நேத்ர - கண்களுடைய லீலம் - வ்யாபாரங்(பார்வை)களையுடையதும், (ஆர்த்ரஸ்மிதார்த்ரவதநாம்புஜசந்த்ரபிம்பம்) ஆர்த்ர - நெஞ்சுருக்குப்பண்ணுமதான, ஸ்மித - சிரிப்பினல்

ஶுக்ல - சீதளமான, வதநசந்த்ர மண்டலம் போலும் - கமலமலர்போலும் சந்த்ர மண்டலம்போலு மிருக்கிற முகத்தை யுடையதும், (ஶிஞ்ஜாநாபரணஸந்தம்) ஶிஞ்ஜாந - ஒலித்துக்கொண்டிருக்கிற, ஆபரணஸந்தம் - அநேக ஆபரணங்களையுடையதும், (ஶிகிபிஞ்ச ஶேகரம்) ஶிகி-மயிலினுடைய, பிஞ்ச - இறகை, ஶேகரம் - சிரோபூஷணமாக உடையதும், ஶீதம் - பார்ப்பவர்கண்களைக் குளிரப்பண்ணுமதும், (விலோசநரோகாபஹம்) விலோசந - கணகளுக்கு, ரோகாபஹம் - ஸகலமான நோய்களையும்போக்கித் திறமையை யளிக்க வல்ல ஔஷதமுமான ஸ்ரீக்ருஷ்ணனுகிற பரவஸ்து, அக்ரேவேதி - எனக்கெதிராக வருகிறது. (70)

(தா-ம்.) இதில், அவன் வரும்போதுண்டான வழகைப்பேசுகிறார். ஸ்ரீக்ருஷ்ணன் எனக்கெதிர்முகமாகத் தளர்நடையிட்டு வரும்போது, என்னிடத்தில் அதிவ்யாமோஹத்தினுல் என்மேல் பார்வையை அதிசஞ்சலமாகவையாநின்றுகொண்டு, அதிரமணீயமான தன் முகத்தை எனக்குக் காட்டிப் புன்முறுவல்செய்து, சிரஸஸில் மயிலிறகைச் சூடி, அரையிலணிந்த சதங்கையும் பாதங்களில் பூண்ட தண்டையும் ஒலிக்கும்படியாக அசைந்தசைந்து முன்கைகளை வீசிக்கொண்டுவாராநின்ருன், அந்த நடையழகானது என்கண்ணில் நோயைப்போக்கி வலிவையுண்டாக்கி ஆநந்தகரமுமாயிருந்ததென்கிருர். (70)

பல்லவாபல்லவ பரிஷத்விபூஷணம் ஶிஶுரேஷ ஶீதல விலோலலோசந: । ம்ருது ஸ்மிதார்த்ரவதநேந்து ஸம்பதா மதயந் மதீயஹ்ருதயம் விகாஹதே ॥ (71)

(ப-உ.) (பல்லவாபல்லவபரிஷத்விபூஷண:) பல்லவாபல்லவ - இடைப்பிள்ளைகளுடைய, பரிஷத் - ஸமூஹத்துக்கு விபூஷண: - அலங்காரமானவனும், (ஶீதலவிலோலலோசந:) ஶீதல - ஆஸ்ரிதருடைய தாபத்தைப்போக்குமதும், விலோல - சஞ்சலமுமான, லோசந:- திருக்கணகளையுடையவனும், ஶிஶு:- இளம்பிள்ளையுமான, ஏஷ: - இந்த ஸ்ரீக்ருஷ்ணன், (ம்ருதுஸ்மிதார்த்ரவதநேந்துஸம்பதா) ம்ருது - கோமலமான, ஸ்மித - முறுவலினுல், ஆர்த்ர - நனைப்புண்ட, வதந இந்து - முகமதியினுடைய, ஸம்பதா - சோபையினுல், மதயந் - பரவசமாகப் பண்ணுநின்றுகொண்டு, மதீயம் - என்னுடையதான, ஹ்ருதயம் - நெஞ்சை, விகாஹதே-ஆழ்ந்து அடைந்தனன். (71)

(தா-ம்.) உம்முடைய எதிரே வந்தகண்ணன் பின்பெங்கே போனு னென்னச் சொல்லுகிறார்.

தன்னோடொத்த பருவத்தரான இடைப்பிள்ளைகள் சுற்றும் சூழ்ந்து வர, அவர்கள் நடுவே இவன் நாயகமணிபோல் வந்தான்; வரும்போதேஎன் னைக்குளிரக் கடாக்ஷித்தான்; புன்முறுவலோடுகூடிய வதநாரவிந்தமாகிற பெருஞ்செல்வத்தைக்காட்டி என்னைமயக்கி என்நெஞ்சினுள்ளே நுழைந்து விட்டானென்கிறார். (71)

தஜிஷ உபெ நதம் தமாலநீலம் தரலவிலோசநதாரகாபிராமம்। முதிதமுதிதவக்த்ரசந்த்ரபிம்பம் முகரிதவேணுவிலாஸ ஜீவிதம்மே॥ (72)

(ப-உ.) (தமாலநீலம்) தமால - தமாலமரம்போல, நீலம் - நீலவர்ணமாயும், (தரலவிலோசந தாரகாபிராமம்) தரல - சஞ்சலமாயிருக்கிற, விலோசந - கண்களுடைய, தாரகா - கரு விழியினால், அபிராமம் - ஸுந்தரமாயும், (முதிதமுதிதவக்த்ர பிம்பம்) முதிதமுதித - அதிகஸந்தோஷத்தையுடைய, வக்த்ர பிம்பம் - சந்த்ரமண்டலம்போன்ற முகத்தையுடையதாயும், (முக ரிதவேணுவிலாஸஜீவிதம்) முகரித - ஊதப்பட்ட, வேணு - குழலினுடைய, விலாஸ - ஸ்வரபேதங்களுக்கு, ஜீவிதம் - ப்ராண தாரமாயுமிருக்கிற, தஜிஷ உம் - ப்படிப்பட்ட இந்த ஸ்ரீக்ருஷ்ண ஸ்வரூபமானது, மே-எனக்கு, உபநதம்- எதிர்கொண்டுவருகிறது.

(தா-ம்.) அங்கே புகுந்தபின் அவன் செய்ததைச் சொல்லுகிறார்.

என் ப்ராணபூதனான ஸ்ரீக்ருஷ்ணன், என்மனதில் புகுந்து, ஸ்யாமவ ர்ணனாய், கண்களில் அலைகிற கருவிழிகளை யுடையனாய், ஸந்தோஷத்தி னாலலர்ந்த முகத்தையுடையனாய் வேணுகாநம் செய்துகொண்டு இவ்விடத் திலேயே பொருந்தி நின்றானென்கிறார். (72)

சாபலஸீமா சபலாநுபாவைகஸீமா சாதுர்யஸீமா சதுராநநஸீமா। ஸௌரப்யஸீமா ஸகலாத்புதகேலிஸீமா ஸௌபாக்யஸீமா தஜிஷம் ப்ரஜபாக்யஸீமா॥ (73)

(ப-உ.) (சாபலஸீமா) சாபல - நவநீத சௌர்யாதிகளி லுண்டான சஞ்சலவ்யாபாரத்துக்கு, ஸீமா - எல்லையானதும், (சப லாநுபாவைகஸீமா) சபலா-லக்ஷ்மியினுடைய, அநுபவ-ஸுகா

நுபவத்துக்கு, ஸகலஸீ-ப்ரதாநமான எல்லைநிலமானதும், (வாத்ஸல்யஸீ) வாத்ஸல்ய-ஸாமர்த்யத்துக்கு, ஸீ முதல்தரமான இருப்பிடமானதும், (வதநாரவிந்தஸ்ருஷ்டிஸீ) வதநாரவிந்த- ப்ரஹ்மாவினுடைய, ஸ்ருஷ்டி -ஸ்ருஷ்டி நைபுண்யத்துக்கு, ஸீ-முடிந்தநிலமானதும், (ஸௌரபஸ்யஸீ) ஸௌரபஸ்ய - பரிமளத்துக்கு, ஸீ - முக்யமான ஸ்தாநமானதும், (ஸகலாச்சர்யகேளிஸீ) ஸகல-ஸமஸ்தமான, ஆச்சர்ய - ஆஸ்சர்யங்களுக்கும், கேளிஸீ-விளையாடுமிடமானதும், (ஸௌபாக்யஸீ) ஸௌபாக்ய - ஸௌந்தர்யத்துக்கு, ஸீ - குடியிருக்குமிடமானதும், (வ்ரஜபாக்யஸீ) வ்ரஜ-திருவாய்ப்பாடியிலுள்ளாருடைய, பாக்ய - புண்யவிசேஷத்துக்கு, ஸீ - பரிபாகஸ்த்தாநமாயுமிருக்கிற, தத் - அப்படி ஜகத்ப்ரஸித்தமான, இதம் - இந்த பரவஸ்துவானது, (என்னெதிரில் தோற்றுகிறது.) (73)

(தா-ம்.) இதில் நெஞ்சிலிருக்கும்போதை அவனையநுபவிக்கிறார்.

அவனங்கிருக்கும்போது பிள்ளை விளையாட்டுக்களனைத்தையும் விளையாடாநின்றான்; ஸ்ரீதேவி ஸவிலாஸமாக நித்யவாஸம் செய்கைக்கு இவனொருவனே தகுதியாயிருந்தான்; அதுக்குத்தக்க நைபுண்யமும் இவனிடத்தில் பூர்ணமாயிருந்தது; ப்ரஹ்மா, தன்னுடைய ஸ்ருஷ்டி ஸாமர்த்யத்தையெல்லாம் பூர்ணமாகச் செலுத்தி ஸ்ருஷ்டித்தானுயிற்றிவனை; உயர்ந்த பரிமளமும், ஸ்ருங்காரரஸமும், ஸகலமான மங்களங்களும் இவனிடத்தில் குடிகொண்டிருந்தது; ஆய்ப்பாடியிலுள்ள ப்ரஜைகளுடைய புண்யமெல்லாம் திரண்டதோர் வடிவாயிருந்தான். இப்படிப்பட்டவன் என்னெஞ்சில் வாஸம் பண்ணுகின்றானென்கிறார். (73)

ஶாய்யேந்துமுக்தாதிஷு ஸித்தாஸ்யாம் ஸ்ருஷ்டிவம்ஸீஸி விலாஸ்த்ரேஸ்வர்யா ஸௌஸாதீ | ஸ்வாஸீநாம் விஹாரவதம் ஶ்ருஸௌபாஷ்யராஸாம் ஶ்ருத்யமாஷ்ராநாம் ஸரிணதிர ஸோரபத்ஸாஸ்ரியதே॥ (74)

(ப-உ.) (ஶ்வாஸீநாம்) ஶ - என்னுடைய, வாஸீநாம் - கவிகளுக்கு, விஹாரவதம் - லீலாஸ்த்தாநமாய், (ஶ்ருஸௌபாஷ்யராஸாம்) ஶ்ரு - முதிர்ந்த, ஸௌபாஷ்ய- பரிபாகத்தை, ராஸாம்-அடைந்திருக்கிற, (ஶ்ருத்யமாஷ்ராநாம்) ஶ - என்னால் செய்யப்பட்ட, ஸுக்ருத - ஸுக்ருதவிசேஷங்களுடைய, ஸரிணதி - மூர்த்திகரித்த அவஸ்த்தாவிசேஷமாயிருக்கிறக்ருஷ்ணமூர்த்தியானது ஶாய்

तारुण्य-போக்யதையினால், (द्विगुणशिशिरम्) द्विगुण-இரண்டு மடங்கு அதிகமாக, शिशिरम् - குளிர்ந்திருக்கிற, वक्त्रचन्द्रम् - சந்த்ரன்போலழகிய முகத்தை, वहन्ती - சுமந்ததாய், (वंशीवीथीविगलदमृतस्रोतसा) वंशी - குழலினுடைய, वीथी - நாததாரை (मार्गமென)யில நின்றும், विगल - வழிந்துவருகிற, अमृत - அம்ருதத்தினுடைய, स्रोतसा - வெள்ளத்தினால், सेचयन्ती - (கேட்பவர்கள் செவிகளைக்குளிர) நனைத்ததாய்க்கொண்டு, नेत्रयोः - (என்) கண்களில், सन्निधत्ते - கிட்டிச்சேர்ந்திருக்கிறது.

(தா-ம்) இதில் ஸ்ரீக்ருஷ்ணன் மெள்ள மெள்ள அருகுநின்றும் விளம்பிதம் கண்முன்னேதோற்ற, அப்பொழுதநுபவிக்கிறார்.

ஸ்ரீக்ருஷ்ணனுடைய முகமானது முன்னமே சந்த்ரமண்டலம்போல்மிக அழகியதாயிருக்கும்; அதுக்குமேலே, இளநடைதரும்போதைஎத்தனைநாளநுபவிக்கினும் ஆராசமாதுர்யம்கூடி முன்னிலுமினிமை இரட்டித்திருந்தது; இன்னமும், வேணுகாநம் பண்ணாநின்றுகொண்டு அந்த ரஸத்தினாலே வன்னெஞ்சருடையநெஞ்சையும் நீராகக்கரையாநின்றான்; நானிவனையல்லது மற்ற யாதொன்றையும் வாயிட்டுத்துதியேன்; அநேக காலம்செய்த புண்யங்களெல்லாம் பரிபாகதசைக்கு வந்து அதினாலே நானிவனைக் கண்களால் காணப்பெற்றேனென்கிறார். (74)

तेजसेऽस्तु नमो धेनुपालिने लोकपालिने ।
राधापयोधरोत्सङ्गशायिने शेषशायिने ॥ (75)

(ப-உ.) (लोकपालिने) लोक- ஸகலஜகத்துக்கும், पालिने-அநிஷ்டத்தைப்போக்கி இஷ்டத்தையளிக்குமதும், (धेनुपालिने) धेनु - (இப்பொழுது இடைக்குடியிலவதரித்து)பசுக்களை, पालिने - ரக்ஷிப்பதும், शेषशायिने - திருவநந்தாழ்வான்மேல் பள்ளிகொண்டதும், (राधापयोधरोत्सङ्गशायिने) राधा - (இப்பொழுது) ராதிகையினுடைய, पयोधरोत्सङ्ग - கொங்கைத்தலத்தில், शायिने - கணவளர்ந்தருளுவதுமான, तेजसे - க்ருஷ்ணரூபியான தேஜஸ்ஸின்பொருட்டு, नमः अस्तु - (என்னுடைய) ப்ரணாமம் உண்டாயிடுக. (75)

(தா-ம்.) இப்படி தம் கண்ணுக்கு விஷயமானவனை நமஸ்கரிக்கிறார்.

ப்ரஹ்மாதி பிபீலிகாந்தமான ஸகலப்ராணிகளையும் தானிருந்தவிடத்திலேயிருந்து ஸங்கல்ப மாத்ரத்தாலே ரக்ஷிப்பவனாய், ஆச்ரித ரக்ஷணார்த்தமாக ஸ்ரீவைகுண்டத்தைவிட்டுத் திருப்பாற்கடலில் சாயும்போது தன்

ஸுகுமாரமான திருமேனியில் அந்நீ ருறுத்தாமைக்காக அதிஸுகுமாரனாய் நித்யஸூரிகளில் தலைவனான திருவநந்தாழ்வானைப் படுக்கையாக விரித்து அதில் சாய்ந்தருளின ஸர்வேஶ்வரனான நீ, இப்பொழுது ஆஶ்ரித ரக்ஷணார்த்தமாக க்ருஷ்ணாவதாரம்செய்து பசுமேய்க்கு மாயனாகவும், ராதிகையினுடைய ஸ்தநதேசத்தை விட்டுப்பிரியாத வி(டு)டபுருஷனாகவுமானாய்; எது செய்யினும் குறைவற்ற தேஜஸ்ஸையுடையனான உன்னை நான் வணங்கினேனென்கிறார். (75)

[illegible] ।
[illegible] ॥

(ப-உ.) ([illegible]) [illegible] - ஆயர்மாதர்களுடைய, [illegible] - கொங்கைத்தலத்திலிட்ட, [illegible] - அழகிதான, [illegible] - அலங்காரார்த்தமான குங்குமத்தோடு, [illegible] - கூடியிருக்கிற, [illegible] - எழிலையுடையதும், ([illegible]) [illegible] - குழலோசையினுடைய, [illegible] - ஒழுங்குக்கு, [illegible] - ஆதிகுருவும், [illegible] - பரமாத்மஸ்வரூபியுமான, [illegible] - தேஜஸ்ஸின்பொருட்டு, [illegible]-அப்பரவஸ்துவினுடையவசீகரணஹேதுவாக சாஸ்த்ரப்ரஸித்தமான, [illegible] - நமஸ்காரம்; [illegible] - இப்படியவ்வடிவழகிலீடுபட்ட நான்செய்கிற, [illegible] - நமஸ்காரம். (76)

(தா-ம்.) இதில், இந்தக்ருஷ்ணனே ப்ரணவ வாசயமான பரப்ரஹ்மமென்று நிர்த்தாரணம் செய்து வணங்குகிறார்.

ரதிகாலத்தில் ஆய்ச்சிமார்களை யணைக்கும்போது அவர்களுடைய ஸ்தநதேசத்திலிருந்த குங்குமக்குழம்பு இவன்மார்பில் படிந்து, அதினால் அபூர்வமான காந்தியையுடையனாய், வேணுகாநத்துக்கு ஆதிமூலமான நீ, ஸாக்ஷாத் ப்ரணவவாச்யமான பரப்ரஹ்மமாகிறாய்; அப்படிப்பட்ட உனக்கு நான் அத்யந்த பாதந்த்ரனாய்க்கொண்டு நமஸ்கரிக்கிறேனென்கிறார். (76)

[illegible] ।
[illegible] ॥ (77)

(ப-உ.) ([illegible]) [illegible] - அடையப்பட்ட, [illegible] - திருவிளையாட்டையுடையதாய், [illegible]-என்னுடைய, [illegible]- ப்ராணனான க்ருஷ்ணமூர்த்தியானது, ([illegible]) [illegible] - மெள்ளமெள்ள, [illegible]-சப்தியாநின்ற, [illegible]- தண்டைச்சிலம்

பினால், ஸம்பூர்ண- பூர்ணமானதும், யௌவந-இளமையேறினதும், பாதஸரோஜ பல்லவேந - தளிர்போல் சிவந்ததுமான பாதமலரினால், (அநுஸ்ருத ஸிஞ்ஜித வேணுகீத:) அநுஸ்ருத - (அந்தணடைச் சிலம்பை) அநுஸரித்து சப்திப்பதும், ஸிஞ்ஜித - கோமளமுமான, வேணுகீத:-குழலினோசையை யுடையதாய்க்கொண்டு, ஆயாதி-வருகிறது. (77)

(தா-ம்.) இவருடைய உத்ஸாஹத்தைக்கண்டு இவர் கண்முன்னே அவனுலாவப்புக்கான், அந்நடையழகை யநுபவிக்கிறார்.

எனக்கு தா(ர)ரகனான ஸ்ரீக்ருஷ்ணன், தன் ஸ்ரீபாதத்திலணிந்த தண்டைச்சிலம்பு மெள்ள மெள்ள ஒலியாநிற்க, அதுக் கநுகுணமாக வேணுகாநம் பண்ணிக்கொண்டு, கோமலமான பாதத்தினால் ந்ருத்தமாடி என்முன்னே வாராநின்றானென்கிறார். (77)

ஸாயம்விலாஸ வேணோர்நிநாதாம்ருதேந ஸிஞ்சந்நுதஞ்சித-
மிதம் மம கர்ணயுக்மம் । ஆயாதி மே நயநபந்துரநந்யபந்து-
ராநந்த கந்தலித கேலிகடாக்ஷலக்ஷ்மீ:॥ (78)

(ப - உ.) (ஆநந்தகந்தலித கேலிகடாக்ஷலக்ஷ்மீ:) ஆநந்த ஸுகவிசேஷத்தினால், கந்தலித - வ்ருத்தியடைந்திருக்கிற, கேலி-விஹாரகாலத்திலுண்டான, கடாக்ஷ - கடைக்கண் பார்வையினால், லக்ஷ்மீ: - காணத்தகுந்தவனும், மே-என்னுடைய, (நயநபந்து:) நயந - நேத்ரங்களுக்கு-பந்து: - தாபத்தைப்போக்கவல்ல பந்துவும், (அநந்யபந்து:) அநந்ய உபாயாந்தரசூந்யரான ப்ரபந்நர்க்கு, பந்து: - ப்ராப்யனும், அஸௌ - அப்படிப்ரஸித்தனுமான, அயம் - இந்த ஸ்ரீக்ருஷ்ணன், (விலாஸவேணோர்நிநாதாம்ருதேந) விலாஸ - ஶ்ருங்காரமாக ஊதப்பட்ட, வேணோ: - வேணுவினுடைய, நிநாத - ஸ்வரமாகிற, அம்ருதேந - அமுதத்தினால், உதஞ்சிதம் - (அதைக்கேட்க) முயன்ற, மம - என்னுடைய, இதம் கர்ணயுக்மம் - இவ்விரண்டு காதுகளையும், ஸிஞ்சந்-குளிரநனைத்தவனாய்க்கொண்டு, ஆயாதி - வருகிறான். (78)

(தா-ம்.) அநந்யகதியான வெனக்கு உறவாய்நின்று, என் கண்களினாற்றாமையைத் தொலைக்கப்பண்ணுவதற்காக, ஆநந்தாதிசயத்தினால் கொழுந்துவிட்டோங்கின ஸ்ருங்கார க(ட)ாக்ஷங்களையுடையனாய்க்கொண்டு, அந்த ஸ்ரீக்ருஷ்ணனானவன், தன்னுடைய குழலோசையைக் கேட்க வாசையுற்ற

என் காதுகள் குளிரும்படி வேணுகாநம் பண்ணினவனாய், அசைந்தசைந்து என்முன்னே உலாவாநின்றானென்கிறார். (78)

தூராத்விலோகயதி வாரணகேலகாமீ தாராகடாக்ஷபரிதேந விலோசநேந । ஆராதுபைதி ஹ்ருதயங்கமவேணுநாத வேணீதுகேந தஶநாவரணேந தேவ:॥ (79)

(ப-உ.) (ஹ்ருதயங்கமவேணுநாதவேணீதுகேந) ஹ்ருதயங்கம - உள்ளத்தே உறைந்திருக்கிற, வேணுநாத - குழலோசையினுடைய, வேணீ - தா(ரா)ரையை, துகேந - பொழியாநின்ற, தஶநாவரணேந - வாய்க்கலையோடு(கூடின), தேவ: - ஶ்ரீக்ருஷ்ணன், (தாராகடாக்ஷபரிதேந) தாரா - அவிச்சிந்நமாயிருக்கிற, கடாக்ஷ - கடைக்கண்பார்வையினால், பரிதேந - பூர்ணமாயிருக்கிற, விலோசநேந - நேத்ரத்தினால, தூராத் - தூரத்திலிருந்து, விலோகயதி - பார்க்கிறான்; (வாரணகேலகாமீ) வாரண- யானையினுடைய, கேல - விளையாட்டுப்போன்ற, காமீ - நடையழகையுடையனாய்க்கொண்டு, ஆராத் - ஸமீபத்தில், உபைதி - வருகிறான் (79)

(தா-ம்.) எனக்கு நடையழகைக் காட்டுகைக்காக மத்தகஜம்போல் நடந்து தூரமாகப்போய்நின்று, அங்கிருந்து என்னை இடைவிடாமல் பாராநின்றான்; பின்பு என்மனமுருகும்படி வேணுகாநம் பண்ணினவனாய், அதரத்தை வெளிததுக் காட்டிக்கொண்டு அருகேவந்து அந்நடை யழகுடன் நடையாடாநின்றானென்கிறார். (79)

த்ரிபுவநஸரஸாப்யாம் திவ்யலீலாகுலாப்யாம் த்ருஶித்ருஶி ஶிஶிராப்யாம் தீப்தபூஷாஸ்பதாப்யாம் । அஶரணஶரணாப்யாம் அத்புதாப்யாம் பதாப்யாம் அயமயமநுகூஜத்வேணுராயாதி தேவ: ॥

(ப-உ) அயம் - இவ்வழகுடன்கூடிய, அயம்-இந்த, தேவ: - ஶ்ரீக்ருஷ்ணன், (அநுகூஜத்வேணு:) அநுகூஜத் - ஒலியாநின்ற, வேணு: - குழலையுடையனாய்க் கொண்டு, (த்ரிபுவநஸரஸாப்யாம்) த்ரிபுவந - மூன்று லோகங்களுக்கும், ஸரஸாப்யாம் - ஆநந்த ஜநகங்களாயும், (திவ்யலீலாகுலாப்யாம்) திவ்ய - அதிமாநுஷமான, லீலா - ஶ்ருங்காரகமநத்தினால், ஆகுலாப்யாம் - பூர்ணங்களாயும், த்ருஶித்ருஶி - பார்வைகள்தோறும், ஶிஶிராப்யாம் - (கண்களைக்) குளிரப்பண்ணுவதும், (தீப்தபூஷாஸ்பதாப்யாம்) தீப்த -

ஜ்வலித்துக்கொண்டிருக்கிற, பூஷா - ஆபரணங்களுக்கு, ஆஸ்பதாநி - இருப்பிடங்களாயும், (ஶரணாகதரக்ஷணாநி) ஶரணாகத - ரக்ஷகாந்தரமில்லாதவர்களுக்கு, ரக்ஷணாநி - ரக்ஷகங்களாயும், அத்புதாநி - ஆஸ்சர்யகரங்களாயுமிருக்கிற, பதாநி - திருவடிகளினால், ஆயாதி - நடந்துவருகிறான். (80)

(தா-ம்.) ஸ்ரீக்ருஷ்ணனானவன், மூன்று லோகங்களுக்கு மாங்களகமாய், நாதநத்தில் பழகித்தேறினதாய், பார்க்கப்பார்க்க அழகியதாய், அத்யுஜ்ஜ்வலங்களான பூஷணங்களாலலங்கரிக்கப்பட்டதாய், அகதிகர்களாய்த் தன்னை வந்தடைந்த ப்ரபந்நர்க்கு ரக்ஷகமாய், இப்படிகளாலே அத்யாஸ்சர்யகரமாயிருக்கிற பாதகமலங்களால் மெள்ள மெள்ள நடந்துவந்து வேணுகாநத்துடனே என்முன்னே உலாவாநின்றானென்கிறார். (80)

ஸோऽயம் முநீந்த்ரஜநமாநஸதாபஹாரீ ஸோऽயம் மதவ்ரஜவதூவஸநாபஹாரீ । ஸோऽயம் த்ருதீயபுவநேஶ்வரதர்பஹாரீ ஸோऽயம் மதீயஹ்ருதயாம்புருஹாபஹாரீ ॥ (81)

(ப-உ.) ய꞉ - எவன், (முநீந்த்ரஜநமாநஸதாபஹாரீ) முநீந்த்ரஜந - ருஷிகளுடைய, மாநஸ - மநஸ்ஸிலுண்டான, தாப - துக்கத்தை, அபஹாரீ - அபஹரிக்கிறவனோ, அயம் - இவன், ஸ꞉ - அவனே; ய꞉ - எவன், (மதவ்ரஜவதூவஸநாபஹாரீ) மத - அபிமானத்தையுடைய, வ்ரஜவதூ - கோபிகைகளுடைய, வஸநம் - துயில்களை, அபஹாரீ - எடுத்தொளித்தவனோ, அயம் - இவன், ஸ꞉ - அவனே; ய꞉ - எவன், (த்ருதீயபுவநேஶ்வரதர்பஹாரீ) த்ருதீய புவந - ஸ்வர்க்கத்துக்கு, ஈஶ்வர - ஸ்வாமியான இந்த்ரனுடைய, தர்ப - கொழுப்பை, அபஹாரீ - போக்கினவனோ, அயம் - இவன், ஸ꞉ - அவனே; ய꞉ - எவன், (மதீயஹ்ருதயாம்புருஹாபஹாரீ) மதீய - என்னுடையதான, ஹ்ருதயாம்புருஹம் - நெஞ்சை, அபஹாரீ - வஞ்சித்தவனோ, அயம் - இவன், ஸ꞉ - அவனே. (81)

(தா-ம்.) ஸநகாதி யோகீந்த்ரர்கள் இந்தஸ்ரீக்ருஷ்ணனை அநவரதம் த்யாநிக்கவே, இவன்றானும் அங்கே நித்யவாஸம் செய்கைக்குப் பாங்காக அவர்கள் மநஸிலுள்ள ஆத்யாத்மிகாதி ஸகல தாபங்களையும் களைந்தெடுத்தான்; கோபிமார்கள் நீராடும்போது குளக்கரையில் களைந்துவைத்த துகிலை அவர்களறியாதபடி யபஹரித்த தூர்த்தனானான்; கோபாலர்கள் தனக்கிட்ட பலிபூஜையை இவன் தடுத்துவிட்டானென்று இந்த்ரன் கோபித்துக் கல்மழை பொழிய, அதை கோவர்த்தனமலையை யெடுத்துத் தடுத்து அவன்

கர்வத்தைத் தணித்தான்; இப்படி ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தனும் பரமரஸிகனும் சூரனுமான அந்த ஸ்ரீக்ருஷ்ணன் இப்பொழுது என் கண்வழியாக நெஞ்சில் புகுந்து அங்குள்ள வேதனைகளை யாற்றினனென்கிறார். (81)

ஸர்வஜ்ஞத்வே ச மௌக்த்யே ச ஸார்வபௌமமிதம் மம |
நிர்விஶ்ய நயநம் தேஜோ நிர்வாணபதமஶ்நுதே || (82)

(ப-உ.) ஸர்வஜ்ஞத்வே-எல்லாப்பொருளையு மறியவல்ல ஜ்ஞானத்திலும், மௌக்த்யே-மோஹிப்பிக்கவல்ல அழகிலும், ஸார்வபௌமம்-ஸர்வோத்தமமான, இதம் - இந்த, தேஜ: - தேஜஸ்ஸை, நிர்விஶ்ய - அடைந்ததாய்க்கொண்டு, மம - என்னுடைய, நயநம் - கண்ணானது, நிர்வாணபதம் - மோக்ஷசுகத்தை, அஶ்நுதே - அநுபவிக்கிறது. (82)

(தா-ம்.) இந்த ஸ்ரீக்ருஷ்ணனுடைய ஜ்ஞானமோ, ப்ரஹ்மாதிகளிலும் நித்யஸூரிகளிலும் விஞ்சியிருந்தது; இவனுடைய அஜ்ஞானமோ, அஜ்ஞானிகளுக்கு நித(ூ)ர்சநமாகச் சொல்லப்பட்ட இடையரிலும் விஞ்சியிருந்தது; இப்படிப்பட்ட ஸ்ரீக்ருஷ்ணனுடைய பரத்வஸௌலப்யங்களை யநுபவித்து என்மனம் பரமாநந்த பரிதமாயிற்றென்கிறார். (82)

க்ருத்வா நவம் புநருக்தஶோபம் உஷ்ணேதராம்ஶோருதயம் முகேந்தோ: | த்ருஷ்ணாம்புராஶிம் த்விகுணீகரோதி க்ருஷ்ணாஹ்வயம் கிஞ்சந ஜீவிதம் மே || (83)

(ப-உ.) க்ருஷ்ணாஹ்வயம் - க்ருஷ்ணனென்ற பெயரை யுடைய, கிஞ்சந-ஒராநெருு, மே - என்னுடைய, ஜீவிதம் - ப்ராணனானது, முகேந்தோ: - (தன்னுடைய) முகமாகிற சந்த்ரனாலே, உஷ்ணேதராம்ஶோ: - சீதகிரணனான சந்த்ரனுடைய, உதயம் - உத்பத்தியை, (புநருக்தஶோபம்) புநருக்த - புநருக்தமென்கிற தோஷத்தோடுகூடிய, ஶோபம் - காந்தியையுடையதாக (நிரர்த்தகமாக,) க்ருத்வா - பண்ணினதாய்க்கொண்டு, த்ருஷ்ணாம்புராஶிம் - (என்னுடைய) ஸமுத்ரம்போன்ற பேராசையை, த்விகுணீகரோதி - இரட்டிக்கப்பண்ணுகிறது. "புநருக்தஶோபம்" என்பதற்கு, புநருக்த - இரட்டிப்பாகப்பண்ணப்பட்ட, ஶோபம் - காந்தியையுடையதாக என்றும் அர்த்தமாகலாம். 'புநருக்தகோஷம்' என்றும் சிலர் சொல்லுவர். (83)

(தா-ம்.) எனக்கந்தராதமாவான இந்த ஸ்ரீக்ருஷ்ணன், லோகத்தி லுள்ள தாபங்களையும் இருளையும் தன்முகவொளியினால் போக்கி, உலகத்தார், இனி சந்த்ரனால் ஏதும் காரியமில்லையென்று சொல்லும்படி சந்த்ரனை வீணாக்கினவனாய்க்கொண்டு, அம்முகவொளியை எனக்குக் காட்டி என்னாசையைப் பெருகச்செய்தானென்கிறார். (83)

ஆதாம்ர விலோசந ஸ்ரீ ஸம்பாவிதாசேஷ விநம்ர வர்க்கம் | முஹுர்முராரேர் மதுராதரோஷ்டம் முகாம்புஜம் சும்பதி மாநஸம் மே || (84)

(ப-உ) (ஆதாம்ர விலோசந ஸ்ரீஸம்பாவிதாசேஷ விநம்ர வர்க்கம்) ஆதாம்ர - கொஞ்சம் சிவந்திருக்கிற, விலோசந ஸ்ரீ - நேத்ரசோபையினால், ஸம்பாவித - கொண்டாடப்பட்ட, அசேஷ - ஸமஸ்தமான, விநம்ர - ஆஸ்ரிதர்களுடைய, வர்க்க - ஸமூஹத்தை யுடையதும் (மதுராதரோஷ்டம்) மதுர - போக்யமான, அதரோஷ்டம் - கீழ்உதட்டையுடையதும், தத் அப்படிசாஸ்த்ரப்ரஸித்தமுமான, ஏதத் - இப்படி கீழ்ச்சொல்லப்பட்ட, முராரே: - ஸ்ரீக்ருஷ்ணனுடைய, முகாம்புஜம் - முகாரவிந்தத்தை, மே - என்னுடைய, மாநஸம் - நெஞ்சானது, முஹு: - அடிக்கடி, சும்பதி - த்யானம்செய்கிறது (84)

(தா-ம்.) தன்னிடத்தில் பக்தியுக்தரான பாகவதர் பக்கல் தனக்குள்ள வாத்ஸல்யத்தை புறம்பொசிந்து காட்டினாற்போல சிவந்த திருக்கண்களால் கௌரவித்துக் கடாக்ஷியாநின்றான்; அவர்களைப்பார்த்து மதுரமாகப்பேசுவதாக அதரம் துடியாநின்றது, முகமானது மலர்ந்துதோன்றி அவர்கள் தாபத்தை யாற்றுகின்றது; இவனுடைய இவ்வவயவங்களையெல்லாம் என்னெஞ்சு ஒருகாலேத்யநியாநின்றதென்கிறார். (84)

கரௌ சரதுதஞ்சிதாம்புஜ விலாஸ சிக்ஷாகுரூ பதௌ விபுதபாதப ப்ரதமபல்லவோல்லங்கிநௌ | த்ருசௌ த்ரிபுவநாத்புத ஸ்ரவணசாரிணௌ ஸ்ரியௌ விலாஸமய விலோசநாந்தே ததேவ முகமுஜ்ஜ்வலம் || (85)

(ப-உ.) கரௌ - திருக்கைகள், (சரதுதஞ்சிதாம்புஜ விலாஸ சிக்ஷாகுரூ) சரத் - சரத்காலத்தில், உதஞ்சித - வ்ருத்தியடைந்திருக்கிற, அம்புஜ - தாமரைப்பூவினுடைய, விலாஸ - (விகாஸம் காந்திமுதலானவற்றினாலுண்டான) ப்ரகாசத்துக்கு, சிக்ஷாகுரூ -

அப்யாஸம்செய்விக்கிற ஆசார்யனாயிருக்கின்ற; [illegible] - திருவடிகள், ([illegible]) [illegible] - கல்பவ்ருக்ஷத்தினுடைய, [illegible] இளசான, [illegible] - தளிர்களை, [illegible] - அதிக்ரமிக்கின்றன; [illegible] - திருக்கண்கள், ([illegible]) [illegible] - பிளக்கப்பட்ட, [illegible] - தாரபிமானத்தையுடைய, [illegible] - மூன்றுலோகத்தினுடைய, [illegible] - ஸாத்ருஶ்யலக்ஷ்மியை யுடைத்தாயிருக்கின்றன; ([illegible]) [illegible] - நயனங்களுக்கு, [illegible] - ஸுகப்ரதமாய், [illegible] - ஶ்லாக்யமான, [illegible] - (இப்படிப்பட்ட) இளம்பருவத்தை, [illegible] - பார், [illegible] - ஆஶ்சர்யம். "[illegible]" என்றுபதவிபாகமாய், [illegible]-கண்ணே! [illegible] - பார்என்றுமர்த்தமாம். (85)

(தா-ம.) இப்படி கீழ்பத்து ஶ்லோகங்களினால் அவனைததாம் பூர்ணமாகவநுபவித்து "நீங்களும் இதை வீணாகப்போககாதே அநுபவியுஙகள்" என்று பிறர்க்கு உபதேசிககிறார்.

இவனுடைய அநுபவம் வேப்பங்குடி நீர்போலிருக்கையன்றிக்கே, அநுபவிகக விறஙகும்போதே பால்போல் இனிதாயிருககும், அதாவது சரதகாலத்திலுதித்த தாமரைகளுமகூட, சைத்ய ஸௌகந்த்ய மார்த்தவாதி ஸ்வபாவஙகளை இஙகேவாஙகிக்கொண்டு இவனுடைய கைகள் மிகவுமழகியதாய் ஸாவப்ரகாரததாலு முயர்ந்திருககும்; ஸ்ரீபாதஙகள், கற்பகத்தருவினது இளந்தளிர்களும் தோற்கும்படி அதைக்காட்டிலும மென்மை விஞ்சிச சிவந்து கோமலமாயிருககும; இவனுடைய கண்களுக்கு ஒப்புசசொல்லலாம்படி யெடுக்கவல்லதொருவஸது த்ரிலோகத்திலு மெஙகுமில்லை; இப்படி அதிஸுந்தரமான பா(லா)லமுகுந்தனை நீஙகளும் கண்டனுபவியுஙகளென்கிறார் (85)

[illegible] (86)

(ப-உ.) [illegible] - தினந்தோறும், [illegible] - லக்ஷணங்களோடுகூடிய, [illegible] - திருவிளையாட்டினுடைய க்ரமங்களை, [illegible] - ஸம்பாதியாநின்றதும், ([illegible]) [illegible] - குளிர்ந்திருக்கிற, [illegible] - முறுவலையுடைய,

ஆஸ்யே - முகத்திலுண்டான, ஶ்ரியா - அழகினால், (ஸாத்⁴வீஹ்ருத³யமபி) ஸாத்⁴வீ - வஸிஷ்டருடைய பத்நியான அருந்ததியினுடைய, ஹ்ருதயமபி - மநஸ்ஸையும், ஶ்ராம்யந்தம் - தகையத்தகுந்ததும், (ஸ்வாத்மஜந்மநயநஶ்லாக்⁴யம்) ஸ்வாத்மஜந்ம - தன்னிடத்தில் நின்றுமுண்டான மந்மதனுடைய, நயந - கணகளுக்கும், ஶ்லாக்⁴யம் - கொண்டாடத்தகுந்ததாய், அநவதி⁴ம் - விலையற்றதாயிருக்கிற, த³ஶாம் - அவஸ்த்தையை, ஆதந்வாநம் - மேல் மேல் வ்ருத்தியடைவிப்பியாநின்றதும், (வ்ரஜஸுந்த³ரீஸ்தநதடீஸாம்ராஜ்யம்) வ்ரஜஸுந்த³ரீ - கோபிகைகளுடைய, ஸ்தநதடீ - ஸதநப்பிரதேசங்களில, ஸாம்ராஜ்யம் - மஹா அரசாட்சியையுடையதுமான ஶ்ரீக்ருஷ்ணதத்வமானது, ஊர்ஜிதம் - மிகவுமதிகமாக, உஜ்ஜ்ரும்ப⁴தே - வ்ருத்தியடைகிறது (86)

(தா-ம்.) இந்த ஶ்ரீக்ருஷ்ணன், வயநக்யோகதிகளையும் தினந்தோறும் புதிதுபுதிதாக அப்யஸியாநின்றான்; தன்முகத்தில் புன்சிரிப்பைக்கண்டாளாகில் மற்றொரு புருஷனை நெஞ்சாலும நினையாத அருந்ததியும கூட மதிமயங்கிவிடுவாள்; ஸர்வலோக ஸுந்தரனான மந்மதனுங்கூட இவனுடைய வடிவழகைக்கண்டு "இனி யிதுக்கொப்பில்லையென்று கொண்டாடும்படி அதிஸுந்தரனாயிருந்தான; இவ்வழகெல்லாம, காட்டிலெரித்தநிலாவாக வீணாய்ப்போககாதே அணைத்து அநுபவிக்க வல்லபாக்யம் பெற்றார கோபிமாரகள், இப்படிப்பட்டவன நம கண்முன்னேவந்து என்னைப்பார், பார, என்று தோற்றினான், உபேக்ஷியாதே அவனைக்கண் டநுபவியுங்களென்கிறார். (86)

ஸந்துக்ஷிதயௌவநம் தரளஶைஶவாலங்க்ருதம் மத³ச்சு²ரிதலோசநம் மத³நமுக்³த⁴ஹாஸாம்ருதம் | ப்ரதிக்ஷணவிலோப⁴நம் ப்ரணயபீதவம்ஶீமுக²ம் ஜக³த்த்ரயவிமோஹநம் ஜயதி மாமகம் ஜீவிதம் || (87)

(ப-உ.) (ஸந்துக்ஷிதயௌவநம்) ஸந்துக்ஷித - வ்ருத்தியடையாநின்றுள்ள, யௌவநம் - யௌவநவயஸ்ஸையுடையதும், (தரளஶைஶவாலங்க்ருதம்) தரள - சஞ்சலமான (மெள்ள மெள்ள நழுவுகிற), ஶைஶவ - பால்யத்தினால், அலங்க்ருதம் - அலங்கரிக்கப்பட்டும், (மத³ச்சு²ரிதலோசநம்) மத³ - யௌவநமதத்தினால், ச்சு²ரித - பூசப்பட்ட, லோசநம் - கணகளையுடையதும், (மத³நமுக்³த⁴ஹாஸாம்ருதம்) மத³ந - மந்மதனால், முக்³த⁴ - மநோஹரமாயிருக்கிற, ஹாஸ-

முறுவலாகிற, ஸாம்ருதம் - அமுதையுடையதும், (ப்ரதிக்ஷணவிப்ரமாக்ஷம்) ப்ரதிக்ஷண - க்ஷணந்தோறும் (புதிது புதிதாக உண்டான), விப்ரமாக்ஷம் - பார்வையையுடையதும், (ப்ரணயசும்பிதவம்சரந்த்ரம்) ப்ரணய - ப்ரீதியினாலே, சும்பித - சும்பநம் பண்ணப்பட்ட, வம்சரந்த்ரம் - வேணுரந்த்ரத்தையுடையதும், (ஜகத்த்ரயவிஸ்மயநம்) ஜகத்த்ரய - மூன்றுலகங்களுக்கும், விஸ்மயநம் - ஆநந்தாதிசயத்தை யுண்டுபண்ணுவதுமான, மஜ்ஜீவிதம் - என்னுடையதான ப்ராணனாகிற ஶ்ரீக்ருஷ்ணதத்வமானது, ஜயதி - விளங்குகிறது. (87)

(தா-ம்.) கீழ், க்ருஷ்ணனுடைய பால்யத்தைத் தாமுமநுபவித்துப் பிறர்க்குமுபதேசித்தார்; இனி பால்யம்தீண்டின யௌவநாவஸ்தையை யநுபவிக்கிறார்.

என்னுடைய வாழ்க்கைக்கெல்லாம் மூலகாரணமாகிய ஶ்ரீக்ருஷ்ணனுடைய வடிவில் பால்யம மெள்ள மெள்ளக்கழிந்து சிறிது சேஷித்திருக்கின்றது; இது போகத்தொடங்கினபோதே யௌவநம்வந்து ப்ரவேசித்து நாளுக்குநாள் வளராநின்றது; அது வந்தவாறே அதுக்கடையாளமாகக் கண்களில் மருங்கார விலாஸமேறிப்பாய்ந்தது; கண்டபோதே பெண்களை மயக்கவல்ல சிறுநகையும் முகத்திலமுதம்போல் வழியாநின்றது; பார்வைகளானவை க்ஷணந்தோறும் மாறி மாறி விளங்கிவராநின்றது; இந்த வயஸ்ஸிலும் முன்னிலுமதிகமாக ப்ரீதிபண்ணிக் குழலூதாநின்றான்; இப்படியௌவநாவிர்ப்பாவகாலத்தில் ஸகலலோகங்களும் மோஹிக்கும்படியாக விளங்காநின்றானென்கிறார். (87)

சித்ரம் ததேதச்சரணாரவிந்தம் சித்ரம் ததேதந்நயநாரவிந்தம் |
சித்ரம் ததேதத்வதநாரவிந்தம் சித்ரம் ததேததம்ப சித்ரம் ||

(ப-உ.) தத் - அந்த ஶ்ரீக்ருஷ்ணனுடையதாய், ஏதத் - என்முன்னே தோற்றுகிற, சரணாரவிந்தம் - ஶ்ரீபாதகமலமானது சித்ரம் - அத்யாஶ்சர்யகரமானது, தத் - அப்படி சாஸ்த்ரப்ரஸித்தமாய், ஏதத் - இப்படி கீழேவர்ணிக்கப்பட்ட, நயநாரவிந்தம் - திருக்கண்மலர், சித்ரம் - அத்யாஶ்சர்யகரமானது, தத் - அப்படி ஸர்வஜ்ஞாநதகரமாய், ஏதத் - இப்படி என்மனதைவஞ்சித்த, வதநாரவிந்தம் - முக கமலமானது, சித்ரம் - அத்யாஶ்சர்யகரமானது; அம்ப - அம்மா! தத் - அப்படி ஸர்வோத்தமமாய், ஏதத் - இப்படிப்பட்ட ஸர்வாவயவங்களோடுகூடியதாய், சித்ரம் - ஆஶ்சர்யகரமான

வ்யாபாரங்களையுடைய ஸ்ரீக்ருஷ்ணதத்வமானது, விசித்ரம் - அத்யாஸ்சர்யகரமானது; இங்கு "தத்" "வ தத்" என்றபதங்களுக்கு நாலு இடங்களில சொன்ன அர்த்தங்களையெல்லாம் நாலு இடங்களிலும் சொல்லிக்கொள்வது. (88)

(தா-ம்.) ஆஸ்ரிதரைத் தன்கீழிருத்தி அவர்களுக்கு அடைக்கலமான திருவடிகளுடைய செயலுமெழிலும லோகவிலக்ஷணமாயிருக்கிறது; ஆதியில் அவர்களாஸ்ரயிக்கைக்குறுப்பாக அவர்களுடைய அநாதிபாபமெல்லாம் நீங்கும்படி கடாக்ஷித்துப் பணிகொண்ட கண்களினுடைய செயலுமெழிலும வாசாமகோசரமாயிருக்கிறது; உள்ளுள்ள அபிப்பிராயங்களெல்லாம் தோற்றும்படி மலர்ந்த திருமுகத்தினுடைய ஜகந்மோஹநமான எழிலும செயலும அதிவிசித்ரமாயிருக்கிறது; அவயவசோபையாலும யௌவநத்தினாலும் அதுக்குரிய ஆபரணங்களினாலும் அஸதருசமான திருமேனியினுடைய செயலுமெழிலும் அத்யாஸ்சர்யத்தை விளையாநின்றது; அம்மம்மா! என்று ஆஸ்சர்யப்படுகிறார். (88)

அகிலபுவநைகபூஷணம் அதிபூஷித ஜலதிதுஹித்ருகுசகும்பம் | வ்ரஜயுவதிஹாரவல்லீமரகத நாயகமஹாமணிம் வந்தே ||

(ப-உ) (அகிலபுவநைகபூஷணம்) அகில-ஸமஸ்தமான, புவந - லோகங்களுக்கும், ஏக - முக்யமான, பூஷணம் - அலங்காரமானதும, (அதிபூஷித ஜலதிதுஹித்ரு குசகும்பம்) அதிபூஷித - அலங்கரிக்கப்பட்ட, ஜலதிதுஹித்ரு - லக்ஷ்மியினுடைய, குசகும்பம் - கலசம்போன்ற ஸ்தனங்களையுடையவனும், (வ்ரஜயுவதிஹாரவல்லீமரகத நாயகமஹாமணிம்) வ்ரஜயுவதி - (வட்டமாகநின்ற) கோபிமார்களாகிற, ஹாரவல்லீ - கொடிபோன்ற முத்துமாலைக்கு, மரகத நாயகமஹாமணிம் - நடுவிலிட்ட மரகதமென்கிற சிறந்தமணிபோன்றவனுமான ஸ்ரீக்ருஷ்ணனை, வந்தே - நமஸ்கரிக்கிறேன். (89)

(தா-ம்.) இதில், கீழ்ச்சொன்ன அவனெழிலிலும் செயலிலும் தோற்று திருவடிகளில் விழுந்து பணிகிறார்.

ஆஸ்ரயணத்துக்குறுப்பான ருசியை விளைக்கும்படி ஸர்வலோகவிலக்ஷணனாய், சேதநர்களுக்குப் புருஷகாரபூதையான பிராட்டியுடைய குசங்களுக்கு ஓரலங்காரம்போல் எப்போதுமங்கே யணைந்திருக்குமவனாய், இடைப்பல்லையிலுள்ள பெண்கள் முத்துமாலைபோல் சுற்றும் வளைந்துநிற்கத் தான்

நடுநாயகமாய்நின்று அவைகளை விளங்கப்பண்ணின எழிலையும் சௌலப்யத்தையுமுடையனான ஶ்ரீக்ருஷ்ணனை நமஸ்கரிக்கிறேனென்கிறார். (89)

காந்தாகசக்ரஹண விப்ரஹபைஷிதஶ்ரீ வக்ஷோஜகாஶ்மீர
ரஸ ரஞ்ஜிதரம்யஸ்ரீ: । கண்டஸ்தலீ கேதாரங்கண நந்த
நந்தஸ்வேதாம்புசிந்துவிக்ரமிகம் க்ருஷ்ண தேஜ: ॥ (90)

(ப-உ) (காந்தாகசக்ரஹணவிப்ரஹபைஷிதஶ்ரீவக்ஷோஜகாஶ்மீரரஸரஞ்ஜிதரம்யஸ்ரீ:) காந்தா - நாயிகையினுடைய, கச - மயிர்முடியை, க்ரஹண - பிடிக்கும்போதுண்டான, விக்ரஹ - ப்ரணயகலஹத்தில, பைஷித - பிடிக்கப்பட்ட, ஶ்ரீ - ஸ்ரீதேவியினுடைய (திருமேனியிலுண்டான), வக்ஷோஜகாஶ்மீர - காஶ்மீரதேசத்திலுண்டாகிற கண்டசந்தனத்தினுடைய, ரஸ - குழம்பினால், ரஞ்ஜித - சிவப்பாகப்பண்ணப்பட்டும், ரம்ய - மநோஹரமுமான, ஶ்ரீ- சோபையையுடையதும்,(கண்டஸ்தலீகேதாரங்கணநந்தநந்தஸ்வேதாம்பு) கண்டஸ்தலீ - கன்ன (கபோல) மாகிற, கேதாரங்கண - கண்ணாடிப்புறத்தில், நந்தநந்த - நர்த்தநம்பண்ணுகிற, ஸ்வேதாம்பு - ஸ்வேதபிந்துக்களையுடையதுமான, கிம்சித் - ஓரானொரு, க்ருஷ்ணதேஜ:- க்ருஷ்ணனென்கிற தேஜஸ்ஸானது, விக்ரமிகம் - (என்முன்னே) விளையாடுகிறது "கசக்ரஹண" என்று பாடமாகில் ஸரளமாம், அப்பொழுது; பைஷித - ஆலிங்கனம் செய்துகொள்ளப்பட்ட என்றர்த்தமாம். (90)

(தா-ம்.) கீழ் பிராட்டியைச்சொல்லவே அவளோடிவன் விளையாடின விளையாட்டு நினைவில்வந்தது, அதையநுஸந்திக்கிறாரிதில்.

ஏகாந்தத்தில் ருக்மணியோடு ரதிகேளி செய்யும்போது ப்ரணயத்தினால் ஒருவர்க்கொருவர் கசங்களை பிடித்துக்கொண்டு கலஹம் செய்கையில் இவன் ருக்மணிதேவியைத் திடீரென்று சென்று நெருங்க அணைத்துக்கொண்டான். அதினால் அவளுடைய திருமேனியிலுள்ள சந்தனசேறு இவனுடையசரீரத்தில் சிறைய ஒற்றுண்டமையால், கரிய திருமேனியில் பரபாகமான அந்த செகப்புசசந்தனத்தினால் அபூர்வமானதொரு காந்தியையடைந்து விளங்கினான்; அந்தரதிகேளி காலத்திலுண்டான ஶ்ரமத்தினால், துடைத்துவிட்ட கண்ணாடிபோல் அதிஸ்வச்சமான (கபோல) கன்னப்ரதேசத்தில் வேர்வையின் திவலைகள் வ்யாபித்திருந்தது; இப்படி அநிர்வாச்ய

மான அழகுடனே க்ருஷ்ணன் என்மனதிலே எப்போதும் விளையாடாநின்
ருனென்கிருர். (90)

𑌮𑌧𑍁𑌰𑌂 𑌮𑌧𑍁𑌰𑌂 𑌵𑌪𑍁𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌭𑍋 𑌮𑌧𑍁𑌰𑌂 𑌮𑌧𑍁𑌰𑌂 𑌵𑌦-
𑌨𑌂 𑌮𑌧𑍁𑌰𑌮𑍍 । 𑌮𑌧𑍁𑌗𑌨𑍍𑌧𑌿 𑌮𑍃𑌦𑍁𑌸𑍍𑌮𑌿𑌤𑌮𑍇𑌤𑌦𑌹𑍋 𑌮𑌧𑍁𑌰𑌂 𑌮𑌧𑍁𑌰𑌂
𑌮𑌧𑍁𑌰𑌂 𑌮𑌧𑍁𑌰𑌮𑍍 ॥ (91)

(ப-உ) 𑌅𑌸𑍍𑌯 - இந்த, 𑌵𑌿𑌭𑍋𑌃-ஸ்ரீக்ருஷ்ணனுடைய, 𑌵𑌪𑍁𑌃 - திருமேனியானது, 𑌮𑌧𑍁𑌰𑌂 - ஸ்வாபாவிகமான யோக்யதையுடைய, 𑌮𑌧𑍁𑌰𑌂 - (எனக்கு) மிகவு மினிதாயிருக்கிறது ; (𑌮𑌧𑍁𑌗𑌨𑍍𑌧𑌿) 𑌮𑌧𑍁 - தேனினுடைய, 𑌗𑌨𑍍𑌧𑌿 - பரிமளத்தையுடையதும், 𑌮𑌧𑍁𑌰𑌂 - அப்பரிமளத்தின லினியதுமாய், 𑌮𑍃𑌦𑍁𑌸𑍍𑌮𑌿𑌤𑌂 - மந்தஹாஸத்தையுடையதும், 𑌮𑌧𑍁𑌰𑌂 - அதினுலுண்டான போக்யதையையுடையதுமாய், 𑌮𑌧𑍁𑌰𑌂 - நிருபாதிகமான போக்யதையையுடையதுமான, 𑌵𑌦𑌨𑌂 - முகமானது, 𑌮𑌧𑍁𑌰𑌂 - (எனக்கு) இனிதாயிருக்கிறது; 𑌮𑌧𑍁𑌰𑌂 - எல்லாவஸ்துக்களுக்கும் போக்யதையைக் கொடுக்கவல்லதும், 𑌮𑌧𑍁𑌰𑌂 - எல்லா இந்த்ரியங்களுக்கும் இனிதாகத்தோற்றுமதுமான, 𑌏𑌤𑌤𑍍 - இந்தக்ருஷ்ணனுடைய திவ்யாத்மஸ்வரூபமானது, 𑌮𑌧𑍁𑌰𑌂-என்மனதுக்குஇனிதாயிருக்கிறது; 𑌅𑌹𑍋-ஆஶ்சர்யம். 91.

(தா-ம்.) இதில், அவனுடைய போக்யதையைப்பேசுகிருர்.

நம்முடைய ஸ்வாமியான க்ருஷ்ணனுடைய விக்ரஹமானது, ஸ்வாபாவிகமான அழகாலும் அதுக்குமேலே சேஷ்டிதஙகளினுலும் இனிதாயிருந்தது; முகமானது விலக்ஷணமான நோக்கினுலும் அலர்ந்த காந்தியினுலும் இனிதாயிருந்தது ; அவன் தூரநின்று வாய்திறந்தபோதே அதில் நின்றும் புறப்பட்ட பரிமளம் அம்மண்டலமனைத்தையும கமழப்பண்ணுகின்றது ; அற்பம் பற்கள் தெரிந்தும் மறைந்துமிருக்கும்படி மந்தஹாசம் பண்ணும் போது அது உள்ளுள்ள அபிப்ராயப்ரகாசத்தினுல் இனிதாயிருந்தது ; இப்படி ஸ்ரீக்ருஷ்ணனுனவன், ஸ்வபாவததினுலும், சேஷ்டிதஙகளினுலும், அழகாலும், அபிப்ராயத்தினுலும் அனைவர்க்கு மினியனுயிருந்தான் ; இவனேடு போலியான மற்றொருவஸ்துகிடையாது ; ஆஶ்சர்யம் ! என்கிருர்.

𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌰𑌸𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌂 𑌶𑌿𑌖𑌿𑌪𑌿𑌞𑍍𑌛𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ।
𑌅𑌙𑍍𑌗𑍀𑌕𑍃𑌤𑌨𑌰𑌾𑌕𑌾𑌰𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 𑌭𑍁𑌵𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌮𑍍 ॥ (92)

(ப-உ) (ஶ்ருங்காரரஸஸர்வஸ்வம்) ஶ்ருங்காரரஸ - ஶ்ருங்காரரஸத்தினுடைய, ஸர்வஸ்வம் - அனைத்துப் பொருளானவனும், (ஶ்ருங்காரரஸஸ்வரூபமானவனும), (ஶிகிபிஞ்ச விபூஷணம்) ஶிகி - மயிலினுடைய, பிஞ்ச-இறகை, விபூஷணம் -ஆபரணமாக உடத்தானவனும்,(அங்கீக்ருத நராகாரம்) அங்கீக்ருத-தன்னிச்சையினால் பூண்ட, நராகாரம் - மனுஷ்யதேஹத்தைதயுடையவனும், (ஸகலலோகாஶ்ரயம்) ஸகல - ஸகலலோகங்களுக்கும், ஆஶ்ரயம் - ஆதாரபூதனுமான ஶ்ரீக்ருஷ்ணனை, ஆஶ்ரயே - தொழுகிறேன். "ஶ்ருங்காரரஸஸர்வஸ்வம்" என்று ஶ்ருங்காரரஸத்தையே தனக்கு எல்லாப் பொருளுமாக வுடையவனுமென்றுமாம் (92)

(தாம்) இதில், அவனுடைய பரதவ்ஸௌலப்யஙகளுக்குத தோற்று அடிமைப்படுகிறார்.

இந்த ஸ்ரீக்ருஷ்ணன், உள்ளே அந்தர்யாமியாய்நின்றும் வெளியில் ஆஶ்ரயணீயனாய் நின்றும ஸகலலோகஙகளையும் த(ய)ரியாநின்ற பராதபரனை பரமபுருஷனாயிருந்தான ; ஆகில் நம்மோடு ஸஜாதீயனாகக்காண்கிற விதமென்னெனில் ; விஜாதீயனாகததோன்றில் ஒருவரும் தன்னை ஆஶ்ரயியாரென்று நம்மோடொதத நரவேஷத்தை பூண்டுகின்றான் ; ஆனால், இவன்ப்ராணிகளை ஆஶ்ரயிப்பித்துக்கொள்ளும் ப்ரகாரமேதென்னில்; ரஸிகராயிருப்பார சிலரைததன் ஶ்ருஙகாரவிலாஸஙகளைக் காட்டியும, மேலெழுந்த மதியுடையாரைத் தன்னுடைய இடைசசாதிக்குசசேர்ந்த மயில்கண் முதலிய ஆபரணஙகளைக் காட்டியும தொழுவிததுக்கொள்ளும்; இவனை நான், சிறிதுகாலமகழித்து ஆஶ்ரயிககலாமென் றுறியிருக்கையன்றிக்கே இப்பொழுதே ஆஶ்ரயிக்கிறேனென்கிறார். (92)

நாத்யாபிபஶ்யந்தி கதாபி யஸ்ய த்ருஶோ ந சித்தே ந சவோபநிஷதாஶ்ச யம் | ஸர்வஶாஸ்த்ரஸஹஸ்ரம் ந யதோ ந யோ: வத்யம் ஸாக்ஷாத் ஜயதி நந்தநயோஸ்துதோ: || (93)

(ப-உ) ஸாக்ஷாத் - ஸர்வசேஷியான க்ருஷ்ணனே! ஸர்வஜ்ஞாம் - நல்ல ஜ்ஞாநமுடைய பணடிதாகளுடைய, ஸஹஸ்ரம் -கூட்டமானது, அத்யாபி - இக்காலத்திலும், கதாபி - மறற எக்காலத்திலும், த்ருஶோ ந - கண்ணினாலும், சித்தே ந - மநஸ்ஸினாலும் (த்யாநத்தினாலும்), உபநிஷதாம் - வேதாநத (விசார) த்தினாலும், யம் - யாதொரு உன்னை, நபஶ்யந்தி - அறிகிறதில்லையோ, ஸ:- அப்படிப்பட்ட, த்வம் - நீயானவன், மே - என்னுடைய, நயநயோ: -

இந்த (மாம்ஸமயமான), நயநயோ: - கண்களுடைய, பதவ்யாம் - வழியில, விரம் - வெகுநேரமாக, கயாபி - ஒராலொரு (நிர்ஹேதுகமான), க்ருபயா - க்ருபையினுல்; ஸந்நிஹிதோஸி - கிட்டியிருக்கிறாய். அத்யாபி - இப்பொழுதுங்கூட, கதாவந - ஒருநொடிப்பொழுதாகிலும என்றுமர்த்தமாம் "கதாவந" என்றவிடத்தில், "கதம நு" என்று பாட பாய, எவ்விதத்திலும் என்றும பொருளாம் (93)

(தா-ம.) இதில், அப்படி பராதபரனை அவனதமககு ப்ரத்யக்ஷமான படியைககண்டு ஆச்சாயப்படுகிருா.

ஓ க்ருஷ்ணா! ஸகலகலா பாரஙகதரான வித்வான்களெவருங்கூடி வேதாந்தவிசாரம் பண்ணிலும் இதுவரையிலும் உன்னுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை உள்ளபடியறியவில்லை; பஹுகாலமாக அப்யஸிதஸமாதி பர்யந்தமான யோகாப்யாஸமுடைய ஸநகாதிகளும் இதுவரையிலுமுன்னை சித்தத்திலே நிலைநிறுததி அறிந்தார்களில்லை; ஸகல லோகங்களிலுஞ்சென்று ஸஞ்சரிக்கவல்ல மஹிமையுடைய ப்ரஹ்மருத்ராதிகளும் இன்னுமுன்னையெங்கும் கண்டறியவில்லை; இப்படி ஒருவாக்குமெட்டாத மஹாப்ரபாவனான நீ, மிகவும தண்ணியனான என் கண்முன்னே நிலைநின்று தோற்றுகின்றாய், இதுக்குக் காரணமென்னென்று ஆராய்ந்து பாரக்குமளவில், ஸ்வாமியான உனககு என்னிடத்திலுண்டான பரமக்ருபையே காரணமாயிருந்ததென்கிருர். (93)

மயம் காந்திஸ்தவ முகேந்துமதோ: மாயம் வபு: காபி வாசாமகோசரம் | ஸோயம் ஸோயம் ஸ்வாத்யதா ஸுமுகஸ்ரீ ஸமயோஸம்ய ஸமமாதநோதி || (94)

(ப-உ.) மதேவ - ப்ரஹ்ம ருத்ரர்களுக்கும் ஆதாரபூதனான க்ருஷ்ணனே! (முகேந்துமதோ:) தவ - உன்னுடைய, முகேந்தோ: - சந்த்ரன்போன்ற நெற்றியினுடைய, அயம் - இப்படிப்பட்ட, காந்தி: - அழகானது, கா - வாசாமகோசரமாயிருக்கிறது, அயம் - இந்த, வபு: - ஆகாரமும், கா - வாசாம கோசரமாயிருக்கிறது; ஸா - அப்படி லோகப்ரஸித்தமாய், அயம் - இப்படி என்னாலநுபவிக்கப்பட்ட, ஸ்வாத்யதா - போக்யதையானது, வாசாம் - வேதங்களுக்கும், அகோசர: - கோ(ஸ)சரமன்றிக்கே யிருக்கிறது; ஸா - அப்படி புராணாதிகளில் ப்ரஸித்தமாயும், அயம் - இப்படி என்னால் வர்ணிக்கப்பட்டதும், காபி - மேலாகத்துமெங்கும் காணப்படாததுமான, (ஸுமுகஸ்ரீ:) ஸுமுக - கோமளமான, ஸ்ரீ: - சோபையும், வாசாம் - சுகர்முதலிய மஹாகவிகளுடைய வாக்குக்கும்,

கஃஶ்சிதி - விஷயமன்றிக்கே யிருக்கிறது (வர்ணிக்கமுடியாதது) "கா" "கஃ" என்ற இரண்டும் ப்ரஶ்நார்த்தகமாய் எப்படிப்பட்ட தென்றும் பொருளாம். (94)

(தா-ம்) என்னை நீர் உண்மையாகக் கண்டீராகில் என்னுடம்பில் சில அடையாளங்களைச் சொல்லுமென்றான க்ருஷ்ணன், அதற்குப்பதிலுரைக்கிறாரிதில்.

முடிதொடங்கிக் கணைக்காலகளளவும் கறுத்து நீண்டு தொங்குகின்ற ப்ரசஸ்த கேசங்களையுடைய க்ருஷ்ணனே! இதுவரையில் நான் சந்த்ரனுடைய காந்தியை மேலாகவெண்ணியிருந்தேன், இப்பொழுது உன்னுடைய முகமதியினொளியானது அதைக்காட்டிலும்விஞ்சி அதிவிலக்ஷணமாயிருந்தது; இப்படி அதிஸுந்தரமான உன்னுடைய மேனியில ஆபரணமாக வேறிட்டுக்கொண்ட பீலித்தழையும் தாலிக்கொழுந்துமாகிய இவையெல்லாம் உன்னையடைந்து மணம்பெறுகின்றது; உன்னுடைய போக்யதையையும் வடிவழகையும் நேராக வர்ணிக்கப்புகில் அது அபரிச்சிந்நமென்று சொல்லுமதொழிய இப்படிப்பட்டதென்று எங்கள் வாக்கினால் சொல்லிமுடிக்கப்போகாது; இப்படிப்பட்ட உனக்கு அடிக்கடித் தெண்டனிடுகிறேனென்கிறார். (94)

வதநேந்து விநிர்ஜிதஶஶீ தஶபூர்வபதோர்வஶ்ரிதநகேந்து । கமிகாநநஶ்ரீஜாஶஸ்நே தாவகாரண்யவிஜ்ரும்ஹிதம்கியத்95

(ப-உ) தேவ - ஶ்ரீக்ருஷ்ணனே! ஶஶீ - சந்த்ரனானவன் (வதநேந்துவிநிர்ஜிதஃ) வதந - (உன்னுடைய) நெற்றியாகிற, இந்து - சந்த்ரனால், விநிர்ஜிதஃ - ஜயிக்கப்பட்டவனாய், தஶபூ - பத்து சரீரங்களை எடுத்துக்கொண்டு, தே - உன்னுடைய, பதௌ - திருவடிகளை, ஶ்ரீதநகேந்து - (நகங்களென்கிற வ்யாஜத்தினால்) அடைந்து, கமிகாஃ - முந்தியசோபையைக்காட்டிலும் அதிகமான, ஶ்ரியஃ - சோபையை, ஶஸ்நேதாஃ - மிகவும் அடைகிறான்; தவ- உன்னுடைய, (காரண்யவிஜ்ரும்ஹிதம்) காரண்ய - (ஆஶ்ரிதவிஷயத்திலுண்டான) தயையினுடைய, விஜ்ரும்ஹிதம் - எழுச்சியானது, கியத - எவ்வளவு ஶ்லாக்யமானது! (என்றுகொண்டாடுகிறார்) "காரண்யவிஜ்ரும்ஹிதம்" என்றுபாடமாய், சந்த்ரனையும் ஜயிக்கவல்ல யௌவனத்தினெழுச்சி அத்யாஶ்சர்யகரமென்றுமாம். (95)

(தா-ம்.) அவன் திருவடிகளில் வணங்கினவர்களின் பலத்தைச்சொல்லுகிறார்.

சந்த்ரன், வடிவழகில் நான் எல்லாரிலுமுயர்ந்தவனென்று காவித்து வானமேவிநின்றான், ஸ்ரீக்ருஷ்ணனவதரித்தவாறே இவனுடைய முகம் சந்த்ரனை ஜயித்துவிட்டது, அநந்தரம சந்த்ரன, இனி இவனை வணங்கினாலல்லது நமக்கு பெருமை கிடையாதென்று தன்வடிவைப் பத்தாக வகிர்ந்துகொண்டு க்ருஷ்ணனுடைய திருவடிவிரல்களில் நகங்களென்கிற வ்யாஜம் கொண்டுவந் தாச்ரயித்தான, பின்பு அந்த மஹிமையினால் முன்னிலுமதிகமான காந்தியைப்பெற்று விளங்காநின்றான்; க்ருஷ்ணா! உன்பாதங்களில் வணங்கின மாத்ரத்திலே அவனைஉயர்த்தாநின்ற உன்னுடையதயை என்ன அதிசயித்திருக்கிறதென்று ஈடுபடுகிறார். (95)

தத் த்வாஸ்யம் ஸமுத்ரஜ ஸத்ருச கோடிம் வாக்ஜாய ஸ்ரீ ஸஹஸ்ர
ஸம்பூர்ண கலா ஸம்ப்ருதஸ்ய । கிம் த்வந்முகாத் ... லோகேஷு காந்தம்
யஸ்ய த்வதாநந ஸமா ஸௌந்தர்யம் ஸதா ஸ்யாத் ॥ (96)

(ப-உ.) (வாக்ஜாய ஸ்ரீ ஸஹஸ்ர ஸம்பூர்ண கலா ஸம்ப்ருதஸ்ய) வாக் - சொற்களிலுண்டான, ச்ராய ஸ்ரீ - போக்யதையாகிற, ஸஹஸ்ர - அநேகங்களான, ஸம்பூர்ண - பூர்ணிமைகளிலுண்டான, கலா - கலைகளினால், ஸம்ப்ருதஸ்ய - நிறைந்திருக்கிற, தத் - அப்படி நிகரற்றதான, (த்வதாஸ்யம்) த்வத் - உன்னுடைய, ஆஸ்யம் - முகமானது, (ஸமுத்ரஜ ஸத்ருச கோடிம்) ஸமுத்ரஜ - சமுத்ரத்திலுண்டான சந்த்ரனோடு, ஸத்ருச - சரியான, கோடிம் - கோடியையுடையதாக, கதம் பவேத் - எப்படியாகும், (அவ்வளவேயன்றிக்கே) த்வந்முகாத் - உன்முகத்தைக்காட்டிலும் வேறொன்று, யத் - யாதொருவஸ்து, ஸர்வலோகேஷு - லோகங்களுக்குள், ப்ராதம்ய - முதன்மையான, காந்தம் - அழகுடையதோ, யஸ்ய - எந்தவஸ்துக்கு, (த்வதாநந ஸமா) த்வத் - உன்னுடைய, ஆநந - முகத்தோடு, ஸமா - ஒத்ததான, ஸௌந்தர்ய - அழகானது, ஸதா - எப்போதும் (அழிவற்றதாய்), ஸ்யாத் - உண்டாகுமோ, தத் - அவ்வஸ்துவானது, கிம்வஸ்து - எதுவாகும்? (96)

(தா-ம.) இப்படி உன்முகம் சந்த்ரனைவென்று வெற்றிகொண்டபடியாலும்; அவனைப்போல் உன் முகத்துக்குக் கலைகள் பதினாறென்றோளவின்றிக்கே, சொல்லி னினிமையாகிற அநேகம் கலைகளுண்டு, ஆகையால் உன் முகத்தைச் சந்த்ரனோடு துல்யமாகச் சொல்லப்போகாது; ஆகில் எததோடுஉவமை சொல்லலாமென்னில்; உன் முகத்தோடொத்த காந்தியையும் ஸர்வலோகாதீதமான ஸௌந்தர்யத்தையு முடையதொருவஸ்து உண்டாமாகில் அதை உன்முகத்துக்கு ஒப்பாகச்சொல்லலாம், அதொழிய இப்

போதுள்ள சந்த்ரன் தாமரை முதலானவைகளைச் சொல்லவொண்ணுதென்கிருர். (96)

[illegible] (97)

(ப-உ.) [illegible] முதலவர்களாய, ([illegible]) [illegible] - சமத்காரமான ப்ரபந்தங்களைச்செய்யவல்ல, [illegible] - கவிகளான வால்மீகி முதலானவர்களிலும், [illegible] - யாதொன்று, [illegible] - சொல்லப்படவில்லையோ, [illegible] - அப்படிப்பட்ட, [illegible] - என்னுடையதான, [illegible] - சொல்லை, [illegible] - கேட்கவேணுமென்கிற இச்சையுடையையாகில், [illegible] - கேள்; ([illegible]) [illegible] - சந்த்ரனுகிற, [illegible] - விளக்கானது, ([illegible]) [illegible] - உன்னுடைய, [illegible] - முகசந்த்ரனுக்கு, ([illegible]) [illegible] - ஆரத்திப்ரகாரத்தினுடைய, [illegible] - பா(ஹா)ரத்தைக்குறித்து, [illegible] - வெகுகாலமாக, [illegible] - ஒரு பாதியினுலன்றிக்கே, (ஸவாபாவிகமாகவே) [illegible] - தருந்திருக்கிறது (97)

(தா-ம.) ஆனுல் சந்த்ரனை எந்நதரத்தில் சேர்க்கலாமென்னில, என் சொல்லை நீ செவிகொடுத்து கேட்டாயாகில சொல்லுகிறேன்கேள்; முன்புள்ள கவிகள் இப்படிசொல்லத் தோற்ருமல் வெறுமனே யிருந்துவிட்டார்கள்; அதாவது சந்தரன் உன்னுடையமுக ஸௌந்தாயததுககு ஆரததிவழிககும் தீபமாகவாகாநின்றுகொணடு இரவும பகலும உன்முகததைசசுறறிச சுற்றிவாராநின்ருனென்கிருர். (97)

[illegible] (98)

(ப உ.) ([illegible]) [illegible] - பரிபூர்ணமான, [illegible] - ஆநந்தரஸத்தினுடைய, [illegible] - பரம்பரைகளினுல, ([illegible]) [illegible] - விச்சிநநமாக்கப்பட்ட, [illegible] - ஸமஸ்தமான, [illegible] - மற்றவைகளினுலுணடான ஆநந்தத்தையுடையதும், ([illegible]

ஸுதா ஸாகராணி) ஸ்வயம்ஸ்ருத - ஒருதடையின்றிக்கே யதேச்சமாகவே, உத்காத - வெளியிடப்பட்ட, ஸுதார்ணவாநி - அமுதக்கடலையுடையதும், ஸீதாநி - நெஞ்சைக் குளிரப்பண்ணுவதுமான, தவ - உன்னுடைய, ஸ்மிதாநி - முறுவல்கள், ஜயந்தி - விளங்குகின்றன (98)

(தா-ம்.) உன்னுடைய சிரிப்பானது, தடையறும்படி அம்ருத ரஸத்தைப் பெருக்காநின்றதாய், பரிபூர்ணமான மோக்ஷஸுகத்தோடொத்த நிரதிசயாநந்தத்தையளிக்க, அதனால், ஸ்வர்க்கஸுகம் முதலிய மற்ற எல்லாவாநந்தங்களும் இருந்தவிடம் தெரியாமல் ஓடியொளிந்துவிட்டன, இப்படியெல்லா ஸுகத்தையும் கீழ்ப்படுத்தவல்ல உன்முறுவல்கள் என்முன்னே குளிர்ந்து விளங்காநின்றன வென்கிறார்.

‹‹ஸ்வயம்ஸ்ருத›› என்றவிடத்தில், ‹‹நியந்த்ரித›› என்றுபாடமாகில், தானேவழிந்து பெருகாநின்ற அமுதவெள்ளமும் நீரஸமென்னப்பண்ணி, அதை ஒரு ரஸமாக வெளிக்கிளம்பவொட்டாமல் தகைந்துவிட்டது உன் முறுவல், என்றர்த்தமாம். (98

காமம் ஸந்து ஸஹஸ்ரஶ: கதிபயே ஸாரஸ்ய தௌரேயகா:
காமம் வா கமநீயதா பரிணதி ஸ்வாராஜ்ய பத்தவ்ரதா:। நைவைவம்
வயம் விவதாமஹே ந ச வயம் தேவ ப்ரியம் ப்ரூமஹே யத் ஸத்யம் ரமணீ
யதா பரிணதிஸ் த்வய்யேவ பாரங்கதா॥ (99)

(ப-உ.) (ஸாரஸ்ய தௌரேயகா:) ஸாரஸ்ய - ஸௌநதர்யத்தினால், தௌரேயகா: - பூர்ணர்களான, கதிபயே - சிலர், காமம் - யதேச்சமாக, ஸந்து - இருக்கட்டும்; (கமநீயதா பரிணதி ஸ்வாராஜ்யபத்தவ்ரதா:) கமநீயதா - ஸௌந்தர்யத்தினுடைய, பரிணதி - அதிசயமாகிற, ஸ்வாராஜ்ய - ஸ்வர்க்கத்தில், பத்த - கட்டப்பட்ட, வ்ரதா: - ஸங்கல்பத்தையுடையவர்களும், காமம் - யதேச்சமாக, ஸந்து - இருக்கட்டும்; தேவ - க்ருஷ்ணனே! தை: - அவர்களுடன், ஏவம் - இம்மாதிரியாக, வயம் - நாங்கள், ந விவதாமஹே - விவாதம்பண்ணுகிறிலோம்; ப்ரியம் - (அவர்களுக்கு) ப்ரியமானசொல்லையும், ந ப்ரூமஹே - சொல்லுகிறிலோம், யத் - யாதொரு காரணத்தினால், (ரமணீயதா பரிணதி:) ரமணீயதா - ஸௌந்தர்யத்தினுடைய, பரிணதி: - பரிபாகமானது, த்வய்யேவ-

உன்னிடத்திலேயே, 𑌪𑍂𑌰𑍍𑌣𑌤𑌾 - பரிபூர்ணமாகயிருக்கிறதோ; 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍 - இதுஉண்மைதான். (99)

(தா-ம்.) இதில், அவனுடைய ஸௌந்தர்யத்தைப் பேசுகிருர்.

(ப-உ) (அச்யுததத்தசித்தா) அச்யுத - ஸ்ரீக்ருஷ்ணனிடத்தில, தத்த - அர்ப்பணம் செய்யப்பட்ட, சித்தா - மனஸ்ஸையுடையவளாய்க்கொண்டு, மந்தா²நம் - மத்தை, (த³தி⁴ரிக்தபாத்ரே) த³தி⁴ரிக்த தயிரில்லாத, பாத்ரே - பானையில, ஆகலயதீ - இட்டுக்கடைகிறவளான, ராதா - ராதிகையானவள், ஜக³த் - லோகத்தை, புநாது - பரிசுத்தமாக்கட்டும்; தஸ்யா꞉ - அந்தராதிகையினுடைய (ஸ்தநஸ்தப³க லோலவிலோலத்³ருஷ்டி꞉) ஸ்தநஸ்தப³க - பூங்கொத்துப்போன்ற கொங்கைமேல், லோல - அடுத்தடுத்துவைக்கப்பட்டும், விலோல - ஆஸக்தியையுடையதுமான, த்³ருஷ்டி꞉ - பார்வையையுடையனாய், கொண்டு, தோ³ஹநதி⁴யா - கறக்கவேணுமென்கிற நினைவினால், வ்ருஷப⁴ம் - எருதை, நிருந்த⁴ந் - காலணைகிற, தே³வோ(அ)பி - க்ருஷ்ணனும், ஜக³த்-லோகத்தை, புநாது-பரிசுத்தமாக்கட்டும்.(25)

(தா - ம்.) கீழ் சிறிதுமட்டும் இளம்பருவத்தை யநுபவித்தார், இதில், பெண்கள் மயஙகும்படியான யௌவநத்தை யநுபவிக்கிறார்.

ராதிகை யெனகிற கோபிகை க்ருஷ்ணனையே எப்போதும் த்யாநித்துக்கொண்டு அவனிடததிலேயே தன்மனதை யமைததுவிட்டவளாகையாலே, பூரவவாஸனையாலே உதயகாலததில தயிர்கடையப்புகது இப்பானையில் தயிருண்டு இல்லை என்றறியாமல் தயிரில்லாப்பானையில் மததையிட்டு ககடையத்துடஙகினள்; அவள் க்ருதயமதுவானல், க்ருஷ்ணன் செய்த தென்னென்னில்; இவனும், அந்த ராதிகையினுடைய ஸ்தநஙகளையேபார்த்துக்கொண்டிருக்குமவனுகையாலே, விடியற்காலத்தில் பால்கறப்பதாகவந்து, பசுவென்றும் எருதென்றும பாராதே எருதைக் காலணைந்து கறக்கதொடஙகினன்; இப்படி பகவதேகபரையான ராதிகையும், ஆப்பரிதைகபரன க்ருஷ்ணனும் என்னை உஜ்ஜீவிப்பிப்பார்களாகவென்கிறார். (25)

கோ³பாத³பாம்ஸுபடலீ த்⁴ருதகோமலஶ்ரீ ... கோ³பாங்க³நாநயநசாதக பா⁴க்³யதா⁴ம்நே ... (26)

(ப - உ.) (கோ³பாத³பாம்ஸுபடலீத்⁴ருதகோமலஶ்ரீ꞉) கோ³- பசுக்களுடைய, பாத³பாம்ஸு-கால்பட்டுக்கிளமபின தூள்களினுல், படலீ - அழுக்கடைநதும், கோமல - மெத்தனவுமான, ஶ்ரீ

ல - கேசங்களினுடைய, கமர்ப் - நுனிகளையுடையவனும், (கோவர்த்தநகிரிதாரண கேளி க்ருத வ்யாஸங்க) கோவர்த்தந-கோவர்த்தநமென்கிற மலையினுடைய, உதாரண - உயரவெடுக்கையாகிற, கேளி - விளையாட்டில், க்ருத - பண்ண(ஆரோபிகக)ப்பட்ட, வ்யாஸங்க - ஶ்ரமத்தையுடையவனும், (கோபீஜநஸ்ய) - கோபிமார்களுடைய, (குசகுங்குமாங்கிதாங்க) குச - ஸ்தநப்ரதேசத்திலுள்ள, குங்கும - குங்குமப்பூவினால், அங்கித - அடையாளம் செய்யப்பட்ட, அங்க—அவயவங்களையுடையவனும், இந்துவதநம்-சந்த்ரன் போன்ற திருமுகத்தையுடையவனுமான, கோவிந்தம் - ஸ்ரீக்ருஷ்ணனை, ஶரணம் - ரக்ஷகனாக, வ்ரஜாம: - பற்றுகிறோம். (26)

(தா - ம்.) இதில், பசுமேய்க்கும்போதுண்டான அழகையும் வ்யாபாரத்தையு மநுஸந்திக்கிறார்.

இவன் திநமெல்லாம் காடுகளில் பசுமேய்த்து ஸாயங்காலமானவாறே அவற்றையோட்டிக்கொண்டு அதனபின்னே தான் ஆய்ப்பாட்டிக்குவரும்போது அப்பசுக்களுடைய குளப்படிப்பட்டுத் தரையில் நின்றும் கிளம்பின தூள்கள் இவனுடைய மயிர்முடிமேல் படிந்து, அதினாலம்மயிர்முடி வேறொரு விஜாதீயமான வர்ணத்தையடைந்து விளங்காநின்றது; அக்காலத்திலொருநாள் இந்த்ரநா லேவுண்டமேகங்கள் கோகுலங்கள் தளரும்படி அத்யுக்ரமாக மழைபொழிய, இவன் அக்கோகுலத்துக்கு நலிவுவாராதபடி அருகிருந்த கோவர்த்தந மென்னும் மலையைக் குடையாக வேந்தி விளையாடாநின்றான்; இவனுடைய இந்தவ்யாபாரத்தைக்கண்டகோபிகைகள் களித்து இவனைத்தழுவிக்கொள்ள, அவர்கள்கொங்கைமேல் குங்குமக்குழம்பு இவன் மார்பிலொட்டி அதினாலிவனங்கமெல்லாம் சித்ரமெழுதினாற்போல் ப்ரகாஶியாநின்றது; கோபிமார்களணைக் கையாலுண்டான ப்ரீதியினால் இவன் முகமானது நிறைமதிபோலொளிவிட்டு அழகுபெற்றிருந்தது; அப்படி ஆபத்ரக்ஷகனாய், ஆஶ்ரிதமோதகரனான க்ருஷ்ணனைச் சரணமடைந்தேனென்கிறார். (26)

யல்லோமரந்த்ரபரிபங்க்திஷு விஶ்வவஸ்த்ரா வாராஹஜந்மநி ஶரீரஸமுத்ரா: |
தம் நாதநாயஜநவிந்த்ருமும்பனேராதவாணிவையாஜ்ராஜதேவை வயாஜ்ஞஸஸேவ|| (27)

(ப-உ) அமீ - இந்த, ஸமுத்ரா: - ஸமுத்ரங்கள், வாராஹஜந்மநி - வராஹாவதாரத்தில், (யல்லோமரந்த்ரபரிபங்க்திஷு) யஸ்ய - யாதொரு ஸ்ரீக்ருஷ்ணனுடைய, ரோமரந்த்ர - மயிர்க்குழிகளுடைய, பரிபங்க்திஷு - நிறைப்பதில், விஶ்வா: - திறமை

யற்றவைகளாக, ஸஹஸ்ரஶ: - ஆயினவோ நாயம் - எனக்குஸ்வாமியாய், ஸரஸிஜாக்ஷம் - தாமரைக்கண்ணனாய், தம் - அப்படிப்பட்டவனான ஶ்ரீக்ருஷ்ணனை, யஶோதா - அசோதைப் பிராட்டியானவள், (பாணித்வயாந்தரஜலை:) பாணித்வய - இறங்கையினுடைய, அந்தர - உள்ளுள்ள, ஜலை: - ஜலத்தினால், ஸ்நபயாம்ஸஸ - ஸ்நாநம்செய்வித்தாள் (27)

(தா - ம.) இதில், அவன்பசுமேய்த்தது வந்தவிளைப்பாற யசோதை நீராட்டினபடியைச சொல்லுகிறார்.

இந்தஸ்ரீக்ருஷ்ணனே முன்பு வராஹாவதார மெடுத்தகாலத்தில், ஸப்தஸமுத்ரங்கள் கூடினாலும் அநந்தமஹாவராஹத்தினுடைய உடம்பிலுள்ள ஒருமயிர்க்குழி நிரம்பாமலிருந்தது; அவனே பின்புக்ருஷ்ணாவதாரம் பண்ணினபோது தாயானயசோதையானவள் தன்னுடைய இரண்டுகைகளினாலும் ஜலத்தைவாரியெடுத்து அவ்வளவுஜலத்தினாலேயே இவனுடைய உடம்பெங்கும் நனைந்து நிறைந்துவழியும்படி ஸ்நாநம்செய்வித்தாள்; இப்படி இவன் ஆஶ்ரிதர்க்காக உடம்பைச சுருக்கிக்கொடுத்தபடியென்! என்றுவிஸ்மயப்படுகிறார் (27)

ஸாரம் ஶ்ருணுத உபதேஶமிமம் ஶ்ரத்தயம் நிகமவனேஷு நிதாந்தசாரகிந்நா: । விசினுத பவனேஷு வல்லவீநாம் உபநிஷதர்த்தம் உலூகலே நிபத்தம் ॥ (28)

(ப-உ) நிகமவனேஷு - தூரவகாஹமான வேதங்களில், (நிதாந்தசாரகிந்நா:) நிதாந்த - மிகவும், சார - பரிசீலநத்தினால், கிந்நா: - ஶ்ரமமடைந்திருக்கிற பாக்யவான்களே! இமம் - இந்த, ஸாரம் - ஶ்ரேஷ்ட்டமான, உபதேஶம் - உபதேசத்தை, ஶ்ரத்தயம் - ஆதரியுங்கள்; உபநிஷதர்த்தம் - வேதாந்தங்களில ப்ரதிபாதிக்கப்பட்டதும், உலூகலே - உரலில், நிபத்தம் - (யசோதையினால்) கட்டப்பட்டதுமான பரதத்வத்தை, வல்லவீநாம் - ஆய்ச்சியருடைய, பவனேஷு - அகங்களில, விசினுத - ஆராயுங்கள்.(28)

(தா - ம.) இதில்; வேதாந்தவேத்யனான பரமபுருஷன் ஶ்ரீக்ருஷ்ணனேயென்று பிறர்க்கு நிஷ்கரித்து உபதேசிக்கிறார்.

பரதத்வமான ஶ்ரீமந்நாராயணனை பறிகைக்காக அதிக(ஶ்ர)ஹநமான வேதாந்தவிசாரம்பண்ணவிழிந்து, அநேகந்யாயஙகளைக்கொண்டு ஆராயந்தும் அர்த்தநிர்ணயம்கைககெட்டாமல் இளைத்துநின்ற ஓ வித்வான்களே! உங்களுக்கு வேதாந்தவிசாரத்தினால் பரதத்வம்எளிதாக நிர்ணயித்தறியப் போகாது, அதையறிய ஓ ரெளிதான உபாயம் சொல்லுகிறேன் செவிகொ

டுத்துக்கேளுங்கள்; அதாவது — நீங்கள் கோகுலத்தில் சென்று இடைச்சிக ளுடைய இல்லங்கள்தோறும் புகுந்தீராயின்; அங்கோரிடத்தி லொருவன் உரலோடிணைத்துக் கட்டப்பட்டிருப்பான், அவனேவேதாந்த வேத்யனான பரமபுருஷன், ஆகையால நீங்களங்கே சென்று கண்டறியுங்க ளென்கிறார். (28)

ெஜவகீதநயவெூஜநவுூதஃ வூதநாரிவரணொாடகயௌதஃ | யஜ்யஹஂ ஷ்ரூதயநஞ்ஜயவூதஃ கிஂகரிஷ்யதிஸமெயமடுூதஃ॥

(ப-உ.) (ெஜவகீதநய வூஜநவூதஃ) ெஜவகீதநய- தேவகீதேவியினுடைய பிள்ளையான க்ருஷ்ணனுடைய, வூஜந- ஆராதநத்தைச்செய்வதினால், வூதஃ- பரிசுத்தமானவனும், (வூதநாரிவரணொாடகயௌதஃ)வூதநாரி-பூதனையைக்கொன்ற க்ருஷ்ணனுடைய, வரணாடக-ஸ்ரீபாததீர்த்தத்தினால், யௌதஃ-பாபமற்றவனும், (ஷ்ரூதயநஞ்ஜயவூதஃ)ஷ்ரூத-த்யாகம்செய்யப்பட்ட, யநஞ்ஜய-அர்ஜுநனுக்கு, வூதஃ-பாகனான பார்த்தஸாரதியையுடையவனுமாக, அஹஂ - நான், யதி - ஆவேனேயாகில், ஸஃ - அப்படிப்பட்ட, யமடுூதஃ - யமனுடைய தூதனானவன், மெ - என்விஷயத்தில், கிஂ கரிஷ்யதி - என்னசெய்யப்போகிறான்? (29)

(தா - ம்.) இதில், அவனை யடைந்தவர்களுக்கு நரகபயமில்லை யென் கிறார்.

நான், க்ருஷ்ணனுடைய ஆராதநததினாலும், அவனதுஸ்ரீபாததீர்த்த ப்ரசாதத்தினாலும முன்புள்ளபாபங்களைக் கழித்துக்கொண்டு பரிசுத்தாந்த: கரணனாய், அர்ஜுநனுடைய தேர்முன்ஸாரதியாய் நின்று ஆஸ்ரிதர்க் குக்கையாளான அவனுடைய ஸௌலப்யத்தை யநுஸந்தித்தேனாகில், என் னையமதூதன்வந்து கிட்டிப்பிடிக்கவு மடிக்கவும் போகாது, தூரநின்று தெண்டனிட்டு விலகிவிடுவானென்கிறார். (29)

ஸாவஸதாறூவஹவெயகவெஹஷஜஂ ஜாநவெஸஜஜ ஜநஹந ஜபுஹந ஜபுஹநஃ | ெ஗ாவவெவஷ ஜவெஸஷ ஷஸ்வயஂ யாகவிகாகவிறஜ ணீயதாவிெஹாஃ॥ (30)

(ப-உ.) (ஹவஹவெயகவெஹஷஜ்ழ்) ஹவஹய - ஸம்ஸாரத்திலுண்டான பயத்துக்கு, ஏகவெஹஷஜ்ழ் - முக்யமான ஔஷதமான, ெகாவவெவஷழ்-ஆயன்வடிவை, ஸ்வயழ் - தானே, உவெஸஷஃ-அடைந்திருக்கிற, விெஹாஃ - ஸர்வவ்யாபகனான ஸ்ரீக்ருஷ்ணனுடைய, யாகவி காகவி - வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் அளவிடக்கூடா

தான, ரமணீய கா-ஸௌந்தர்யமானது, முஹுர்முஹு: -அடிக்கடி, மே - என்னுடைய, மநஸி - மநஸ்ஸில், ப்ரகாஶதாம் - ப்ரகாசிக்கக் கடவதாக. (30)

(தா-ம்.) இதில், க்ருஷ்ணஸ்மரணத்தை யபேக்ஷிக்கிறார்.

நம்மைபபோல் பூர்வகர்மததாலன்றியே தன்னுடைய ஸங்கல்பததினாலே யதேசசமாக ஆயனுய்வந்தவதரித்த கருஷ்ணனுடைய, ஸௌந்தர்யமானது, வாயினாலளவிட்டுச் சொல்லவொண்ணுதபடி அளவிறந்ததாய், நினைததார்க்கு ஸம்ஸாரமாகிற பெருநோயைப் போக்கவல்ல மருந்தாமாகையால், நானும் என்னுடைய அநாதிஸம்ஸாரத்தைப் போக்கிக்கொள்வேணும்படி என்மனதில் அடிககடி தோற்றி என்னுடைய த்யாநத்துக்கு விஷயமாகக் கடவதாகவென்று ப்ரார்த்திககிறார். (30)

கர்ணாலம்பித கதம்பமஞ்ஜரீ கேஸராருண கபோலமண்டலம் ।
நிர்மலம் நிகமவாககோசரம் நீலிமாநமவலோகயாமஹே ॥ (31)

(ப-உ) (கர்ணாலம்பித கதம்பமஞ்ஜரீகேஸராருணகபோலமண்டலம்) கர்ண - காதுகளில், ஆலம்பித - தொங்குகிற கதம்பமஞ்ஜரீ - கடப்பைப்பூங்கொத்தினுடைய, கேஸர - தாதுகளினால், அருண- சிவந்திருக்கிற, கபோலமண்டலம் - கன்னப்ரதேசத்தையுடையவனும், நிர்மலம்- தெளிவுற்றவனும், (நிகமவாககோசரம்) நிகமவாக்- வேதவாக்யங்களுக்கும், அகோசரம் - அளவிட்டுச் சொல்லவொண்ணுதவனை, நீலிமாநம் - நீலவர்ணத்தையே நிருபகமாகவுடைய க்ருஷ்ணனை, அவலோகயாமஹே-பார்க்கிறோம. (31)

(தா-ம்.) கீழிவர்வேண்டிககொண்டபடியே க்ருஷ்ணன் இவருடைய த்யாநத்துக்கு விஷயமாக, அவனைத்தாம் மாநஸமாக அநுபவித்தபடியைச் சொல்லுகிறார்.

வேறொருவர்ணம் கலசாதே நீலவர்ணமே வடிவுகொண்டெழுந்தாற் போலிருக்கிற க்ருஷ்ணனுடைய திருமேனியானது அழுக்கற்றுத் தளதளத்துக் காணுகின்றது; அவன் அலங்காரார்த்தமாகக் காதில் தொஙகவிட்ட கடப்பம் பூவினுடைய சிவந்த தாதுகள் ஒளியெறிய அதினால் கபோலம் சிவந்து தோற்றுகின்றது; அநாதியான வேதஙகளுககூட அறியமாட்டாத பராத்பரனை அந்தபரம புருஷன், இவ்வடிவழகுடனே என் மனதுக்குத் தோற்ற, அவனைநான் ப்ரதயக்ஷத்திற்கண்டாற்போ லநுபவித்தே னென்கிறார். (31)

[illegible] ।
[illegible] ॥

(ப-உ.) (ஸாசிஸங்குசிதலோசநோத்பலம்) ஸாசி-குறுக்காக, ஸங்குசித - சுருக்கப்பட்ட, லோசநோத்பலம் - கரிநெய்தல்போன்ற கணகளையுடையவனும், (ஸாசிகுட்மலிதகோமலாதரம்) ஸாசி - பேர்பாதியாக, குட்மலித - அரும்புபோல குவிக்கப்பட்ட, கோமல - ஸுந்தரமான, அதரம் - வாயையுடையவனும், (வேகவல்கிதகராங்குலீசயம்) வேக - வேகத்தினலே, வல்கித-சலிப்பிக்கப்பட்ட, கர - கையினுண்டான, அங்குலீசயம் - நுனிவிரல்களையுடையவனும், (வேணுநாதரஸிகம்) வேணுநாத - வேணுகாநத்தில், ரஸிகம் - ஸாரமறிந்தவனுமான ஸ்ரீக்ருஷ்ணனை, பஜாமஹே - ஆஸ்ரயிக்கிறோம். (32)

(தா-ம்.) என் நெஞ்சில் தோற்றினபோது வேணுகாநம் பண்ணுகின்றான், அதினாலுண்டான ஆநந்தாதிசயத்தினால் அவனுடைய கண்கள் பாதி மூடியும் பாதிதிறந்துமிருந்தது; வாயில்வைத்த வேணுவைத் தன்மூச்சுக் காற்றினால் பூரிக்கைக்காகத் தன் அதரத்தைக்கண்டார் கால் தாழும்படி இருமருங்கு மரும்புபோல் குவிக்கப்பட்டிருந்தது; அந்தவேணுவில் நாதவிசேஷங்கள் புறப்படும்படி அதின்மேல் அதிவேகமாக விரல்களை நடத்தாநின்றான்; இவ்விதமான வேஷத்துடனே அவனை மாநஸமாகக்கண்டு தொழாநின்றேனென்கிறார். (32)

ஸ்யந்தநே கருடமண்டிதத்வஜே குண்டிநேந்த்ரதநயாதிரோபிதா |
ஏகேந நவதமாலபல்லவஸ்யாமலேந புருஷேண நீயதே ||(33)

(ப-உ.) (குண்டிநேந்த்ரதநயா) குண்டிந - குண்டினமென்கிற நகரத்துக்கு, இந்த்ர - அரசனுடைய, தநயா - பெண்ணான ருக்மிணியானவள், (நவதமாலபல்லவஸ்யாமலேந) நவ-புதிதான, தமாலபல்லவ - பச்சிலைமரத்தின் தளிர்போல், ஸ்யாமலேந - நீலவர்ணத்தையுடையானான, ஏகேந புருஷேண - ஒருபுருஷனாலே, (கருடமண்டிதத்வஜே) கருட - கருடனாலே, மண்டித - அலங்கரிக்கப்பட்ட, த்வஜே - கொடியையுடைய, ஸ்யந்தநே - தேரிலே, அதிரோபிதா - ஏறிடப்பட்டவளாய்க்கொண்டு, நீயதே - அடைவிப்பிக்கப்படுகிறாள். (33)

(தா-ம்.) பின்னும் சிறிதுநேரம் கழித்து அவ்வேஷத்தை மாற்றி மற்றொரு வேஷத்தைக்காட்டினான்; அதாவது புதிதாகத் தளிர்ந்த பச்சிலை மரத்துத் தளிர்போல் இருண்டவடிவையுடைய புருஷோத்தமனான் நான் குண்டினமென்கிற பட்டணத்திற் சென்று, அங்கு ஸ்வயம்வரத்தில் மணம

புணரவந்த சிசுபாலாதிகளான அரசர்களனைவரையும் வஞ்சித்து, ருக்மிணி தேவியைக் கைப்பிடித் தழைத்துவந்து கருடத்வஜங்கட்டின தன்தேரின் மேலேற்றிக்கொண்டு த்வாரகையேற நடந்தான், அதையும் நான் கண்டே னென்கிறார். (33)

மாயாத பாந்தா: பதி பீமரத்யா: திகம்பர: கோபி தமாலநீல: | வின்யஸ்தஹஸ்தோபி நிதம்பபிம்பே தூர்த்த: ஸமாகர்ஷதி சித்தவித்தம் ||

(ப-உ.) பாந்தா: - வழிப்போக்கர்களே! மாயாத - இவ்வழி வராதொழியுங்கள், பீமரத்யா: - பீமரதியென்கிற ஆற்றினுடைய, பதி - வழியில, திகம்பர: - வஸ்த்ரமில்லாதவனும், தமாலநீல: - பச்சிலைமரம்போல இருண்ட திருமேனியை யுடையவனும், நிதம்பபிம்பே - கடியின்பின்புறத்தில், (வின்யஸ்தஹஸ்த: அபி) வின்யஸ்த - வைக்கப்பட்ட, ஹஸ்த: அபி - கையையுடையவனும், க: அபி - இதற்குமுன் காணப்படாதவனுமான, தூர்த்த: - ஒருகொடியனான புருஷன், சித்தவித்தம் - நெஞ்சென்னும் பொருளை, ஸமாகர்ஷதி - அபஹரித்துத் தன்வசமாக்குகிறான். (34)

(கா-ம்.) கீழ், தாம் ப்ரார்த்திக்கபடியே தம்மனதுக்குத் தோற்றினாற்போல தோற்றித்தம நெஞ்சைச சிறிதும் சேஷியாதபடி அவனபஹரிக்கை யாலே, மற்றவரைப்பார்த்து, நீஙகளு மென்னைப்போல் ஏமாந்திராதே முன் னமே ஜாகரதைப்படுஙகளென்கிறார்.

ஓ வழிப்போக்கர்களே! பீமரதியென்கிற ஆற்றின் வழியாகநீங்கள்போ கவேண்டாம்; ஏனென்னில்; அங்கேயொரு கள்ளனுண்டு, அவன் வஸ்த்ரமு மணிந்திரான், கரியுருவனுமிருப்பன், இரண்டு கைகளையும் அரையிலே குத் திட்டுநிற்பன், அவ்வழியே யார்போனாலும் அவர்களுடைய உட்பொருளான மநஸ்ஸை அவர்களுக்குத்தெரியாமலும அங்குச் சிறிதும் தங்காமலும் அப ஹரித்துவிடுவன், இதை முன்னமே உஙகளுக்கறிவித்தேனென்கிறார். (34)

அங்கனாமங்கனாமந்தரே மாதவோ மாதவம் மாதவம் சாந்தரேணாங்கனா | இத்தமாகல்பிதே மண்டலே மத்யக: ஸஞ்ஜகௌ வேணுனா தேவகீநந்தன: || (35)

(ப-உ) அங்கனாமங்கனாமந்தரே - இரணடுபெண்களுடைய நடுவில், மாதவ: - ஒருக்ருஷ்ணனும், மாதவம்மாதவம் சாந்தரேண - இரண்டுக்ருஷ்ணர்கள்நடுவில், அங்கனா - ஒருபெணணும், இத்தம் -

இம்மாதிரியாக, ஆகல்பிதே - ஏற்படுத்தப்பட்ட, மண்டலே - சூழ்ச்சியில், தேவகீநந்தந:- ஸ்ரீக்ருஷ்ணன், மத்யக: - நடுவிலிருந்தவனாய்க்கொண்டு, வேணுநா - குழலினால், ஸஞ்ஜகௌ - இனிதாகப்பாடினார் (35)

(தா-ம்.) இனி ராஸக்ரீடையின் வைபவத்தை யநுபவிக்கிறார்.

ஸ்ரீக்ருஷ்ணன், கோபிமார்களெத்தனைபேரோ, தானும் அத்தனை சரீர பரிக்ரஹம்பண்ணி, ஒருகோபிகையினுடைய இடது கையோடு தன்வலது கையையும், மற்றொரு கோபிகையினுடைய வலது கையோடு தன்னிடது கையையும் சேர்த்து ஒரு கோபிகையும் ஒரு கண்ணனுமாக இரண்டு கோபிகைகளின் நடுவே ஒரு கண்ணனும், இரண்டு க்ருஷ்ணமூர்த்திகள் நடுவே ஒரு கோபிகையுமாகக்காணலாம்படி மண்டலாகாரமாகநின்று, அம் மண்டலத்தின் நடுவே தான் நிஜஸ்வரூபத்தோடுநின்று அம்மண்டலமெல்லாம் களித்துக்கூத்தாடும்படியாக வேணுகாநம்பண்ணினானென்கிறார். (35)

கேகிகேகாத்ருதாநேகபங்கேருஹாலீநஹம்ஸாவலீஹ்ருத்யஹ்ருத்யா | கம்ஸவம்ஶாடவீதாஹதாவாநலஸ்ஸஞ்ஜகௌ வேணுநா தேவகீநந்தந:॥ (36)

(ப-உ.) (கேகிகேகாத்ருதாநேகபங்கேருஹாலீநஹம்ஸாவலீஹ்ருத்யஹ்ருத்யா) கேகி - மயில்களினால், கேகா - "கே" "கா" என்கிறசப்தத்தினால், ஆத்ருத - கொண்டாடப்பட்டும், அநேக - அநேகங்களான, பங்கேருஹ - தாமரைப்பூவில், ஆலீந - மறைந்துபடுத்திருக்கிற, ஹம்ஸ - அன்னப்பறவைகளுடைய, ஆவலீ - வரிசைகளுக்கு, ஹ்ருத்யா - ஆநந்தத்தை, ஆஹ்ருத்யா - விளைப்பதுமான, வேணுநா - குழலினால், (கம்ஸவம்ஶாடவீதாஹதாவாநல:) கம்ஸ - கம்ஸனுடைய, வம்ஶ - குலமாகிற, அடவீ - காட்டை, தாஹ - எரிப்பதில், தாவாநல: - காட்டுத்தீயாயிருக்கிற, தேவகீநந்தந: - க்ருஷ்ணன், ஸஞ்ஜகௌ - இனிதாகப்பாடினான்

(தா-ம்.) கம்ஸனுடைய வம்சத்தை நிர்மூலமாக்கின க்ருஷ்ணன் அந்த ராஸமண்டலத்தின் நடுவேநின்று வேணுவை யெடுத்து இனிதாகப்பாடும் போது, மயில்கள் அப்பாட்டைக்கேட்டு ஸந்தோஷாதிசயத்தினால் கே கா என்று கூப்பிடத்தொடங்கிற்று; தாமரைப்பூக்களினிதழ்களில் மறைந்து கண்படுத்த ஹம்ஸபக்ஷிகள் இந்த இனியபாட்டைக்கேட்டு கண்விழித்துச் சிறகுதறி யெழுந்திருந்து வெளியேவந்து இந்தப்பாட்டை ஏகாக்ர சித்தமாயிருந்து கேட்டு மனமகிழாநின்றன வென்கிறார். (36)

க்வசித்வீணாபிராவிணா கம்பிதஃ க்வசித்வீணாரவாகிங்கிணீ நர்திதஃ। க்வசித்வீணாமநோஜ்ஞஸ்வரம் காரிதஸ்ஸஞ்ஜு மஞ்ஜு வேணுநா தேவகீநந்தநஃ॥
(37)

(ப-உ) க்வசித் - ஓரோ இடங்களில், வீணாபிஃ - வீணைகளினாலே, ஆராவிணா - பாடுகிறபுருஷனாலே, கம்பிதஃ - உடம்பசையப்பண்ணப்பட்டவனும், க்வசித் - ஓரோ இடங்களில், (வீணாரவாகிங்கிணீநர்திதஃ) வீணாரவா - வீணையோடொத்த ஒலியையுடைய, கிங்கிணீ கிங்கிணிகளாலே, நர்திதஃ - நர்த்தநம் செய்விக்கப்பட்டவனும், க்வசித் - ஓரோ இடங்களில, (வீணாமநோஜ்ஞஸ்வரம்) வீணா - வீணைகளினுடைய, மநோஜ்ஞ - மநோஜ்ஞமான, ஸ்வரம் - ஸ்வரவிசேஷங்களையுடைத்தாயிருக்கும்படி, காரிதஃ - காநம்செய்விக்கப்பட்டவனுமாய்க்கொண்டு, தேவகீநந்தநஃ - ஸ்ரீக்ருஷ்ணன், வேணுநா - குழலினால், மஞ்ஜு - இனிதாகப் பாடினான்.
(37)

(தா-ம்.) ஓரிடத்தில் சிலர் வீணையெடுத்துப்பாட அதைக்கேட்டு மகிழ்ந்து நின்றவிடத்தில் நில்லாமே அசையத்தொடங்கினான்; இவனசையும் போது அரையில் கிங்கிணிகள் அந்த வீணாகாநத்துக்கநுகுணமாக ஒலியாநிற்க. அதுகேட்டு ப்ரீதிவிஞ்சி ஆடத்தொடங்கினான்; மற்றோரிடத்தில அந்த வீணாநுகுணமாக அநேகம் பாட்டுக்களை வேணுவில்வைத்து இனிதாகப் பாடினானென்கிறார்.
(37)

ஸாந்த்ரசந்த்ரகஶேகராவலிலோசநைர் வீக்ஷிதஃ கோபகோவ்யூஹகோபாலிகாவல்லபஃ। வல்லவீவ்யூஹவ்யூஹாரகஃ காரஸ்ஸஞ்ஜு மஞ்ஜு வேணுநா தேவகீநந்தநஃ॥
(38)

(ப-உ) (ஸாந்த்ரசந்த்ரகஶேகராவலிலோசநைஃ) ஸாந்த்ர - ஸாந்த்ரமான, சந்த்ரக - சந்த்ரனென்கிற சிரோபூஷணத்தையுடைய கோபிகைகளுடைய, ஆவலி - வரிசைகளுடைய, லோசநைஃ - கண்களினால், வீக்ஷிதஃ - ஆதரத்துடன்பார்க்கப்பட்டவனும, (கோபகோவ்யூஹகோபாலிகாவல்லபஃ) கோப - இடையர்களுக்கும், கோ - பசுக்களுடைய, வ்யூஹ-கூட்டங்களுக்கும், கோபாலிகா- இடைச்சிகளுக்கும், வல்லபஃ - நாயகனானவனும் (வல்லவீவ்யூஹவ்யூஹாரகஃ) வல்லவீ - இடைச்சிகளுடைய, வ்யூஹ - ஸமூஹத்துக்கு,

வ்யூடாநக: - தைவமானவனுயான, தேவகீநந்தந: - ஸ்ரீக்ருஷ்ணன், வேணுநா - வேணுவினால், ஜகௌ - இனிதாகப்பாடினார்.

(தா—ம்.) இடைப்பெண்களுக்கெல்லாம் பரதேவதையாய், தன்னை யல்லது மற்றொன்றை யறியாத அவர்களிடத்தில் விருப்பமுற்றவனும், ஆக்களும், ஆயரும், ஆச்சிகளும ப்ரியப்படும்படியான ரூபகுணசேஷ்டிதங்களை யுடையவனுன க்ருஷ்ணன் இனிமையாக வேணுகானமபண்ணும்போது, கோபிகைகள், நெற்றியில்கட்டின சுட்டியசைச தாவந்து கண்ணால் பருகுவாரைப்போலவும முத்தமிடுவாரைப்போலவும் இவனை யடர்ந்துப் பார்த்தார்களென்கிறா. (38)

கபரீபாரமிலந்மத்தப்ருங்கலதா பீதபீதப்ரியாவிலாஸாலிங்கித: । ஸ்ரஸ்தமாபீரீகுசாபோகஸம்ஸக்தோ ஜகௌ வேணுநா தேவகீநந்தந:॥ (39)

(ப - உ) (கபரீபாரமிலந்மத்தப்ருங்கலதா பீதபீதப்ரியா விலாஸாலிங்கித:) கபரீ - தலையிலணிந்த, மாலா - பூமாலையில், மிலத் - சேர்ந்திருக்கிற, மத்த - மதித்த, ப்ருங்க - வண்டுகளுடைய, லதா - கொடிபோன்றவரிசையினால், பீதபீத - மிகவும்அச்சமுள்ள, ப்ரியா நாயிகைகளினால், விலாஸ - விலாசத்துடன், ஆலிங்கித: - தழுவிக்கொள்ளப்பட்டவனும், (ஸ்ரஸ்தமாபீரீகுசாபோகஸம்ஸக்த:) ஸ்ரஸ்த - மேலாடைநழுவின, ஆபீரீ - இடைச்சிகளுடைய, குச - கொங்கைகளுடைய, ஆபோக - வைசால்யத்தோடு, ஸம்ஸக்த: - சேர்க்கப்பட்டவனுமான தேவகீநந்தந: - ஸ்ரீக்ருஷ்ணன், வேணுநா வேணுவினால், ஜகௌ - இனிதாகப்பாடினான். (39)

(தா—ம்.) இவன் வேணுகானம்பண்ணுங்காலத்தில், ஒரு கோபிகை தன் மயிர்முடியில் முடித்த பூமாலையில் வாஸனை வழியவந்து படிந்து தேனை யருந்தி மதித்து முகத்தெதிரேவந்துலாவாநின்ற வண்டுகளுக்கு பயந்து ஓடிவந்து இவனை யாலிங்கனம் செய்தாள்; மற்றொருத்திக்குத தன் மார்பின்மேலிட்ட மேலாடை கீழே நழுவ, அவ்வளவிலே அவன், க்ருஷ்ணன் பார்க்கப்போகிறானென்று வெட்கித்து இவன் பாராதபடி இவனைத் தன்னுடைய பாரத முலைததடங்களோ டணைத்துக்கொண்டாள். (39)

சாருசாமீகராகாரஸாந்த்ரவிஸ்ரம்பிஜயஶ்ரீருசா வாஸஸா தாரஸம்ஸ்வ: । நந்த்யூடாவகேவாஸிதஸ்த்ருஜகௌ வேணுநா தேவகீநந்தந:॥ (40)

(ப-உ.) (வாரு வாரீசுராவ ரஸஹாரோவிஹ:) வாரு - அழகிதான வாரீசுர - ஸுவர்ணத்தினுடைய, ரூஹஸ - காந்தி போன்ற, ஸா - காந்தியையுடைய, ரா - ருக்மிணீதேவிக்கு, விஹ:- பதியானவனும், (வைஜயந்தீமாலாவாஸிதோரஸ்ய:) வைஜயந்தீமாலா - வைஜயந்தீமாலையினாலே, வாஸித - பரிமளித்துக்கொண்டிருக்கிற, உரஸ்ய:- திருமார்பையுடையவனும், நந்தவ்ரஜாவநவாஸிதாமத்ய: நந்தவ்ரஜாவநே - நந்தகோபருடையதான ப்ருந்தாவநத்தில், வாஸிதா - வாஸம்செய்கிற பெண்களுடைய, மத்ய: நடுவிலிருப்பவனுமான, தேவகீநந்தந: - ஸ்ரீக்ருஷ்ணன், வேணுநா - வேணுவினால், ஸஞ்ஜகௌ - இனிதாகப்பாடினான். (40)

(தா-ம்.) உருக்கிவார்த்த பத்தரைமாற்றுத் தங்கம்போல் பசுத்த நிறமுடையளான ருக்மிணிப் பிராட்டிக்கு வல்லபனான க்ருஷ்ணன், தன் மார்பில் பரிமளம் மிக்க துளஸீ மாலையை யணிந்து கோபிமார்களுடைய ராஸமண்டலத்தின் நடுவே நின்று வேணுகானம் பண்ணுகின்றானென்கிறார்(40)

பாமிகா தாலிகா தாலஶ்ரீஸமயா ஸஶ்ரஹ்லர்ஷித ஸ்ருமரகாவிஸ்ரம: | கோபிகாஸ்ரீத ஆதாயயா நஸ்ஸ்யம ஸஞ்ஜகௌ வேணுநா தேவகீநந்தந:॥ (41)

(ப-உ.) (பாமிகாதாலிகாதாலஶ்ரீஸமயா ஸஶ்ரஹ்லர்ஷித ஸ்ருமரகாவிஸ்ரம:) பாமிகா - பெண்களாகிற, தாலிகா - தாளம்தட்டுமவர்களுடைய, தாலஶ்ரீ - தாளத்தினுடையவிலாஸத்திலுண்டான, ஸம - உயர்வுதாழ்வுகளின்றியே ஸமமாகப்பாடுகிறபாட்டிலுண்டான, ஸ்ருஹ்ஷ - ப்ரீதியினாலே, ஸந்தர்ஷித - காண்பிக்கப்பட்ட, ஸ்ருமரகா - கொடிபோன்ற புருவத்தினுடைய, விஸ்ரம: - விலாஸத்தையுடையவனும், ஸ்வயம் - தான், (கோபிகாஸ்ரீதஆதாயயாந:) கோபிகா - கோபிகைகளுடைய, ஸ்ரீத - கானத்தில், ஆத்த - வைக்கப்பட்ட, ஐகாக்ர்ய: - ஒருமைப்பட்ட மநஸ்ஸையுடையவனுமான, தேவகீநந்தந: - ஸ்ரீக்ருஷ்ணன், வேணுநா - வேணுவினால், ஸஞ்ஜகௌ - கானம்பண்ணினார். (41)

(தா-ம்.) அந்த ராஸக்ரீடையில் ஓரிடைப்பெண் தாளம்போட, அத்தாளம் ஏற்றல் குறைதலில்லாமல் லயத்திலேபோய் நிற்க, அதிலேமனம்சென்று, உள்ளுள்ளபா(ஸா)வமெல்லாம் தோன்றும்படி தன் புருவவட்டத்தை

நர்த்தநம்செய்வித்தானும், கோபிமார்கள் பாடும்பாட்டை ஏகாக்ரசித்தனாய் கேட்டுக்கொண்டு ஸ்ரீகருஷ்ணன் வேணுகாநம்பண்ணினானென்கிறார் (41)

வாரிஜாதமஸமுத்ருத்ய ராதயா வயோ ரூபாப்யாம் ஸா ஸாமா குணைஸ்து ஸஹ । ஸீதலஸீதே யமுனாதடே வடே மஞ்ஜுளவேணுநா தேவகீநந்தநஃ ॥ (42)

(ப-உ.) (ராதயா வயோ ரூபாப்யாம்) ராதயா - ராதிகையினுடைய, வயஃ - பருவத்தையும், ரூபயா - அழகையுமுடையளாய், குணைஃ - குணங்களினால (ஸாஸமா) ஸா - லக்ஷ்மீதேவியோடு, ஸமா-ஒத்தவளான ஸத்யபாமையுடன்(கூடி) ஸஹ- (அவளுடையதிருமாளிகைத்) திருமுகத்தில், வாரிஜாதம் - ஸ்வர்க்கத்திலுள்ளபாரிஜாதமரத்தை, ஸமுத்ருத்ய - பிடுங்கிக்கொண்டுவந்து நட்டும், ஸீதலஸீதே-மிகவும் குளிர்ந்திருக்கிற, யமுனாதடே-யமுனைக்கரையிலுள்ள, வடே - ஆலமரத்தின்கீழ், தேவகீநந்தநஃ-ஸ்ரீக்ருஷ்ணன், வேணுநா - வேணுவினால, மஞ்ஜுளம் -இனிதாகப் பாடினார். (42)

(தா-ம்.) ராதிகையென்னும் கோபிகையோடொத்த பருவத்தையும் வடிவழகையு முடையளாய, ஆதமகுணங்களில் ருக்மிணியோடொத்தவளான ஸதயபாமைககாக ஸ்வர்ககலோகததில் நின்றும பாரிஜாத மரத்தைப் பிடுஙகிககொண்டுவந்து அவளது மாளிகை முறறததில் நட்டவனும், யமுனைககரையிலுள்ள பாண்டீரவடததின்கீழ்நின்று ஸ்ரீக்ருஷ்ணன் வேணுகாநம் பண்ணுகின்றானென்கிறார். (42)

அக்ரே தீர்க்கதரோயமர்ஜுநதரு: தஸ்யாக்ரதோ வர்த்தநீ ஸா கோஷம் ஸமுபைதி தத்பரிஸரே தேஹலீ குஞ்ஜத்ருமா தஸ்மின்ஸாலஸதர்கநந்தநக்ருஹே வத்ஸாநுஜாதவாஸமீதே பவதீஷு ச்யுதிஸமேவாநாமஸ்ரம: ॥ (43)

(ப-உ.) ஸகே - ஓ தோழனே! அக்ரே - எதிரில், தீர்க்கதரஃ - மிகவும வளர்த்தியையுடைய, அயம் - இந்த, அர்ஜுநதருஃ- கடம்பைமரம்(இருக்கிறதல்லவா), தஸ்ய-அம்மரத்தினுடைய, அக்ரதஃ - முன்னே, வர்த்தநீ - வழி(ஒன்றுபோகிறது), ஸா - அவ்வழியானது, கோஷம் - இடைச்சேரியை, ஸமுபைதி - (சென்று) அடைகிறது, தத்பரிஸரே - அவ்விடைச்சேரியினுடைய

அருகில், கலிந்த ஜா-யமுனையாறு (பெருகுகிறது), தஸ்யா:- அவ்வாற்றினுடைய, (தீரதமாலகாநநதடே) தீர- கரையிலுள்ள, தமாலகாநந- பச்சிலைமரக்காட்டினுடைய, தடே-ப்ரதேசத்தில, கோப:- க்ருஷ்ணனென்கிற இடையன, கவாம்-பசுக்களுடைய, வ்ருந்தம்- ஸமூஹத்தை, சாரயந் - மேய்க்கிறவனாய்க்கொண்டு, க்ரீடதி - க்ரீடைசெய்கிறான், (ஸ: - அவ்விடையன்,) ஸவ்யாஜம் - அழிவற்றதான, பந்தாநம்-(மோக்ஷ) மார்க்கத்தை, உபதேக்ஷ்யதி - காண்பிப்பான. (43)

(தா-ம்) நீர் அவனைக்கண்டு நல்வழியடையாநின்றீர், உம்மைப்போலே நானுமவனைக்கண்டு நல்வழி பெறுமவித மென்னென்று அருகிருந்த ஒரு தோழன்கேட்க, அவனுக்குப பதிலுரைக்கிறா. ஓ அனபனே ! உன்னெதிரே உயர்நதவொரு ஆஜாநமரம தெரிகிறதுபார, அம்மரததின முன்பாக ஒருவழி போகிறது, அவவழியே போனால் அது ஆயப்பாடியில கொண்டுவிடும், அதினருகே யமுனையென்றொரு ஆறு ஓடுகிறது, அதின் கரையில் பச்சிலை மரககாடொன்றுண்டு, அஙகே ஓரிடையன் பசுமேயத்துக்கொண்டு விளையாடாநின்றான், அவனைககேட்டாயாகில் அவனுனககு நல்வழிகாட்டுவானென்கிறா. (43)

கோபாலஜபாலாஞ்சித கோமலகோபவேஷம் கோபாலபாலகஸமேத மநுவ்ரஜந்தம் | ஸாயந்தநே ப்ரதிக்ருஹம் ப்ரஸவா நயந்தம் ஸஞ்சஜந்த மீஸம் ப்ரணதோஸ்மி நித்யம் ||

(ப-உ) (கோபாலஜபாலாஞ்சித கோமல கோபவேஷம்) கோ-பசுக்களுடைய குளப்படி மிதியினாலுண்டான, பாலஜ- தூள்களினால், அஞ்சித- அழுககடைந்திருக்கிற, கோமல- அழகிதான, கோபவேஷம் - இடைக்கோலததையுடையவனும், (கோபாலபாலகஸமேதம்) கோபால- இடையர்களுடைய, பாலகஸமேத: - அனேகம்பிள்ளைகளினால், அநுவ்ரஜந்தம் - பின்தொடரப்பட்டவனும், ஸாயந்தநே- மாலைபபொழுதில், ப்ரஸவா நயந்தம் - பசுக்களைக்கட்டுவதற்காக, ப்ரதிக்ருஹம்- வீடுகள்தோறும், ஸஞ்சஜந்தம்- போகாநின்றவனுமான, ஸஞ்சஜந்த மீஸம் - இளமபிள்ளையான க்ருஷ்ணனை, நித்யம்- எக்காலமும், ப்ரணதோஸ்மி- நமஸ்காரஞ்செய்தவனாக ஆகிறேன. (44)

(தா-ம்) இதில், ஸாயங்காலத்தில் ஸ்ரீக்ருஷ்ணவேஷத்தை யநுபவிக்கிறார். இவன் ப்ரதிதினமும் மாலைப்பொழுதில் பசுக்களை யோட்டிக்கொண்டு இடைச்சேரியை நோக்கிவரும்போது பசுக்களுடைய குளப்படிப்பட்டுக்கிளம்பின புழுதி இவனுடைய கரிய திருமேனியில் படிந்து அதினாலிவன் தூமரவர்ணனாக விருப்பன், இவன்பின்னே அநேக யிடைப்பிள்ளைகள் தொடர்ந்துவருவார்கள்; வந்தவுடன் க்ருஹங்கள் தோறும் பசுக்களைகட்டுகைக்காக நுழையாநிற்பன், அந்த ஸமயத்திலிவனை நித்யமாக நமஸ்கரிப்பேனாக வென்கிறார். (44)

நிதிம் லாவண்யாநாம் நிகிலஜகதாஶ்சர்யநிலயம் நிஜாவாஸம் ஹாஸாம் நிரவதிகநிஶ்ரேயஸரஸம் | ஸுதாதாராஸாரம் ஸுக்ருதபரிபாகம் ம்ருகத்ருஶாம் ப்ரபத்யே மாங்கல்யம் ப்ரதமமதிதைவம் க்ருததியாம் || (45)

(ப-உ) லாவண்யாநாம் - ஸௌந்தர்யாதிசயங்களுக்கு, நிதிம்- வைப்பானதும், (நிகிலஜகதாஶ்சர்யநிலயம்) நிகில- ஸமஸ்தமான, ஜகத்- லோகங்களிலுண்டான, ஆஶ்சர்ய - விநோதங்களுக்கு, நிலயம்- இருப்பிடமானதும், ஹாஸாம்- காந்திகளுக்கு, நிஜாவாஸம்- ஸ்வாபாவிகமானவாஸபூமியானதும், (நிரவதிகநிஶ்ரேயஸரஸம்) மோக்ஷஸுகத்தைத்தருவதும், (ஸுதாதாராஸாரம்) ஸுதா-அம்ருதத்தினுடைய, தாரா- பெருக்கினுடைய, ஸாரம்- ரஸத்தையுடையதும், ம்ருகத்ருஶாம்- ஸ்த்ரீகளுடைய, ஸுக்ருதபரிபாகம்- புண்யத்தினுடைய பல (ஊழ) ஸ்வரூபமானதும், க்ருததியாம்- வித்வான்களுக்கு, மாங்கல்யம்- மங்களப்ரதமாய், ப்ரதமம்- முக்யமுமாய், அதிதைவதம் - உயர்ந்த தேவதையுமான க்ருஷ்ணமூர்த்தியை, ப்ரபத்யே- பற்றுகிறேன். (45)

(தா-ம்) இதில், அவனுடைய குணங்களையெல்லாம திரட்டியநுபவிக்கிறார். கண்ணாடிபோல் பளபளத்துக்காண்கிற காந்திவிசேஷமெல்லாமிவனிடத்தில் குடிகொண்டிருக்கும்; லோகங்களிலுள்ள ஆஸ்சர்யங்களுக்கெல்லாம் இவன் நிலையிடமாயிருந்தான்; அழகுக்கெல்லாம் இவனுடைய விக்ரஹம் ஜன்மபூமியாயிருந்தது, அளவற்ற மோக்ஷானந்தத்தைத் தானுமநுபவித்துப்பிறரையும் அநுபவிப்பியாநின்றான், ஸகலநேத்ரங்களுக்கும் அம்ருதவெள்ளம்போல் இனியனாயிருந்தான், இடைப்பெண்களுடைய பூர்வஜந்மஸுக்ருதமெல்லாம் திரண்டுகனிந்து ஓர்வடிவுகொண்டதுபோல் விளங்காநின்றான். ஜ்ஞா

திகளுக்கு தயாநியோகயமான மஙகளதேவதையாயிருந்தான், இவ்விதமான ஸ்வபாவஙகளையுடையனும் ஜகத்காரணபூதனுமான இநதகருஷணனைச சரணமடைநதேனென்கிறார (45)

ஆதாம்ரபாணிஸரோஜரஜ்ஜிதகலாரோமஹாரமணிகுண்டலஹேமஸூத்ரீ | ஆவிஸ்ரமாம்புகணிகம் ஜலதாபம் அவ்யாத் அர்ஜுநரதாபரணம் மஹோ ந: || (46)

(ப-உ) (ஆதாம்ரபாணிஸரோஜரஜ்ஜிதகலாரோம) ஆதாம்ர - மிகவுமசிவந்திருக்கிற, பாணிஸரோஜ- கமலமலர்போன்ற திருக்கைகளில், ரஜ்ஜித- ஸ்நேஹத்தையுடைய, கலாரோம் - கசையையுடையதும், (ஆரோமஹாரமணிகுண்டலஹேமஸூத்ரீ) ஆரோம - அசைவுடைய. ஹார - முத்துமாலையையும், மணி - ரத்நஙகளிழைத்த, குண்டல- குண்டலங்களையும, ஹேமஸூத்ரீ - தங்கஅரைநாணையுடையதும், ஆவிஸ்ரமாம்புகணிகம் - சுற்றும்பரவியிருக்கிற பொட்டுப்பொட்டான வேர்வையை யுடையதும், ஜலதாபம்- மேகம்போல இருண்டநிறஙகொண்டதும், (அர்ஜுநரதாபரணம்) அர்ஜுந-அர்ஜுனனுடைய, ரத- தேருககு, ஆபரணம் - அலங்காரமுமான, ஆத்யம் மஹ: - முதன்மையாயுள்ள தேஜஸ்ஸானது, ந: - நம்மை, அவ்யாத் - ரக்ஷிககககடவதாக. (46)

(தா-ம) இதில, அவனுடைய ஸாரத்யவேஷத்தை யநுபவிக்கிறார். ஒருபுஷபம் விழிலும்போறுத அதிஸுகுமாரமாகையால இககசையின் பிடிதாளாமல் சுற்றுமசிவநத கைத்தலத்திலபிடித்த கசை (ஜாடி)யும், கழுத்திலிட்ட ஹாரமும, காதிலகுண்டலமும், அரையில் தொஙகுகிற தங்க அரைநாணும சின்றவிடத்தில நில்லாமல் அலையும்படியான திருமேனியினசைவும, ஶ்ரமத்தினால் உடமபெஙகும் துளிதுளியாக வெழுநதவேர்வையும் ஆகிய இவ்வேஷத்துடனே அர்ஜுநன்தேர்முன்நின்று குதிரைகளை நடத்தாநின்ற ஶ்ரீகருஷ்ணன, அவ்வர்ஜுநனை சத்ருக்கள்வாயில் விழாமே மீட்டுரக்ஷித்தாறபோல், ஸம்ஸாரஸாகரத்தின் நடுவேவிழுநது கரையேற மாட்டாதே அநாதியாகத் தடுமாறுகிற எங்களையும் கைகொடுத்துத் தூககிக்கரையேற்றி ரக்ஷிககக்கடவானாக வென்று ப்ரார்த்திககிறார். (46)

நவநீதசௌர்யஜனிதாபராதைர் அநந்ததர்மப்ரதிபந்தநைஶ்ச | வ்யாகோசிதம் தாமபிரவ்யயம் தத் வந்தே நித்யமுதாரபந்தம் || (47)

(ப-உ) (நவ நியந்த்ரக்ஷுண்ணாநு) நவ- நகங்களினால், நியந்த்ர- போக்கப்பட்ட, க்ஷுண்ணா - தினவையுடைய, (பார்த்த வாஜிநா ஹாராநு) பார்த்த - அர்ஜுனனுடைய, வாஜிநா - தோககுதி ரைகளை, சுஜ்ஞேஷு - கிரமங்களிலுள்ள, பயோபிஃ - ஜலத்தால், அநுதிநம் - நாள்தோறும், க்ஷாலயந்தம் - கழுவி விட்டவனும், (விதத மாத்ரஃ) விதத - பரந்த, மாத்ரஃ - உடம்பையுடையவனும், (தோத்ர நிவ்ருத்த கேசஃ) தோத்ர - கசையினால், நிவ்ருத்த- சொருகப்பட்ட, கேசஃ- மயிர்முடியையுடையவனும், (தந்த விந்யஸ்த ரஸ்மிஃ) தந்த- பற்களினால், விந்யஸ்த - பிடித்துக்கொள்ளப்பட்ட, ரஸ்மிஃ- கடிவாளத்தையுடையவனுமான, தேவகீ புண்யராசிஃ- தேவகீதேவியினுடைய புண்ணிய க்குவியலான க்ருஷ்ணன், அவதாத்- ரக்ஷிப்பானாக. (47)

(தா-ம) இதிலுமந்த ஸாரத்யவேஷத்தையே யநுபவிக்கிறார்: அர்ஜுநனுடைய தோக்குதிரைகளைத்தன் நகங்களினால் தினவடங்கச்சொறிந்து, பின்பு, தன் இரண்டு கைகள்நிறைய ஜலத்தைவாரி அவற்றின் மேல்வீசிக் கழுவித்தேய்த்து முழுகப்பண்ணி, அநந்தரம் தேர் நடத்தும்போது தன் தலைப்பாகையில் குதிரையோட்டும் கசையைச்சொருகி, கடிவாளங்களைப் பற்களால கடித்துக்கொண்டு, இப்படி தான் செய்யத்தகாத அநேக க்ருத்யங்களைச் செய்து ஆஸ்ரிதனான அர்ஜுநனுக்குப் பரதந்த்ரனாயிருந்த க்ருஷ்ணனை, அவனிடத்தில் ப்ரபத்திபண்ணின நம்மையும் ரக்ஷிக்கட்டுமென்கிறார். (47)

வ்ரஜயுவதி ஸஹாயே யௌவநோல்லாஸிகாயே ஸகலஸுலபஹாஸ
விஹாரே ஸகுந்த மந்தாரஹாஸே | நிவஸது மம சித்தே தத்பதா
யத்தம் தந்நிஸ்ஸம ஸிஞ்ஜாநநந்த மோஹாவஸாநம் || (48)

(ப-உ) (வ்ரஜயுவதிஸஹாயே) வ்ரஜயுவதி - இடைச்சேரியிலுள்ள யௌவனம்பூண்டபெண்களுக்கு, ஸஹாயே- துணையானவனும், (யௌவநோல்லாஸிகாயே) யௌவந - யௌவநத்தினால், உல்லாஸி- விளங்காநின்ற, காயே- சரீரத்தையுடையவனும், ஸகலஸுலபஹாஸ விஹாரே) ஸகல- ஸமஸ்தமான, ஸுலப - மங்களங்களுக்கு, விஹாரே - விஹாரஸ்தானமானவனும், (குந்தமந்தாரஹாஸே) குந்த- குருக்கத்திப்பூப்போலும், மந்தார- மந்தாரப்பூப்போலும் வெண்மையான, ஹாஸே - சிரிப்பையுடையவனும், (நிஸ்ஸமஸிஞ்ஜாநந)

ருஷிகளாகிற. ஸரஸிஜ - தாமரைமலர்களுக்கு, ஸாநந்த வி காஸத்தைப்பண்ணும ஸூர்யனுமான, நந்தகோபாத்மஜ - நந்தகோபர் திருமகனான கருஷ்ணனிடத்தில், (தத்பாதயுக்மவ்யாப்ருத) தத் - அந்த ஸ்ரீக்ருஷ்ணனுடைய, பாத - திருவடிகளுக்கு, ஆயத - ஆதீனமான, வ்யாப்ருத - வ்யாபாரத்தையுடைய, மம - எனனுடைய, வித்ய- மனஸ்ஸானது, நிவஸது - பொருந்தி வாஸம்செய்யக்கடவது.

(தா-ம) தாம இதில், தமமுடைய நெஞ்சை அவனிடத்திலே யிருத்துகிறார். வயதுள்ள இடைப்பெண்களுக்குத் துணையாய், அ துசருத்தக்க யௌவநத்தையுடையனாய், பசுக்களுக்குப் பாலக னாய், பூவலர்ந்தாற்போல ஸுகுமாரமாய வெளுத்த சரிபபையு டையனாய், ருஷிகளுடைய மநஸ்ஸை ஆநந்திப்பியாநின்றவனுமான ஸ்ரீகருஷ்ணனையே, அவன்பாதங்களிலடிமைபூண்ட என்மநஸ்ஸு எப்போதும் தயாநிக்கக்கடவதாக வென்கிறார். (48)

காரண்யாநீ காருத்ஸ்னமபி தயமானவிஸ்மாயபாரலாயாஸாரண்யா ஸாநுராகே தேஹவைஜ்ஞயவேணுநிநதேநேர்| யாரண்யாஸாநந்தோ தத்ஸமுகஸமமரோவிந்தவைஜ்ஞரண்யாநாகருஷ்யஜயது ஶ்ரீர் மயோமிரா|| (49)

(ப-உ) (க்ருத்ஸ்னமபி தயமானவிஸ்மாயபாரலாயாஸாரண்யா) க்ருத்ஸ்ன- முழுவதான, அபி த - சிரிப்பினால், தயமான- செவ்விபெற்ற, விம்ப- கோவைப்பழம்போன்ற, அதர-வாயிலுண்டான, ஸுதா- அம்ருதத்தினுடைய, ஸாரண்யா- வெள்ளத்துடன், ஸம்ஸ்ருஷ்டே- ஸம்பந்தித்திருக்கிற, வேணுநாதே - குழலோசையினால், காரண்யாநீ- காட்டை, ஸபதி- அப்பொழுதே, மதமேற்றிப் பரவசமாக்கினதும், தாரண்யா - பூமியினால், (ஸாநந்தோத்கண்டக) ஸாநந்த உத்கண்டக - ஆனந்தத்தினால உயரக்கிளம்பின மயிர்க்கூச் சுடன் கூடியிருக்கும்படி, (உபமரோவிந்தவைஜ்ஞ) உபமரோவ- ஆ பிரணம்பணிகொள்ளப்பட்ட, அரவிந்த்வைஜ்ஞ- திருவடித்தாமரை களையுடையதும், ஶரண்யாநாம்- ரக்ஷகர்களுக்குள், ஆத்யா- முதல் வனானதுமான, ஸா- அப்படிப்பட்ட, ஶ்ரீர்- வடிவுகொண்ட, மயோ மிரா-க்ருஷ்ணனாகிறபோக்யதையானது,ஜயது-விளங்கக்கடவதாக.

(தா-ம) இதில் பசுக்களையும் மேய்க்கினபடியைப் பேசுகிறார் கரு ஷ்ணனுடைய வெண்ணிலவுபோனற மந்தஹாஸமும், அமமுதுவல்

பாயுமிடமாய் கோவைப்பழம்போல் சிவந்திருக்கிற அதரமும், அவ்வதரத்தில் நின்றும் அமுதவெள்ளம் வழிந்தாற்போல் புறப்பட்ட முகமாருதமும், அதிஞானமுடையதாய், அளவில்லாப் பேதைகளுக்கு மின்னான குழலோசையும், தனித்தனியே மதகரங்களான இவையெல்லாம் சேர்ந்து காட்டிலுள்ள மருகங்களையெல்லாம மெய்மறக்கும்படி மயங்கப்பண்ணினதேயன்றி அக்காட்டிலுள்ள மரங்களும் தளிர்விடும்படி பண்ணிற்று; இவன் தரையில் அடிவைத்தபோதே பூதேவியானவள் அவ்வடிவைப்பை அதிஸந்தோஷத்துடனே மிகவுமாதரித்தாள்; இவ்விதமான போக்யதையையுடையனும், ஸர்வரக்ஷகனுமான ஸ்ரீக்ருஷ்ணன் ஒருகுறைவின்றி விளங்கக்கடவானென்கிறார். (49)

விசித்ரகோபவநிதாநாம் ஸம்போகசிஹ்நாங்கிதஸ
ர்வாங்கம் | பவித்ரமாம்நாயகிராமகம்யம் ப்ரஹ்ம ப்ரபத்யே நவநீ
தசோரம் ‖ (50)

(ப-உ) (விசித்ரகோபவநிதாநாம்) விசித்ர- ரஸிகைகளான, கோபவநிதாநாம் - ஆய்ச்சியர்களுடைய, ஸம்போக- ரதிகாலத்திலுண்டான, சிஹ்ந- அடையாளங்களினால், அங்கித- அடையாளம்பண்ணப்பட்ட, ஸர்வாங்கம்- ஸமஸ்தாவயவங்களையுடையதும், பவித்ரம்- ஆஸ்ரிதர்களைப்பரிசுத்தமாகப்பண்ணுவதும், ஆம்நாயகிராம்- வேதவாக்குக்களுக்கு, அகம்யம் - கிட்டவொண்ணாததும், நவநீதசோரம் - வெண்ணைக்களவுகாணகிற கிருஷ்ண ஸ்வரூபியுமான, ப்ரஹ்ம- பரப்ரம்மத்தை, ப்ரபத்யே- பற்றுகிறேன்.

(தா-ம்) இதில், அவனுடைய சரித்திரங்களெல்லாம் பவித்திரங்களாயிருக்குமென்கிறார் இந்த க்ருஷ்ணன, கோபகன்னிகைகளை ஆலிங்கனம் செய்தபோது அவர்களுடம்பில் பூசின சந்தனச்சேறும் பசுமஞ்சளும் இவனுடம்பெங்குமொட்டிக்கிடந்தது, இவ்வேறு வேதங்களாலு மாராயவொண்ணா அதிகமபிரஸ்வபாவத்தையுடைய பார(ஸா)வத்தையுடையபராத்பரனாயிருந்தான், இவன் செய்யும் க்ருத்யமோவெண்ணெய்க்களவாயிருந்தது, தன்னுடைய இப்படிகளையெல்லாம் நினைத்தவர்களுக்கு ஸகலபாபங்களையும் போக்கி நல்வழிக்கு யோக்யதையையுண்டாக்காநின்றன, அப்படிப்பட்ட இந்தக்ருஷ்ணனை சரணமடைகிறேனென்கிறார். (50)

கஷ்ஶ்ருஹெ க்ருஷ்ணம் வெக்ஷ்ய வொராய் ஸ்புகவாடம் ஜநநீம் மயெதகா | உலூக்லெ தாம நிபத்தம் தத்ராபி த்ருஷ்டவாபி ஸ்தாவஸாவ | (51)

(ப-உ) ஸகா- ஒருத்தி, நவநீதசொராய்- வெண்ணெயைத் திருடுகிற, க்ருஷ்ணம்- க்ருஷ்ணனை, கஷ்ஶ்ருஹெ- வீட்டுக்குள், கவெக்ஷ்ய- பார்த்து, கவாடம்- கதவை, ஸபா- அடைததுககொண்டு, ஜநநீம் - தாயான யசோதயைக்குறித்து (ச்சொல்லுகைக்கு), மதா- போனுள்; தத்ராபி - அவ்விடததிலும, உலூக்லெ - உரலில, (தாமநிபத்தம்) தாம- கயிறறினல், நிபத்தம்- கட்டப்பட்ட, ஸம்- இநதக்ருஷ்ணனை, த்ருஷ்டா- பார்தது, ஸ்திதா- (கம்பமபோல்) நிஶ்சலையாக, ஸாவ- ஆனுள். (51)

(தா-ம) இதில், இவனுடைய அதிமாநுஷமான சக்தியைச் சொலலுகிறுா. ஓராய்சசியினது இலலமபுகுநது வெணணெயை யெடுத்து விழுஙகாநிறக, அவ்வில்லத்தாள வநதுகண்டு, இவனை வெளியே போகவொட்டாமல கதவை யடைதது யசோதையிடம சொலலப்போனுள், இவன அநதயசோதையுடைய மாளிகையில் உரலோடு கட்டுண்டு நின்றுன், இவ்வாஶ்சர்யத்தைக்கண்ட அவ்வாசசி ஒன்றும் சொல்லத்தோன்றுமல வாயை மூடிககொணடு உடம்பசையாமல கமபம்போல் நினறுளென்கிறுர். (51)

ரத்நஸ்தலெ ஜாநுசரஃ குமாரஸ் ஸங்க்ராந்தமாத்மீய முகாரவிந்தம்| ஆதாதுகாமஸ் தடபாவதுஃகாத் விலோக்ய தாத்ரீவதநம் ருரோத||

(ப-உ) ரத்நஸ்தலெ-ரத்நங்களாலிழைக்கப்பட்ட ப்ரதேசத்தில், ஜாநுசரஃ - முழந்தாள்களினுல் தவழ்ந்து விளையாடுகிற, குமாரஃ- க்ருஷ்ணனுனவன், ஸங்க்ராந்தம் - (அநத ரத்நபூமியில்)ப்ரதிபலிக்கிற, (ஆத்மீயமுகாரவிந்தம்) ஆத்மீய-தன்னுடையதான, முகாரவிந்தம்)- கமலப்பூப்போன்ற முகததை, ஆதாதுகாமஃ - பிடிக்க விரும்பினவனுய்க்கொண்டு (கையினுல்தடவ), (தடபாவதுஃகாத்) தத- அநத நிழலோடுகிற முகத்தினுடைய,அபாவ- அகப்படாமையாலுண்டான, துஃகாத்- வருத்தத்தினுல், (தாத்ரீவதநம்) தாத்ரீ-தாதியினுடைய, வதநம்- முகத்தை, விலோக்ய-பாரத்து, ருரோத - அழுதான்.

(தா-ம) இதிலவனுடைய பேதைமையைச் சொல்லுகிறுர். நநதகோபருடைய திருமாளிகை யெங்கும் ரத்னமிழைத்திருக்கும், அவ்விடத்திலே இவன் தவழநது விளையாடாநிற்கசசெய்தே கீழே தன்

மூகம் நிழலாடக்கண்டு அதை மற்றோர் சிசுவாகவெண்ணி அதைப் பிடிக்கக்கையை நீட்ட அது இவன் கைக்ககப்படாமையாலே வருந்தி தாய முகத்தைப் பார்த்து அழத்தொடங்கினனென்கிறார். (52)

ஆநந்தேந யஶோதயா ஸமதநம் கோபாங்கநாபிஶ்சிரம்
ஸாஶங்கம் பலவித்விஷா ஸகுஸுமை: ஸித்தை: ப்ருதிவ்யா ஸார்த்தயா ।
ஸேர்ஷ்யம் கோபகுமாரகை: ஸகருணம் பௌரைர்ஜநை:
ஸஸ்மிதம் யோ த்ருஷ்ட: ஸ புநாது நோ முரரிபு: ப்ரோத்க்ஷிப்த
கோவர்த்தந: ॥ (53)

(ப-உ) யஶோதயா - யசோதையினால், ஆநந்தேந - ஆநந்தத்துடனும், கோபாங்கநாபி:- ஆய்ச்சியர்களினால், சிரம் - வெகுநேரம், ஸமதநம்- மன்மதனோடுகூடியிருக்கும்படியும், பலவித்விஷா- இந்த்ரனால், ஸாஶங்கம்-ஸம்சயத்துடன்கூடியிருக்கும்படியும், ஸித்தை:- ஸித்தர்களாலும், ஸகுஸுமை:- (கையில) பூக்களுடன்கூடினவர்களாய்க்கொண்டும, ப்ருதிவ்யா- பூதேவியினால், ஸார்த்தயா - மனத்தளர்த்தியுடைத்தாயிருக்கும்படியும், கோபகுமாரகை - இடைப்பிள்ளைகளினால், ஸேர்ஷ்யம் - பொறாமையுடன்கூடியிருக்கும்படியாயும், ஸகருணை:- தயையுடனகூடின, பௌரை:- (மதுரைபபட்டணத்திலுள்ள), ஜநை: - ஜநங்களினால், ஸஸ்மிதம் - புன்நகையுடன்கூடியிருக்கும்படியாயும், ய:- எவனொருவன், த்ருஷ்ட:- பார்க்கப்பட்டவனோ, (ப்ரோத்க்ஷிப்தகோவர்த்தந:) ப்ரோத்க்ஷிப்த- உயரவெடுக்கப்பட்ட, கோவர்த்தந:- கோவர்த்தனமலையையுடைய, ஸ: - அந்த, முரரிபு:- ஸ்ரீகருஷ்ணன், ந: - நம்மை, புநாது- பரிசுத்தராகக்கடவான் (53)

(தா-ம்) இதில, அவன் மலையெடுத்தபோதை யநுபவிக்கிறா. இவன் கோவர்த்தநகிரியைப் போத்தெடுத்து உளளங்கையில் வைத்து உயரத்தூக்கித் தாங்கினபோது, இவனுடைய மாநுஷசேஷ்டிதத்தைக் கண்டு யசோதை ஆநந்தத்துடனே பார்த்தாள், கோபகன்னிகைகள மன்மதவிகாரம் பூண்டு பார்த்தார்கள், நாமினிடத்தில் பராபவப்பட்டோம், இவன் நமக்கு என்னதீங்கு விளைக்கிறானோவென்று இந்த்ரன் பயத்துடனே பார்த்தான, ஆகாசத்திலுள்ள ஸித்தர்கள் பூக்களைக்கொண்டு இவனை யர்ச்சிக்கப் பார்த்தார்கள், பூதேவியானவள தன மேலிருந்த மலையைப பிடுங்கும்போதுண்டான வருத்தத்தினால் வருந்திப்பார்த்தாள், இடைப பிளளைகள, நம்மோடொத்த இவனுக்

கு இவ்வளவுபெருமைவந்ததேயென்று பொறுமைப்பட்டு பார்த்தார்கள், ஸூரர் இவனிப்பெருமலையைத் தூக்குகிறனென்று கருணை கூர்ந்து முறுவலித்துப் பார்த்தார்கள், இப்படிப்பட்ட க்ருஷ்ணனை, இவற்றை யெல்லாம்சொல்லிக் கீர்த்திக்க நடையைப் பரிசுத்தராக்கக் கடவானுகவென்று பராசரதிருகிறார். (53)

உபாஸதா ஊர்த்வ ஹ்ருதயாப்ஜமத்யே | வஸம்யயோஷா ஸிஸுபாலஸீலா கதாஸ்ய வித்ஷ ஸ்ரீயாக்ஷ|| (54)

(ப-உ) பூர்வாணாம் - பூர்விகர்களான, ஸூரிபி: - பரமாத்மஸ்வரூபமறிந்தஞானிகள், ஹ்ருதயாப்ஜ-ஹ்ருதயாகாசத்தில், நிஹித: - வைக்கப்பட்ட, ப்ரக்ருதே:- ப்ரகிருதிவிலக்ஷணரானஜீவாகளைககாட்டிலும், பர:- விலக்ஷணனான பரமபுருஷனை, உபாஸ்ய- த்யானிக்கட்டும், வயம்- நாங்கள், (யசோதாஸிஸுபாலஸீலா கதாஸு ரஸேஷு) யசோதாஸிஸோ: - யசோதையின்குழவியான க்ருஷ்ணனுடைய, பாலஸீலா - இளம்பருவத்திலுண்டான திருவிளையாட்டுகளைச்சொல்லுகிற, கதா - கதைகிளாகிற, ரஸேஷு- அமருதரஸாரங்களில், ஸீதாம:- (மூழ்கி)விளையாடுகிறோம், மீனாயாம்- குக்கைபோல் நுழைந்தாராயவொண்ணுதஉபநிஷத்தில் என்று மர்த்தமாம. (54)

(தா-ம்) இதில், முன்புள்ளாரக்கும் தனக்குமுண்டான வாசியைபேசுகிறார்.---சாஸ்த்ரங்களை யாராய்ந்து ப்ரக்ருதி புருஷவிலக்ஷணமான பரமாத்ம ஸ்வரூபத்தைக்கண்டறிந்த ஸந்யாஸிகள், ப்ரக்ருதி மண்டலத்துக்கப்பால ஒருவாககுமெட்டாத ஸ்ரீவைகுண்டத்திலுள்ளபரமபுருஷனைத்தங்களுடையஹ்ருதயகுகையிலே வைத்து, பஞ்சேந்த்ரியங்களையுமடக்கி வருந்தி த்யானம்செய்வார்கள், அப்பாதுவைத்தில்போகாமல் அவனுடைய ஸௌலப்ய குணத்திலேயீடுபட்டு, க்ருஷ்ணனுடைய பாலலீலையாகிற அமுதககடலிலிறங்கி அதைப்ப நகிவருத்தமின்றி விளையாடுவோமென்கிறார். (54)

விகீர்ணகாஸ்யா மோதக ந்ருத்ய ஸ்ரீ ஹ்ருதநீ வாஸுதேவ் த்ருஷ்ணா | ததர்யாநிகம் கௌஹவராக்வோத் சௌவித் ஸுகோஷ்ட ஜாயதே|| (55)

ப-உ) ததர்யாதிகம்- தயிர்முதலானதை. விகீர்ணகா - விற்கவிரும்பிப்புறப்பட்ட, மோகந்ருத்ய - ஓரிடைப் பெண்ணானவள்,

([illegible] விந்யஸ்த வ்ருத்தி:) [illegible]- ஸ்ரீக்ருஷ்ணனுடைய பாத- திருவடிகளில், அவிந்த- வைக்கப்பட்ட, வித்த - மநஸ்ஸினுடைய, வ்ருத்தி:- வ்யாபாரத்தை உடையவளாய்க்கொண்டு, மோஹாவசாத் - சித்தம் பரவசமா யிருக்கையினால், கோவிந்த- கோவிந்தனே, (பசுபாலனே)! தாமோதர - தாமோதரனே. (யசோதையினால் கயிற்றினால கட்டுண்டவனே)! மாதவ- மாதவனே, (ஸ்ரியஃபதியே, ஐதி- என்று, அவோசத்- சொன்ன(இரைந்தா)ளல்லவா. (55)

(தா-ம) இதில, ஆஸ்ரிதரை இவனநநய மாஸ்களுக்கினபடியை ச்சொல்லுகிறது.--ஒரு இடைபபெண் தன் ஜாதித்தொழிலாகையாலே மோர் முதலானவைகளை விறகததெருவிலே புறப்பட்டாள், அப பொழுதுங்கூட அவள நெஞ்சு க்ருஷ்ணனையே பற்றியிருந்தது: அதினால், அவள் தன் தலைமேலிருநத தயிர் முதலானவற்றின் பெயரைச்சொல்லி, "மோரோ" "தயிரோ" "பாலோ" என்று கூப்பிட வேண்டியிருக்க அதைமறந்து தன்மனதில நினைத்திருநத க்ருஷ்ணன் பெயரையேசொல்லி "கோவிந்தா" "தாமோதரா" "மாதவா" என்று கூப்பிட்டாளெனகிறார் (55)

[illegible] (56)

(ப-உ) [illegible]- உரலோ, [illegible]- (அல்லது)(ருஷிகளுடைய, [illegible] - மநஸ்ஸோ, [illegible] - (அல்லது) இடைபபெண்களுடைய, [illegible]-மோக்குப்போன்றகொங்கைத்தலமோ, த்ரய (இம)மூன்றே, [illegible] - பூலோகத்திலே, [illegible]-க்ருஷ்ணனென்று பெயரையுடைய, [illegible]- யானைக்குட்டிக்கு, [illegible] - கட்டுத்தறியாக, [illegible] - ஆயிற்று, [illegible]-நிஸ்சயம். (56)

(தா-ம்) இபபடி ஆஸ்ரிதரை வ்யாமோஹப்படுத்துமவனை நாங்களெங்கேகாணலாமென்று சிலர்கேட்க, அவர்களுக்குச்சொல்லுகிறார்.--இதனமுன்பெல்லாம் காட்டானைபோல் ஒருவர் பிடிகொடாமல் திரிந்துகொண்டிருந்தான், இப்பொழுது சிலதாமிகா ஆசையுள்ளார்கண்டு பற்றலாமபடி அவனைச்சிலசிலவிடங்களில கட்டிவைத்தார்கள்; அதாவது-யசோதை உரலோடினைத்துக்கட்டினாள்;

ருஷிகள், வெளியிலெங்கும் புறப்படவொட்டாமல் தங்கள் மனதிலேதகைந்து நிறுத்தினார்கள்; கோபிமார்கள, தங்கள் முலைகளிலொரு முலையிலே படங்கப்பண்ணினார்கள், இவ்வுலகினில் இம்மூன்றிடஙகளிலெங்கேயாகிலும் அவனைக்காணலாம், மற்றெங்கும் தேடிப்போகவேண்டாமென்கிறார். (56)

கராரவிந்தேந பதாரவிந்தம் முகாரவிந்தே விநிவேசயந்தம்|
வடஸ்ய பத்ரஸ்ய புடே சயாநம் பாலம் முகுந்தம் மநஸா ஸ்மராமி||

(ப-உ) கராரவிந்தேந - திருக்கையாகிற தாமரைப் பூவினால் (எடுத்து), பதாரவிந்தம் - திருவடியாகிற தாமரைப்பூவை, முகாரவிந்தே - திருப்பவளமாகிறதாமரைப்பூவில், விநிவேசயந்தம் - வையாநின்றவனும், வடஸ்ய - ஆலமரத்தினுடைய, பத்ரஸ்ய - இலையினுடைய, புடே - தொன்னைபோன்றஆகாரத்தையுடைய ப்ரதேசத்தில், சயாநம் - பள்ளிகொண்டவனும், பாலம் குழவியுமான, முகுந்தம் - ஸ்ரீக்ருஷ்ணனை, மநஸா - நெஞ்சினால், ஸ்மராமி - தொழுகிறேன்.

(தா-ம்) இதற்கு முன்பும இவனிப்படி பிறந்ததுண்டோவென்னச்சொல்லுகிறார் — 'இவன் இந்த ஸ்ருஷ்டிக்குமுன்னே ப்ரளயார்ணவத்தில் முகிழ்விரியாத ஓரசிறிய ஆலந்தளிரில சிறுபிள்ளையாய சயனித்திருந்து, தன் ஸ்ரீபாதத்திலுள்ள மாதுர்யத்தைப்பரீக்ஷிக்கைக்குப்போலத்தன்னுடைய பாதத்தைக் கையினால் தூக்கியெடுத்து முகத்திலேவைத்துப் பெருவிரலைச் சப்பிக்கொண்டிருந்தான், நீங்களிப்போது என்னைத்தூண்ட, நானவனை ஸ்மரிக்கிறேனென்கிறார். (57)

ஶம்போ ஸ்வாகதமாஸ்யதாமித இதோ வாமேந பத்மாஸந
க்ரௌஞ்சாரே குஶலம் ஸுகம் ஸுரபதே வித்தேஶ நோ த்ருஶ்யஸே|
இத்தம் ஸ்வப்நகதஸ்ய கைடபஜித: ஶ்ருத்வா யஶோதா கிர:
கிம் கிம் பாலக ஜல்பஸீதி ரசிதம் தூதூக்ருதம் பாது ந:|| (58)

(ப-உ) ஶம்போ - ருத்ரனே! ஸ்வாகதம் நல்வரவுதானா (க்ஷேமமா)! இத:- இங்கேவலப்புரத்தில், ஆஸ்யதாம் - உட்காரலாம்; பத்மாஸந - ப்ரஹ்மாவே! இத:- இப்படி, வாமேந - இடதுபக்கத்தில், ஆஸ்யதாம் - உட்காரலாம்; க்ரௌஞ்சாரே - ஓ சுப்ரம்மண்யனே! குஶலம் - க்ஷேமமா? ஸுரபதே - தேவேந்த்ரனே! நோ த்ருஶ்யஸே - (எங்கே) கண்ணுக்குக்காணப்படுகிறாயில்லை, இத்தம் - இம்மாதிரியாக, ஸ்வப்நகதஸ்ய - உறங்குகிற கைடபஜித: - க்ருஷ்ணனுடைய, கிர:- சொ

ற்களை, யசோதா-யசோதையானவள், ச்ருத்வா-கேட்டு, வாமகு-குழந்தாய்! கிம் கிம் ஜல்பஸி - என்ன! என்ன! பிதற்றுகிறாய், இதி-(என்றுசொல்லி) ரஸிதம்- பண்ணப்பட்ட, யசோதாயா-ஸ்தம்- தூ தூகாரமானது, ந:- எங்களை,பாது - ரக்ஷிக்கட்டும். (58)

(தா-ம)இவனுறங்கும்போதுண்டான பிதற்றலைப் பேசுகிறானிதில்-ஒருகால் இவன் தொட்டிலில் கண்ணுறங்குகும்போது, தன்னைஸேவிக்கவந்த ஸகலமான தேவதைகளையும் ஸ்வப்நத்தில்கண்டு, இது க்ருஷ்ணாவதாரமென்பதையுமமறந்து, தாமேன்மையையெண்ணித்து வந்த தேவதைகளைப் பார்த்து, ஓ ருத்ரனே! நீ நன்றாயிருக்கிறாயா? என்னைப்புரத்திலிப்படியுட்கார்; ஓ ப்ரஹ்மாவே! நீ என்னிடத்துப் பக்கத்திலிப்படியுட்கார்; ஓ ஸஹஸ்ராக்ஷனே! க்ஷேமமா? ஓ இந்த்ரனே! ஸௌக்யமாயிருக்கிறாயா? ஓ குபேரனே! உன்னைப்பார்த்து வெகுநாளாயிற்று, நீ யேனித்தனைநாளா வரவில்லை? என்றிம் மாதிரி இவன் ஸ்வப்நத்தில் சொல்லக்கேட்டு யசோதையானவள் வந்து, பிள்ளாய்! என்னவாய்பிதற்றுகிறாய், தூத், தூத், என்று இவனுடைய நித்திரை தெளியும்படியாக அதட்டியுரைத்தாள், அந்த தூத்காரமானது அகாலத்திலிருந்து கேட்கப்பெறாத பாக்யஹீநரான நம்மை ரக்ஷிக்கக்கடவதாகவென்று வேண்டிக்கொள்ளுகிறார். (58)

[illegible] (59)

(ப-உ) மாத: - அம்மா! (என்று க்ருஷ்ணன் அழைக்க,) கிம்- ஏன்? (என்று யசோதைசொல்ல, வத்ஸகம் - கிண்ணியை, தேஹி- கொடு (என்று அவன்கேட்க), தேந - அந்தக்கிண்ணியினால், கிம்- என்னப்பிரயோஜனம (என்று அவள் சொல்ல), பய: - பாலை, பாதும்- பானபசெய்கைக்கு (என்றுஅவனசொல்ல), தத் - அந்தப்பாலானது, அத்ய- இப்பொழுது, நாஸ்தி இல்லை (என்று அவள்சொல்ல), கதா- எப்பொழுதுதான், அஸ்தி- இருக்கிறது (என்றுஅவன் வினவ), நிசி - ராத்திரியில் (இருக்குமென்று அவள் சொல்ல), நிசா- ராத்திரியாவது, கா வா- எது? (என்றுஅவன்கேட்க), (அந்தகாரோதயே) அந்தகார- இருளினுடைய, உதயே உத்பத்திகாலத்

தில் (என்று அவள்சொல்ல), சக்ஷுஷீ - இரண்டுகண்களையும், ஆமீல்ய - மூடிக்கொண்டு, நிஶாகதா- ராத்ரியும், உபாகதா வந்துவிட்டது, தேஹி (கிண்ணியைக்) கொடு, இதி- என்று, ஹடாத் - அடிக்கடி, மாதுஃ- தாயானயசோதையினுடைய (வக்ஷோஜாம்ஶுக கர்ஷணோத்யதகரஃ) வக்ஷோஜ - கொங்கைகமேலுள்ள, அம்ஶுக - வஸ்த்ரத்தினுடைய, கர்ஷண- இழுப்பதில், உத்யத- ப்ரயத்நத்தை யுடைய, கரஃ- கைகளையுடைய, ஸஃ- அப்படிப்பட்ட, க்ருஷ்ணஃ- க்ருஷ்ணனானவன், நஃ- நம்மை, பாது - ரக்ஷிக்கட்டும். (59)

(தா-ம) இதில், அவன பாலகுடிக்கும விருத்தைப்பேசுகிறார்.- க்ருஷ்ணன் "அம்மா! என்று கூப்பிட்டான, யசோதை" "என்னப்பா" என்றாள், அவன் "என்கிண்ணியைத்தா" என்றான், அவள "அது இப்போது எதுக்கு" என்றாள், அவன் "நான் பாலகுடிக்க வேணும்" என்றான், அவள் "இப்போது பாலகிடையாது" என்றாள், அவன "இப்போதில்லையாகில பின்னை எப்போது" என்றான, அவள் "ராத்ரியானால பசுக்களவரும், அப்போது கறந்துகொடுக்கிறேன்" என்றாள், அவன் "ராத்ரியெப்படியிருக்கும்" என்றான், இவள், "இருள்மூடியிருக்கும்" என்றாள், அதுக்குமேலேஅவன தன்னுடைய இரண்டுகணகளையும் மூடிக்கொண்டு "இருளமூடிற்று, ஆகையால ராத்ரிவந்துவிட்டது, எனகிண்ணியையும பாலையுமதா" என்று அடிக்கடி சொல்லிக்கொண்டு அவளுடைய மார்வில புடைவையை இழுக்கத்தொடங்கினான், அந்த ஸ்ரீக்ருஷ்ணன், அப்பொழுதுகாணாமல் இப்பொழுது கினறு பரிதபிக்கிற நம்மை ரக்ஷிக்கக்கடவானென்கிறார். (59)

காலிந்தீபுலினோதரேஷு முஸலீ யாவத்கதஃ கேலிதும் தாவத்கார்ப்பரிகம் பயஃ பிப ஹரே வர்த்திஷ்யதே தே ஶிகா। இத்தம் பாலதயா ப்ரதாரணபராஃ ஶ்ருத்வா யஶோதாகிரஃ பாயாந்நஃ ஸ்வஶிகாம் ஸ்ப்ருஶந்ப்ரமுதிதஃ க்ஷீரேऽர்த்தபீதே ஹரிஃ॥ (60)

(ப உ) ஹரே- ஸ்ரீக்ருஷ்ண! முஸலீ பலராமன், கேலிதும்- விளையாடுகைக்கு, (காலிந்தீபுலினோதரேஷு) காலிந்தீ - யமுனையாற்றிலுள்ள, புலின- மணற்குன்றினுடைய, உதரேஷு நடுவில், யாவத்- எவ்வளவுகாலம், கதஃ- போனானோ, தாவத்- அவ்வளவுக்குள், கார்ப்பரிகம் - தங்கக்கிண்ணியில் வைக்கப்பட்ட, பயஃ- பாலை, பிப- பானம்செய், தே - உனக்கு, ஶிகா - குடுமியானது,

வர்த்ததே - வளரும், இயாந் - இம்மாதிரி, முக்தயா - பேதையாகையாலே, வ்யாஜோக்திபி: - வஞ்சிப்பதற்காகச் சொன்ன, யசோதாகிர: - யசோதையுடைய சொற்களை, ச்ருத்வா - கேட்டு, க்ஷீரே - பாலானது, அர்த்தபீதே - பாதிபானம்பண்ணப்பட்டவளவில், ஸஹர்ஷித: - ஸந்தோஷமடைந்தவனாய்க் கொண்டு, (ஸ்வசிகாம்) ஸ்வ - தன்னுடைய, சிகாம் - குடுமியை, ஸம்ஸ்ப்ருசன் - தொட்டுப்பார்த்த - ஹரி: - ஸ்ரீக்ருஷ்ணன், ந: - நம்மை, பாயாத் - ரக்ஷிக்கட்டும் (60)

(தா-ம்) இதில், அவனுடைய சாபல்யத்தைப்பேசுகிறார்.-க்ருஷ்ணன் பால்குடிக்கமாட்டேனென்று பிடிவாதம்பிடித்திருக்க ஒருகால் யசோதை. "கண்ணா! உனக்குத்தலையில் மயிர் குறுகியிருக்கிறது இத்தங்கக்கிண்ணியிலுள்ள பாலைக்குடித்தாயாகில் உனக்குமயிர் நீண்டுவளரும். பலராமன் யமுனைக்கு விளையாடப் போயிருக்கிறான், அவன்வந்தானாகில் இப்பாலில் தனக்கும்பாதிவேணுமென்று கேட்பான், அவன்வருமதற்கு முன்னே குடித்துவிடு என்று வஞ்சித்துச்சொல்ல,க்ருஷ்ணன், அவள்பா(ஷா)மெறியாதசிறியனாகையாலே அவ்வஞ்சகச்சொல்லைக்கேட்டு அப்பாலைவாங்கிப்பாதி குடித்துக்கொண்டிருக்கையில குடுமியைத் தொட்டுப்பார்த்து முன்னிலுமதிகமாகவளர்ந்ததாக வெண்ணிஸந்தோஷித்தான், இதென்ன பேதைத்தனமோ வென்று ஆச்சர்யப்படுகிறார் (60)

கைலாஸோ நவநீததி க்ஷிதிரியம் ப்ராக்ஜக்தம்ருல்லோஷ்டதி க்ஷீரோதோபி நிபீததுக்ததி லஸத்ஸ்மேரே ப்ரபுல்லே முகே।
மாத்ரா ஜீர்ணதியா த்ருடம் சகிதயா நஷ்டாஸ்மி த்ருஷ்ட: க்வயா தூ-தூ வத்ஸக ஜீவ ஜீவ சிரமித்யுக்தோ வதாந்நோ ஹரி:। (61)

(ப-உ) ப்ரபுல்லே - மலர்ந்திருக்கிற, முகே - முகமானது, (லஸத்ஸ்மேரே) லஸத் - விளங்காநின்ற, புன்சிரிப்பை யுடைத்தயிருந்தவளவில். கைலாஸ: - கைலாஸமென்கிற மலையானது, நவநீததி - வெண்ணெயாகத்தோன்றுகிறது, இயம் - இந்த, க்ஷிதி: - பூமியானது, (ப்ராக்ஜக்தம்ருல்லோஷ்டதி) ப்ராக் - முன்பு, ஜக்த, தின்ற, ம்ருல்லோஷ்டதி - மண்ணினுடைய சகலம்போலிருக்கிறது, க்ஷீரோத:அபி - திருப்பாற்கடலும், (நிபீததுக்ததி) நிபீத - (முன) பானம் செய்யப்பட்ட, துக்ததி பால்போல்விளங்குகிறது; நஷ்டாஸ்மி - கெட்டேன், க்வயா -

யாரோ ஒருத்தியினால், த்ருஷ்டஃ பார்க்கப்பட்டாய, பப- தாதா, வத்ஸ - அப்பா! ஜீவ - வாழக்கடவாய், சிரம் - வெகுகாலம், ஜீவ பிழைத்திருக்கக்கடவாய, இதி என்று, அஜீர்ணபீத்யா - (க்ருஷ்ணனுக்கு) அஜீர்த்தியென்கிறபுத்தியினால், ஸ்புருஷம் - மிகவும், உக்தயா பயந்திருக்கிற, மாத்ரா - தாயான யசோதையினால், உக்தஃ - சொல்லப்பட்ட, ஶ்ரீ:- ஶ்ரீக்ருஷ்ணன், நஃ நம்மை, அவ்யாத் ரக்ஷிக்கட்டும். 61

(தா-பு) இதில், தன்னுதரத்தில ஸகலலோகங்களையும் யசோதைக்குக்காண்பித்த படியை யுரைக்கிறார்.-ஒருகால ஶ்ரீக்ருஷ்ணன் யசோதையின் மடியில்படுத்திருந்து கொட்டாவிகொண்டு வாயைத் திறக்கும்போது, அவ்வாய்வழியாக அவன் வயிற்றில யசோதை கைலாஸமலையைப்பார்த்து "இது இவனுண்டநவநீதம்" என்றும், பூலோகத்தைப்பார்த்து "இது இவன் வாரிவிழுங்கின மண்ணுண்டை" என்றும், பாற்கடலைப்பார்த்து "இது இவன குடித்தபால" என்றும நினைத்து, இவன தின்றதெல்லாம ஜீரணமாகாமல் போட்டுவிட்டதே, இவனுண்ணும்போது யாராகண் பட்டதோ,கெட்டேன், ஆ-தா-அவர்கள் கண்ணை யெரிக்கவேணும், அப்பா ! த்ருஷ்டிதோஷமற்றவனாய் ஒருரோகமுமின்றிக்கே சிரகாலம ஜீவிக்கக் கடவாய் என்றாசீர்வாதம பண்ணினாள, அந்தஶ்ரீக்ருஷ்ணன், அவளுக்குக்காட்டினவற்றையெல்லாம நமக்கும் காட்டி ரக்ஷிப்பானாக வென்கிறார்.

[illegible Grantha verse] (62)

(ப-உ) ஸஃ-அப்பொழுது, (...) துளிவிடாநின்ற, ...- பாலினுடைய, ...-திவலையையுடையதும், (...) ... க்ரமமாக, ...- பானம்பண்ணப்பட்டதுமான, ...- ஸதனத்தை, ...- பானம்பண்ணுமவனும, (...) ...- கொஞ்சம், ...- திறக்கச்செய்யப்பட்ட, ...- கண்களையுடையவனும், ...- மற்றொருஸ்தநத்தை ...-கையினால், ஸ்ப்ருஜன் -தடவுமவனும, மாத்ரா-யசோதையினால், ...- மோவாயுல், (...) ...- ஒற்றைவிரலினால், ...

தஸ்ய-களித்துச்சிரித்து ஆநந்தஜநகமாம்படி அசைக்கப்பட்டவனும், (ஸ்மேராநநஸ்ய) ஸ்மேர- புன்சிரிப்புடன்கூடிய, ஆநநஸ்ய- முகத்தையுடையவனுமான, ஶௌரே:- க்ருஷ்ணனுடைய, அதரே- கீழுதட்டில், நிவேஶிதா - பரப்பினதும், (க்ஷீரகணாங்கிதா) க்ஷீரகண- பால்திவலையுடன், அங்கிதா- கூடினதுமான, (தந்தத்யுதி:) தந்த-பற்களுடைய, த்யுதி: - காந்தியானது, ந:-நம்மை, பாது - ரக்ஷிக்கட்டும். (52)

(தா-ம) இதில், அவன் முலையுண்டப்பிரகாரத்தை நினைக்கிறார். யசோதையின் மடியிலபடுத்து அவளுடைய ஒரு முலையை வாயில் வைத்துப் பாலருந்துகிறபோது, கண்களைப்பாதி மூடிக்கொண்டு மற்றப்பாதியினாலே ப்ரேமத்துடனே அவள்முகத்தைப்பார்த்துக்கொண்டு, பால்சுரந்து துளியாகின்ற மற்றொருமுலையை ஒருகையினால் தடவிநிருடிச்சிரித்த முகத்தராயிருக்கையில், யசோதையானவள் தன்னுடைய ஓர்விரலினாலே இவனுடைய அதரத்தின்கீழ்ப்புறத்திலே தொட்டு மெள்ள அசைத்து லாலநம்பண்ண, அதினாலிவன் முகத்திலுண்டான சிரிப்பினால் இவனுடைய பற்களின் காந்திகள் சுற்றும் வெளியே புறப்பட்டு, இவன்முகமெங்கும் சிந்துகிற ஸ்தந்ய பிந்துக்களுடனே கூடிவிளங்காநின்றது, ஸ்ரீக்ருஷ்ணன் அவ்வழகை இப்போது நமக்குக்காட்டி ரக்ஷிக்கக்கடவானென்கிறார். (62)

உத்துங்கஸாந்த்ரஸ்தநோபரிஸம்ஸ்புரத்ஸ்ரங்மௌக்திகைரந்த
ர்ப்ரதிபிம்பிதமிந்த்ரநீலநிகரச்சாயாநுகாரித்யுதி । லஜ்ஜாவ்யாஜ
முபேத்ய நம்ரவதநா ஸ்பஷ்டம் முராரேர்வபு: பஶ்யந்தீ
தாரேசெஜ்வூஹவதாம்ருக்ஷீவிவாஹோத்ஸவே ॥ ௬௩ ॥

(ப-உ) விவாஹோத்ஸவே திருக்கல்யாணமஹோத்ஸவகாலத்தில், (உத்துங்கஸாந்த்ரஸ்தநோபரி) உத்துங்க-பருத்தும், ஸாந்த்ர-சூழ்ச்சியையுடையதுமான ஸ்தநத்தினுடைய, உபரி-மேலே, (ஸ்புரத்ஸ்ரங்மௌக்திகை:) ஸ்புரத் விளங்காநின்றதும், ஸ்ரக் - மாலையாகத்தொங்குவதுமான, மௌக்திகை:- சிறந்தமுத்தினுடைய, அந்த:- உள்ளே, ப்ரதிபிம்பித- நிழலோடுகிறதும், (இந்த்ரநீலநிகரச்சாயாநுகாரித்யுதி) இந்த்ரநீல - இந்த்ரநீலமாணிக்கங்களுடைய, நிகர- குவியலுடைய, சாயா- காந்தியை, அநுகாரி- அநுஸரிக்கிற, த்யுதி- காந்தியையுடையதுமான, ஶௌரே: - ஸ்ரீக்ருஷ்ணனுடைய,

வபுஃ- திருமேனியை, ஜாலக்ராஹம்-வெட்கமென்கிறநியமத்தை, உபேத்ய- அடைந்து, (நம்ரவக்த்ரா) நம்ர-குனிந்திருக்கிற,வக்த்ர-முகத்தையுடையவளாய்க்கொண்டு, ஸவ்யக்தம் - வ்யக்தமாக, பஶ்யந்தீ-பாராநின்றுகொண்டு, ஸந்துஷ்டா- ஸந்தோஷமுற்றவளான, ருக்மிணீ-ருக்மிணீதேவியானவள், ஸவதாம் - உங்களுடைய, ஸந்தோஷ- ஸந்தோஷத்தின்பொருட்டு, அஸ்து- ஆகக்கடவாள். (63)

(தா-ம்) இதில், ருகமணீதேவிக்குநித்யாநுபாவ்யனென்றுமதை வெளியிடுகிருர்.-விவாஹகாலத்தில் ருக்மணியுமிவனும் எதிரெதிராகநிற்க, அவளுடைய உந்நதமான ஸ்தநத்தின்மேல் மாலையாகத்தொங்குகிற முத்துககளில, இநத்ரநீலமணியின்காந்தியையுடையக்ருஷ்ணனுடைய ப்ரதிபிம்பமபடிய, அப்பொழுதவள்,வெட்கமென்கிறஓர்வ்யாஜத்தையிட்டுத் தலைகவிழந்து முத்துமாலையிலப் ப்ரதிபிம்பத்தையேபாாத்துக்கொண்டிருந்து ஆநநதநிர்ப்பரையானள்; அநத ருக்மணீதேவி க்ருஷ்ணனிடத்தில் புருஷகாரம்பண்ணி, தன்னைபபோல் மற்றப்ராணிகளையும் ஸந்தோஷிப் பிபபாளாகவென்று ஆசாஸிக்கிருர். (63)

க்ருஷ்ணோநாம்ப ம்ருதாநயா த்யுநா ம்ருதஸ் ஸுதாஸ்ஸுஸ்வாத்யா தத்யம் க்ருஷ்ணகஸ்ஸவநாஹ ஸங்கர்ஷணோ பஶ்யாம்ப பஶ்ய ப்ருஹம் | வ்யாதேஹீதி விதாரிதே ஶிஶோர்வக்த்ரேஷு ஸஶைலஜஶமதா யஸ்ய ஜகத்விஸ்மயவசம் பாயாத்ஸ கேஶவ:|| (64)

(ப-உ) அம்ப- அம்மா! ரந்தும் - விளையாடுகைக்கு, ம்ருத-போன, க்ருஷ்ணேந-ஸ்ரீக்ருஷ்ணனுல், அத்ய-இப்பொழுது, ம்ருத்-மண்ணுனது, ஸ்வைரம்-யதேஷ்டமாக, பக்ஷிதா- தின்னப்பட்டது, (என்றுபலராமன்சொல்ல) க்ருஷ்ண-கண்ணு,! தத்யம்-(இது) உண்மைதானு? (என்றுயசோதைகேட்க), ஏவம் - இப்படி, க: - எவன், ஆஹ-சொன்னுன் (என்று க்ருஷ்ணன் வினவ), ஸங்கர்ஷண:-பலராமன் (சொன்னுனென்று யசோதைசொல்ல), அம்ப- அம்மா! ம்ருஷா-பொய்(சொல்லுகிருன்), ஆநநம்-வாயை,பஶ்ய-பார்.(என்றுக்ருஷ்ணன் சொல்ல), வ்யாதேஹி - (வாயைத்)திற, இதி - என்று (யசோதை சொல்ல), விதாரிதே - நன்ருகததிறக்கப்பட்ட, ஶிஶோர்வக்த்ரே-கருஷ்ணனுடையவாயில், யஸ்ய- எநத ஸ்ரீகருஷ்ணனுடைய,மாதா-தாயான யசோதையானவள், ஜகத்ஸர்வம் - உலகம முழுதையும்,

த்ருஷ்ட்வா-பார்த்து,விஸ்மயவசம்- ஆஶ்சர்யத்தை, ஜகாம - அடைந்தாளோ, ஸ:- அப்படிப்பட்ட, கௌரவ:- ஸ்ரீக்ருஷ்ணன, ந:-நம்மை, வாயாத்- ரக்ஷிக்கட்டும். (64)

(ப-உ) த்வயி-நீ, ப்ரஸந்நே- (என்னிடத்தில்)அநுக்ரஹமுள்ளவனாகில், மம- எனக்கு, குணேந- (ஸம்பாதிக்கவேண்டிய) சமாதிகுணங்களினால், கிம்- என்னப்ரயோஜனம்? த்வயி - நீ, அப்ரஸந்நே- (என்னிடத்தில) அனுக்ரஹம்செய்யாயாகில், மம-எனக்கு, குணேந- (ஸம்பாதித்த) குணங்களினால், கிம்-என்னப்ரயோஜனம்? வதூநாம்-ஸ்த்ரீகளுக்கு, வரே-கணவன், ரக்தே- (தங்களிடத்தில்) ஆசையுற்றிருந்தானாகில், (குங்குமபத்ரபங்க:) குங்கும - குங்குமப்பூவினால் எழுதப்பட்ட, பத்ர- சித்ரவிசேஷத்தினுடைய, பங்க:-தொழிலானது, நிரர்த்தக:-ப்ரயோஜநமற்றதாம், வரே-கணவன், விரக்தே ச- (தங்களிடத்தில்) ஆசையற்றவனாகிலும், குங்குமபத்ரபங்க:-குங்குமப்பூவினாலெழுதப்பட்ட சித்ரவேலையானது, நிரர்த்தக: - ப்ரயோஜனமற்றதாம். (99)

(தா-ம்) ஜந்மாந்தரத்தில் பண்ணின புண்யவிசேஷத்தினால் உமக்குக க்ருஷ்ணனிடத்தில பக்தியுண்டாய அதினாலவனை வெளியாகக்கண்டேனென்றீர், அந்த பக்திமாத்திரம் போருமோ, சமதமாதி ஆத்மகுணஙகளும்வேண்டாவோவென்றுஅவாகளகேட்க,அதுககு க்ருஷ்ணனைப்பாாத்துச் சொல்லுகிறார் —சமதமாதி குணஙகளெல்லாம் உன்னைக்காண்கைக் குறிப்பாகசாஸ்த்ரஙகள சொல்லுகின்றன; அவையுணடாவதற்கு முன்னமே உன்னைக் காணுமபடியாக நீ என்னிடத்திலருள புரிநதாயாகில, பின்பு அக்குணஙகளாலொரு பயனுமிலலை; நீ என்னிடத்தி லருள்புரியுமபடியாக உன்னிடததில் நான்பக்தியைப்பண்ணி உன்னையே ரக்ஷகனுகநமபி உன்காலிலவிழுந்தும் நீ க்ருபை பண்ணுதொழிநதாயாகில், அப்போதும், நான் ஆத்மகுணங்களை ஸம்பாதித்தும் உபயோகமிலலை; (ஆத்மகுணஙகள் பக்தியையுண்டாக்கி பகவத் ஸாக்ஷாத்காரஹேதுவாகின்றன, அவையுணடாவதற்கு முன்பேபக்தியும், அதினால் பகவத்ஸாக்ஷாத்காரமுமுண்டாகில் பின்பு அவற்றைத்தேடவேண்டா, பக்தியுண்டானபின்பும் பகவத்ஸாக்ஷாத்காரம பிறவாவிடில் ஆதமகுணங்களிருந்துமுபயோகமில்லையென்றுகருத்து.) இதுக்கு உதாஹரணம்,—புருஷன் மனைவியிடத்தில் ஆசையுற்றிருநதானாகில் பின்பு அவளுக்கு அலங்காரத்தினால் ஒருகார்யமில்லை, அவனே ஆசையறறிருநதானகில அபபொழுது அவ்வலங்காரங்கள அவளுக்கு என்செய்யப்போகிறது? அதுபோலிங்கும்கண்டு கொள்வதென்கிறார். (99)

மாயக்ஷிக்ஷணதாவஸாந்தவஸேயவஸாந்தந்த இந்து வ்யூஹாஸ் ஸம்வ்ருத்
நிஜோதஜகாந்தி நிவஹைர்ஹேமோஜ்வலாநாமகாலே | உந்
தாஃ பாணிகங்கணஜணத்காராநுகாரஜ்வா ப்ராவ்ருத்த்ய
நாஞ்சலாயதிம் மத்நந்தி ததி ப்ரஜஸ்த்ரியஃ || (100)

(ப-உ) (நிஜோதஜகாந்திநிவஹைஃ) நிஜ- தங்களுடைய, உதஜ- பற்களுடைய, காந்தி- சோபையினுடைய, நிவஹைஃ - ஸமூஹங்களினால், (இந்துவ்யூஹாஃ)இந்து - சந்திரனுடைய, வ்யூஹாஃ - காந்திகளை, ஸம்வ்ருத்தாஃ - தனையா நின்றவர்களாய், (பாணிகங்கணஜணத்காராநுகாரம்) பாணி-கைகளிலுள்ள, கங்கண - வளைகளுடைய, ஜணத்கார-ஜணஜணவென்கிற ஒலியை, அநுகாரம்-அனுஸரித்திருக்கும்படி, ஜவாத்- வேகத்தினால் (ப்ராவ்ருத்தவஸநாஞ்சலாஃ) ப்ராவ்ருத்த- சுற்றிச்சுற்றி அலையாநின்ற, வஸநாஞ்சலாஃ-புடைவையின்முன்றானைகளையுடையவாகளாய்க்கொண்டு,ததி-தயிரை,மத்நந்தி-கடைகிறவர்க

ளான; கோஷே - திருவாய்ப்பாடியிலுள்ள, கோபநார்ய:- இடைச்சிகள், (க்ஷணதாவஸாநஸமயே) க்ஷணதா- இரவினுடைய, அவஸாநஸமயே- முடிவு (உதய) காலத்தில், ஸாநந்தம் - ஸந்தோஷத்தோடுகூடியிருக்கும்படி, யம்- யாதொருகருஷ்ணனை, அநிசம்- ஸர்வகாலமும, காயந்தி- கானம்பண்ணுகிறார்களோ, ஸ:- அந்த, கிசோர:- க்ருஷ்ணன், ந:- நம்மை, அவ்யாத்- ரக்ஷிக்கக்கட்டும. (100)

(தா-ம்) இதில், கோகுலமெங்கும் க்ருஷ்ணமயமாய்விட்டதென்கிறார்:—கோகுலத்தில கோபிமார்கள விடியற்காலத்தி லெழுந்திருந்து, அரையில கட்டினவாடையும் அலேந்து சுற்றிச்சுழன்று வருமபடி அதிவேகத்துடன் தயிர்கடையும்போது அந்த வேகத்தினால் கைகளிலணிந்த வளையல்கள் சண சணவென்றொலிக்க, அவ்வோசையையே தாளமாககொண்டு அதுககநுரூபமாக, த(ன)ந்தகாந்திகள் வெநிலவுபோல் வெளியில் வீசும்படி நின்று அதி ஸந்தோஷத்துடனே ஸ்ரீகருஷ்ணனுடைய திவ்யகுணசேஷ்டிதங்களை, அனைவருமொருமுகமாகப் பாடாநின்றார்கள; அப்படிப்பட்டவன், நம்மையும் தந்மயமாக்கிரக்ஷிக்கட்டுமென்கிறார். (100)

அம்ஸாலம்பிதவாமகுண்டலதரம் மந்தோந்நதப்ரூலதம் கிஞ்சித்குஞ்சிதகோமலாதரபுடம் ஸாசிப்ரஸாரேக்ஷணம் |
ஆலோலாங்குலிபல்லவைர்முரளிகாமாபூரயந்தம் முதா மூலே கல்பதரோஸ்த்ரிபங்கலலிதம் த்யாயே ஜகந்மோஹநம் || (101)

(ப-உ) (அம்ஸாலம்பிதவாமகுண்டலதரம்) அம்ஸ - தோள்வரையில், ஆலம்பித- தொங்கவிட்டிருக்கிற, வாம-ஸுந்தரமான, குண்டலதரம்-குண்டலங்களையுடையவனும், (மந்தோந்நதப்ரூலதம்) மந்த-அல்பம், உந்நத - உயர்ந்திருக்கிற, ப்ரூலதம் - கொடிபோன்றபுருவத்தையுடையவனும், (கிஞ்சித்குஞ்சிதகோமலாதரபுடம்) கிஞ்சித்- கொஞ்சம், குஞ்சித- தாழ்த்தப்பட்ட, கோமல - ம்ருதுவான, அதரபுடம் - அதரத்தையுடையவனும், (ஸாசிப்ரஸாரேக்ஷணம்) ஸாசி- குறுக்காக, ப்ரஸார- வ்யாபித்திருக்கிற, ஈக்ஷணம் - பார்வையையுடையவனும், கல்பதரோ:-கல்பகமரத்தினுடைய, மூலே- அடியில், (த்ரிபங்கலலித) த்ரிபங்க - மூன்றுவளைவாக நிற்பதினால், லலிதம்- ஸுந்தரனாய்க் கொண்டு,(ஆலோலாங்குலிபல்லவை:) ஆலோல-மிகவுமசைந்துகொண்டிருக்கிற, அங்குலிபல்லவை: - தளிர்

போன்ற விரல்களினால், 𑌮𑍁𑌦𑌾 - ஸந்தோஷத்துடன், 𑌮𑍁𑌰𑌲𑌿𑌕𑌾𑌂-வேணுவை, 𑌆𑌪𑍂𑌰𑌯𑌨𑍍𑌤𑌂-(அடக்கி வாயுவை) நிறைத்து ஊதுமவனும், (𑌜𑌗𑌨𑍍𑌮𑍋𑌹𑌨𑌂) 𑌜𑌗𑌤𑍍-லோகங்களை, 𑌮𑍋𑌹𑌨𑌂 - வசீகரிக்குமவனுமான ஶ்ரீக்ருஷ்ணனை, 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇-த்யாநம் செய்கிறேன். ()

(தா-ம்) இவன் குழலூதும்போது, காதிலணிந்த தோடுகள் தோள்மேல் தொங்கிப்புரளாநின்றன; புருவங்களிரண்டும் கொஞ்சமுயரவெழுந்திருந்தன; அதரம் சிறிது குவிந்திருந்தது; கண்கள் உள்ளுள்ளரஸாதிசயத்தினால் குறுக்குப்பாயாநின்றன, கைவிரல்கள் வேணுவின் ரந்த்ரங்களின்மேல் நர்த்தநம்பண்ணுகின்றன; உடம்பு மூன்றுவளைவாக வளைந்திருந்தது, இவ்வழகுடன் ஸகலஜகத்தையுமாநந்திப்பியாநின்றுகொண்டு கற்பகமரத்தின்கீழ்நின்று குழலூதினானென்கிறார். (101)

𑌮𑌲𑍍𑌲𑍈𑌶𑍍𑌶𑍈𑌲𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌶𑍍𑌶𑌿𑌶𑍁𑌰𑌿𑌤𑌰𑌜𑌨𑍈𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌚𑌾𑌪𑍋
𑌽𑌙𑍍𑌗𑌨𑌾𑌭𑌿𑌰𑍍𑌗𑍋𑌪𑍈𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌦𑌿𑌵𑌿 𑌕𑍁𑌲𑌿𑌶𑌭𑍃𑌤𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵
𑌕𑌾𑌯𑍋𑌽𑌪𑍍𑌰𑌤𑌰𑍍𑌕𑍍𑌯𑌃 । 𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑌃 𑌕𑌂𑌸𑍇𑌨 𑌕𑌾𑌲𑍋 𑌭𑌯𑌚𑌕𑌿𑌤𑌦𑍃𑌶𑌾 𑌯𑍋
𑌗𑌿𑌭𑌿𑌰𑍍𑌧𑍍𑌯𑍇𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍋 𑌰𑌙𑍍𑌗𑌾𑌵𑌤𑌾𑌰𑍇 𑌹𑌰𑌿𑌰𑌮𑌰𑌗𑌣𑌾𑌨
𑌨𑍍𑌦𑌕𑍃𑌤𑍍𑌪𑌾𑌤𑍁 𑌯𑍁𑌷𑍍𑌮𑌾𑌨𑍍॥ (102)

(ப-உ) (𑌰𑌙𑍍𑌗𑌾𑌵𑌤𑌾𑌰𑍇) 𑌰𑌙𑍍𑌗-கம்ஸன்கோடித்த யுத்தரங்கத்தில், 𑌅𑌵𑌤𑌾𑌰𑍇-ப்ரவேசிக்குங்காலத்தில், 𑌮𑌲𑍍𑌲𑍈𑌃- சாணூராதிமல்லர்களினால், 𑌶𑍈𑌲𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌃 - மலையோடொத்தவனாகவும், 𑌇𑌤𑌰𑌜𑌨𑍈𑌃-மற்றஜநங்களினால், 𑌶𑌿𑌶𑍁𑌃-சிறுபிள்ளையாகவும், 𑌅𑌙𑍍𑌗𑌨𑌾𑌭𑌿𑌃-ஸ்த்ரீகளினால், 𑌪𑍁𑌷𑍍𑌪𑌚𑌾𑌪𑌃-மந்மதனாகவும், 𑌗𑍋𑌪𑍈𑌃-இடையர்களினால், 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌾𑌤𑍍𑌮𑌾-கேவலமநுஷ்யனாகவும், 𑌦𑌿𑌵𑌿-ஸ்வர்க்கத்தில், 𑌕𑍁𑌲𑌿𑌶𑌭𑍃𑌤𑌾-இந்த்ரனால், (𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌾𑌯𑌃) 𑌵𑌿𑌶𑍍𑌵-ஸமஸ்த வஸ்துக்களையும், 𑌕𑌾𑌯𑌃-சரீரமாகவுடையனாய், 𑌅𑌪𑍍𑌰𑌤𑌰𑍍𑌕𑍍𑌯𑌃-ஒருவராலு மளவிடக்கூடாதவனான ஸர்வேஶ்வரனாகவும், (𑌭𑌯𑌚𑌕𑌿𑌤𑌦𑍃𑌶𑌾) 𑌭𑌯-அச்சத்தினால், 𑌚𑌕𑌿𑌤-நிலையற்று அல்லாடுகிற, 𑌦𑍃𑌶𑌾 - கண்களையுடைய, 𑌕𑌂𑌸𑍇𑌨-கம்ஸனால், 𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑌃-கோபித்திருக்கிற, 𑌕𑌾𑌲𑌃-யமனாகவும், 𑌯𑍋𑌗𑌿𑌭𑌿𑌃-ருஷிகளினால், (𑌧𑍍𑌯𑍇𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃) 𑌧𑍍𑌯𑍇𑌯-த்யாநம்செய்யத்தக்க, 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃-திவ்யவிக்ரஹனாகவும், 𑌦𑍃𑌷𑍍𑌟𑌃 - காணப்பட்ட, (𑌅𑌮𑌰𑌗𑌣𑌾𑌨𑌨𑍍𑌦𑌕𑍃𑌤𑍍) 𑌅𑌮𑌰𑌗𑌣-தேவர்கள் குழாங்களுக்கு, 𑌆𑌨

ந்ருக்ஷ்ய:-ஸந்தோஷத்தையுண்டுபண்ணுகிறவனான, ஹரி:-ஸ்ரீக்ருஷ்ணன், யுஷ்மாந்-உங்களை, பாது-ரக்ஷிக்கட்டும. (102)

(தா-ம) இதில், கம்ஸனுடைய யுத்தரங்கத்திலிழிந்தபோதையழகையநுஸந்திக்கிறார்.—ராமக்ருஷ்ணர் இருவரையும் வஞ்சித்துவரவழைத்து உயிர்மாள்விப்பதாகக் கோடித்த ரங்கப்ரதேசத்தில் ஸ்ரீக்ருஷ்ணன் புகுந்து, வில்லைமுறித்தல், குவலயாபீடத்தைக்கொல்லுதல்முதலிய சில அதிமாநுஷவ்யாபாரங்களைச்செய்ய, முஷ்டிகன்சாணூரன்முதலிய மல்லர்கள் அவற்றையெல்லாம் கேட்டவர்களாய், பின்பு இவனை எதிரேபார்த்து, இவன் நம்மாசைக்கு ஒண்ணாத பெருமலையாயிருந்தானென்றெண்ணினார்கள். மற்றவர்கள் இவனுடைய இளமையைப்பார்த்து சிறுவனாகவெண்ணினார்கள், பெண்களெல்லாரும், வடிவுகொண்டெழுந்துவந்த மந்மதனாகவெண்ணினார்கள், இடையர்கள், தம்மோடொத்த இடையனாகவெண்ணினார்கள்; இந்திரன் ஆகாசத்தில் நின்றுபார்த்து, ஸர்வாந்தர்யாமியாய், அபரிச்சிந்ந ஸ்வரூபஸ்வபாவங்களையுடைய புருஷோத்தமனாகவெண்ணினான்; கம்ஸன், தன்னைக்கொல்லுவதாகக் கோபித்துவந்த யமஸ்வரூபமாகவெண்ணி மெள்ள மெள்ள விழித்துப்பார்த்தான்; ருஷிகள்கண்டு, இதுநாம் த்யாநம்செய்யவேண்டிய பரதத்வமென்றெண்ணினார்கள், இப்படி அவரவர்களுடைய ஸ்வபாவாநுகுணமாகக் காணப்பட்ட ஸ்ரீக்ருஷ்ணன் உங்களை ரக்ஷிக்கட்டுமென்கிறார். (102)

ஸம்விஷ்டோ மணிவிஷ்டரோருயுகளாஸீநருக்மிணீமுகேகஸ்தூ-
ரீதிலகம்விதயந்ஹர்ஷாத்குசௌஸம்ஸ்ப்ருசந் | அந்யோந்யா-
ந்யஸ்மிதசந்த்ரிகாகிஸலயைராநந்தயந் ஸ்மரம் ஸ்ரீவத்ஸ
ஸ்ரீவத்ஸோதயதேவதிர்மாயாஜ்ஜகந்மோஹந:|| (103)

(ப-உ) (மணிவிஷ்டரே) மணி-ரத்நமயமான, விஷ்டரே-ஆஸநத்தில், ஸம்விஷ்ட:-வீற்றிருந்தவனாய்க்கொண்டு, ஊருயுகே-துடைமேல், (ஆஸீநருக்மிணீமுகே) ஆஸீந-உட்கார்ந்திருக்கிற, ருக்மிணி-ருக்மிணியினுடைய, முகே-முகத்தில், ஹர்ஷாத்-ஸந்தோஷத்தினால், கஸ்தூரீதிலகம்-கஸ்தூரியினால் திலகத்தை, விதயந்-செய்யுமவனும், ஹர்ஷாத்-மனக்களிப்பினால், குசௌ-கொங்கைகளை, ஸம்ஸ்ப்ருசந்-தடவுமவனும், (அந்யோந்யஸ்மிதசந்த்ரிகாகிஸலயை:) அந்யோந்ய-ஒருவர்க்கொருவருடைய, ஸ்மித-சிரிப்பாகிற, கிஸலயை:-தளிர்களினால், ஸ்மரம்-மந்மதனை, பூஜயந்-பூஜிக்குமவ

னும், (கோபீகோபவஸம்வ்ருத:) கோபீ - ஆய்ச்சிகளினுலும் கோப-இடையர்களினுலும், ஸம்வ்ருத: - சூழப்பட்டவனும், ஜக ந்நாதந:-லோகாநந்தகரனுமான, யது பதி: - ஸ்ரீக்ருஷ்ணன், வ:அவ்யாத்-ரக்ஷிக்கட்டும். (103)

(தா-ம்) ஒருகால், கோபிமார்களும் கோபபாலர்களும் சூழ்கிற் கையில், ரத்நபீடத்திலுட்கார்ந்து தன்மடியில் ருக்மிணியையுட்கார வைத்துக்கொண்டு, அவள் முகத்தில தன்கையால் கஸ்தூரிதிலக மிட்டு சில ஸ்ருங்காரவ்யாபாரங்களைப்பண்ணி, அவளுடனேகளித் து முறுவல்செய்து காமதேவனேயெழசெயதான், அபபடிஸந்தோ ஷத்தோடுகூடிய க்ருஷ்ணன் உங்களை ரக்ஷிக்கட்டுமென்கிறார் (103)

ஆக்ருஷ்டே வஸநாஞ்சலே கபலயபத்மாபதாவாய:க்ருதாந்த்ரு ஷ்டிஸ்ஸம்வலிதாவாகாந்தயாஸ்வர்ணத்யுதிஸ்ஸ்ரீமதி | பாஞ்சஜந்யத்வந்த்வஸதிவ்யாப்தாஸிதாஸ்யச்ரியம்ஸ்லிஷ்யந்தீகாருக்மிணீம் நதநாநீம்க்ருஷ்ணோவதாந்ந: || (104)

(ப-உ) யஸ்யா:-எந்த ருக்மிணியினுடைய, வஸநாஞ்சலே- புடைவைபின்தலைப்பானது, ஆக்ருஷ்டே -இழுக்கப்பட்டவளவில், (த்ரபாயா:க்ருதா) த்ரபா-வெட்கத்திஞல், அத:க்ருதா-கீழ்முகமாகப் பண்ணப்பட்ட, (கமலய பத்மாபா) கமலய - கரிநெயதல்புஷ்பம் போல், பத்மாபா-கறுத்திருக்கிற, த்ருஷ்டி:-பார்வையானது, (ஸ்வர்ணத்யுதௌ) ஸ்வர்ண-ஸ்வர்ணத்தினுடைய, த்யுதௌ-காந்தியையுடைய, ஸ்ரீமதி-அழகிதான, கலசஸ்தநே-இரண்டு ஸ்தனங்களின்மீது, காந்த்யா-காந்தியினுல், ஸம்வலிதா-சேர்ந்ததோ, அத பிறகு, பாஞ்ச:-இளைசான, அபூர்வமாயிருப்பதொரு, வஸ்த்வம் இதி மாந் தளிரென்று (அதைநினைத்து), (வ்யாப்தாஸிதாஸ்யச்ரியம்) வ்யாப்த-சுற்றுப் வ்யாப்தமாயிருக்கிற, ஸித-புன்சிரிபபோடுகூடிய, ஆஸ்ய-முகத்தினுடைய, ச்ரிய-சோபையையுடையவளாய், (நதாநநீம்) நத-வணங்கின, ஆநநீம்-முகத்தைபுடையளான, தாம்-அந்த, ருக்மிணீம்-ருக்மிணியை, ஸ்லிஷ்யந்-ஆலிங்கநம்செய்துகொண்ட, ஸ:-அந்த, க்ருஷ்ண:-க்ருஷ்ணன், ந:-நம்மை, அவ்யாத்-ரக்ஷிக்கட்டும். ()

(தா-ம்) மற்றொருகால் ருக்மிணியும் தானுமாயிருக்கும்போது அவளுடைய மேலாடையைப் பிடித்திழுத்தான், அபபோதவள்வெ ட்கத்திஞல் தலையைவணக்கிக்கொள்ள, அவளுடைய கரிநெய்தலி

ணிதழ்போல் நீலவர்ணமான பார்வையானது தங்கக்கிண்ணிகள்போன்ற முலைகளின்மேலபடிய, அதையவள்கண்டு, இந்த ஏதோ ஒரு இளையமாந்தளிரொட்டிக் கிடக்கிறதென்று ப்ரமித்துக்களித்துச் சிரிக்க, அக்காலத்திலழகைக்கண்டு க்ருஷ்ணனவளை ஆலிங்கநம செய்துகொண்டான்; இப்படி புருஷகாரபூதையான லக்ஷ்மியோடுகூடிக் களிக்கிற ஸ்ரீக்ருஷ்ணன் நம்மைரக்ஷிக்கட்டுமென்கிறார். (104)

𑌉𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌂 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌮𑌹𑍀𑌧𑌰𑍋 𑌲𑌘𑍁𑌤𑌰𑍋 𑌦𑍋𑌰𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌧𑍃𑌤𑍋 𑌲𑍀𑌲𑌯𑌾
𑌤𑍇𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌦𑌿𑌵𑌿 𑌭𑍁𑌵𑌿 𑌚 𑌸𑌤𑌤𑌂 𑌗𑍋𑌵𑌰𑍍𑌧𑌨𑍋 𑌗𑍀𑌯𑌸𑍇 ।
𑌤𑍍𑌵𑌾𑌂 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌧𑌰𑌂 𑌵𑌹𑌾𑌮𑌿 𑌕𑍁𑌚𑌯𑍋𑌰𑌗𑍍𑌰𑍇 𑌨 𑌤𑌦𑍍𑌗𑌣𑍍𑌯𑌤𑍇
𑌕𑌿𑌂 𑌵𑌾 𑌕𑍇𑌶𑌵 𑌭𑌾𑌷𑌣𑍇𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾 𑌪𑍁𑌣𑍍𑌯𑍈𑌰𑍍𑌯𑌶𑍋 𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 ॥ (105)

(ப-உ) 𑌕𑍇𑌶𑌵-க்ருஷ்ணனே! 𑌉𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌮𑍍-பூமியில், 𑌲𑌘𑍁𑌤𑌰𑌃-மிகவும் இலேசான, 𑌕𑍋𑌽𑌪𑌿-ஏதோ ஒரு, 𑌮𑌹𑍀𑌧𑌰𑌃 - மலையானது, 𑌲𑍀𑌲𑌯𑌾-விலாஸத்தினால், 𑌦𑍋𑌰𑍍𑌭𑍍𑌯𑌾𑌮𑍍-இரண்டுகைகளினால், (𑌤𑍍𑌵𑌯𑌾-உன்னால்,) 𑌧𑍃𑌤𑌃-தாங்கப்பட்டது, 𑌤𑍇𑌨-அந்தகாரணத்தினால், 𑌤𑍍𑌵𑌮𑍍-நீ, 𑌦𑌿𑌵𑌿 ஸ்வர்க்கலோகத்திலும், 𑌭𑍁𑌵𑌿-பூலோகத்திலும், 𑌸𑌤𑌤𑌮𑍍-எப்போதும், 𑌗𑍋𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 - கோவர்த்தநதாரியென்று, 𑌗𑍀𑌯𑌸𑍇 - சொல்லப்படுகிறாய், (𑌅𑌹𑌮𑍍-நான்,) 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌧𑌰𑌮𑍍-மூன்றுலகங்களையும் வயிற்றில்கொண்ட, 𑌤𑍍𑌵𑌾𑌮𑍍- உன்னை, 𑌕𑍁𑌚𑌯𑍋𑌃-ஸ்தநங்களுடைய, 𑌅𑌗𑍍𑌰𑍇-நுனியில், 𑌵𑌹𑌾𑌮𑌿-சுமக்கிறேன், 𑌤𑌤𑍍-அதுவானது, 𑌨 𑌗𑌣𑍍𑌯𑌤𑍇-(ஒருபொருளாக) எண்ணப்படுகிறதில்லை; 𑌬𑌹𑍁𑌨𑌾-அதிகமான, 𑌭𑌾𑌷𑌣𑍇𑌨-பேச்சினால், 𑌕𑌿𑌂𑌵𑌾-என்ன உபயோகம், 𑌪𑍁𑌣𑍍𑌯𑍈𑌃-பாக்யசாலிகளினால், 𑌯𑌶𑌃- கீர்த்தியானது, 𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 - அடையப்படுகிறது. (105)

(தா-ம்.) இதில், ருக்மிணி, க்ருஷ்ணனைக்குறித்துச்சொன்னவிநோதோக்திகளைச சொல்லுகிறார்.—ஒருகால், க்ருஷ்ணனும் தானுமாக இருக்குங்காலத்தில் ருக்மிணியானவள் அவனைப்பார்த்து, ஓ ப்ராணநாதனே! நீ, இப்பூமியிலொரு மூலையிலுள்ள ஏதோஒரு சிறுமலையை இரண்டுகைகளினாலும் தூக்கிச்சிறிதுநேரம் தாங்கியிருந்தாய் என்றிவ்வளவுமாத்ரத்தைக்கொண்டு உன்னை லோகமெல்லாம், "கோவர்த்தநதாரி-பெருமலையைச் சுமந்தான்" என்று கொண்டாடுகிறார்கள்; நானோ உன்னைப்போலன்றிக்கே மூன்றுலகங்களையும்,

சுமந்த உன்னை என்னுடைய ஒரு மூலையின் நுனியில் எபபோதும் அநாயாஸமாகவைத்துச சுமககிறேன, இவ்வளவு அரியசெயலைச்செயத என்னை ஒருவரும்புகழ்வாரில்லை; எனதைசசொல்லித்தான்என்ன பயன்? பூாவபுண்யத்தினால் கீர்த்தியுண்டாகிறது, நமமாலொன்றும் செய்யப்போகாதென்று ளெனகிறார். (135)

ஸந்த்யாவந்தந ஸ்வஸ்தி ஸ்நாந [illegible]
[illegible]
[illegible]
[illegible] (106)

(ப-உ) ஸந்த்யாவந்த-ஓ ஸந்த்யாவந்தனமே! ஸவதே- உனக்கு, ஸ்வஸ்தி-மங்களமானது, அஸ்து-உண்டாகட்டும், ஹேஸ்நாந-ஓ ஸ்நானமே! தே-உனக்கு, நம:-நமஸ்காரம், ஹேதேவா: - தேவர்களே! பிதர:-பித்ருதேவதைகளே! தர்ப்பணவிதௌ- தர்ப்பணம்செய்வதில, அஹம்-நான் - ந க்ஷம:-ஸமர்த்தனல்லேன், க்ஷம்யதாம்-பொறுத்துக்கொள்ளப்படட்டும், யத்ர க்வாபி-எங்கேயாவது ஓரிடத்தில், நிஷத்ய-இருந்து, (யாதவகுலோத்தம்ஸஸ்ய) யாதவகுல-யதுவம்சத்து அரசர்களுடைய, குலஸ்ய-ஸமூஹத்துக்கு, உத்தம்ஸஸ்ய- சிரோபூஷணமானவனும், கம்ஸத்விஷ:-கம்ஸனைக்கொன்றவனுமான க்ருஷ்ணனுடைய (வடிவை), ஸ்மாரம்ஸ்மாரம்-நினைத்துநினைத்து, அகம்-பாபத்தை, ஹராமி-போக்குகிறேன், தத்-அதையே, அலம்-போருமாக, மந்யே-எண்ணுகிறேன், மே-எனக்கு, அந்யேந - மற்றொன்றால், கிம்-என்னப்ரயோஜனம்? (106)

(தா-ம்) இப்பொழுது நீர்காலாதிக்ரமத்தை யறியாமல் க்ருஷ்ணருணங்களைப்பாடிப் பொழுதுபோக்கா நின்றீா, பொழுதுவிடிந்தது, நித்யகர்மாநுஷ்டானம் செயயவெழுந்திரீரெனனச் சொல்லுகிறார்.—நித்யகாமாநுஷ்டானங்களுக் கெலலாமொரு நமஸ்காரமிடுகிறேன், அதொன்று மென்னால் செய்யப்போகாது, எங்கேயாயினும் தனியேயோரிடத்திலுட்கார்நது, க்ருஷ்ணனுடைய அவதாரபரபாவததையும், அவதரித்துச்செய்த செயலையும் நினைத்துப்பாடி எனபாபங்களைபபோக்கிக் கொள்ளுகிறேன், அது எனக்குப்போதும், மற்றொன்றுமெனக்குப் பணியில்லையென்கிறார். (106)

𑌹𑍇 𑌗𑍋𑌪𑌾𑌲𑌕 𑌹𑍇 𑌕𑍃𑌪𑌾𑌜𑌲𑌨𑌿𑌧𑍇 𑌹𑍇 𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌕𑌨𑍍𑌯𑌾𑌪𑌤𑍇
𑌹𑍇 𑌕𑌂𑌸𑌾𑌨𑍍𑌤𑌕 𑌹𑍇 𑌗𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌰𑍁𑌣𑌾𑌪𑌾𑌰𑍀𑌣 𑌹𑍇 𑌮𑌾𑌧𑌵 ।
𑌹𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜 𑌹𑍇 𑌜𑌗𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌗𑍁𑌰𑍋 𑌹𑍇 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷 𑌮𑌾𑌂
𑌹𑍇 𑌗𑍋𑌪𑍀𑌜𑌨𑌨𑌾𑌥 𑌪𑌾𑌲𑌯 𑌪𑌰𑌂 𑌜𑌾𑌨𑌾𑌮𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾 ॥ (107)

(ப-உ) 𑌹𑍇 𑌗𑍋𑌪𑌾𑌲𑌕-ஓ பசுக்களை ரக்ஷிக்குமவனே! 𑌹𑍇 𑌕𑍃𑌪𑌾𑌜𑌲𑌨𑌿𑌧𑍇-ஓ தயாஸமுத்ரமே! 𑌹𑍇 𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌕𑌨𑍍𑌯𑌾𑌪𑌤𑍇-ஓ லக்ஷ்மீபதியே! 𑌹𑍇 𑌕𑌂𑌸𑌾𑌨𑍍𑌤𑌕 - ஓ கம்ஸனுக்கு ம்ருத்யுவானவனே! 𑌹𑍇 𑌗𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌰𑍁𑌣𑌾𑌪𑌾𑌰𑍀𑌣 - ஓகஜேந்த்ரன் விஷயமான கருணையினால் பூர்ணனானவனே! 𑌹𑍇 𑌮𑌾𑌧𑌵-ஓஸ்ரீவல்லபனே! 𑌹𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜-ஓ பலராமனுடைய தம்பியே! 𑌜𑌗𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌗𑍁𑌰𑍋-ஓமூன்றுலகங்களுக்கும் பெரியோனே! 𑌹𑍇 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷-ஓ செந்தாமரைக்கண்ணனே! 𑌹𑍇 𑌗𑍋𑌪𑍀𑌜𑌨𑌨𑌾𑌥 - ஓகோபிகாவல்லபனே! 𑌮𑌾𑌂-என்னை, 𑌪𑌾𑌲𑌯-ரக்ஷியும், 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾 - உன்னைவிட்டு, 𑌪𑌰𑌂-வேறொருதெய்வத்தை, 𑌨𑌜𑌾𑌨𑌾𑌮𑌿-அறியமாட்டேன். (107)

(தா-ம) இதில், அவனுடைய குணங்களுக்கும் சேஷ்டிதங்களுக்கும் வாசகமான திருநாமங்களைச் சொல்லுகிறார்— ஓ க்ருஷ்ணா! நீ இப்போது இடைக்குலத்தில் அவதரித்து, தன்னைத்தானே ரக்ஷித்துக்கொள்ளவல்லமையற்றதாய் உன்னையே ஆஸ்ரயித்திருக்கிற பசுக்களை ரக்ஷித்தது, ஜாதிகுல ஜ்ஞாநஅநுஷ்டாநாதிகளில் எவ்விதமாயினும் அகதிகளுக்குக் கதியானமையைக் காட்டினாய்; அதற்கடியான தயைக்கு நிலையிடமாயிருந்தாய்; அந்தத்தயை உன்னுடையமேன்மையினால் தலைமடங்கிக்கிடக்கில் அதைக்கிளப்பிக் காரியங்கொள்ளவல்ல லக்ஷ்மிக்கு வல்லபனாயிருந்தாய், ஆஸ்ரிதவிரோதிகளை உருமாய்த்தாய், இப்போதேயன்றிக்கே முன்பும் இம்மாதிரியாகவே கஜேந்த்ரன்விஷயத்தில் கருணைகூர்ந்து, ஸங்கல்பத்தாலன்றிக்கே நீயேநேரில் வந்து அவனை உத்தரித்தாய், ரக்ஷிக்கும்போதெல்லாம் புருஷகாரமாகைக்காகப்பிராட்டியை எப்போதும் பிரியாதவனாயிருந்தாய், பெரியோனுக்குச் சிறியோன் கீழ்ப்படிந்திருக்கும் விதத்தை பலராமனுக்குத்தம்பியாயிருந்து காட்டினாய், கீதோபநிஷத்தை உபதேசித்து ஸகலலோககுருவாயிருந்தாய், உபதேசத்தால் திருந்தாதாரைக்கண்ணழகைக்காட்டித்திருத்தவல்ல புண்டரீகாக்ஷனாயிருந்தாய், ஆஸ்ரிதருடைய அபீஷ்டங்களையெல்லாம் அளிக்கவல்லனாயிருந்தாய், நான் உன்னையல்லது வேறுகதியற்றவனாயிருந்தேன், என்னைக்காப்பாற்றவேணுமென்கிறார், (107)

கஸ்தூரீதிலகம் லலாடபலகே வக்ஷஸ்ஸ்தலே கௌஸ்துபம் நாஸா
க்ரே நவமௌக்திகம் கரதலே வேணும் கரே கங்கணம் | ஸர்வாங்கே ஹ
ரிசந்தநம் ச கலயந் கண்டே ச முக்தாவலிம் கோபஸ்த்ரீபரிவேஷ்டிதோ
விஜயதே கோபாலசூடாமணி:|| (108)

(ப-உ) லலாடபலகே-பரந்த திருநெற்றியில், கஸ்தூரீதிலகம்-கஸ்தூரிநாமத்தையும, வக்ஷஸ்ஸ்தலே-திருமார்பில், கௌஸ்துபம் - கௌஸ்துபமெனகிற மரகதபபச்சையையும், நாஸாக்ரே-நுனிமூக்கில், நவமௌக்திகம் புதிதானமுத்தையும், கரதலே - திருக்கையில், வேணும்-குழலையும், கரே-முன்கையில், கங்கணம்-வளையையும், ஸர்வாங்கே-சரீரமுழுதும், ஹரிசந்தநம்-சிவப்புச்சந்தநமும், கண்டே-கழுத்தில், முக்தாவலிம்-முத்துமாலையையும், கலயந்-அலங்கரித்துக்கொண்டவனாய்க்கொண்டு, (கோபஸ்த்ரீபரிவேஷ்டித:) கோபஸ்த்ரீ-கோபிகைகளினால், பரிவேஷ்டித:-சுற்றும்வளைப்புண்ட, கோபாலசூடாமணி:-ஆயர்தலைவனான ஶ்ரீக்ருஷ்ணன், விஜயதே-விளங்குகிறான்.

(தா-ம்) கீழ அவனுடைய குணங்களைசசொல்லி, இதில், அவனுடைய அலங்காரத்தை நினைக்கிறார்.—ஶ்ரீக்ருஷ்ணன், முகத்தில கஸ்தூரி திலகமும், கழுத்தில் தொங்குகிற கௌஸ்துபமணியும்முத்துமாலையும், மூக்குநுனியில்முத்தும், கைத்தலத்தில் பிடித்த ஊதுகுழலும், மணிசகட்டுக்குக் கீழ்பூண்டவளைகளும், உடம்பெங்கும்பூசினசந்தநமுமாய்க்கொணடு கோபஸ்த்ரீமண்டலமத்யத்தில் விளங்காநின்றானென்கிறார். (108)

லோகாநுந்மதயந்தீ ஶ்ருதீஸ்ஸ்ராவயந்தீ க்ஷோணீருஹாந்ஹர்
ஷயந்தீ ஶைலாந்த்ராவயந்தீ ம்ருகாந்விவஶயந்தீ கோவ்ருந்தமாநந்தயந்தீ |
கோபாந்ஸம்ப்ரமயந்தீ முநீந்முகுலயந்தீ ஸப்தஸ்வராந் ஜ்ரும்பயந்தீ ஓ
ங்காரார்த்தமுதீரயந்தீ விஜயதே வம்ஶீநிநாதஶ்ஶிஶோ:|| (109)

(ப-உ) ஶிஶோ: - பிள்ளையாகிய க்ருஷ்ணனுடைய, வம்ஶீநிநாத:-குழலோசையானது, லோகாந்-ஜநங்களை, உந்மதயந்தீ-மிக்க மத(ம)மேறப்பண்ணி நின்றுகொண்டும், ஶ்ருதீ:-வேதங்களை, ஸ்ராவயந்தீ-ஸ்தோத்ரம்செய்யும்படி பண்ணிநின்றுகொண்டும், க்ஷோணீருஹாந்-மரங்களை, ஹர்ஷயந்தீ - தளிர்க்கப்பண்ணிநின்றுகொண்டும், ஶைலாந் கற்களை, த்ராவயந்தீ-நீராக உருக்காநின்றுகொ

ண்டும், ஸ்ரீமாந்-மான்முதலியதிர்யக்குகளை, விவஶ்யந்-பரவசமாகப் பண்ணுகின்றுகொண்டும், ஶோஷ்யந்-பசுக்களை, க்ஷோபயந்-களிக்கப்பண்ணுகின்றுகொண்டும், மோஹயந்-இடையர்களை, வ்ரீடயந்-உத்ஸாஹமுடையவர்களாகப் பண்ணுகின்றுகொண்டும், ஊர்ஜயந்-ருஷிகளை, தே-யந்-களைப்பண்ணித் த்யாநபராயணமாகக்காகின்றுகொண்டும், ஸத்வஸுரந்-ஏழுஸ்வரங்களை, ஜ்ஞேயந்-வருத்திபண்ணுகின்றுகொண்டும், ஓஜ்ஜீவத்-ப்ரணவார்த்தத்தை, உத்யந்-சொல்லாகின்றுகொண்டும், விஜயதே-விளங்குகிறது (109)

(தா-ம) இதில், அவனுடைய வேணுகாநத்தைக் கொண்டாடுகிறார்.—க்ருஷ்ணன ஸகலவேதவாக்யங்களையும் வேணுகாநத்திலே இசைத்து மீட்டி, ஸகலவேதஸாரமான ப்ரணவத்தினார்த்தம் ஸ்பஷ்டமாகத்தோற்றும்படி குழலூதினபோது, ஸப்தஸ்வரங்களுமெழாநின்ற அக்குழலோசையானது, ப்ராஜ்ஞரை மதிமயக்கிப்பிசசேறப்பண்ணிற்று, காட்டிலமேயும் ம்ருகங்களைமேயாநத புல்கடைவாயவழிசோரப்பண்ணிற்று, ஆக்களைக்களிக்கப்பண்ணிற்று, உலர்ந்தமரங்களைத்தளிர்ப்பித்தது, கல்லேநீராக்கிற்று, ஜிதேந்த்ரியரான ருஷிகளை அஞ்ஜலியிட்டுத்தொழுவித்துக் கொண்டது, இப்படி ஸமஸ்தவஸ்துக்களும் ஸ்வஸ்வபாவங்களைவிட்டு வெவவேறு ஸ்வபாவத்தையடையும்படி பண்ணின அவ்வினியகுழலோசையானது ஸர்வலோகப்ரஸித்தமாக விளங்காகின்றதென்கிறார். (109)

இரண்டாவது ஆஶ்வாஸம்

முற்றிற்று.







ஸ்ரீருக்மிணீகாந்தாய நம:

ஸ்ரீக்ருஷ்ணகர்ணாம்ருதம்.

த்ருதீயாச்வாஸ:

ச்லோ || அஸ்தி ஸ்வஸ்த்யயநம் ஸமஸ்தஜகதாம் அப்யஸ்தலக்ஷ்மீஸ்தநம்
த்வஸ்தரஜஸ்தமோபி: அநிசம் ந்யஸ்தம் புரஸ்தாதிவ |
ஹஸ்தோத்க்ஷிப்த கிரீந்த்ர ச்ருங்கதரு ப்ரஸ்தார விஸ்தாரித
ப்ரஸ்தஸ்வஸ்தரு ஸூநஸம்ஸ்தர பாஸ்வத் ப்ரஸ்தாவிராயா
ஸ்துதம் || (1)

(ப-உ.) ஸமஸ்தஜகதாம் - ஸகலலோகங்களுக்கு முண்டான, (ஸ்வஸ்த்யயநம்) ஸ்வஸ்தி-மங்களங்களுக்கு, அயநம் - ஸ்தாநமானதும், (அப்யஸ்தலக்ஷ்மீஸ்தநம்) அப்யஸ்த - அடிக்கடி ஸம்ச்லேஷிக்கப்பட்ட, லக்ஷ்மீ - ஸ்ரீதேவியினுடைய, ஸ்தநம்-குசங்களையுடையதும், (த்வஸ்தரஜஸ்தமோபி:) த்வஸ்த - நசித்துப்போன, ரஜ: - ரஜோகுணத்தையும், தமோபி: - தமோகுணத்தையுமுடைய (ஸத்வகுணப்ரசுரரான) ஸத்புருஷர்களாலே, அநிசம் - ஸர்வகாலமும், புரஸ்தாத் - எதிரில், ந்யஸ்தம் இவ - ஸ்தாபிக்கப்பட்டதுபோல் ப்ரத்யக்ஷதுல்யமாகக் காணப்படுமதும், (ஹஸ்தோத்க்ஷிப்தகிரீந்த்ர ச்ருங்கதரு ப்ரஸ்தாரவிஸ்தாரித ப்ரஸ்தஸ்வஸ்தருஸூந ஸம்ஸ்தரபாஸ்வத்) ஹஸ்த - கையினால், உத்க்ஷிப்த - உயரவெடுக்கப்பட்ட, கிரீந்த்ர - கோவர்த்தநமலையினுடைய, ச்ருங்க - சிகரங்களிலுள்ள, தரு-மரங்களுடைய, ப்ரஸ்தார-தோப்புக்களில், விஸ்தாரித - அலர்ந்தும், ப்ரஸ்த - நழுவி உதிருமதுமான, ஸ்வஸ்தரு - கல்பகமரத்தினுடைய, ஸூந - புஷ்பங்களுடைய, ஸம்ஸ்தர - குவியல்களினால், பாஸ்வத் - ப்ரகாசித்துக்கொண்டிருக்குமதும், (ப்ரஸ்தாவிராயாஸ்துதம்) ப்ரஸ்தாவி - புகழ்ச்சியே தன்மையான, ராயா-ராதிகையினால், ஸ்துதம்-ஸ்தோத்ரம் செய்யப்பட்டதுமான, வஸ்து - பரவஸ்துவானது, அஸ்தி-இருக்கிறது. (1)

(தா-ம்.) முதல ஆஶ்வாஸத்தில ஸர்வேஶ்வரனுடைய ஸ்வரூபத்தைநிஷ்கர்ஷித்தார், இரண்டாவது ஆஶ்வாஸத்தில், தம்முடைய இஷ்ட அநிஷ்டப்ராபதி பரிஹாரங்களுக்கு அவனே கடவான்; அதற்குரிய குணபூர்த்தியுள்ளானுமவனே, அவற்றைக்கொண்டு காரியம் செய்விக்கவல்ல புருஷகாரமும மகேயுண்டு, ஆகையால் அவனே ஆஶ்ரயணீயனென்று நிர்ணயித்து அவன் திருவடிகளை ஆஶ்ரயித்தார், அநந்தரமான இந்த ஆஶ்வாஸத்தில், புருஷார்த்தமுமவனேயென்று அறுதியிட்டு அநுபவிக்கிறார்.

நாங்களே ஜகதீஶ்வரர்களாக அபிமானித்திருக்கிற ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளுக்கும் நாமே நம்முடைய பௌருஷத்தால அபீஷ்டத்தை ஸாதித்துக் கொள்ளுகிறோமென்றிருக்கிற ஸ்வதந்த்ரருக்கும், தேஹாதிரிக்தமான ஆத்மா வேறொன்றில்லை யென்கிறவர்களுக்கும், தன்னுடைய போஷணத்தில பிறாக்கையையே எதிர்பார்த்திருக்கும் பஶ்வாதிகளுக்கும் அவரவர்களுடைய அபீஷ்டங்களை யளிக்குமவனாயிருந்தான; ஶ்ரீதேவியினுடைய வடிவழகிலீடுபட்டு, அவளுடைய முகமலர்த்திக்காக சேதநனசெய்யுமடிமையை ஒன்றுபத்தாக்கி ஸ்வீகரியாநின்றான்; ஸதாசாரம, ஸத்ஸங்கம், குருஶுஶ்ரூஷை முதலானவற்றால் ரஜோகுணத்தையும் தமோகுணத்தையுமடக்கி ஸத்வகுணத்தைமேலெழப்பண்ணி யோகாப்யாஸத்தில் நின்று பக்திசெய்கிற பாகவதர்க்கு மாநஸஜ்ஞாநத்தில் ப்ரத்யக்ஷம்போலே காணுநின்றான்; கோவர்த்தநகிரியை யெடுத்தபோது கொடிமுடிகளிலுள்ள கற்பகமரங்களசைந்து அவற்றின்புஷ்பங்கள் இவனமேல்சொரிய அவ்வழகைக்கண்டு அருகிருந்த ராதிகை முதலிய கோபிமார்களும மற்றவர்களும் புகழாநிற்க, இப்படிப்பட்ட க்ருஷ்ணனும், அவனுக்கு இக்குணங்களுமொன்று மிலலையென்று சொல்லப்போகாது, ஏதாத்ருசகுண விஶிஷ்டனாய்க்கொண்டு ஶ்ருதி இதிஹாஸபுராணங்களிலே ப்ரதிபாதிக்கப்படாநின்றானெனகிறார். (௧)

𑌶𑍍𑌲𑍋॥ 𑌰𑌾𑌧𑌾𑌰𑌾𑌧𑌿𑌤𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌰𑌸𑌂 𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌰𑌤𑍍𑌨𑌾-
𑌕𑌰𑌂 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑍍𑌯𑌪𑌦𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌸𑌹𑌜𑌸𑍍𑌮𑍇𑌰𑌾𑌨𑌨𑌾-
𑌮𑍍𑌭𑍋𑌰𑍁𑌹𑌮𑍍 । 𑌆𑌲𑌮𑍍𑌬𑍇 𑌹𑌰𑌿𑌨𑍀𑌲𑌗𑌰𑍍𑌵𑌗𑍁𑌰𑍁𑌤𑌾-
𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌪𑌣𑌂 𑌬𑌾𑌲𑌂 𑌵𑍈𑌣𑌵𑌿𑌕𑌂 𑌵𑌿𑌮𑍁𑌗𑍍𑌧𑌮𑌧𑍁-
𑌰𑌂 𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌭𑌿𑌷𑌿𑌕𑍍𑌤𑌂 𑌮𑌹𑌃 ॥ (2)

(ப - உ.) (𑌰𑌾𑌧𑌾𑌰𑌾𑌧𑌿𑌤𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌰𑌸𑌂) 𑌰𑌾𑌧𑌾-ராதிகையினால், 𑌆𑌰𑌾𑌧𑌿𑌤 - கொண்டாடப்பட்ட, 𑌵𑌿𑌭𑍍𑌰𑌮-விலாஸங்களினால், 𑌅𑌦𑍍𑌭𑍁𑌤 - ஆஶ்சர்யகரமான, 𑌰𑌸𑌂 - ஶ்ருங்கார ரஸத்தையுடையதும், (𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌰𑌤𑍍𑌨𑌾𑌕𑌰𑌂) 𑌲𑌾𑌵𑌣𑍍𑌯 ஸௌந்தர்யத்துக்கு, 𑌰𑌤𑍍𑌨𑌾𑌕𑌰𑌂-ஸமுத்ரமானதும், (𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑍍𑌯𑌪𑌦𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌸𑌹𑌜𑌸𑍍𑌮𑍇𑌰𑌾𑌨𑌨𑌾𑌮𑍍𑌭𑍋𑌰𑍁𑌹𑌂) 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑍍𑌯-ஸாம்யத்தினுடைய, 𑌪𑌦𑌵𑍀-அடியை, 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤 - அதிக்ரமித்திருப்பதும், 𑌸𑌹𑌜 - ஸ்வாபாவிகமுமான, 𑌸𑍍𑌮𑍇𑌰 - புன்சிரிப்பையுடையதுமான, 𑌆𑌨𑌨𑌾𑌮𑍍𑌭𑍋𑌰𑍁𑌹𑌂- முக

கமலத்தையுடையதும், (ஹரி நீல மவ-ம ம-ர-தாலவ-லூ நிவ ா வணூ) ஹரி நீல-இந்த்ரநீலமணியினுடைய, மவ-அபிமானத்தினுடைய, ம-ர-தா-செறுக்குனுடைய, லவ லூ- ஸமஸ்தமானசெல்வத்தையும், நிவ-ாவண- நிரஸிப்பதும், வெணவிக- குழலூதுகையையே நிரூபகமாகவுடையதும, (வி-ஹூ-யா-ர) வி-ஹூ-உலகத்திலுள்ள ஸௌந்தரமான ஸமஸ்த வஸ்துக்களைக்காட்டிலும், யா-ர- ஸௌந்தரமானதும், ஸெஷிகூ- ஸர்வோத்தமமானதும், வொ- இளம்பருவமுற்றதுமான, ஹ- தேஜஸ்ஸை, ஆ- ஆராயிக்கிறேன். (2)

(தா-ம.) ப்ராப்யனை பரமபுருஷனை நினைத்தபோதெல்லாம் கைதொழுவது சேதநர்க்கு ஸ்வரூபமாகையாலே, கீழ் அவனைநினைத்தது இதில் தொழுகிறார்.

பரமரஸிகைகளான ராதிகை முதலானவர்களும கொண்டாடும்படியான ஸ்ருங்காரவிலாஸங்களையுடையனாய், அழகுக்கு நிலையிடமாய், தனக்கே அஸாதாரணமாய் ஸ்வாபாவிகமாயுள்ள முகமுறுவலையுடையனாய, இந்த்ரநீலமாணிக்கமும் தோற்றோடும்படி ஸ்லாகயமான நீலநிறத்தையுடையனாய், ஓராபரணதிகளாலன்றியே ஸ்வாபாவிகமான போக்யதையையுடையனாய, ஸர்வோத்தமனாய், வேணுகாநரஸிகனான ஸ்ரீகருஷ்ணனைத தொழுகிறேனென்கிறார். (உ)

ஸ்லோ || கரிணாஉஸஹ்யமதி வெஹவஹெ கரு-ணா
வஹூதி கிஸொர விமஹூ | யதி நாஉநார த விஹாரி
ஊாநஸெ யஉ-நாவநாஷரஸிகவொரஉஹ|| (3)

(ப - உ.) கரிணா-யானைகளுக்கு, (அஸஹ்ய மதிவெஹவ) அஸஹ்ய-அடையத்தகாத, மதி-நடையினுடைய, வெஹவ-பெருமையையுடையதும், (கரு-ணாவலஂபித கிஸொரவிமஹ) கருணா-க்ருபையினால், அவலஂபித- ஸ்வீகரிக்கப்பட்ட, கிஸொர-சிறுபிள்ளையினுடைய, விமஹ - சரீரத்தையுடையவனும், யதிநா-யோகிகளுடைய, ஊாநஸெ - ஹ்ருதயத்தில், (அநாரதவிஹாரி) அநாரத - ஸர்வகாலமும், விஹாரி- கரீடிபபதும், (யஉ-நாவநாஷரஸிக) யஉ-நா - யமுனைக்கரையிலுள்ள, வநஷ - காட்டுக்குள் (ஸஞ்சரிக்கையில்), ரஸிக - ப்ரீதியையுடையதுமான, வர ஊஹ-ஸர்வலக்ஷணமான தேஜஸ்ஸை, ஹெஜ பற்றுகிறேன். (3)

(தா-ம.) ஸாதுஜந பரித்ராணார்த்தமாகக் க்ருஷ்ணனாயவதரித்த இவன் மத்தகஜம்போன்ற நடையழகையுடையவனாய், யோகிகளுடைய ஹ்ருதயக

மலத்திலும், யமுநாதீரத்திலுள்ள அடியிலைகளினிறம்படி மணப்பாய்ந்திருக்கிற தோப்புக்களிலும ஹாஸத்துடனே உலாவாநின்றானெனகிறார்.(௩)

ஶ்லோ॥ நியந்த்ரு ஸர்வஜகதாம் வ்ரஜாங்கநா நியந்த்ரிதம் வி
லோலவிலோசந ஶ்ருங்கலயா । நிரந்தரம் மம ஹ்ருதயே விஜ்ரு
ம்பதாம் ஸர்வதஃ ஸரஸதரம் பரம் மஹஃ॥ (4)

(ப-உ) ஸர்வஜகத்- எல்லாவுலகங்களையும்; நியந்த்ரு - அடக்கியாளவல்லதும, (விலோலவிலோசந ஶ்ருங்கலயா) விலோல-அகன்றிருக்கிற, விலோசந - கண்களினுலிடப்பட்ட, ஶ்ருங்கலயா - கட்டளையினுல, நியந்த்ரிதம் - அடக்கியாளப்பட்டதும், ஸர்வதஃ - எல்லாவற்றைக்காட்டிலும், (வ்ரஜாங்கநா நியந்த்ரிதம்) வ்ரஜாங்கநா - இடைச்சியினுல், ஸரஸதரம்-மிகவு மாநந்தஜநகமானதுமான, தத்-அப்படிப்பட்ட, பரம்மஹஃ - பரஞ்ஜ்யோதிஸ்ஸானது, மம - என்னுடைய, ஹ்ருதயே-நெஞ்சில், நிரந்தரம்- ஸர்வகாலமும், விஜ்ரும்பதாம் - வ்ருத்தியடையட்டும், "ஸர்வதஃ ஸரஸதரம்" என்பதற்கு-எல்லாப்ரதேசங்களிலும் ஆநந்தமயமானதும் என்று மாத்ரமாம். (4)

(தா-ம) ஸகலலோகங்களையும் தன்புருவத்து நெளிப்பினுலடக்கி யாளவல்ல க்ருஷ்ணன், கோபிமார்கள் கண்ணெறிபார்வையால் கட்டளையிட அதுக்கமைந்து நடவாநின்றான், இப்படி ஸர்வஸுலபனான அவன் என்னுடைய நெஞ்சுக்கு எப்போதும் மறைவற்றுத் தோற்றக்கடவானென்று ப்ரார்த்திக்கிறார். (௪)

ஶ்லோ॥ கந்தர்ப்பப்ரதிமல்லகாந்தி விபவம் காதம்பினீ பா
ந்தவம் ப்ருந்தாரண்யவிலாஸினீ வ்யஸநிநம் வேஷேண
பூஷாமயம் । மந்தஸ்மேரமுகாம்புஜம் மதுரிமவ்யா
ம்ருஷ்ட பிம்பாதரம் வந்தே கந்தலிதார்த்ர யௌவநவநம்
கைஶோரகம் ஶார்ங்கிண꞉॥ (5)

(ப-உ.) (கந்தர்ப்பப்ரதிமல்லகாந்திவிபவம்) கந்தர்ப்ப- காமனுக்கு, ப்ரதிமல்ல-நேரொத்ததான, காந்தி-அழகினுடைய, வைபவம் - அதிசயத்தையுடையதும், (காதம்பினீபாந்தவம்) காதம்பினீ - மேகங்களுக்கு, பாந்தவம் - சுற்றமானதும், (ப்ருந்தாரண்ய விலாஸினீவ்யஸநிநம்) ப்ருந்தாரண்ய - ப்ருந்தாவநத்திலுள்ள, விலாஸினீ - பெண்களிடத்தில், வ்யஸநிநம் நிரந்தர ப்ரேமத்தை யுடையதும்,

விபூ⁴ஷண அலங்காரத்தினால், பூ⁴ஷாட்⁴யம் - நிறைந்த ஆபரணங்களையுடையதும், (மந்த³ஸ்மிதமுகா²ம்பு³ஜம்) மந்த³ஸ்மித - சிறுநகையோடுகூடின, முகா²ம்பு³ஜம் - முகபங்கஜத்தையுடையதும், (மாது⁴ர்யப்ரௌட⁴பி³ம்பா³த⁴ரம்) மாது⁴ர்ய - போகயதையினால், ப்ரௌட⁴ - பூர்ணமான, பி³ம்பா³த⁴ரம் - கோவைப்பழம்போன்ற வாய்க்கனியையுடையதும், கைஶோரகம் - பாலப்பிராயத்தோடு ஸம்பந்தித்ததுமான, ஶ்ரீக்ருஷ்ணஸ்ய - ஸ்ரீக்ருஷ்ணனுடைய, இத³ம் - இந்த, (உந்மிஷத்தாருண்யயௌவநம்) உந்மிஷத் - மேல்மேல் தளிர்த்துவருகிற, தாருண்ய - புதிதான, யௌவநம் - யௌவனபருவத்தை, வந்தே³ - நமஸ்கரிக்கிறேன். (௫)

(தா-ம்.) இவனுக்கு இளம்பருவம் சிறிது கழிந்ததும் சிறிது கழியாததுமாயிருக்கும்போதே யௌவனப்பருவம் மேலவிழுந்து தளிர்த்தோங்கிவளரத்தொடங்கிறது, அப்பொழுது இவனுடம்பில் மன்மதனும் இவனழகுக்குத்தோற்றுப் பின்னடியிட்டோமெபடியான ஸௌந்தர்யவிசேஷமும், இடையற்று நெருங்கின மேகராசிபோல் கண்டார் தாபமாறும்படி இருண்டு தளதளத்து நிழலோடுகிற லாவண்யமும், முகத்தில் அபூர்வமான முறுவலும், அதரத்தில் எப்போதுமில்லாத இனிமையும், அவயவங்களில் அப்பருவத்துக்குரியஆபரணங்களும், நெஞ்சில் பருவத்துப்பெண்கள்மேல ஆஸக்தியும் காணவந்ததென்கிறார். (௫)

ஶ்லோ॥ முக்தமாநுஷமமுக்தநிஜாநுபா⁴வமாத்த
விக்³ரஹமகோ³பவித³க்³த⁴ஶ்ரியம் | ஸ்ப்ருஷ்டயௌவநமநஷ்டகி
ஶோரபா⁴வமாத்³யம்மஹ: கிமபி மாத்³யதி மாநஸே மே ||

(ப-உ.) (முக்தமாநுஷம்) முக்த - ஸவாஸமாகவிடப்பட்ட, மாநுஷம் - மானிடத்தன்மையையுடையதும், (அமுக்தநிஜாநுபா⁴வம்) அமுக்த - சிறிதும்விடாத, நிஜ - ஸ்வாபாவிகமான, அநுபா⁴வம் - மஹிமையையுடையதும், (ஆத்தவிக்³ரஹம்) ஆத்த - ஸ்வயமே ஏற்றுக்கொள்ளப்பட்ட, விக்³ரஹம் - சரீரத்தையுடையதும், (அகோ³பவித³க்³த⁴ஶ்ரியம்) அகோ³ப - அனைவர்க்கும் மறைவின்றித்தோற்றுகிற, வித³க்³த⁴ - ரஸிகஜனங்களுடைய, ஶ்ரியம் - விலாசத்தையுடையதும், (ஸ்ப்ருஷ்டயௌவநம்) ஸ்ப்ருஷ்ட - நன்றாகஸ்பரிசிக்கப்பட்ட, யௌவநம் - யௌவனத்தையுடையதும், (அநஷ்டகிஶோரபா⁴வம்) அநஷ்ட - பூர்ணமாகவிடாத, கிஶோரபா⁴வம் - இளம்பிராயத்தையுடையதும், ஆத்³யம்-

ஸர்வகாரணபூதமுமான, கிம்அபி-அநிர்வாச்யமான, மஹ: - தேஜஸ்ஸு, மே-என்னுடைய, மாநஸே-ஹ்ருதயத்தில், மாதுரீம் கலித்து வர்த்திக்கிறது. (6)

(தா-ம.) இவன், கர்மத்தினாலன்றிக்கே ஸ்வேச்சையாலே க்ருஷ்ணனாகவந்தவதரித்தவன் ஆகையால், மநுஷ்யரைப்போல் ரக்தமாம்ஸமலமூத்ராதிமயமான நிஹீந சரீரமும், ராகத்வேஷாதிகளான ஹேயகுணங்களுமற்று, ஸ்வ அஸாதாரணமாய அப்ராக்ருதமான திவ்யவிக்ரஹத்தையும், ஜ்ஞாநசக்த்யாதிகுண பூர்த்தியையும், திவ்யசேஷ்டிதங்களையும், பால்யமும் யௌவநமும் கலசின பருவத்தையுமுடையனாய், இப்போது என்னுள்புகுந்து விளையாடாநின்றுனென்கிறார். (௬)

தே தே பாவாஸ்ஸகலஜகதீ லோபநீயப்ரபாவா
நாநாத்ருஷ்ணாஸுஹ்ருதி ஹ்ருதி மே காமமாவிர்பவந்து।
வீணாவேணுக்வணிதலஸித ஸ்மேரவக்த்ராரவிந்தாத்
நாஹம்ஜாநே மதுர மபரம் நந்த புண்யாம்பு
ராசே:॥ (7)

(ப-உ.) (ஸகலஜகதீலோபநீயப்ரபாவா:) ஸகல-ஸமஸ்தமான, ஜகதீ-லோகங்களினால், லோபநீய-விரும்பத்தக்க, ப்ரபாவா: பெருமையையுடைய, தே-தே-அந்த அந்த, பாவா: - வ்யாபாரங்கள், (நாநாத்ருஷ்ணாஸுஹ்ருதி) நாநா - மண் பெண் பொருள் என்று இம்மாதிரியாகச் சொல்லப்பட்ட அநேகங்களிலுண்டான, த்ருஷ்ணா-பேராசைக்கு, ஸுஹ்ருதி-மனமொத்த துணையாயிருக்கிற, மே-என்னுடைய, ஹ்ருதி-நெஞ்சில், காமம்-யதேச்சமாக, ஆவிர்பவந்து-ப்ரகாசிக்கப்பட்டும், (வீணாவேணுக்வணிதலஸிதஸ்மேரவக்த்ராரவிந்தாத்) வீணா-வீணையோடொத்த, வேணுக்வணித-குழலினிசையினால், லஸித-விளங்குமதும், ஸ்மேர - மலர்ந்துமிருக்கிற, வக்த்ராரவிந்தாத் - முகாரவிந்தத்தையுடையனாய், (நந்தபுண்யாம்புராசே:) நந்த- நந்தகோபனுடைய, புண்ய - ஸுக்ருதத்துக்கு, அம்புராசே: - ஸமுத்ரம்போன்றவனான ஸ்ரீக்ருஷ்ணனைக்காட்டிலும், அபரம்மதுரம் - மிகவுமினிதானவஸ்துவை, அஹம் - நான், நஜாநே-அறிகிறேனில்லை. (7)

(தா-ம.) புத்ரவித்தகளத்ர அந்நாதிநாநாவிதமாய் அதிஹேயமானஸாம ஸாரிகவிஷயங்களில் ஆஸையுற்றுத்திரிகிற என்னுடைய ஹ்ருதயத்தில். இனி

அவற்றுக்கு இடமறும்படியாக, கற்பாறைபோல் ராமழற வன்னெஞ்சருங் கூடக்கண்டால நெஞ்சுநெகிழ்ந்து ஆசைப்படும்படியான அவனுடையதிவ்ய சேஷ்டிதங்களும் திவ்யாவயவங்களும வந்து நிறையத்தோற்றவேணும்; க்ருஷ்ணனுடைய வேணுநாதமும் ஸ்வாபாவிகமான முறுவலும் கூடிய வதநாரவிந்ததத்தோடொத்த வேறொரு அழகியபொருளைக் காண்கிறிலே னுகையால் அதையேவேண்டாநின்றே னென்கிறா. (எ)

ஶ்லோ॥ ஸுக்ருதிபிராத்ருதே ஸரஸவேணு நிநாத
ஸுயா ரஸஜஹரீவிஹார நிரவக்ரஹகணுவெடெ।
வ்ரஜவரஸுந்ருீ ஊவஸரொரூஹ ஸந்நபெ
உஹஸிகதா நுஜஜதிஊதீய தஹுஂஹாதயழ॥ (௭)

(ப-உ) ஸுக்ருதிஹிঃ - பாக்யசாலிகளினுல், ஆத்ருதெ-கொண்டாடபபடுமதும், (ஸரஸவெணு நிநாதஸுயாரஸஜஹரீவிஹார நிரவக்ரஹகணுவெடெ) ஸரஸ - இனிமையான, வெணுநிநாத-குழலோசையாகிற, ஸுயாரஸ - அம்ருதரஸத்தினுடைய, ஜஹரீ-ப்ரவாஹத்தில், விஹார - க்ரீடிபபதில், நிரவக்ரஹ - தடையற்றிருக்கிற, கணுவெடெ- காதுகளையுடையதும், (வ்ரஜவர ஸுந்ருீஊவஸரொரூஹஸ நயபெ) வ்ரஜ - ஆய்ப்பாடியிலுள்ள, வரஸுந்ருீ - உத்தமஸ்தரீகளுடைய, ஊவ - முகமாகிற, ஸரொரூஹ - தாமரைபபூவிலுள்ள, ஸக-ஶ்ரேஷ்டமான, நயபெ - வண்டானதுமான, உஹஸி - தேஜஸ்ஸில், ஊதீயழ-என்னுடையதான, இதழ-இந்த, ஹாதயழ மனஸ்ஸானது, கதா-எப்பொழுததான், உஜஜதி - மூழ்கப்போகிறதோ. (௭)

(தா-ம்.) இவன் பண்ணினவேணுகானம் பிறர்செவிக்கு இனிதாயிருக்குகையே பரமரஸிகனை இவனுக்கும் மிகவு மினிதாயிருக்குமாகையால்,அப்போது வேறொன்றில காதுகொடாதே இதையே அதயாதரததுடன் கேட்குமவனுய், நவயுவதிகளான இடைப்பெண்கள் முகாரவிந்ததிலே எப்போதும கண்ணுட்ட முடையனுய், மிகப்பெரியனை இவன இப்படி எளியனுவதே. என்று பாக்யசாலிகளால் கொண்டாடப்படுமவனை ஶ்ரீக்ருஷ்ணனிடததில் என்மநஸ்ஸு எப்போதுலயிக்குமோ வென்கிறார். (அ)

ஶ்லோ॥ த்ருஷாதரெ தவஜாதூராணஂ ஊஷணநா
ஹுஜிதாஹஹாநுகாரழ। பாஷாதநவணு
நகெஸிநோ க்ருஷ்ண காரணு கடாக்ஷ
கெஷிঃ॥ (9)

(ப உ.) (வாணாஜ்யயெகவிவெஹாரீ) வாணி- ஸத்கர்மங்களுக்கும, ஜயா - கருணைக்கும், வா கவிரொஹாரீ - முக்யஸ்தாநமாயுள்ள, க்ருஷணஸ்ய-ஸ்ரீக்ருஷ்ணனுடைய, (காருணாகடாக்ஷகெஷலீ) காருணா-கருணையினுலுண்டான, கடாக்ஷ- கடைக்கண்பார்வையினுடைய, கெஷலீ-விலாஸமானது. (த்ருஷாதாரெ) த்ருஷா-பேராசையினுல், ஆதாரெ - பெருநோய்கொண்ட, செதஸி-(என)மனஸ்ஸில், உஹாஃ-அடிக்கடி, ஜும்ஹமாணா - வளராநின்ற, (மொஹமஹாந்தகாரம்) மொஹ-அஜ்ஞாநமாகிற, மஹாந்தகாரம் - பேரிருளை, உஷூ - அபஹரியாநின்றுகொண்டு, நஃ - நம்மை, பாதா-ரக்ஷிக்கக்கடவதாக. (9)

(தா-ம்.) பெருமலைபோல் ராசியிட்டுக்கிடக்கிற என்பாபத்தையெல்லாம்போகவல்ல பரமபாவநனும், நான் பண்ணின அபராதத்தைக்கண்டு உபேக்ஷிக்கமாட்டாத பரமதயாளுவான க்ருஷ்ணனுடைய க்ருபாகடாக்ஷங்கள், அவனைக்காணவாசையுற்றிருக்கிற என்மனதிலதோற்றி, அநாதியான அஜ்ஞாநாந்தகாரத்தை ஸவாஸநமாகப்போக்கி ரக்ஷிப்பதாகவேணுமென்கிருர். (க)

ஸ்ரீ॥ நிலீந நிமஜளெஷ்வாவி தவஷகஜம் வாரஹ
ஸ்யஷ்தெஜஸஃ । வ்ரஜஜாவிவஹாஜநெஹதாராம்
வாஸகாஷவிஶெஷ ஷிதம் ॥ (10)

(ப-உ.) (வாரஹஸ்யஸ்ய தெஜஸஃ) வாரஹஸ்யஸ்ய-(வேதாந்தங்களில்) மிகவுமொளிந்தாவைத்திருக்கிற, தெஜஸஃ பரமபுருஷனுடைய, வ்ரஜஜாவி-இடைச்சேரியில், (வாஸகாஷவிஶெஷ ஷிதம்) வாஸ-பசையுற்றிருக்கிற, காஷ கோமயத்திஞல், விஶெஷ-அதிகமாக, ஷிதம்-பூசப்பட்டும், (நிலீந நிமஜளெஷ்வாவி தவஷகஜம்) நிலீந - ஸமஸ்தமான, நிமஜளெஷு- வேதாந்தங்களிஞல், வாவித-கொண்டாடப்பட்டு மிருக்கிற, வஷகஜம்-பாதபத்மத்தை, வஹாநெஹ-துதிக்கிரேும். (10)

(தா-ம்.) ஸகலமான உபநிஷத்துக்களும் அதயாதரத்துடனே கொண்டாடாநின்ற மேன்மையையுடையதாய் எவ்வளவுஜ்ஞாநாதிகராலும் ஆராய்ந்தறியப்போகாத க்ருஷ்ணனுடைய சரணாரவிந்தமானது, இடைசசேரியில் ஆக்கள்கட்டும் தொழுவங்கள்தோறும் திரிந்து அங்குள்ள பசும்சாணியிஞல் பூசப்பட்டு விளங்காநின்றது; இந்த எளிமையே நமக்குத் தஞ்சமென்று நான் கொண்டாடாநின்றேனென்கிருர். (௧௦)

ச்லோ॥ உதாரம்ருதுஸ்மிதவ்யதிகராபிராமாநநம்
முதா முஹுருதீர்ணயா முநிமநோம்புஜாஸேவி
தம் । மதாலஸவிலோசந வ்ரஜவதூமுதாஸ்வாதிதம்
கதா நு கமலேக்ஷணம் கமபி பாலமாலோகயே॥ (11)

(ப-உ.) (உதாரம்ருதுஸ்மிதவ்யதிகராபிராமாநநம்) உதார-அநேக அபிப்ராயங்களைத் தோற்றுவிப்பதும், ம்ருது - கோமளமுமான, ஸ்மித - சிரிப்பினுடைய, வ்யதிகர - ப்ரஸரணத்தினால், அபிராம-ஸுந்தரமான, ஆநநம்-முகத்தையுடையவனும், முஹு:-அடிக்கடி, உதீர்ணயா-உண்டாகிற, முதா - ஸந்தோஷத்தினால், (முநிமநோம்புஜாஸேவிதம்) முநி - ருஷிகளுடைய, மநோம்புஜ-ஹ்ருதயகமலத்தில், ஆஸேவிதம்- அடிக்கடி த்யானிக்கபபடுமவனும், (மதாலஸவிலோசநவ்ரஜவதூமுதாஸ்வாதிதம்) மத-யௌவநச்செருக்கினால், அலஸ-மந்தமாயிருக்கிற, விலோசந-கண்களையுடைய, வ்ரஜவதூ-இடைப்பெண்களினால், முதா-ஸந்தோஷத்தினால், ஆஸ்வாதிதம்-பாநம்பண்ணப்படுமவனும், கமலேக்ஷணம்-தாமரைக்கண்ணனுமான, கமபி-லோகவிலக்ஷணனை, பாலம்-பிள்ளையை, கதா நு-எப்பொழுதுதான், ஆலோகயே-பார்ப்பேனோ. (11)

(தா-ம்.) க்ருஷ்ணன், அநேக அபிப்ராயங்களையுட்கொண்டு புன்முறுவல்செய்வான, அப்பொழுது, இனிமையான அவ்வழகுடன் விளங்காநின்ற அவனுடைய முகத்தை, எதிர்நின்ற இடைப்பெண்கள், இதற்கு முன்னமே அவ்வழகை அநுபவித்துஅநுபவித்து மதமேறிக்கிடக்கிற கண்களால்அனுபவியாநின்றாகள்; எட்டநின்ற ருஷிகள் தங்கள் மனததிலே எப்போதும்நினைத்துக் களியாநின்றாகள்; நானந்த சிறுவனுடைய அமமுகத்தழகையும், அதிலும் நேர்ததியான கண்ணழகையு மநுபவிப்ப தெப்போதோ வென்கிறார்.

ச்லோ॥ வ்ரஜஜநதயோஷில்லோசநோச்சிஷ்டசேஷீ
க்ருதமதிவமாஹாத்ம்யம்லோசநாஹ்ருத்யஹாஹ்ருத்யம் ।
ஸக்ருதவிவரிவாதம் தைவதம் வாரயாம: கதம
யதுகுலதிலகம் காந்திவர்மாங்கதா நு॥ (12)

(ப-உ.) (வ்ரஜஜநதயோஷில்லோசநோச்சிஷ்ட சேஷீக்ருதம்) வ்ரஜஜந - இடையர்களுடைய, தத-செருக்குற்ற, யோஷித்-ஸ்த்ரீகளுடைய, லோசந-கண்களினால், உச்சிஷ்ட -பாநம்பண்ணிவிடப்பட்டதும், சேஷீக்ருதம்-(அதினால்) சேஷமாக்கப்பட்டதும், (கதம

யதலஹ்ரீதலத்ய) கவலயதல - கரிநெய்தல் பூவினிதழ்போல், நீலம் - நீலவர்ணத்தையுடையதுமான, காந்திலஹரீம் - காந்திவெள்ளத்தை, கதிவயாலஸாம் - பேராசைகொண்ட, உபௌ - இரண்டு கண்களினுல், தே - அப்படிபபட்ட, வயம் - நாங்கள், ஸக்ருத் அபி - ஒருகாலாகிலும், பரிபாதும் - பாநம்பண்ணுகைக்கு, கதா நு - எபபொழுதுதான், ஸமர்த்தாஸ்யாம: - ஸமர்த்தராவோம்.()

(தா-ம்.) இப்படி அவனைக்காணவேணுமென்று பேராசைகொண்டுஇதுவரையிலும் காணப்பெறுதே நின்று துடிககிறநாம, இனியாகிலும், இடைசசிகள் தஙகளாலானமட்டும் கண்களாலாரவநுபவிஉதுவிட,; அதில் சேஷித்ததாய், அவர்களுடைய ப்ரஸாதமாக பராப்தமாய், கரிநெய்தற்பூவினிதழ்போல்நீலவர்ணமாய், இடைசசேரியெங்கும் வெள்ளமிட்டுதே தேங்கிககிடககிற அவனழகை நமமுடைய இரண்டுகண்களும் நிறையும்படி ஒருகாலாகிலு மநுபவிக்க எப்போது விதிகூடுமோ வென்கிறுர். (கஉ)

ஶ்லோ॥ கோபீகோபிகாந்திநீதயௌவநம் கோமளஸ்த
நிதவேணுநிஸ்வநம் । ஸாரமாத்யஸுபகம் ஸுகாம்
பாதாரஸஸரோஜலோசநம்॥ (13)

(ப-உ.) (கோபகோபிகாந்திநீதயௌவநம்) கோப - ஆய்ப்பாடியிலுள்ள, கோபிகா-இடைச்சிகளினுல், அநுநீத-இடைவிடாமல்புகழப்பட்ட. யௌவநம் - யௌவநத்தையுடையதும், (கோமளஸ்தநிதவேணுநிஸ்வநம்) கோமல-மந்தமான, ஸ்தநித - மேககர்ஜநம்போன்ற, வேணு - குழலினுடைய, நிஸ்வநம் - ஒலியையுடையதும், ஸுபகஸம்பதாம்-அழகாகிற செல்வத்திறுடைய, ஸாரமாத்யம்-ஸாரமானதும, தாமரஸலோசநம்-செநதாமரைபோன்ற கண்களையுடையதுமான, மஹ:-தேஜஸ்ஸை, பஜே-ஆஶ்ரயிக்கிறேன். (13)

(தா-ம்.) அழகெல்லாமிஙகே குடிகொண்டிருக்கிற தென்னும்படி ஸர்வாங்கஸுந்தரனுய், அதிலும் கண்ணழகுவிஞ்சினவனுன ஸ்ரீக்ருஷ்ணனே, அவன் குழலெடுத்தூதாநிற்க, அவனுடைய பருவததை கோபிமார்கள்கொண்டாட, அவ்வவஸரத்தையிலே நான் பஜியாநின்றேனென்கிறுர். (கங)

ஶ்லோ॥ மதயமாத்ம்யநாஸ்வத்ம் தம்ஸுரம்மகேஹம்ஸுவ ஸம்
தீயஸ்வஸ்தநாம் । நீலநீரதவிகாஸவிப்ரமம் லயமேவ
வயஸாம்ப்ரயாஸ்ஸம ॥ (14)

(ப-உ.) ஒுயா-மநோஹரமாயிருக்கிற, லீலயா - விலாசங்களி ஞல், ஸமாஶ்ரித-ஆச்ரயிக்கப்பட்டவனும், (ஶ்ரீநிதி-ஸௌந்தர்யாதி ஸம்பத்துக்களு க்கு, ஶ்ரீநிகேதனம் - வைப்பிடமான நிதிபோன்றவனும், (நீல நீரதவிகாஸவிப்ரமம்) நீல-இருண்டிருக்கிற, நீரத-வார்ஷுகமேக த்தினுடைய, விகாஸ-ப்ரகாசமபோன்ற, விப்ரமம்-காந்தியையுடைய வனுமான, பாலகம் - சிறுவனையே, வயம் - நாங்கள், ஸாதரம் ஸஹ-ப்ரீதியுடன் புகழ்கிறோம். (14)

(தா-ம்.) கோபிமார்கள் அவனுடைய யௌவநத்தைக் கொண்டாடுவோர் களாக, நாமதை முக்யமாகநினையோம்; அழகிய அவயவஸந்நிவேசங்களையு டையனாய், வர்ஷாகாலத்து மேகம்போல் அலாந்த நீலவர்ணத்தையுடைய னாய், இனிதாக விளையாடாநின்ற அவனுடைய பிள்ளைத்தனத்தையே ப்ரீதி யுடன் புகழாநின்றேமென்கிறார். (௧௪)

ஶ்லோ॥ வந்தே ஶௌரேஶ்சரணாரவிந்தம் அத்யாதயாதஶித தஶைஶவஸ்ய । வந்தாரவ்ருந்தாரகவ்ருந்தமௌலி மந்தாரமாலா விநிவேதிதஶ்ரி॥ (15

(ப-உ.) (தயாதஶித தஶைஶவஸ்ய) தயா-கருணையினால், தஶித த-ப்ரகாசிப்பிக்கப்பட்ட, தைஶவஸ்ய-இளமையையுடைய, ஶௌரே-ஸ்ரீக்ருஷ்ணனுடைய, (வந்தாரவ்ருந்தாரகவ்ருந்தமௌலி மந்தாரமாலா விநிவேதிதஶ்ரி) வந்தார-ஸேவிப்பர்களான, வ்ருந்தா ரக-தேவர்களுடைய, வ்ருந்த குழாங்களின், மௌலி - முடிகளிலுள்ள, மந்தாரமாலா-மந்தாரப்பூவினால் கட்டப்பட்டமாலையினுடைய, விநிவே தித-உறவினால், ஶ்ரீ-பயந்திருக்கிற, சரணாரவிந்தத்வந்தம்-இணை த்தாள்தாமரையை, வந்தே-ஸேவிக்கிறேன். (15)

(தா-ம்.) க்ருஷ்ணன் சிறுபிள்ளையாயிருக்கும்போது, இவனுடையவை பவமறிந்த தேவர்கள்வந்து இவனைப்புகழ்ந்து இவன்காலில்விழுந்து தெண் டனிட அவர்கள் தலையில்சூடின மந்தாரப்பூமாலைகள்பட்டு இவனுடையஅதி ஸௌகுமார்யமான திருவடிகள் வாடாநின்றன, அத்திருவடிகளை நான் தொழு கிறேனென்கிறார். (௧௫)

ஶ்லோ॥ யஸ்மிந்நக்ருத்ரியஸ்யேவ ஸம்ஶ்ரிதே ஸ்ரீ தஶா விஷ்டம்ப்யமுக்தியஸ்மிந்விநிவ்ருத்தி யஸ்யைவ ஸ்வாமி ஜீவன்க்ஷேமாய ப்ரஜைதே। யஸ்மிந்ஸத்ரியஸ்மிவிஷ்ணு

ஊமதிம் வாஞ்சந் ஹரேஸ்ஸிந்துர ஸஜ்ஜத்யத்ர வநகல்ப
த்ருமாரவநம் தம் கிஶோரம் பஜே|| (16)

(ப-உ) க்ரௌஞ்சத்விஷ:-ஸுப்ரஹ்மண்யனுடைய, (வாஹநமான) பர்ஹீ - மயிலானது, யஸ்ய - எந்தக்ருஷ்ணனுடைய, ஶேகர ஶிகண்ட:-குழற்கற்றையினால் (குழற்கற்றையைப்பார்த்து), யஸ்மிந்-எந்தவநத்தில், ந்ருத்யதி-நர்த்தநமசெய்கிறதோ, புரபேதிந: - ருத்ரனுடைய, வ்ருஷ:-வாஹநமான நந்தியானது, யஸ்ய - எநதக்ருஷ்ணனுடைய, (கோஷகோஸம்ஹதிம்) கோஷ ஆய்ப்பாடியிலுண்டான, கோஸம்ஹதிம்-பசுவை, ஜிக்ரந்-மோநததாய்க்கொண்டு, யஸ்மிந்-எந்தவநத்தில், ஊர்த்வதி-கொழுப்பேறியிருக்கிறதோ, ஹரே:-இநத்ரனுடைய, ஸிந்துர:-வாஹநமான ஐராவதமானது, யஸ்ய-எநதஸ்ரீக்ருஷ்ணனுடைய, விலாஸகதிம்-விலாஸமான நடையை, வாஞ்சந்-ஆசைப்பட்டதாய்க்கொண்டு, யஸ்மிந்- எந்த வநத்தில, ஸஜ்ஜதி-நடக்கமுயன்றதோ; தத்-அந்த, (வ்ருந்தாவநகல்பத்ருமாரவநம்) வ்ருந்தாவந-ப்ருந்தாவநத்திலிருக்கிற, கல்பத்ரும - கல்பகவ்ருக்ஷத்தினுடைய, வநம்-தோப்பையும், தம்-அந்த, கிஶோரம் - சிறுவனானக்ருஷ்ணனையும், பஜே-ஆஶ்ரயிக்கிறேன். (16)

(தா-ம்.) ஸ்ரீகருஷ்ணன், ப்ருந்தாவநத்துக் கற்பகக்காவில்சென்று பசுக்களைமேயாநிற்க, இவனைத்தொழுகைக்கு வாஹநமேறிவந்த தேவகணங்களில் குமாரஸ்வாமியினுடைய வாஹநமான மயிலானது இவன் தலையிலணிந்தமயிலிறகைப்பார்தது, இங்கோர்மயிலுலாவுகின்றது என்று நினைததுக்களித்துத தோகையைவிரித்தாடாநின்றது; ருத்ரனுடைய வாஹநமான வ்ருஷபமானது, சிற்றின்பத்தையே பயனாககொண்ட அறிவுகேட்டாலே அப்பசுக்களின் பின்புறததைமோந்து காமவிகாரததையடையாநின்றது; இந்த்ரனுடைய வாஹநமான ஐராவதமானது, இவனுடைய நடையழகைக்கற்கமுயலாநின்றது; இப்படி எலலாருமவந்துபணியநின்ற அந்தக்ருஷ்ணனையும், வந்தவனைவர்க்கும் அவரவர்களபீஷ்டத்தை யளியாநின்றஅக்காட்டையும் தொழுதேனென்கிறார். (கசு)

ஶ்லோ|| காருண்யகர்புரஶ்ரீதவிஶேஷிதஶ்ரீதம் வாரு
ண்யயா நமதவண்ணவெஹவம் | தாருண்யரவிஹ
உஜ்ஜ்ரீவ ஶொவநஷாருண்யஷவிவாயஷாஶ்யெ||

(ப-உ.) (காருண்யகர்புரஶ்ரீதவிஶேஷிதஶ்ரீதம்) காருண்ய-சிவந்திருக்கிற, கர்புர - கீழ்தட்டிலுள்ள, ஶ்ரீத - அம்ருதத்தினால், வி

ஸேவித-கூடியிருக்கிற, ஸ்மிதம்-சிறிப்பையுடையவனும், (பாராவாராநுகதவர்ணமேதுரம்) பாராவார-ஸமுத்ரத்தை, அநுகத-அநுஸரித்திருக்கிற, வர்ண-நிறத்தினுடைய, மேதுரம்-பெருமையையுடையவனும், (தருணாரவிந்தத்யுதிதீர்க்கநேத்ரம்) தருண-அப்போதலர்ந்த, அரவிந்த-தாமரைப்பூவினுடைய, த்யுதி-இதம்போல், தீர்க்க-நீண்ட, நேத்ரம்-கண்களையுடையவனும், காருண்யபாத்ரம்-தயாஸமுத்ரமுமான, அபூர்வம் - அபூர்வமாகத்தோற்றின, பாலம்-ஸ்ரீக்ருஷ்ணனை, வந்தே-தொழுகிறேன். (17)

(தா-ம்.) க்ருஷ்ணனுடைய, கடல்போன்ற நிறத்தழகையும், அதுக்குப் பரபாகமாய சிவந்துவிளங்குகிற அதரத்தையும, அதின்மேல வெளுத்துப்பாயாநின்ற முறுவலையும, அபபோதலாநத தாமரைப்பூப்போனற கணகளையும் தொழுதேனெனகிறார். (௧௭)

ஸ்ரீ॥ லாவண்யவீசீரசிதாங்கபூஷாம் பூஷாபதாரோபிதபுண்யபர்ஹாம் । காருண்யதாராகடாக்ஷமாலாம் பாலாம் பஜே வல்லவவம்சலக்ஷ்மீம்॥ (18)

(ப-உ.) (லாவண்யவீசீரசிதாங்கபூஷாம்) லாவண்ய - பளபளத்த காந்தியினுடைய, வீசீ-பரம்பரையினால், ரசித - பண்ணப்பட்ட, அங்கபூஷாம் - உடம்பிலணியத்தக்க ஆபரணங்களையுடையவளும், (பூஷாபதாரோபிதபுண்யபர்ஹாம்) பூஷா-ஆபரணத்தினுடைய, பத-ஸ்த்தாநத்தில், ஆரோபித-ஏற்றுக்கொள்ளப்பட்ட, புண்ய - க்ருஷ்ணனணியுமபடியான பாகயத்தையுடைய, பர்ஹாம் - மயிலிறகையுடையவளும, (காருண்யதாராகடாக்ஷமாலாம்) காருண்ய-கருணையினுடைய, தாரா- ப்ரவாஹத்தி(பரம்பரையி)னால் பூர்ணமான, கடாக்ஷ-கடைக்கண்பார்வையினுடைய, மாலாம்-வரிசையையுடையவளும், பாலாம்-பருவத்தில் சிறுமியளுமான, (வல்லவவம்சலக்ஷ்மீம்) வல்லவவம்ச-ஆயக்குலத்துக்கு; லக்ஷ்மீம்-ஸகலார்த்தங்களையுமளிக்கவல்ல க்ருஷ்ணனாகிய லக்ஷ்மியை, பஜே - பற்றுகிறேன். (18)

(தா-ம்.) ஆபரணமிட்டாற்போல் விக்ரஹத்தை விளங்கப்பண்ணுநின்றதாய், க்ஷணந்தோறும் பொங்கிவாராநின்ற ஸ்வாபாவிகமான லாவண்யத்தையுடையனாய், பூஷணமென்கிற பேருக்காகததலையில் மயிலிறகையணிந்த

வனாய், இசைந்துவந்த ப்ராணிகளைக் கருணையுற்றுப்பாராநின்ற கடாக்ஷங்களையுடையனாய், இடைக்குலத்துக்குப்பெருமை பெறுத்துமவனுமான ஸ்ரீக்ருஷ்ணனை நதொழுகிறேனென்கிறார். (கஅ)

ஶ்லோ॥ மதுரதரஸ்மிதாம்ருதவிமுக்தமுகாம்புருஹம் மதஶிகிபிஞ்சலாஞ்சிதமனோஜ்ஞகசப்ரசயம் । விஷயவிஷாமிஷக்ரஸனக்ருத்னுனி சேதஸி மே விபுலவிலோசனம் கிமபி தாம ஸமுஜ்ஜ்வலது ॥

ஶ்லோ॥ மதுராவீதிவாரம் மதுரமுபாஸே வபுர்விஷ்ணோ: । தருணீகுரங்கநயனாநயன நீலோத்பலவர்ஷவர்ஷிதம் ॥ (19)

(ப-உ.) (மதுராவீதிவாரம்) மதுரா-(வட)மதுரையினுடைய, வீதி-தெருவில், வாரம்-நடவாநின்றதும், (தருணீகுரங்கநயனாநயனநீலோத்பலவர்ஷவர்ஷிதம்) தருணீ - (அப்பொழுது அந்த) மதுரைபட்டணத்திலுள்ள, குரங்கநயனா - மான்குட்டியின்கண்போன்ற கண்ணையுடைய பெண்டீர்களுடைய, நயன - கண்களாகிற, நீலோத்பல கரிநெய்தல் பூவினுடைய, வர்ஷ - வர்ஷத்தினால், வர்ஷிதம்-சொரியப்பட்டதும், மதுரம் மிகவுமினிமையான, விஷ்ணோ:-ஸ்ரீக்ருஷ்ணனுடைய, வபு:-திவ்யவிக்ரஹத்தை, உபாஸே-ஆச்ரயிக்கிறேன். (19)

(தா-ம்.) ஸ்ரீக்ருஷ்ணன், மதுரைமாநகரத்தில் திருவீதியிலெழுந்தருளாநிற்க, அந்நகரியிலுள்ள பெண்கள்யாவரும், இனிமையே வடிவுகொண்டு வந்தாற்போல் அதிமதுரமாயிருக்கிற அவனுடைய திருமேனியைத்தங்களுடைய அழகியகண்களால நிரந்தரமாகப்பாராநின்றார்கள்; அவ்வழகியவடிவைத்தொழுகிறேனென்கிறார். (கக)

ஶ்லோ॥ ஸ்வாகதஸ்மேரநயனாபாங்கவிப்ரமலீலயா ஸ்மிதவிலாஸேன । மந்தமதுரஜல்பிதேன நந்தஸுதோ ஹரதி மனோ மே ॥

(ப உ.) ஸ்வாகதஸ்மேர - சஞ்சலமாயிருக்கிற, (நயனாபாங்கவிப்ரமலீலயா) நயனாபாங்க-கடைக்கண்பார்வையினுடைய, விப்ரமலீலயா-அபிவ்ருத்தியினாலும், (மந்தமதுரஸ்மிதவிலாஸேன) மந்தம-இனியதும, மதுரம்-மனத்தோடுகூடியதுமான, ஸ்மித - புன்சிரிப்பினுடைய, விலாஸேன-விலாஸத்தினாலும், மந்த-ப்ருதுவானதும், மதுர-மிகவுமினிமையானதுமான, ஜல்பிதேன - பேச்சினாலும், நந்தஸுத-நந்தகோபனுடைய, மகனானஸ்ரீக்ருஷ்ணன், மன:-மனதை, ஹரதி - அலைப்பண்ணுகிறான், மே-கஷ்டம். (20)

ஸெவஷித-கூடியிருக்கிற, ஸிதம்-சிறிப்பைப்புடையவனும், (வாரணாலயாநந்தவண்ணெவைபவம்) வாரணாலய-ஸமுத்ரத்தை, அநுமத-அநுஸரித்திருக்கிற, வண்ண-நிறத்தினுடைய, வெவைபவம்-பெருமையையுடையவனும், (தாரணாரவிந்தஉஜ்ஜ்வலநேத்ரம்)-தாரண-அப்போதலாந்த, அரவிந்த-தாமரைப்பூவினுடைய, உஜ்ஜ்வல-இதுபோல், தீர்க்க-நீண்ட, நேத்ரம்-கண்களையுடையவனும், காருண்யம்-தயாஸமுத்ரமுமான, நூதனம் - அபூர்வமாகத்தோற்றின, யோகம்-ஸ்ரீக்ருஷ்ணனை, பஜே-தொழுகிறேன். (17)

(தா-ம்.) க்ருஷ்ணனுடைய, கடல்போன்ற நிறத்தழகையும், அதுக்குப் பரபாகமாய விளங்குகிற அதரத்தையும், அதின்மேல வெளுத்துப்பாய்கின்ற முறுவலையும், அப்போதலாந்த தாமரைப்பூப்போன்ற கண்களையும் தொழுதேனென்கிறார். (கள)

ஸ்ரீ॥ லாவண்யவீசீரசிதாங்கபூஷாம் பூஷாபதாரோபிதபர்ஹபீடம் । காருண்யதாராலகடாக்ஷமாலாம் பாலாம் பஜே வல்லவவம்சலக்ஷ்மீம்॥ (18)

(ப-உ.) (லாவண்யவீசீரசிதாங்கபூஷாம்) லாவண்ய - பளபளத்த காந்தியினுடைய, வீசீ-பரம்பரையினால், ரசித - பண்ணப்பட்ட, அங்கபூஷாம் - உடம்பிலணியத்தக்க ஆபரணங்களையுடையவளும், (பூஷாபதாரோபிதபர்ஹபீடம்) பூஷா-ஆபரணத்தினுடைய, பத-ஸ்தானத்தில், ஆரோபித-ஏற்றுக்கொள்ளப்பட்ட, பர்ஹ - க்ருஷ்ணனணியுமபடியான பாகயத்தையுடைய, பீடம் - மயிலிறகையுடையவளும, (காருண்யதாராலகடாக்ஷமாலாம்) காருண்ய-கருணையினுடைய, தாரால- ப்ரவாஹத்தி (பரம்பரையி)னால் பூர்ணமான, கடாக்ஷ-கடைக்கண்பார்வையினுடைய, மாலாம்-வரிசையையுடையவளும், பாலாம்-பருவத்தில் சிறுமியளுமான, (வல்லவவம்சலக்ஷ்மீம்) வல்லவவம்ச-ஆயக்குலத்துக்கு, லக்ஷ்மீம்-ஸகலார்த்தங்களையுமளிக்கவல்ல க்ருஷ்ணனாகிய லக்ஷ்மியை, பஜே - பற்றுகிறேன். (18)

(தா-ம்.) ஆபரணமிட்டாற்போல் விக்ரஹத்தை விளங்கப்பண்ணுகின்றதாய், க்ஷணந்தோறும் பொங்கிவாராநின்ற ஸ்வாபாவிகமான லாவண்யத்தையுடையனும், பூஷணமென்கிற பேருக்காகத்தலையில் மயிலிறகையணிந்த

(ரீதிவிபேதஸங்கதஸமுல்லஸத்வேணுநாதாம்ருதே) ரீதி - ராகத்தினுடைய, விபேத - பரஸ்பரபேதங்களோடு, ஸங்கத - சேர்ந்திருக்கிற, ஸமுல்லஸத்-விளங்காநின்ற, வேணுநாத-வேணுகானமாகிற, அம்ருதே-அம்ருதையுடையதும், (மந்தஸ்மிதே) மந்த - மந்தமான, ஸ்மிதே-முறுவலையுடையதும், (போக்யைகரஸே) போக்ய-போக்யதையாகிற, ஏகரஸே- ஒரே ரஸத்தையுடையதுமான, (ராதா நேத்ர ஸம்பாவிதஸ்ய) ராதா - ராதிகையினுடைய, நேத்ர-கண்களினால், ஸம்பாவிதஸ்ய - கொண்டாடப்பட்ட, ஶௌரே:- ஸ்ரீக்ருஷ்ணனுடைய, சந்த்ராரவிந்தானனே - சந்த்ரன்போலும் கமலபுஷ்பம்போலுமிருக்கிற முகத்தில, மதீயம்-என்னுடையதான, மந:-மனஸானது, ஸாநந்தா-ஸந்தோஷத்துடன், மக்நம்-அழுந்தினது. (22)

(தா-ம்) க்ருஷ்ணனும ராதிகையுமாக விருககும்காலத்தில் தொழாநின்றேன், அப்பொழுது அவள் தன் கண்ணழகாலே இவனை மயககி எனககுபபுருஷகாரம் பண்ணிஞள், பின்பவன ஒருமுறுவல்செயதுவேணுவையெடுதது அமுதவெள்ளத்தைப் பெருககிஞற்போல் அதிவிசிதரமான ராகஙகளைபபாடி, பஹு விலாஸத்துடனே பரிபூர்ணமாக் என்னைககடாக்ஷிதது ப்ரீதிபணணுகின்ருன்; அப்பொழுது என் மனமானது ஆநநதததையடைந்து, அதிஸுந்தரமான அவனுடைய முககமலததையே பிணைதது அஙகேயழுந்திவிட்டதென்கிருர். (உஉ)

ஶ்லோ|| ஶரணாகதவஜ்ரபஞ்ஜரே ஶரணே ஶார்ங்கதந்வநோ
வைபவே | க்ருபயா த்ருதகோபவிக்ரஹே கிமந்ய
ந்ம்ருகயாமஹே வயம்|| (23)

(ப-உ.) (ஶரணாகதவஜ்ரபஞ்ஜரே) ஶரணாகத-சரணமடைந்தவர்களுக்கு, வஜ்ர- வஜ்ரத்தினுல் செய்யப்பட்ட, பஞ்ஜரே - கூடானதும், க்ருபயா - கருணையினுல், (த்ருதகோபவிக்ரஹே) த்ருத-அங்கீகரிக்கப்பட்ட, கோபவிக்ரஹே - இடையன்வேஷத்தையுடையதுமான, ஶார்ங்கதந்வந: - விஷ்ணுவினுடைய, வைபவே-விபவமாகிய க்ருஷ்ணுவதாரமானது, ஶரணே - ரக்ஷகமாயிருக்க, வயம்-நாம் - அந்யத்-வேறான, கிம்- எநதவஸ்துவை, ம்ருகயாமஹே-தேடுவோம். (23)

(தா-ம்.) ஸம்ஸாரததிலழுந்தி மங்கிப்போகிற ப்ராணிகளையுத்தரிக்க வேணுமென்கிற கருணையினுல வந்தவதரிதது, தன்னைசசரணமடைந்தாரைத்தன்கீழமைததுக்கொண்டு ஒருதீஙகும மனிததுவாராதபடிகாக்கவல்லனுன

க்ருஷ்ணன் நம்மைரக்ஷிக்ககாததிருக்க நாம மற்றொருவரை எனதேடிப் போகவேணு மெனகிறார். (உ௩)

ஶ்லோ॥ ஜமதுயைகாஙூ மெநாஜூஸவிதி வெதஸாஜ
ஸாஜஸநியதாஃ। ரமாஸமாஸாதிதஸௌகுமாயம்
ராயாஸநாஹோமரஸஜ்ஞமொஜ:॥ (24)

(ப-உ.) (ஜமதுயைகாஙூமெநாஜூஸவிதி) ஜமதுய - மூன்றுலகங்களுக்கும், ஏகாஙூ-முக்யமான, மெநாஜூ-நெஞ்சுடைய ப்பண்ணுமெழிலுக்கு, ஸவிதி-இருப்பிடமானதும், (ரமாஸமாஸாதித ஸௌகுமார்ய) ரமா-ருக்மிணியினால், ஸமாஸாதித - அநுபவிக்கப்பட்ட, ஸௌகுமார்ய - மேன்மையையுடையதும், (ராயாஸநாஹோமரஸஜ்ஞ) ராயா-ராதிகையினுடைய, ஸ்தந-கொங்கைத்தலத்திலுண்டான, ஹோம - (போக்யதையின்) பரப்பினுடைய, ரஸஜ்ஞ - இனிமையை யறிந்ததுமான, ஓஜ: - தேஜஸ்ஸானது, மம-என்னுடைய, வெதஸி-மநஸஸில, ஸதா-எப்பொழுதும், ஸநியதாம்-நித்யவாஸம் செய்யட்டும். (24)

(தா-ம்.) த்ரிலோகஸுந்தரனாய், பூப்படிலும் வரும்படியான ஸௌகுமார்யதையுடைய ருக்மிணீதேவியுடன்கூடக் கொண்டாடி அநுபவிக்கும்படியான அதிஸுகுமாரனாய்,ராதிகாஸமாஶ்லேஷ ததபரனான க்ருஷ்ணன் என் மனதில் எப்போதும வாஸமபண்ணககடவானாக வென்கிறார். (உச)

ஶ்லோ॥ வயமெமெதவிஶ்வஸிம: கருணாகரமெவெத: கிம்வதஞாமெ। அபிவஹோதமெதவரத ராமதிரியம் வாஜெ॥ (25)

(ப-உ.) விபோ-ஸ்வாமியான ஶ்ரீக்ருஷ்ணனே! ஏதெ - இந்த, வய:-நாங்கள், தெ-உன்னுடைய தேஹததில், (கருணாகரமெவெத:கிம்வதஞா) கருணா-தயைக்கு, ஆகர-இருப்பிடமான, மெவெத:- ஸ்வரூபமெனகிற, கிம்வதஞா-உலகமொழியினால், விஶ்வஸிம: விஶ்வாஸத்தைப்பண்ணுகிறோம, அபி-மேலும், தவ-உன்னுடைய, மெதே-ஸுந்தரமான, வாஜெ-இளம்பிராயத்தில், ஜய-இந்த, மதி:-புத்தியானது, வரதரா-பேராசைகொண்டிருக்கிறது. ()

(தா-ம.) ஒகருஷ்ணா! ஸம்ஸாரதாபததிலடிபட்டு அதையணைததுக்கொள்ளுகைக்கு அஸமாததராய் பெருவிடாய்ப்பட்டுத் திரிந்தநாஙகள், உன்திரு

மேனியை, ஸகலதாபங்களையுமாற்றவற்றாய, கருணையாகிற பெருநீர் நிறைந்த ஸமுத்ரமாகப் பெரியோர் சொல்லக்கேட்டு அதை நம்புகிறோம்; அதுவுமல்லாமல், அதிஸுந்தரமாய், அதிசபலமான உன்னுடைய பால்யத்தையாழ்ந்தநுபவித்து என்மனமானது விடாயைத்தீர்த்துக்கொள்ள விரும்பாநின்றதெனகிறார் (உரு)

ஶ்லோ|| வத்ஸபாலசர: கோऽபி வத்ஸ: ஸ்ரீவத்ஸலாஞ்சந:|
உத்ஸவாய கதா பாவீ இத்யுத்கண்டே மம லோசநே|| (26)

(ப-உ.) (வத்ஸபாலசர:) வத்ஸபால-கன்றுகள்மேய்க்கிற பிள்ளைகளோடு, சர:-ஸஞ்சரிக்கிற, (ஸ்ரீவத்ஸலாஞ்சந:) ஸ்ரீவத்ஸ-ஸ்ரீவத்ஸமென்கிற மறுவை, லாஞ்சந:-அடையாளமாகவுடைய, கோऽபி-லோகவிலக்ஷணனான, வத்ஸ:-சிறுவனானவன், உத்ஸவாய-ஸந்தோஷத்தின்பொருட்டு, கதா-எப்பொழுது, பாவீ-எதிராகப்போகிறான், இதி-என்று, மம-என்னுடைய, லோசநே-கண்கள், உத்கண்டே-களிப்புற்றிருக்கின்றன. (26)

(தா-ம்.) வலதுமார்பில் ஸ்ரீதேவிக்கு இருப்பிடமாய், மூலப்ரக்ருதிக்கு அதிஷ்டாநதேவதையாய், ஸர்வேஶ்வரஅஸாதாரண சிஹ்நமான ஸ்ரீவத்ஸமென்றும் மறுவையுடையனாய, ஆயப்பாடியில கன்றுகளைமேய்த்து விளையாடாநின்ற ஆயசிறுவனை என்கண்கள்காணவாசைப்படாநின்றனவென்கிறார்.

ஶ்லோ|| மாதுர்யஸம்ப்ருதே மநோஹாரிணி ஸுகுமாரதரஸ்மித
சந்த்ரிதாநநேந்தே| த்ரிபுவநநயநைகஸ்ப்ருஹ
ணீயே மஹஸி வயம் வ்ரஜஜுஷி லாலஸாஸ்ம:|| (27)

(ப-உ.) (மாதுர்யஸம்ப்ருதே) மாதுர்ய-போக்யதையினால், ஸம்ப்ருதே-பூர்ணமானதும், (மநோஹாரிணி) மந:-மனதுக்கு, ஹாரிணி-இனியனானவனும், (ஸுகுமாரதரஸ்மித சந்த்ரிதாநநேந்தே) ஸுகுமாரதர-மிகவும் கோமளமான, ஸ்மித-புன்சிரிப்பினால், சந்த்ரித-அடையாளம் பண்ணப்பட்ட, ஆநநேந்தே-சந்த்ரன்போன்ற முகத்தையுடையதும், (த்ரிபுவநநயநைகஸ்ப்ருஹணீயே) த்ரிபுவந-மூன்று லோகங்களிலுள்ள ப்ராணிகளுடைய, நயந-கண்களுக்கு, ஏகஸ்ப்ருஹணீயே-ப்ரதாநமாக ஆசைப்படத்தகுந்ததும், வ்ரஜஜுஷி-ஆயப்பாடியையடைந்திருக்கிற, மஹஸி-தேஜஸ்ஸால், வயம்-நாங்கள், லாலஸாஸ்ம:-ஆஸக்தியையுடையவர்களாகிறோம். (27)

(தா-ம்) கண்டாருடைய கண்ணுக்கும் நெஞ்சுக்கும் இனியனும்படி போக்யதையால் விஞ்சினவனாய், புன்முறுவல் பரவி, நிலவோடுகூடி மறுவற்ற சந்த்ரனைப்போல விளங்காநின்ற முகத்தையுடையவனாய், ஆயப்பாடியில் விளையாடாநின்ற க்ருஷ்ணனை, எங்கள் ஸம்ஸாரதாபமெல்லாம் தீரும்படி நாங்கள் கண்டநுபவிக்க வாசைப்படாநின்றோமென்கிறார். (உஎ)

ஶ்லோ|| முகாரவிந்தே மகரந்தபிந்து நிஷ்யந்த லீலாமு
ரளீ நிநாதே | வ்ரஜாங்கநாபாங்கதரங்கப்ருங்கஸங்க்ரா
மபூமௌ தவ லாலஸாஸ்ம꞉|| (28)

(ப-உ.) (மகரந்தபிந்துநிஷ்யந்த லீலாமுரளீநிநாதே) மகரந்த-தேனினுடைய, பிந்து-திவலைகளுடைய, நிஷ்யந்த - பெருக்கையுடைத்தான, லீலா-லீலார்த்தமாக ஊதப்பட்ட, முரளீ - வேணுவினுடைய, நிநாதே - ஒலியையுடையதும், (வ்ரஜாங்கநாபாங்க தரங்க ப்ருங்கஸங்க்ராமபூமௌ) வ்ரஜாங்கநா - இடைப்பெண்களுடைய, அபாங்க-கடைக்கண் பார்வையினுடைய, தரங்க வரிசைகளாகிற, ப்ருங்க-வண்டுகளுக்கு, ஸங்க்ராமபூமௌ - போர்க்களமானதுமான, தவ-உன்னுடைய, முகாரவிந்தே - வத(ந)நகமலத்தில், லாலஸாஸ்ம꞉-ப்ரீதியுடையோமாகிறோம். (28)

